# அற்புத குழந்தை இயேசு பாடல் புத்தகம்



## குழந்தை இயேசு ஆலயம்,

## ஒத்தையால்

O. மேட்டுப்பட்டி (Po), சாத்தூர் - 626 203.

# இறை இரக்கத்தின் ஆண்டு
## (2015 – 2016)

# பங்குத்திருவிழா
# 24.01.2016
# பாடல் புத்தகம் வெளியீடு

பங்குத்தந்தை
அருட்சகோதரிகள்
பங்குப்பேரவை
இறைமக்கள்

(தனிச் சுற்றுக்கு மட்டும்)

அன்பளிப்பு



திருமதி. **K.S.S.ஜெயா**

தோற்றம் : 21.05.1936
மறைவு : 07.04.2015

**Missionaries of St. Francis de Sales**
South-East India Province

MSFS Provincialate, Kunnathur (Post), Pudukkottai (Dt) - 621 316, Tamil Nadu

Rev. Fr. Anthony Dharmaraj, MSFS
Provincial Superior

## வாழ்த்துரை

"[illegible]" - [illegible]

[illegible]

[illegible]

செபங்களுடன்

[signature]

அருட்திரு. அந்தோனி தர்மராஜ்
[illegible] மாநில தலைவர்

திருச்சி
15.01.2016

Ph : Office : 0431 - 2680521 Personal : 0431 - 2680522 Fax : 0431 - 2680523
E-mail : provincialsoutheastmsfs@gmail.com / provincialsecretarysoutheast@gmail.com

# பாடல் அட்டவணை

## 1. வருகைப் பாடல்கள்


| பா. எண். | | பக்கம் |
|---|---|---|
| 01. | அன்பினில் பிறந்த | 16 |
| 02. | அர்ச்சனை மலராக ஆலயத்தில் | 21 |
| 03. | ஆலயத்தில் நாம் நுழைகையிலே | 21 |
| 04. | ஆலயம் நோக்கி வருகின்றோம் | 19 |
| 05. | இதயங்கள் மலரட்டுமே | 16 |
| 06. | இயேசுவின் சந்நிதியில் | 16 |
| 07. | இறைவா இதோ வருகின்றோம் | 17 |
| 08. | இயேசு அழைக்கின்றார் | 21 |
| 09. | இறைவனின் புகழ்பாட | 22 |
| 10. | இறைமக்கள் அகமகிழ்ந்து | 22 |
| 11. | இயேசு என்னும் பெயரைச் சொல்லி | 25 |
| 12. | இயேசுவின் தலைமையில் | 25 |
| 13. | இறைவா உந்தன் புகழ்பாடி | 26 |
| 14. | இறைவன் நம்மை அழைக்கின்றாரே | 26 |
| 15. | இறைவனின் இறைகுலமே | 19 |
| 16. | உன் இதய வாசல் தேடி | 17 |
| 17. | உறவு மலரும் புனித இடம் | 23 |
| 18. | உதயங்கள் தேடும் இதயங்கள் | 23 |
| 19. | காலை இளங்கதிரே | 27 |
| 20. | தலைவா உனை வணங்க | 24 |
| 21. | தமிழால் உன் புகழ்பாடி | 27 |
| 22. | தீபத்தின் ஒளியினில் | 18 |
| 23. | நன்மைகள் செய்த இறைவனுக்கு | 27 |
| 24. | நிறையருள் வாழ்வுப் பயணத்திலே | 28 |
| 25. | புதிய வானகமும் புதிய வையகமும் | 28 |
| 26. | மனமே இறைவனில் | 29 |
| 27. | வரம் கேட்டு வருகின்றேன் | 18 |
| 28. | வாருங்கள் அன்பு மாந்தரே | 29 |
| 29. | வாருங்கள் நம் இறைவன் | 20 |
| 30. | விடுதலை இராகங்கள் விடியலின் கீதங்கள் | 24 |


## 2. தியானப் பாடல்கள்


| | | |
|---|---|---|
| 01. | அமைதியின் தெய்வமே | 30 |
| 02. | அமைதி தேடி அலையும் | 30 |
| 03. | அமைதியின் தூதனாய் | 31 |
| 04. | அன்பே கடவுள் என்றால் | 31 |

| பா. எண். | பக்கம் |
|---|---|
| 05. அலைந்திடும் உள்ளம் அமைதியில் | 32 |
| 06. அம்மையப்பன் உந்தன் அன்பே | 33 |
| 07. ஆண்டவர்க்கு நன்றி செலுத்துங்கள் | 31 |
| 08. ஆண்டவரே என்னை அறிந்திருந்தீர் | 32 |
| 09. ஆண்டவரே பேசும் | 33 |
| 10. இறைவன் எனது மீட்பானார் | 34 |
| 11. இயேசுவே உந்தன் வார்த்தையால் | 34 |
| 12. இயேசு இயேசு என்று அழைத்து | 34 |
| 13. இயேசு நாமம் பாடப்பாட | 35 |
| 14. இயேசுவே என்னுடன் நீ பேசு | 35 |
| 15. இயேசு என்னும் நாமம் பேசுகின்ற போது | 36 |
| 16. இயேசுவே உந்தன் வார்த்தையால் | 36 |
| 17. இசை ஒன்று இசைக்கின்றேன் | 36 |
| 18. இயேசு எனது இறைவன் | 37 |
| 19. இயேசுவின் திருநாம கீதம் | 37 |
| 20. இறைவனே என்னைக் காக்கின்றார் | 38 |
| 21. இறைவா என்னிதயம் | 38 |
| 22. இறைவழி செல்வோர் | 39 |
| 23. இறைவா உம் இல்லத்திலே | 39 |
| 24. உன்னை நான் ஒருபோதும் | 39 |
| 25. உன்னை நான் அழைத்தேன் | 40 |
| 26. உன் சிறகுகள் நிழலில் | 40 |
| 27. உன் திரு யாழில் என் இறைவா | 41 |
| 28. உன் புகழை பாடுவது | 41 |
| 29. உன் சொல்லில் என் பாதை | 42 |
| 30. உயிர்ப்பும் உயிரும் நானே | 42 |
| 31. உலகில் வாழும் உயிர்களில் | 42 |
| 32. எந்தன் நெஞ்சம் சிந்துபாடும் | 43 |
| 33. என் ஆயனாய் இறைவன் | 44 |
| 34. என் வாழ்வில் இயேசுவே | 44 |
| 35. என் ஆற்றலின் ஆண்டவரை | 44 |
| 36. என் ஆன்மா இறைவனையே | 45 |
| 37. என் ஆன்மா எந்நாளுமே | 45 |
| 38. என்னோடு நீ பேச | 46 |
| 39. என்னை உமது கருவியாய் | 46 |
| 40. ஒரு நிமிடம் உன் அருகினில் இருக்க | 47 |
| 41. ஒரு போதும் உனைப்பிரியா | 47 |
| 42. கலைமான் நீரோடையை | 48 |
| 43. கலைமான்கள் நீரோடை தேடும் | 48 |

| பா. எண். | பக்கம் |
|---|---|
| | 48 |
| 44. கடல் கடந்து சென்றாலும் | 49 |
| 45. கடவுள் உனக்கு வாழ்வு ஆதலால் | 50 |
| 46. சமாதானமே இறைவா | 50 |
| 47. சுமை சுமந்து சோர்ந்திருப்போரே | 51 |
| 48. நீ எந்தன் பாதை | 51 |
| 49. நீ ஒளியாகும் என் பாதைக்கு | 52 |
| 50. நீரே எமது ஒளி | 52 |
| 51. பாடுங்கள் ஆண்டவர்க்கு | 52 |
| 52. பொன்மாலை நேரம் | 52 |
| 53. போற்றுங்கள் ஆண்டவரை | 53 |
| 54. யாக்கோபின் இறைவனை | 53 |
| 55. யாரிடம் செல்வோம் | 54 |


## 3. காணிக்கைப் பாடல்கள்


| | |
|---|---|
| 01. அன்போடு வந்தோம் | 57 |
| 02. அடியோர் யாம் தரும் | 57 |
| 03. இசையும் பாடும் இனிய பாடல் | 57 |
| 04. இதோ உமது அடிமை | 58 |
| 05. இறைவனின் அருள்மொழி | 58 |
| 06. உடல் பொருள் ஆவி எல்லாம் | 59 |
| 07. எதை நான் தருவேன் | 59 |
| 08. எல்லாம் கொணர்ந்தோம் | 60 |
| 09. எல்லாம் தருகின்றேன் | 60 |
| 10. என்னையே முழுவதும் | 60 |
| 11. எல்லையில்லாத அன்பாலே | 61 |
| 12. என் நெஞ்ச நாயகா | 61 |
| 13. எடுத்து வருகிறேன் | 62 |
| 14. எந்தன் மனம் ஏந்தி வந்தேன் | 62 |
| 15. எண்ண எண்ண ஆனந்தம் | 63 |
| 16. என்னை நான் தருகின்றேன் | 63 |
| 17. என்னை உன்னிடம் தந்தேன் | 64 |
| 18. ஏழை என்னைக் காணிக்கையாக | 64 |
| 19. காணிக்கை தந்தோம் கர்த்தாவே | 64 |
| 20. காணிக்கை தர நான் வருகின்றேன் | 65 |
| 21. காணிக்கை பொருட்களை இறைவா | 65 |
| 22. காணிக்கை தந்தேன் கனிவுடன் | 66 |
| 23. கையளிக்கின்றேன் இறைவா | 70 |
| 24. தந்தேன் தந்தேன் இறைவா | 66 |
| 25. தந்திட்ட பொருட்கள் | 66 |
| 26. தெய்வீக பலியில் உறவாடும் | 67 |

| பா. எண். | | பக்கம் |
|---|---|---|
| 27. | நானே ஒரு காணிக்கை | 67 |
| 28. | படைப்பு எல்லாம் உமக்கே | 68 |
| 29. | பலிபீடத்தில் வைத்தேன் என்னை | 68 |
| 30. | பலியிடும் நேரம் | 68 |
| 31. | வந்தோம் தந்திடவே தந்தாய் | 69 |
| 32. | வாழ்வின் நாயகனே நான் | 69 |
| 33. | வாழ்வைப் பலியாக மாற்ற | 70 |


## 4. திருவிருந்து பாடல்கள்


| | | |
|---|---|---|
| 01. | அகவிருந்தாக என் | 71 |
| 02. | அன்பனே விரைவில் வா | 71 |
| 03. | அன்பெனும் வீணையிலே | 72 |
| 04. | அன்பு எந்தன் இதய வாசல் | 72 |
| 05. | அன்பே அன்பே இறை அன்பே | 72 |
| 06. | ஆனந்த மழையில் நானிலம் | 73 |
| 07. | இயற்கையில் உறைந்திடும் | 73 |
| 08. | இயேசுவே என் உள்ளம் | 74 |
| 09. | இறையவனே என் வழித்துணை | 74 |
| 10. | இறைமகன் விருந்தொன்று | 75 |
| 11. | உன்னில் நான் ஒன்றாக | 75 |
| 12. | உயிரைத் தந்து உறவைத் தேடும் | 76 |
| 13. | உலகாளும் தலைவன் | 76 |
| 14. | என் ஆயன் இயேசு | 77 |
| 15. | எனில் வாரும் என் இயேசுவே | 77 |
| 16. | என்னோடு நீ பேச | 78 |
| 17. | என்னைச் சுமப்பதனால் இறைவா | 78 |
| 18. | என் தேடல் நீ | 79 |
| 19. | எந்தன் உயிரே நீதான் இயேசுவே | 79 |
| 20. | என்னுயிரே எந்தன் உயிரே | 80 |
| 21. | என்னில் நீ வா | 81 |
| 22. | ஏழிசை நாதனே | 80 |
| 23. | ஒளியாம் இறையே வாராய் | 82 |
| 24. | ஒருபோதும் உனைப்பிரியா | 82 |
| 25. | சக்தியானவா ஜீவநாயகா | 89 |
| 26. | சுமை சுமந்து | 90 |
| 27. | செந்தமிழில் உந்தன் | 83 |
| 28. | செம்மறியின் விருந்துக்கு | 83 |
| 29. | தாயான தெய்வமே | 84 |
| 30. | தெய்வ தரிசனம் தேடும் மனம் தினம் | 84 |

| பா. எண். | | பக்கம் |
|---|---|---|
| 31. | தேவா எந்தன் நாவிலாடும் | 85 |
| 32. | தேடும் அன்பு தெய்வம் | 85 |
| 33. | நற்கருணை ஆண்டவர் விருந்திது | 86 |
| 34. | நானே வானினின்று | 86 |
| 35. | நீ ஒளியாகும் | 86 |
| 36. | நெஞ்சமெல்லாம் கோவில் செய்தேன் | 87 |
| 37. | நெஞ்சத்திலே தூய்மையுண்டோ | 87 |
| 38. | பொன்மாலை நேரம் பூந்தென்றல் காற்றில் | 88 |
| 39. | வசந்த ராகம் பாடுவோம் | 88 |
| 40. | வாழ்வை அளிக்கும் வல்லவா | 89 |
| 41. | விருந்தாக வரும் தேவா | 90 |
| 42. | நிலையில்லா உலகு | 91 |


## 5. நன்றிப் பாடல்கள்


| | | |
|---|---|---|
| 01. | அழகிய கவிதையில் பாடுவேன் | 94 |
| 02. | அன்பர் இயேசு என்னை | 94 |
| 03. | அன்பினில் துள்ளிடும் நெஞ்சம் | 94 |
| 04. | ஆயிரம் துதிப்பாடல் | 95 |
| 05. | இதுவரை செய்த செயல்களுக்காக | 95 |
| 06. | இறைவன் படைத்த நாளிதே | 96 |
| 07. | இயேசு ரட்சகர் பெயரைச் சொன்னால் | 96 |
| 08. | இயேசுவின் இருதயமே | 96 |
| 09. | இயேசுவின் நாமம் இனிதான நாமம் | 97 |
| 10. | இயேசுவின் பின்னால் | 97 |
| 11. | இந்த நாள்வரை எந்தன் | 97 |
| 12. | உம்மைப் போற்றுகிறோம் | 98 |
| 13. | உம் புகழைப் பாடுவது | 98 |
| 14. | உலகிற்கு ஒளியாய் | 99 |
| 15. | என்னிடம் எழுந்த இயேசுவே | 99 |
| 16. | எத்துணை நன்று | 100 |
| 17. | எந்தன் நாவில் புதுப்பாடல் | 100 |
| 18. | எத்தனை நன்மைகள் | 101 |
| 19. | எல்லாம் உமக்காக | 101 |
| 20. | என்ன சொல்லிப் பாடுவேன் | 101 |
| 21. | ஒரு கோடிப் பாடல்கள் | 102 |
| 22. | ஒவ்வொரு மனிதனும் | 102 |
| 23. | கிறிஸ்துவின் ஆத்மமே | 103 |
| 24. | சந்தோஷம் பொங்குதே | 103 |

| பா. எண். | பக்கம் |
|---|---|
| 25. நன்றிகள் பல கூறி நாம் | 104 |
| 26. நன்றியால் துதிபாடு | 104 |
| 27. நன்றி பாடுவேன் இனிய இயேசுவே | 105 |
| 28. நீ செய்த நன்மை நினைக்கிறேன் | 105 |
| 29. மகிழ்வோம் மகிழ்வோம் தினம் | 105 |
| 30. மலர் சொல்லும் நன்றி | 106 |


## 6. திருப்பலி பொதுப் பாடல்கள்

| | |
|---|---|
| 01. ஆண்டவரே ஈசோப்புல்லினால் | 107 |
| 02. இறைவா உம்மைப் போற்றுகின்றோம் | 111 |
| 03. உன்னதங்களிலே இறைவனுக்கு | 107 |
| 04. உன்னதங்களிலே இறைவனுக்கு (புது மெட்டு) | 108 |
| 05. தேவாலய வலப்புறமிருந்து | 107 |
| 06. வானமும் பூமியும் படைத்தவராம் | 109 |
| 07. வானமும் பூமியும் படைத்தாளும் | 110 |


## 7. பரலோகத்தில் . . . .

| | |
|---|---|
| 01. அப்பா பிதாவே | 112 |
| 02. உன்னதத்தில் வீற்றிருக்கும் | 113 |
| 03. பரலோகத்தில் இருக்கும் | 113 |
| 04. வானிலே அரசு கொண்ட | 112 |


## 8. நற்கருணை ஆராதனைப் பாடல்கள்

| | |
|---|---|
| 01. அன்பின் தேவ நற்கருணையிலே | 116 |
| 02. அருட்திரு தேவ தேவன் | 117 |
| 03. அன்புருவாய் எம் நடுவில் | 117 |
| 04. அன்பே உயிரே ஆராதனை | 118 |
| 05. மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை | 116 |


## 9. தூய ஆவி பாடல்கள்

| | |
|---|---|
| 01. அப்பா பிதாவே அன்பான தேவா | 118 |
| 02. ஆவியானவரே அன்பின் ஆவியானவரே | 119 |
| 03. ஆவியிலே புதுமை அடைவோம் | 119 |
| 04. ஆவியே என்னை நிரப்பும் | 119 |
| 05. ஆவியைத் தரவேண்டும் இறைவா | 120 |
| 06. ஆவியே தூய ஆவியே | 120 |
| 07. இயேசுவாய் நான் வாழவேண்டும் | 121 |
| 08. உன்னதத்தின் ஆவியை | 121 |
| 09. ஊற்றுத் தண்ணீரே எந்தன் | 121 |
| 10. எல்லா வரமும் நிரம்பித் ததும்பும் | 122 |

| பா. எண். | பக்கம் |
|---|---|
| 11. என் ஆவியும் தூய ஆவியும் | 122 |
| 12. வல்லமை தேவை தேவா | 123 |


## 10. பஜனைப் பாடல்கள்

| | |
|---|---|
| 01. அன்பு செய்ய வரம் | 126 |
| 02. இயேசு இயேசு இயேசுவே | 126 |
| 03. இயேசு உன் பாதத்தில் | 127 |
| 04. இயேசுவே என்னை | 127 |
| 05. இறைவன் தந்தையை | 127 |
| 06. இறைவா உமது தயவினிலே | 127 |
| 07. என்னுயிரே இறைவா | 128 |
| 08. கருணை இறைவா சரணம் | 128 |
| 09. தந்தையே உம்மை வணங்குகிறோம் | 128 |
| 10. தனிமுதல் இறைவனாம் | 129 |
| 11. தேவாதி தேவன் உன் திருவடி | 129 |
| 12. புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு | 129 |
| 13. மரியே எம்மைப் பாரம்மா | 129 |
| 14. வந்தருளும் ஆண்டவரே | 129 |
| 15. வந்தோம் தந்தாய் | 130 |
| 16. வாழிய மூவொரு இறைவா | 130 |


## 11. ஜெப வழிபாட்டுப் பாடல்கள்

| | |
|---|---|
| 01. அஞ்சாதே அஞ்சாதே | 131 |
| 02. அதிசயங்கள் செய்கிறவர் | 131 |
| 03. அப்பா நான் உம்மைப் | 132 |
| 04. அதிசீக்கிரத்தில் நீங்கிவிடும் | 132 |
| 05. ஆராதிக்கின்றோம் நாங்கள் | 132 |
| 06. ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன் | 133 |
| 07. இயேசு இயேசு என்று அழைத்து | 133 |
| 08. இயேசு கிறிஸ்து ஆண்டவர் | 134 |
| 09. இயேசு நாமம் பாடப்பாட | 134 |
| 10. இயேசுவின் நாமம் இனிதான நாமம் | 134 |
| 11. இயேசுவின் நாமத்தினால் கூடிடும் | 135 |
| 12. இயேசுவின் பின்னால் நானும் | 136 |
| 13. இன்று என் வாழ்விலே | 136 |
| 14. இயேசு ரட்சகர் பெயரைச் சொன்னால் | 137 |
| 15. இறைவன் இயேசு என்னிடம் எழுந்தார் | 137 |
| 16. உந்தன் அரசு வருக | 137 |
| 17. உம் இரத்தத்தால் என்னைக் கழுவும் | 138 |

பா. எண். பக்கம்
18. உம்மைப் போற்றுகின்றோம் 138
19. உன்னைப் பார்க்க நான் 138
20. எந்தன் நாவில் புதுப்பாடல் 139
21. எல்லாக் காலத்திலும் 139
22. என்ன என் ஆனந்தம் 140
23. என் விழியே இயேசுவை 140
24. எத்துணை நன்று 140
25. எத்தனை நன்மைகள் 141
26. ஒப்பற்ற என் செல்வமே 141
27. கலங்காதே மனமே 142
28. காண்கின்ற தேவன் நம் தேவன் 142
29. தாய்க்கு அன்பு வற்றிப் போகுமா 142
30. திருக்கரத்தால் தாங்கி என்னை 143
31. நான் உன்னைவிட்டு 143
32. விசுவாசத்தினால் நீதிமான் 144

## 12. மரியன்னைப் பாடல்கள்

01. அன்னை மாமரி எங்கள் அன்பின் தாய்மரி 147
02. அம்மா உந்தன் அன்பினிலே 147
03. அமலோற்பவியே அருள்நிறை 147
04. அம்மா அன்பின் சிகரம் நீ 148
05. அலையொளிர் அருணணை 148
06. அழகின் முழுமையே தாயே 149
07. அன்னைக்கு கரம் குவிப்போம் 149
08. அருள் நிறை மரியே ஆரோக்கிய தாயே 149
09. அருள் நிறை மரியே 150
10. அலைகடலின் ஓசையிலே 150
11. அலைகடல் ஒளிர் மீனே 150
12. ஆரோக்கிய மாதாவே உமது புகழ் 151
13. ஆவே கீதம் பாடியே 151
14. இதயம் மகிழுதம்மா 152
15. இனிய உம் நாமம் 152
16. உம்மைத் தேடி வந்தேன் 152
17. என் ஆன்மா எந்நாளுமே 153
18. கலங்கரை தீபமே 153
19. குழலும் யாழும் 154
20. சூரியன் சாய காரிருள் மெல்ல 154
21. ஞானம் நிறை கன்னிகையே 154
22. தரணியர் வாழ்த்தும் 155

பா. எண். பக்கம்
23. தாரகை சூடும் மாமரியே 155
24. தாவீதின் குல மலரே 156
25. தாயே மாமரி தஞ்சம் தாராய் 156
26. தினமும் வாழ்த்துவோம் 156
27. தேவ தாயின் மாதம் இதுவல்லவோ 157
28. நாதத்தின் இனிமையில் பண் 157
29. மனசெல்லாம் மெல்ல மெல்ல 157
30. மாதாவே சரணம் 158
31. மாதாவே துணை நீரே 158
32. மாமறை புகழும் மரியென்னும் 159
33. மாநிலம் போற்றும் மாமரியே 159
34. வியாகுல மாமரியே 159

## 13. கிறிஸ்து அரசர் பாடல்கள்

01. மகிமையின் ராஜனே 161
02. ராஜாதி ராஜனே 161

## 14. இயேசுவின் திரு இருதயப் பாடல்கள்

01. இயேசுவின் இருதயமே 162
02. இயேசுவின் மதுர 162
03. எல்லாம் உமக்காக 163

## 15. புனிதர்கள்பாடல்கள்

### புனித சூசையப்பர்

01. எங்கள் காவலாம் 166
02. தந்தையாம் எம் சூசை 166
03. மதுமலர் நிறை கொடி 167
04. மாநிலம் போற்றிடும் 167

### புனித அருளானந்தர்

01. ஆனந்தரே அருளானந்தரே 167
02. புனித அருளானந்தரே 168
03. புனிதர் வாழ்வில் 168

### புனித அந்தோனியார்

01. அந்தோனியார் புகழ்பாடி 169
02. அன்புத் தந்தையே 169
03. ஆயிரம் ஆயிரம் 170
04. போற்றிப் புகழ்ந்திடுவோம் 170

## 16. கிறிஸ்து பிறப்பு பாடல்கள்

01. கருணைக் கடலே வா 171

| பா. எண். | பக்கம் |
|---|---|
| 02. கன்னி ஈன்ற செல்வமே | 171 |
| 03. கீழ்வானம் சிவக்கும் | 172 |
| 04. சின்னக் குழந்தை இயேசுவுக்கு | 172 |
| 05. பெத்லகேம் ஊருக்கு சென்றிடுவோம் | 173 |
| 06. மாரனாதா மாரனாதா | 173 |
| 07. வானவர் இசையில் வாழ்த்தொலி | 173 |
| 08. விண்ணோர் மகிழ்ந்து பாடும் | 174 |

## 17. தவக்காலப் பாடல்கள்

### திருநீற்றுப் புதன்

| | |
|---|---|
| 01. கருணை தெய்வமே | 177 |
| 02. தயை செய்வாய் நாதா | 177 |
| 03. தவக்காலம் இது தவக்காலம் | 178 |
| 04. மனிதனே நீ மண்ணாக | 178 |
| 05. மன்னிப்பு மன்னிப்பு | 179 |

## 18. புனிதவாரப் பாடல்கள்

### குருத்து ஞாயிறு

| | |
|---|---|
| 01. ஆயிரக்கணக்கான வருடங்களாய் | 180 |
| 02. ஆண்டவர் புனித நகரத்தில் | 181 |
| 03. எபிரேயர்களின் சிறுவர் குழாம் | 179 |
| 04. என் இறைவா | 181 |
| 05. கிறிஸ்து அரசே இரட்சகரே | 181 |
| 06. தாவீதின் மகனுக்கு | 179 |

### புனித வியாழன்

| | |
|---|---|
| 01. அன்பும் நட்பும் எங்குள்ளதோ | 183 |
| 02. ஆசைமேல் ஆசையாய் | 183 |
| 03. இறைவன் அழைக்கின்றார் | 184 |
| 04. நான் உங்களுக்கு | 182 |
| 05. பாடுவாய் என் நாவே | 184 |

### புனித வெள்ளி

| | |
|---|---|
| 01. ஆணிகொண்ட உன் | 185 |
| 02. இயேசு நம் பிணிகளை | 186 |
| 03. இயேசுவின் அன்பை மறந்திடுவாயோ | 187 |
| 04. எனது ஜனமே நான் உனக்கு | 189 |
| 05. கல்மனம் கரைய | 187 |
| 06. கல்வாரி மலைமேலே | 188 |
| 07. கல்வாரி தென்றலே வா | 191 |
| 08. கெட்டுப்போனோம் பாவியானோம் | 188 |
| 09. சிலுவையில் தொங்கும் | 189 |

பா. எண். பக்கம்
10. சிலுவையில் தொங்கும் செம்மறியே 189
11. சிரசின் முள்முடி 190
12. தந்தையே உம் கையில் என் 185

## 19. சிலுவைப் பாதை பாடல்கள்

01. எங்கு போகிறீர் இயேசு தெய்வமே 191
02. எனக்காக இறைவா 193
03. எங்கு போகிறீர் 194
04. என்னை நேசிக்கின்றாயா 195
05. வலிமை தந்திடும் 192

## 20. பாஸ்கா காலப் பாடல்கள்
## உயிர்ப்பு ஞாயிறு (புனித சனி)

01. ஆண்டவர் மாண்புடன் புகழ் பெற்றார் 200
02. உமது ஆவியை விடுவித்தருளும் 200

### உயிர்ப்பு பாடல்கள்

01. உயிர்த்தார் கிறிஸ்து உயிர்த்தார் 201
02. சாவை வென்று உயிர்த்தெழுந்தார் 201
03. சாவு வீழ்ந்தது வெற்றி 202
04. சிலுவையில் அறையுண்ட மெசியா 202
05. சொன்னபடி உயிர்த்தெழுந்தார் 203
06. மரித்த இயேசு உயிர்த்துவிட்டார் 203

## 21. மன்னிப்பு பாடல்கள்

01. அப்பா நான் தவறு செய்தேன் 204
02. அப்பா அப்பா 205
03. என் பிழையெல்லாம் பொறுத்தருளும் 204
04. என் இறைவா என் இறைவா 205
05. கருணை இறைவா சரணம் 204
06. மனம் இரங்கி மன்னியுமே 205

## 22. இறந்தோர் பாடல்கள்

01. இறந்தோர் வாழ்வு ஒளி பெறுக 210
02. இறைவா இரக்கம் மிகுந்தவரே 210
03. சுவாமி பாதாளங்களிலிருந்து 211
04. தாயே உத்தரிக்கும் ஸ்தலத்தோருக்கு 211
05. நித்திய இளைப்பாற்றியை 211
06. நித்திய சாந்தி அளித்தருளும் 212
07. மரித்த எங்கள் நண்பருக்கு 212
08. முடிவில்லாத வாழ்வைத் தேடி. 213

பா. எண். பக்கம்
10. சிலுவையில் தொங்கும் செம்மறியே 189
11. சிரசின் முள்முடி 190
12. தந்தையே உம் கையில் என் 185

## 19. சிலுவைப் பாதை பாடல்கள்

01. எங்கு போகிறீர் இயேசு தெய்வமே 191
02. எனக்காக இறைவா 193
03. எங்கு போகிறீர் 194
04. என்னை நேசிக்கின்றாயா 195
05. வலிமை தந்திடும் 192

## 20. பாஸ்கா காலப் பாடல்கள்
## உயிர்ப்பு ஞாயிறு (புனித சனி)

01. ஆண்டவர் மாண்புடன் புகழ் பெற்றார் 200
02. உமது ஆவியை விடுவித்தருளும் 200

### உயிர்ப்பு பாடல்கள்

01. உயிர்த்தார் கிறிஸ்து உயிர்த்தார் 201
02. சாவை வென்று உயிர்த்தெழுந்தார் 201
03. சாவு வீழ்ந்தது வெற்றி 202
04. சிலுவையில் அறையுண்ட மெசியா 202
05. சொன்னபடி உயிர்த்தெழுந்தார் 203
06. மரித்த இயேசு உயிர்த்துவிட்டார் 203

## 21. மன்னிப்பு பாடல்கள்

01. அப்பா நான் தவறு செய்தேன் 204
02. அப்பா அப்பா 205
03. என் பிழையெல்லாம் பொறுத்தருளும் 204
04. என் இறைவா என் இறைவா 205
05. கருணை இறைவா சரணம் 204
06. மனம் இரங்கி மன்னியுமே 205

## 22. இறந்தோர் பாடல்கள்

01. இறந்தோர் வாழ்வு ஒளி பெறுக 210
02. இறைவா இரக்கம் மிகுந்தவரே 210
03. சுவாமி பாதாளங்களிலிருந்து 211
04. தாயே உத்தரிக்கும் ஸ்தலத்தோருக்கு 211
05. நித்திய இளைப்பாற்றியை 211
06. நித்திய சாந்தி அளித்தருளும் 212
07. மரித்த எங்கள் நண்பருக்கு 212
08. முடிவில்லாத வாழ்வைத் தேடி. 213

| பா. எண். | பக்கம் |
|---|---|

## 23. பொது செபங்கள்


01. மூவொரு கடவுள் புகழ் 214
02. திருச்சிலுவை அடையாளங்கள் 214
03. கிறிஸ்து கற்பித்த செபம் 214
04. மங்கள வார்த்தை செபம் 214
05. மனத்துயர் செபம் 214
06. மூவேளை செபம் 215
07. பாஸ்கா கால மூவேளை மன்றாட்டு 216
08. விசுவாசப் பிரமாணம் 215
09. பத்துக் கட்டளைகள் 215


## 24. ஞாயிறு வழிபாடு 219

## 25. செபமாலை மறையுண்மைகள்


01. சந்தோச தேவ ரகசியங்கள் 226
02. துக்க தேவ ரகசியங்கள் 226
03. மகிமை தேவ ரகசியங்கள் 227
04. ஒளியின் தேவ ரகசியங்கள் 227
05. முடிவு செபம் 227
06. மிகவும் இரக்கமுள்ள தாயே 227


## 26. பக்தி முயற்சிகள்


01. திரு இருதய ஆண்டவருக்கு செபம் 230
02. திரு இருதயத்துக்கு குடும்பங்களை ஒப்புக்கொடுக்கும் செபம் 230
03. இயேசுவின் திரு இருதய மன்றாட்டு மாலை 231
04. குழந்தை இயேசு மன்றாட்டு மாலை 233
05. புனித மரியன்னையின் மாசற்ற இருதயத்துக்கு மன்றாட்டு மாலை 237
06. புனித மரியாள் மன்றாட்டு மாலை 238
07. ஆரோக்கிய அன்னை நவநாள் செபம் 240
08. ஆரோக்கிய அன்னைக்கு மன்றாட்டு மாலை 241
09. புனித சூசையப்பரைக் குறித்து செபம் 243
10. புனித சூசையப்பருக்கு தன்னை ஒப்புக்கொடுக்கும் செபம் 244
11. புனித சூசையப்பர் மன்றாட்டு மாலை 244
12. அப்போஸ்தலரான புனித இராயப்பரை நோக்கி செபம் 246
13. புனித இராயப்பர் மன்றாட்டு மாலை 247
14. அப்போஸ்தலரான புனித சின்னப்பர் மன்றாட்டு மாலை 249
15. புனித இஞ்ஞாசியாரை நோக்கி செபம் 253
16. புனித இஞ்ஞாசியார் மன்றாட்டு மாலை 253
17. புனித சவேரியார் நவநாள் செபம் 255

பா. எண். பக்கம்

18. புனித சவேரியார் மன்றாட்டு மாலை 256
19. புனித அந்தோணியார் செபம் 258
20. புனித அந்தோணியார் நவநாள்செபம் 258
21. புனித அந்தோணியாருக்கு குறுகிய செபம் 259
22. புனித அந்தோணியார் மன்றாட்டு மாலை 260
23. புனித பிரான்சிஸ் சலேசியார் செபம் 262
24. புனித பிரான்சிஸ் சலேசியார் மன்றாட்டு மாலை 263
25. புனித வனத்து சின்னப்பர் மன்றாட்டு மாலை 265
26. புனித வனத்து அந்தோணியார் செபம் 266
27. புனித வனத்து அந்தோணியார் மன்றாட்டு மாலை 267
28. புனித மிக்கேல் அதிதூதரை நோக்கி செபம் 269
29. காவல் தூதரை நோக்கி செபம் 269
30. காவல் தூதர் மன்றாட்டு மாலை 270

* * * * * * * * * * * *



அற்புத குழந்தை யேசு - ஒத்தையால்



அற்புத குழந்தை யேசு ஆலயம்,
ஒத்தையால்

அன்பியங்கள்

- குழந்தை இயேசு அன்பியம்
- வியாகுலமாதா அன்பியம்

# 1. வருகைப் பாடல்கள்

## அன்பினில் பிறந்த...

அன்பினில் பிறந்த இறைகுலம் நாமே
அன்பினைக் காத்து அறம் வளர்ப்போமே - 2

1. ஒரு மனத்தோராய் அனைவரும் வாழ்வோம்
அருள் ஒளிவீசும் ஒருவழி போவோம் - 2
பிரிவினை மாய்த்து திருமறை காப்போம் - 2
இருமையில் இறைவன் திருவுளம் காண்போம்

2. பிறப்பிலும் இயேசு இறப்பிலும் காட்டி
பெருமை செய்தாரே புனிதப் பேரன்பை - 2
பிறந்த நம் வாழ்வில் பயன்பெற வேண்டும்
பிறரையும் நம்மைப்போல் நினைத்திட வேண்டும்

## இதயங்கள் மலரட்டுமே ...

இதயங்கள் மலரட்டுமே - இங்கு
இன்னிசை முழங்கட்டுமே
நம்மில் இறையருள் வளரட்டுமே - அது
இகமெல்லாம் பரவட்டுமே

1. அன்பினை இறைவன் நம்மை நினைத்தார் - உயர்
பண்பிலே சிறக்க நமை அழைத்தார் - 2
வரையில்லா வரங்களை நமக்களித்தார் - 2 - தன்
கரையில்லா கருணையால் நமை மீட்டார்

2. இருளெல்லாம் அழிந்திட ஒளி கொணர்ந்தார்
அருள்வளம் கொழித்திட நமை அழைத்தார் - 2
திருமகன் அன்பினைச் சுவைத்திடும் நாம் - 2 - அதை
தரணியர் மகிழ்ந்திட பகிர்ந்திடுவோம்

## இயேசுவின் சந்நிதியில் ...

இயேசுவின் சந்நிதியில்
மகிழ்வோம் வாருங்கள்
என் தேவனில் நம் இயேசுவில்
இணைந்து மகிழுங்கள்

1. சந்தங்கள் பல வண்ணங்கள் - உந்தன்
பந்தங்கள் தினம் பாடுவேன்
எண்ணங்கள் சங்கீதங்கள் - என்றும்
என் இன்ப சுக ராகங்கள்

நீ செய்த நன்மைகள் என் வாழ்வின் விடியல்கள்
என்றென்றும் நான் பாடுவேன்

2. காலங்கள் கடந்தாலுமே - உந்தன்
கனிவான அருள் தாருமே
ரோகங்கள் நிலை மாறுமே - என்றும்
என் ஆற்றல் குறை தீருமே
என் ஆயுள்காலங்கள் உன் அன்பின் நாள் வாழ
என் இல்லம் தங்கிடுவாய்

## இறைவா இதோ வருகின்றோம் ....

இறைவா இதோ வருகின்றோம்
உம் திரு உள்ளம் நிறைவேற்ற

1. கல்லான இதயத்தை எடுத்துவிடு - எமைக்
கனிவுள்ள நெஞ்சுடனே வாழவிடு
எம்மையே நாங்கள் மறக்கவிடு - 2 - கொஞ்சம்
ஏனையோர் துன்பம் நினைக்கவிடு

2. பலியென உணவைத் தருகின்றோம் - நிதம்
பசித்தோர்க்குணவிட மறக்கின்றோம்
கடமை முடிந்ததென நினைக்கின்றோம் - 2 - எங்கள்
கண்களைக் கொஞ்சம் திறந்துவிடு

## உன் இதய வாசல் தேடி ...

உன் இதய வாசல் தேடி வருகின்றேன்
என் இதயம் உறைய என்னில் வாருமே
நீ இல்லையேல் நான் இல்லையே
நான் வாழ என்னுள்ளம் வா

1. காலங்கள் மாறலாம் கோலங்கள் மாறலாம்
காற்றசைய மறக்கலாம் கடலசைய மறக்கலாம்
உன் அன்பு என்றென்றும் மாறாதைய்யா
உன் நிழலில் நான் என்றும் வாழ்வேனைய்யா

2. குயில்பாட மறக்கலாம் மயில் ஆட மறக்கலாம்
நயமுடனே நண்பரும் என்னைவிட்டு பிரியலாம்
உன் அன்பு என்றென்றும் மாறாதைய்யா
உன் நிழலில் நான் என்றும் வாழ்வேனைய்யா

## தீபத்தின் ஒளியினில் ...

தீபத்தின் ஒளியினில் இணைவோம்
திருப்பலி செலுத்திட விரைவோம்
மனிதம் மலர்ந்திட புனிதம் வளர்ந்திட - தீபத்தின்

1. நல்வாழ்வின் தீபங்களாய் - இங்கு
நாளெல்லாம் ஒளிர வாருங்களே
நம் வாழ்வின் தேவைகளை - தினம்
நல்லோர்க்கு இயேசு தந்திடுவார்
அவரின் இல்லம் தினம் வந்தால் - நம்
உள்ளங்கள் ஒளியால் நிறைந்திடுமே - 2
அன்பு செய்யும் உள்ளங்களே - இறைவனின்
அருள்பெரும் இல்லங்களே - 2

2. இயேசுவோம் நாம் இணைந்தால் - என்றும்
நம் வாழ்வில் தோல்விக்கு இடமில்லையே
நன்மை செய்து நீ மகிழ்ந்தால் - இங்கு
உண்மை ஒளி உனக்கு கிடைத்திடுமே
வார்த்தை இங்கு மனுவானார் - நம்
வாழ்வினில் என்றும் குடிகொண்டார் - 2
அன்பு செய்யும் உள்ளங்களே - இறைவனின்
அருள்பெரும் இல்லங்களே - 2

## வரம் கேட்டு வருகின்றேன் ...

வரம் கேட்டு வருகின்றேன் இறைவா - என்
குறை கேட்டு அருளாயோ தலைவா

1. பகைசூழும் இதயத்துச் சுவரையெல்லாம் - என்
பாசத்தால் தகர்க்கின்ற வரம் கேட்கின்றேன்
புகைசூழ்ந்து இருள் வாழும் மனத்தில் எல்லாம் - உன்
பெயர் சொல்லி ஒளியேற்ற உனைக் கேட்கின்றேன்

2. நலமெல்லாம் எனக்கென்று தேடும் குணம் - இனி
நாள்தோறும் இறக்கின்ற வரம் கேட்கின்றேன்
பலியாகப் பிறர்க்கென்னை அளித்திட்டபின் - என்
பரிசாக உனைக் கேட்கும் மனம் கேட்கின்றேன்

தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். (யோ. 3:16)

## ஆலயம் நோக்கி ....

ஆலயம் நோக்கி வருகின்றோம்
எம்மை பலியாக்க
ஆனந்தமுடனே வருகின்றோம்
ஆண்டவா உமைக்காண
உம் தூய அன்பினிலே
எமை நாளும் காப்பவரே
உம் அருள் நாடி வந்தோம்
திருப்பலியினில் இணைய வந்தோம் } 2

I

இறைமக்களாக ஏற்றுக்கொண்டீர்
இறைமகன் விருந்தில் பங்கு தந்தீர்
அப்பா தந்தையே என்றழைக்க
அடிமைகள் எமக்கு உரிமை தந்தீர்
**அஞ்சாதே என்றழைத்தீர்**
**ஆவியினால் திடம் தந்தீர்** } - 2
உம் அருள் நாடி ஓடி வந்தோம்
தியாகத்தின் பலியினில் இணைய வந்தோம்

II

பருவகாலத்தில் பலன் கொடுக்கும்
பரம தேவனின் பிள்ளைகளாய்
பாரினில் உமது பேரரசு
வளர்ந்து பரவிட உழைத்திடவே
**உம் திரு இல்லம் ஓடி வந்தோம்**
**உம் திரு முகமே நாடி வந்தோம்** } - 2
திருமுக ஒளியைக் காட்டுமைய்யா
நிறையருள் வாழ்வில் நடத்துமைய்யா

## இறைவனின் இறைகுலமே ....

இறைவனின் இறைகுலமே பலிபீடம் வாருங்கள்
இயேசுவின் திருக்குலமே ஆலயம் வாருங்கள் - 2
அருள்வாழ்வில் வளர அருட்சான்று பகர
தீபங்களாய் எரிவோம்
இறைவாழ்வு அடைய புதுவாழ்வு மலர
ஓர் குலமாய் இணைவோம்
**கூடுங்கள் ஆலயம் கூடுங்கள்**
**பாடுங்கள் கீதம் பாடுங்கள்**
**வாருங்கள் பகிர்ந்து வாருங்கள்**
**தாருங்கள் அன்பைத் தாருங்கள்**

I

அருள்தரும் இறைவனின் வார்த்தை கேட்போம்
அமைதியை அளிக்கும் அவரில் வாழ்வோம் - 2
வாழ்வில் உண்மை, வழியில் நேர்மை
நாளும் தந்திடும் இறையடி பணிவோம் - 2
**- கூடுங்கள் .....**

II

வார்த்தையின் ஒளியினில் வாழ்வை அறிவோம்
வானக விருந்தினை அருந்தி மகிழ்வோம் - 2
மனதில் அமைதி, வாழ்வில் உறுதி
என்றும் பெறவே ஆலயம் விரைவோம் - 2
**- கூடுங்கள் .....**

## வாருங்கள் நம் இறைவன் ....

வாருங்கள் நம் இறைவன் இல்லம் வாருங்கள் ... வாருங்கள் ...
வாருங்கள்
கூடுங்கள் நல் சமூகமாகக் கூடுங்கள் ... கூடுங்கள் ... கூடுங்கள்
நம் மீட்பராய் நல் நேசராய் - 2
உறவு கொள்ள வாருங்கள் - அவர்
பலி பொருளாய் மாறுங்கள்

1. எங்கும் பொங்கும் அவரின் அன்பு இல்லம் சேர வாருங்கள்
தாங்கும் கரங்கள் நம்மை என்றும் இறுகப் பற்ற வாருங்கள்
அழைக்கும் தேவனவன் குரலினைக் கேளுங்கள்
அமைதியின் வாழ்வினையே அமைத்திட வாருங்கள்
நன்மை கோடி நலன் செழிக்க நாடி வாருங்கள் - 2
நலன்கள் யாவும் தந்தவரைப் புகழ்ந்து பாடுங்கள் - 2

2. உண்மை அன்பு உழைப்பு நேர்மை ஓங்கி செழிக்க வாருங்கள்
கருணை பொங்கும் அவரின் ஆட்சி நிலைத்து நிற்க வாருங்கள்
புனிதம் மலர்ந்திடவே புரட்சி குரல் கொடுங்கள்
புதியதோர் சமுதாயம் படைத்திட வாருங்கள்
புவியில் இறைவன் ஆட்சி மலர ஓடி வாருங்கள் - 2
புதுமை செய்யும் இறைவனையே பாடி வாருங்கள் - 2

**அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் (லூக். 2:10)**

## அர்ச்சனை மலராக ஆலயத்தில்

அர்ச்சனை மலராக ஆலயத்தில் வருகின்றோம்
ஆனந்தமாய் புகழ்கீதம் என்றும் பாடுவோம் - 2
அர்ப்பணித்து வாழ்ந்திட அன்பர் உம்மில் வளர்ந்திட
ஆசையோடு அருள் வேண்டிப் பணிகின்றோம்.

1. தாயின் கருவிலே உருவாகு முன்னரே - 2
அறிந்து எங்களைத் தேர்ந்து தெய்வமே
பாலனாயினும் பச்சப் பிள்ளையாயினும்
அர்ச்சித்திருக்கின்றீர், கற்பித்திருக்கின்றீர்
மனிதராகப் புனிதராக வாழப் பணிக்கின்றீர்
பிறரும் வாழ எங்கள் வாழ்வை
கொடுக்க அழைக்கின்றீர்
அஞ்சாதீர் என்று எம்மைக் காத்து வருகின்றீர்.

## ஆலயத்தில் நாம் நுழைகையிலே

ஆலயத்தில் நாம் நுழைகையிலே - புது
நினைவுகள் எழுகின்றன - அந்த
நினைவுகளின் புது வருகையிலே - நம்
நெஞ்சங்கள் நிறைகின்றன - ஆ --- ஆ ----

1. அன்பான மகனை பலி கொடுத்த
ஆபிரகாம் இங்கே தெரிகின்றார்
பண்பான ஆட்டினைப் பலி ஈந்த
ஆபேலும் இங்கே தெரிகின்றார்.

2. எருசலேம் ஆலயம் நுழைந்தவுடன்
இயேசுவும் அங்கே பொழிந்தாரே
என் வீடு இது என் ஜெபவீடு
வன் கள்வர் குகையாய் மாற்றாதீர் - ஆலயத்தில்

## இயேசு அழைக்கிறார்

இயேசு அழைக்கின்றார் (2)
ஆவலாய்த் தன் கரத்தை நீட்டி
அன்பாய் அழைக்கின்றார்

1. இறைவனின் குலமே இயேசுவின் உள்ளமே
இதய அமைதி இனிதே அடைய
இயேசு அழைக்கின்றார் (2)

2. கவலைப் படுவோரே கலங்கித் தவிப்போரே
கவலை நீக்கிக் கலக்கம் போக்க
கடவுள் அழைக்கின்றார் (2).

## இறைவனின் புகழ்பாட

இறைவனின் புகழ்பாட - இங்கு
இதயங்கள் பல கோடி
துறையெல்லாம் கடந்தவனே - உன்
துணையொன்றே நாம் தேடி

1. மறைபொருள் ஆனவனே - உன்னை
மனங்களில் சிறை வைத்தோம்
குறையுள்ள கோயிலிலே - உன்னைக்
கொண்டு நாம் குடி வைத்தோம்.

2. அன்பு உன் பேர் அறிவோம் - தூய
அறிவென்றும் நாம் தெரிவோம்
இன்பம் நீ எனத் தெளிவோம் - நல்ல
இரக்கம் நீ என மொழிவோம்.

3. சத்தியம் உன் பெயராம் எனச்
சாற்றுவோம் எம் உயிராம்
நித்தமே உனைப் பணிந்தோம் - உன்
நினைவினில் யாம் களித்தோம்.

## இறைமக்கள் அகமகிழ்ந்து

இறைமக்கள் அகமகிழ்ந்து வருகின்ற திருப்பவனி
திருச்சபை இணைந்து கிறிஸ்துவோடு தருமே தியாகப்பலி
வாராய் இறை திருக்குலமே
வாழ்வாய் பேறுடனே.

1. மலருடன் சேரும் யாவுமே மணம் பெற்று வாழ்தல் நீதியே (2)
புவி வாழ்வை நாமும் தரவே இறைமாண்பை இன்றே பெறவே (2)
விரைவாய் வருவோம் தேவன் அருள் பெறுவோம் (2)
இறைவன் நிழலில் வாழ்வின் பொருள் அறிவோம் (2)

2. மகிழ்வுடன் பாடும் வேளையே மனங்களின் சோர்வை நீக்குமே (2)
திருவாழ்வை தேடி பெறுவோம் மறை வாழ்வின் நன்மை அடைவோம் (2)
பணிவாய் குலமாய் இயேசு பதம் பணிவோம்
மறையின் வழியில் வேத ஒளி பெறுவோம்

## உறவு மலரும் புனித இடம் ஆலயம்

உறவு மலரும் புனித இடம் ஆலயம் - ஆலயம்
உள்ளம் ஒன்று சேரும் இடம் ஆலயம்
உணர்வு பெருகி உயர்வு அடைந்திட
உண்மை வழி செல்லும் வாழ்வும் ஆலயம், ஆலயம் (4)

1. இயற்கை காத்திடும் மாந்தர் வாழிடம் ஆலயம் (2)
பகிர்ந்து வாழ்ந்திடும் உயிர்கள் உறைவிடம் ஆலயம் (2)
புனிதத்தை உயிரென மதித்திடும் உள்ளங்கள்
மானுடர் வாழ்வுக்காய் தனைத்தரும் நெஞ்சங்கள்
நம்பிக்கை செய்தி சொல்லும் நண்பர்கள்
உண்மையாய் உயிர் இழக்கும் ஜீவன்கள்
எல்லோரும் இறைவன் உறையும் ஆலயம் (2)

2. பசுமை சோலைகள் பாடும் பறவைகள் ஆலயம் (2)
காற்று வானமும் கடலும் மலைகளும்
விடியலின் குரலென ஒலித்திடும் கலைகளும்
கடவுளே உன் புகழ்பாடிடும் கவிதையும்
நல்வார்த்தை பேசுகின்ற நாவுகள்
நல்லோரின் பாதை செல்லும் பாதங்கள்
எல்லாமே இறைவன் உறையும் ஆலயம் (2).

## உதயங்கள் தேடும் இதயங்கள்

உதயங்கள் தேடும் இதயங்கள் தனிலே
இறையருள் மலர
மனங்கள் பூக்கள் சிந்த, வசந்தம் வாழ்வில் பொங்க
வாரும் இறைகுலமே

1. இரவினில் தவித்திட்ட வேளையிலே
முழு நிலவாய் நிலமதில் நடந்தவனே
இடர்களில் துடித்திட்ட பொழுதினிலே
இன்று இதயத்தில் மலர்ந்திடும் சுடர் ஒளியே
பாவம் நம்மில் மறையாதோ
தினம் பாதம் நம்மிலே பதியாதோ
சோகங்கள் மறைந்திட அருள்புரிவாய்

2. கவலைகளால் மனம் கலங்கையிலே உந்தன்
கரங்களால் என்னைத் தாங்க வந்தாய்
ஆறுதல் தேடி நான் அலைகையிலே உந்தன்
விழிகளில் கருணை மழை பொழிந்தாய்
புதிய உறவுகள் மலர்ந்திடவே உந்தன்
அன்பன் பலியினில் கலந்திடவே
ஓர்குலமாய் ஒன்று கூடிவந்தோம்

## தலைவா உனை வணங்க

தலைவா உனை வணங்க - என்
தலைமேல் கரம் குவித்தேன்
வரமே உனைக் கேட்க - என்
சிரமே தாழ் பணிந்தேன் - 2

1. அகல்போல் எரியும் உன் அன்பு - அது
பகல்போல் பணம் பரவும் - 2
நிலையாய் உனை நினைத்தால் - நான்
மலையாய் உயர்வடைவேன் - 2

2. நீர் போல் தூய்மையையும் - என்
நினைவில் ஓடச் செய்யும் - 2
சேற்றினில் நான் விழுந்தால் - என்னைச்
சீக்கிரம் தூக்கிவிடும்.

## விடுதலை ராகங்கள் விடியலின் கீதங்கள்

விடுதலை ராங்கள் விடியலின் கீதங்கள்
முழங்கிட வாருங்களே
புது உலகமைத்திட புதுவழி படைத்திட
அன்புடன் வாருங்களே
வாருங்கள் வாருங்கள் ஆலயம் வாருங்கள்
அனைவரும் வாருங்களே

1. அன்புக்காகவும் அமைதிக்காகவும்
இயேசு மனுவானார்
உண்மைக்காகவும் நீதிக்காகவும்
அவரே பலியானார்
ஒன்று கூடுவோம் உணர்ந்து வாழுவோம் - 2
சுயநலம் நீக்கி பிறர் நலம் காத்து
அன்பினில் நாம் இணைவோம். (வாருங்கள்)

2. ஏழைய எளியவர் வாழும் இடங்களே
இறைவன் வீடாகும்
வறுமை படியிலே அலறும் குடில்களே
இறைவனின் மொழியாகும்
பகிர்ந்து வாழுவோம் பசியை நீக்குவோம் - 2
இறைவனின் அரசின் இனிமையைக் காண
இன்றே முயன்றிடுவோம். (வாருங்கள்)

## இயேசு என்னும் பெயரை

இயேசு என்னும் பெயரைச் சொல்லி மீட்படைவோமே
இயேசுவாக மாறி வாழ பலி கொடுப்போமே
விசுவாசத்துடன் ஒன்றாகிடுவோம் - நாம்
நிறைபலியாம் திருப்பலியை நிறைவேற்றுவோம்

1. தன்னுடலை இயேசு கொடுத்துப் பலியானாரே
தம் இரத்தம் சிந்தி நம்மை மீட்டுவிட்டாரே
நினைத்துப் பாருங்கள் . . .
நினைத்துப் பாருங்கள் வான் தெய்வம் பலியாடாய் மாறிவிட்டது
இணைந்து வாருங்கள் அவரோடு நமைச் சேர்த்துப் பலியாக்கவே
பலியாக்கவே . . . .

2. பாவத்திற்காய் மனம் வருந்தி தூய்மையாகுவோம்
வாழ்வளிக்கும் அருள்வாக்கை கேட்டு மகிழ்வோம்
எடுத்து வாருங்கள் . . .
எடுத்து வாருங்கள் வாழ்வினில் அனுபவித்த இன்ப துன்பத்தை
கொடுத்துக் கேளுங்கள் அவர் போல பிறருக்காக நாம் வாழவே
நாம் வாழவே . . . .

## இயேசுவின் தலைமையில்

இயேசுவின் தலைமையில் புதியதோர் உலகம்
அமைத்திட எழுந்திடுவோம் - நம்
இதயத்தில் எழுந்திடும் எண்ணங்கள் யாவையும்
இசையுடன் முழங்கிடுவோம் - 2

**இறைகுலமே எழுக - 2**
**இறையரசே வருக -2**

1. ஏழைகள் வாழும் தெருக்களில் இறங்கி
இயேசுவே நடந்து சென்றார் - நம்
இறைவனின் அரசு இவர்களுக்குரியது
என்பதை எடுத்துச் சொன்னார் - அந்த
இறைமகன் இயேசுவின் பாதங்கள் வழியில்
பயணத்தைத் தொடர்ந்திடுவோம் - வாழ்க்கைப்
பயணத்தைத் தொடர்ந்திடுவோம்.

2. விடுதலை அடைவர் சிறைகளில் வாழ்வோர்
என்று இயேசு சொன்னார் - அவர்
ஒடுக்கப்பட்டோருக்கும் உரிமையற்றோருக்கும்
வழங்குவேன் வாழ்வு என்றார் - நம்
விழிகளைத் திறந்து உலகினைப் பார்ப்போம்
ஆவியின் வழி நடப்போம் - தூய
ஆவியின் வழி நடப்போம்

## இறைவா உந்தன் புகழ்பாடி

இறைவா உந்தன் புகழ்பாடி - உம்
திருப்பீடம் வருகின்றோம் - உந்தன்
திருப்பாதம் தொழுகின்றோம்

1. உம்திருக் கோயிலிலே நான் ஒளியாக
ஏழைகள் உள்ளத்திலே அன்புத் துணையாக
எளியர் துயர் துடைக்க வறியர் குலம் செழிக்க
அடிமை விலங்கொடிக்க உரிமைக் குரல் கொடுக்க
உமது பணி ஏற்க நான் துணிந்தேன்.

2. உமதன்புப் பணியிதுவே என் வாழ்வாக
உள்ளத்தை உவப்புடனே நான் பகிர்ந்தளிக்க
தீமை இருள் தணிய உண்மை ஒளி பரவ
மனித மாண்புயர உமது அருள் சிறக்க
உமது பணி ஏற்க நான் துணிந்தேன்.

## இறைவன் நம்மை அழைக்கின்றாரே

இறைவன் நம்மை அழைக்கின்றாரே
விரைந்து வாருங்கள்
புதிய உலகம் படைத்திடவே
மகிழ்ந்து கூடுங்கள்
இறைவன் அரசு வளர்ந்திடவே
இறை வார்த்தை வழங்கிடவே
இனிதே இணைந்தே சென்றிடுவோம்

1. தாயின் கருவினிலே நம்மைத் தெரிந்தெடுத்தார்
அவரின் கைகளிலே நம் பெயரைப் பொறித்து வைத்தார்
அவரில் நம்மை அர்ப்பணம் செய்ய
மனித மாண்பு மண்ணில் உயர
எழுவீர் வருவீர் இயேசு வழியிலே

2. அன்புப் பணியினிலே இறைவனைச் சொல்லியே
ஏழை மனிதரிலே இயேசுவைக் காணவே
உண்மை நீதி நேர்மை நிலைக்க
பொய்மை ஜாதி வன்மை அழிக்க
எழுவீர் வருவீர் இயேசு வழியிலே

உன்னதரின் பாதுகாப்பில் வாழ்பவர், எல்லாம் வல்லவரின் நிழ-ல் தங்கியிருப்பவர். ஆண்டவரை நோக்கி, நீரே என் புக-டம், என் அரண், நான் நம்பியிருக்கும் இறைவன் என்று உரைப்பார். (தி.பா. 91:1–2)

## தமிழால் உன் புகழ்பாடி

தமிழால் உன் புகழ்பாடி தேவா - நான்
தினம் வாழ வருவாயே திருநாயகா
வளம் தருவாயே உருவானவா

1. எனைச்சூழும் துன்பங்கள் கணையாக வரும்போது
துணையாகி எனையாள்பவா
மனநோயில் நான் மூழ்கி மடிகின்ற பொழுதங்கு - 2
குணமாக்க வருவாயப்பா - எனை
உனதாக்கி அருள்வாயப்பா.

2. உலகெல்லாம் இருளாகி உடனுள்ளோர் சென்றாலும்
வழிகாட்டும் ஒளியானவா
நீ தானே எனக்கெல்லாம் நினைவெல்லாம் நீதானே - 2
நாதா உன் புகழ்பாடுவேன் - எனை
நாளெல்லாம் நீ ஆளுவாய்.

## காலை இளங்கதிரே

காலை இளங்கதிரே நீ கடவுளைத் துதிக்க எழு
சோலைப் புதுமலரே நீ இறைவனின் தாளில் விழு
ஆலயத் திருமணியே நீ ஆண்டவன் குரலை அசை
சூலத் தவக்குலமே நீ அருள்தரும் பலியை இசை

1. திருப்பலி நிறைவேற்றும் குருவுடன் இணைந்து கொண்டு
திரளாய் வருகின்ற கூட்டத்தின் அன்பு கண்டு
பெரும்வரக் கல்வாரி அரும்பலி நினைவாகும் - 2
திருமறைத் தகனப்பலி பீடத்தில் சூழுமிவிடு.

2. வருங்குருவுடன் சேர்ந்து பரமனை வாழ்த்தி நின்று
திருப்பலிப் பீடத்திலே தெய்வீக வாழ்வடைந்து
சிரமே தாழ்பணிந்து சிந்தையை இறைக்களித்து - 2
பாமுதல் தருகின்ற அருட்பலி பங்கேற்பாய்.

## நன்மைகள் செய்த இறைவனுக்கு

நன்மைகள் செய்த இறைவனுக்கு
நன்றியின் பலியைச் செலுத்திட வாரீர் - 2
நன்மைகள் நாமே அமைவோம் வாரீர்.

1. உள்ளத்தைத் தருவது திருப்பலியாம்
உடைந்ததென்றால் அது பெரும்பலியாம் - 2
கொடைகள் பெறுவது தகும் வழியாம் - 2
குறையினைப் போக்கும் கோ வழியாம்.

2. வானத்தை நோக்கும் நறும் புகைபோல்
வாருங்கள் உள்ளத்தை அளித்திடுவோம்
அனைத்தையும் அன்புடன் கொண்டு வந்தோம் - 2
ஆண்டவர் திருமுன் படைத்திடுவோம்.

## நிறையருள் வாழ்வுப் பயணத்திலே

நிறையருள் வாழ்வுப் பயணத்திலே
பேரணியாய் நாம் செல்வோம்
இறைவனின் தியாகப் பலியினிலே
கலந்திடவே நாம் இணைவோம்.

1. அவனியிலே இறைவனுக்காய்
அர்ப்பணம் செய்தவர் பேறுபெற்றோர் - எனும்
அருட்சான்று பகர்ந்திடவே
அன்பர்களே ஒன்று கூடுவோம்
அன்பு உள்ளங்கள் நாம் இணைவோம்
இன்ப வெள்ளத்தில் நனைந்திடுவோம்.

2. அன்பரசை அகிலமெங்கும்
பரவிடச் செய்பவர் பேறுபெற்றோர் - அந்த
அருள்வாழ்வு பரவிடவே
தீபங்களாய் நின்று எரிந்திடுவோம்
உண்மை செல்வத்தை நாம் தொழுவோம்
விண்ணக செல்வத்தில் திளைத்திடுவோம்.

## புதிய வானகமும் புதிய வையகமும்

புதிய வானகமும் புதிய வையகமும் மலரும் நாளிது
புதிய இதயமும் புதிய ஆவியும் அணியும் நேரமிது
அலையென எழுவோம் அணியெனத் திரள்வோம்
ஆண்டவர் இயேசுவைப் புகழ்வோம்

1. இறைவனின் சொந்தப் பிள்ளைகள் நாம்
இறையரசின் குருத்துவக் குலமும் நாம்
உரிமை வாழ்விலே அமை அழைத்தார் - இந்த
உலகம் வாழவே நமைப் பணித்தார்
உறவின் பாலங்கள் நாம் அமைப்போம் - இங்கு
உருகும் விழிகளை நாம் துடைப்போம் - 2

2. தம்மையே இயேசு பலியென தந்து
விடுதலை வாழ்வைத் தந்துள்ளார்
கருணை இறைவனில் நாம் நிலைப்போம்
மனக்கதவு நிலைகளை நாம் திறப்போம்
கரங்கள் இறைவனின் பலிக்கானால் - இங்கு
கடவுள் அரசுதான் திறக்காதோ - 2

## மனமே இறைவனில்

மனமே இறைவனில் சங்கமம்
மனிதம் உறவிலே சங்கமம்
இளமை நீர்மே வாழ்விலே சங்கமம்
நிறைவாழ்வு பெறவே உன்னில் சங்கமம் - 2
சங்கமம் சங்கமம்
நாதனே நான் உன்னில் சங்கமம்.

1. கடல்களே அலைகளில் சங்கமம்
கவிஞனே கவிதையில் உன் சங்கமம்
மனிதனே இறைவனில் சங்கமம்
புனிதனே அயலானில் இறை சங்கமம்
சங்கமம் . . . . .

2. நெஞ்சமே நீதியில் சங்கமம்
நேர்மையே உண்மையில் உன் சங்கமம்
திறமைகள் படைத்தோனில் சங்கமம்
உணர்வுகள் உறவிலே இறை சங்கமம்
சங்கமம் . . . . .

## வாருங்கள் அன்பு மாந்தரே

வாருங்கள் அன்பு மாந்தரே
பலி செலுத்த வாருங்கள்
பண்ணிசைத்துப் பாடுங்கள்

1. இயேசு என்னும் ஆதவன் கதிர்விரிக்க காணுங்கள்
இதயம் என்ற மலர் விரித்து மணம் பரப்ப வாருங்கள்
ஆசை என்ற இருள் மறைந்து அன்பு உதயமாகவே
அருள் வழங்க இதயம் சேரும் அன்புருவைக் கேளுங்கள்

2. அன்பு என்றால் என்னவென்று அவனைக் கேட்டுப்பாருங்கள்
அத்தனையும் தருவதுதான் அன்பு என்று கூறுவான்
தன்னை ஈந்து அன்பு செய்த தேவன் இன்று வருகிறான்
நம்மை முற்றும் தந்து இன்பம் யாவும் பெற்று திரும்புவோம்.



# 2. தியானப் பாடல்கள்

## அமைதியின் தெய்வமே

அமைதியின் தெய்வமே இறைவா - எம்
இதயத் தலைவனே
அருள்வாய் - 2 - யாம்
ஏங்கித் தேடுகின்ற அமைதி
அமைதி அமைதி இன்றும் என்றும் அமைதி

1. நீதிப் பாதையில் நடப்பவர் சுவைப்பது **அமைதி - 2**
தியாக சிகரத்தில் நிலைப்பவர் பெறுவது **அமைதி - 2**
அன்பு மொழியை விதைத்திடுவோர்
அருளின் பயிரை அறுத்திடுவார் - 2- அமைதி ....

2. உறவைத் தேடியே உரிமைகள் காத்தால் **அமைதி - 2**
உயிரை மதித்தால் உண்மையில் நிலைத்தால் **அமைதி - 2**
ஓங்கும் வன்முறை ஒழித்திடுவோம்
வீங்கும் ஆயுதம் களைந்திடுவோம் - 2 - அமைதி ......

## அமைதி தேடி அலையும்

அமைதி தேடி அலையும் நெஞ்சமே
அனைத்தும் இங்கு அவரில் தஞ்சமே
நிலையான சொந்தம் நீங்காத பந்தம்
அவரன்றி வேறில்லையே - 2

1. போற்றுவேன் என் தேவனை
பறை சாற்றுவேன் என் நாதனை
எந்நாளுமே என் வாழ்விலே - 2
காடு மேடு பள்ளம் என்று
கால்கள் சோர்ந்து அலைந்த ஆடு
நாடுதே அது தேடுதே.

2. இறைவனே என் இதயமே - இந்த
இயற்கையின் நல் இயக்கமே
என் தேவனே என் தலைவனே - 2
பரந்து விரிந்த உலகம் படைத்து
சிறந்த படைப்பாய் என்னைக் கண்ட
தேவனே என் ஜீவனே

## அமைதியின் தூதனாய்

அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே - 2
அன்பனே இறைவனே என்னிலே வாருமே.

1. பகைமை உள்ள இடத்தில் பாசத்தை வளர்க்கவும்
வேதனை நிறைந்த மனதில் மன்னிப்பு வழங்கவும்
கலக்கம் அடையும் வாழ்வில் நம்பிக்கை ஊட்டவும்.

2. தளர்ச்சி ஓங்கும் பொழுது மனத்திடம் தழைக்கவும்
இருளே சூழும் வேளை ஒளியை ஏற்றவும்
துயரம் வாட்டும் நேரம் உதயம் காணவும்.

3. ஆறுதல் அன்பை அளித்து புரிதலை வளர்க்கவும்
கொடுக்கலில் நிறைவைக் கண்டு மன்னித்து வாழவும்
தன்னலம் ஒழித்து புதிய உலகம் படைக்கவும்.

## அன்பே கடவுள் என்றால்

அன்பே கடவுள் என்றால் அன்புக்கு ஈடேது சொல்
அன்பே இன்பம் என்றால் அன்புக்கு விலையேது சொல்

1. மண்ணோர்கள் மொழி பேசினும் - அன்புக்கு ஈடாகுமா
விண்ணோர்கள் மொழி பேசினும் - அன்புக்கு ஈடாகுமா

2. இறைவாக்கு சொல் வரமும் - அன்புக்கு ஈடாகுமா
மறைபொருள் உணர்பொருளும் - அன்புக்கு ஈடாகுமா

3. அளவில்லா அறிவுத்திறன் - அன்புக்கு ஈடாகுமா
மலை பெயர் விசுவாசமும் - அன்புக்கு ஈடாகுமா

4. உள் பொருள் வழங்கும் தன்மை - அன்புக்கு ஈடாகுமா
என் உடல் எரிப்பதுவே - அன்புக்கு ஈடாகுமா

## ஆண்டவர்க்கு நன்றி செலுத்துங்கள் (தி.பா. 118)

ஆண்டவர்க்கு நன்றி செலுத்துங்கள்
ஏனெனில் அவர் நல்லவர்
என்றென்றும் உள்ளது அவர் இரக்கம்

1. என்றென்றும் உள்ளது அவரது இரக்கம் என்று
ஆண்டவர்க்கு அஞ்சுவோர் அனைவரும் சாற்றுவார்களாக
துன்ப வேளையில் நான் ஆண்டவரைக் கூவியழைத்தேன்
ஆண்டவரும் என் மன்றாட்டைக் கேட்டு எனக்கு விடுதலை அளித்தார்

2. ஆண்டவர் என் பக்கம் இருக்க நான் ஏன் அஞ்ச வேண்டும்
எவன் எனக்கு என்ன செய்ய முடியும்?

எனக்கு துணை செய்யும் ஆண்டவர் என் பக்கம் உள்ளார்
சிதறுண்ட என் எதிரிகளை நான் ஏளனத்துடன் நோக்குவேன்

3. மனிதன் மீது நம்பிக்கை வைப்பதைவிட
ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்
தலைவர் மீது நம்பிக்கை வைப்பதைவிட
ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்.

## ஆண்டவரே என்னை அறிந்திருந்தீர் (தி.பா. 139)

ஆண்டவரே என்னை அறிந்திருந்தீர்
அமர்வதை எழுவதை தெரிந்திருந்தீர்
வாழ்க்கை முழுவதும் அறிந்தவர் நீர் - என்
நினைவுகள் அனைத்தும் கடந்தவர் நீர்

1. நான் நடப்பதும் படுப்பதும் செல்லும் வழிகளும் - நீர்
அறிந்திருந்தென்னை சூழ்ந்திருந்தீர்
வானகம் பறந்தாலும் நீர் இருப்பீர்
பாதாளும் பதுங்கினும் உம் கரம் இருக்கும் - 2
கடல்களின் கடையெல்லை விடியலின் அருள் வேளை இறைவா . .

2. நான் இருளின் சிறகினில் மறைந்திட விரும்பினும் - நீர்
இருளில் ஒளியாய் திகழ்கின்றீர்
வாழ்வின் பயணத்தில் ஒளி தீபமே
இனிதே தொடர்கின்றீர் நீர் என்றுமே - 2
கடல்களின் கடையெல்லை விடியலின் அருள் வேளை இறைவா . .

3. நான் உலகின் இடர்களை சுமையென நினைத்திருந்தேன் - நீ
அவை சுவையெனப் பாடம் சொன்னாய்
சோகங்கள் கடலானது ஆயினும் நீர்
தீவுகள் போல் நின்று காத்து வந்தீர் - 2
கடல்களின் கடையெல்லை விடியலின் அருள் வேளை இறைவா . .

## அலைந்திடும் உள்ளம் அமைதியில் காண்பது

அலைந்திடும் உள்ளம் அமைதியில் காண்பது
இயேசுவின் திருவடி சரணாலயம் - 2
அன்பினில் வாழ்ந்து துன்புறும் போதும்
இயேசுவின் திருவடி சரணாலயம் - 2

**சரணாலயம் சரணாலயம்**
**இயேசுவின் திருவடி சரணாலயம் - 2**

1. உள்ளத்தில் ஒன்றி உறைந்திடும் தெய்வம்
இயேசுவின் திருவடி சரணாலயம் - 2

உலகினில் என்றும் நிலையான செல்வம்
இயேசுவின் திருவடி சரணாலயம் - 2
சரணாலயம் ....

வளமையும் வாழ்வும் இணைந்திடும் போது
இயேசுவின் திருவடி சரணாலயம் - 2
மகிழ்வினை நிறைவாய் மனங்களில் பொழியும்
இயேசுவின் திருவடி சரணாலயம் - 2
சரணாலயம் ....

## அம்மையப்பன் உந்தன் அன்பே

அம்மையப்பன் உந்தன் அன்பே நிரந்தரம்
மாறும் உலகில் மாறா உன் உறவே நிரந்தரம்
இம்மை வாழ்வில் மறுமை இருப்பது நிரந்தரம் - 2
நான் மாண்டபின்பும் உன்னில் உயிர்ப்பது நிரந்தரம்
நிரந்தரம் (2) நீயே நிரந்தரம்

1. தாயின் அன்பு சேய்க்கு இங்கே நிரந்தரம்
தாயும் தந்தையும் எமக்கு நீயே நிரந்தரம்
தேயும் வாழ்வில் நம்பிக்கை நீயே நிரந்தரம்
நான் சாயும்போது காப்பது நீயே நிரந்தரம்
நிரந்தரம் (2) .. .. ..

2. செல்வங்கள் கொணரும் இன்பத்தில் இல்லை நிரந்தரம்
பதவியும் புகழும் தருவது இல்லை நிரந்தரம்
நிலை வாழ்வு என்னும் நிஜமான நீயே நிரந்தரம்
அதன் விலையாக எனை நீ உன்னில் இணைப்பாய் நிரந்தரம்
நிரந்தரம் (2) .. .. ..

## ஆண்டவரே பேசும்

ஆண்டவரே பேசும் - உம்
அடியவன் நான் கேட்கிறேன் - 2

1. உள்ளம் மலரெனத் திறந்துள்ளது
உலகில் நினைவுகள் விடுத்துள்ளது
கள்ளமில்லா மனம் அமைந்துள்ளது
கடவுள் உமையே அழைக்கின்றது.

2. ஒலிக்கும் குரல்களில் தூய்மையில்லை
ஒலித்தால் செவிகள் ,கேட்பதில்லை
உம்மொழி நான் கேட்பதில்லை
உள்ளம் அடையும் ஆறுதலே.

3. காவலர் இரவினை நோக்குதல் போல்
கமழும் கமலம் பார்ப்பது போல்
ஆண்டவர் வரவைப் பார்க்கின்றது
அகமகிழ் பெறவே துடிக்கின்றது.

## இறைவன் எனது மீட்பானார்

இறைவன் எனது மீட்பானார்
அவரே எனக்கு ஒளியானார்
அவரைக் கொண்டு நான் வாழ
எவரைக் கண்டும் பயமில்லை.

1. வாழ்வில் இறைவன் துணையானார்
வாடும் எனக்கு ஒளியானார்
தீயோர் என்னை வதைத்தாலும்
தீமை அணுக விடமாட்டார் - 2

2. தீயோர் படைபோல் சூழ்ந்தாலும்
தீராப் பகையைக் கொண்டாலும்
தேவன் அவரைத் திடமாக
தேடும் எனக்கு குறையேது - 2

## இயேசுவே உந்தன்

இயேசுவே உந்தன் வார்த்தையால் வாழ்வு வளம் பெறுமே
நாளுமே அன்புப் பாதையில் கால்கள் நடந்திடுமே
தேவனே உந்தன் பார்வையால் என் உள்ளம் மலர்ந்திடுதே
இயேசுவே என் தெய்வமே உன் வார்த்தை ஒளிர்ந்திடுதே

1. தீமைகள் தகர்ந்தொழிந்திடும் உன் வார்த்தை வலிமையிலே
பகைமையும் சுய நலன்களும் இங்கு வீழ்ந்து ஒழிந்திடுமே
நீதியும் அன்பு நேர்மையும் பொங்கி நிறைந்திடுதே
இயேசுவே என் தெய்வமே உன் வார்த்தை ஒளிர்ந்திடுதே

2. நன்மையில் இனி நிலைபெறும் என் சொல்லும் செயல்களுமே
நம்பிடும் மக்கள் அனைவரும் ஒன்றாகும் நிலை வருமே
எங்கினும் புது விந்தைகள் உன்னைப் புகழ்ந்திடுதே
இயேசுவே என் தெய்வமே உன் வார்த்தை ஒளிர்ந்திடுதே

## இயேசு இயேசு என்று அழைத்து

இயேசு இயேசு என்று அழைத்து
பேசு பேசு உன் கதையை - உந்தன்
குரலைக் கேட்டு உன்னை மீட்டு
வானகம் சேர்க்கும் தேவனவர்

1. வாழ்வாய் வழியாய் உயிராய் - மண்ணில்
சுடராய் அணையா ஒளியாய் -2
வந்தார் மாபரன் இயேசு - உயிர்
தந்துனை மீட்டார் இயேசு
கல்வாரி சிகரமதில்

2. பாவிகள் நம்மை மீட்கவே உலகில்
ஆதவனாய் ஒளிர்ந்தெழுந்தார் - 2
சோதனைகள் பல தந்து நம்மை
வேதனை விட்டெழச் செய்தார்
கல்வாரி சிகரமதில்

## இயேசு நாமம் பாடப்பாட

இயேசு நாமம் பாடப்பாட
இனிமை பொங்குதே - அவர்
இல்லம் வாழ எந்தன் இதயம்
ஏங்கித் தவிக்குதே.

1. ஓங்கும் குரலைக் காக்க வேண்டும்
உன் நாமம் பாடவே
என் உள்ளம் தேறவே என் தாகம் தீரவே
உன் அன்பில் வாழவே
என் தேவா தேவா வா

2. ஏங்கும் விழிகள் தேற்ற வேண்டும்
வான் தீபம் காணவே
உன் அன்பில் வாழவே உன்னோடு சேரவே
என்னில் நீ வாழவே
என் தேவா தேவா வா.

## இயேசுவே என்னுடன் நீ பேசு

இயேசுவே என்னுடன் நீ பேசு - என்
இதயம் கூறுவதைக் கேளு
நான் ஒரு பாவி ஆறுதல் நீ கூறு
நாள் முழுதும் என்னை வழி நடத்து

1. உன் திருப்பெயர் நான் பாடிடும் கீதம்
உன் திரு இதயம் பேரானந்தம்
உன் திரு வாழ்வெ மக்கருளும் - இறைவா, இறைவா
உன் திரு நிழலில் நான் குடிகொள்ள
என்றும் என்னுடன் இருப்பாய் - இயேசுவே

2. இயேசுவின் பெயருக்கு மூவுலகென்றும்
இணையடி பணிந்து தலை வணங்கிடுமே
இயேசுவே உம் புகழ் வாழ்க வாழ்க வாழ்க
இயேசுவே நீர் என் இதயத்தின் வேந்தன்
என்னைத் தள்ளி விடாதே - இயேசுவே

## இயேசு என்னும் நாமம் பேசுகின்ற போது

இயேசு என்னும் நாமம் பேசுகின்ற போது
என்னுள்ளம் மகிழ்வு கொண்டது - அதை
ஏழிசையில் பாடுகின்றது ஆ - ஆ - ஆ -

1. நான் மீட்பளிக்கும் மகிழ்வு கண்டேன்
வான் வீட்டவரின் அழைப்பைக் கேட்டேன்
பெற்ற பெருவாழ்வை பகிர்ந்து கொள்கவென்று
பேசியவர் அனுப்பி வைத்தார்
தன் ஆவியவர் உயிரும் தந்தார்.

2. என் உள்ளமெல்லாம் கொள்ளை கொண்டார்
தன் இல்லந்தன்னை அங்கு கண்டார்
இயேசுவும் நானும் மானிடம் யாவரும்
சேர்ந்தங்கே வாழ்ந்திருப்போம் - ஒரே
சோதரராய் வாழ்ந்திருப்போம்.

## இயேசுவே உந்தன்

இயேசுவே உந்தன் வார்த்தையால் வாழ்வு வளம் பெறுமே
நாளுமே அன்புப் பாதையில் கால்கள் நடந்திடுமே
தேவனே உந்தன் பார்வையால் என் உள்ளம் மலர்ந்திடுதே
இயேசுவே என் தெய்வமே உன் வார்த்தை ஒளிர்ந்திடுதே

1. தீமைகள் தகர்ந்தொழிந்திடும் உன் வார்த்தை வலிமையிலே
பகைமையும் சுய நலன்களும் இங்கு வீழ்ந்து ஒழிந்திடுமே
நீதியும் அன்பு நேர்மையும் பொங்கி நிறைந்திடுதே
இயேசுவே என் தெய்வமே உன் வார்த்தை ஒளிர்ந்திடுதே

2. நன்மையில் இனி நிலைபெறும் என் சொல்லும் செயல்களுமே
நம்பிடும் மக்கள் அனைவரும் ஒன்றாகும் நிலை வருமே
எங்கினும் புது விந்தைகள் உன்னைப் புகழ்ந்திடுதே
இயேசுவே என் தெய்வமே உன் வார்த்தை ஒளிர்ந்திடுதே

## இசை ஒன்று இசைக்கின்றேன்

இசை ஒன்று இசைக்கின்றேன் - இறைவா
எளிய குரல் தனிலே - என்

இமைத் துடிப்புக்களோ - என்
இசையின் குரலுக்கு தாளங்களே

1. காலத்தின் குரலினில் தேவா - உன்
காலடி ஓசை கேட்கின்றது
ஆதியும் அந்தமும் ஆகினாய் - 2
மழலையின் சிரிப்பில் - உன்
எழில் வதனம் மலர்ந்திடும் மண்ணிலே.

2. ஏழையில் வியர்வையில் இறைவா - உன்
சிலுவையின் தியாகம் தொடர்கின்றது
சமத்துவம் என்னில் காணவே - 2
உழைக்கும் கரங்கள் ஒன்றென இணைவது
விடியலின் ஆரம்பம்.

## இயேசு எனது இறைவன்

இயேசு எனது இறைவன் என்று
எடுத்துச் சொல்லுவேன்
ஆசைதீர இயேசு நாமம் பாடிப் புகழுவேன்
பண் பாடுவேன் இந்நாளிலே
பாடாத இராகங்கள் நான் பாடுவேன்.

1. மாந்தர்களே மகிழுங்களே - ஆ .. ஆ ...
மன்னன் இயேசு நம்மை என்றும்
கண்ணின் மணிபோல் காக்கும்போது
என்ன வேண்டும் இன்னும் வேண்டிட.

2. வானோர்களே வாழ்த்துங்களே - ஆ .. ஆ ...
வாக்கினாலே யாவும் ஆக்கும்
வல்ல தேவன் இயேசு என்று
சொல்ல வேண்டும் தொல்லை தீர்ந்திட.

## இயேசுவின் திருநாம கீதம்

இயேசுவின் திருநாம கீதம்
என் நெஞ்சிலே என் நாளுமே
சங்காக முழங்கிட வேண்டும்.

1. நான் பாடும் பாடல் நாநிலம் எங்கும்
எதிரொலித்திட வேண்டும் ஆ .. ஆ .. ஆ
உள்ளம் உடைந்தோர் உவகை இழந்தோர்
உணர்வு பெற வேண்டும்
உவகை பெற வேண்டும் - 2.

2. பலகோடி புதுமைகள் செய்தது ஏசுவின்
இணையில்லாத் திருநாமம் ஆ - ஆ - ஆ
வாழ வைப்பதும் வாழ்விக்கப் போவதும்
அருள்தரும் ஒரு நாமம்
ஏசுவின் திருநாமம் - 2.

## இறைவனே என்னைக் காக்கின்றார்

இறைவனே என்னைக் காக்கின்றார்
இனியொரு குறையும் எனக்கில்லை
நிறைவழி நோக்கி நடந்திடுவாய்
நிம்மதியோடு நான் வாழ்வேன் - 2

1. பகலின் வெம்மையில் பயமில்லை
இருளின் நிலவிலும் தீமையில்லை
நம் இறைவன் காக்கின்றார்
என்றும் உதவிடுவார்
உன் கால் இடற விடுவதில்லை
உன்னதர் என்றும் அயர்வதில்லை - 2 - இறைவனே

2. இன்றும் என்றும் காப்பவராம்
பயணத்தில் துணையும் அவர் நாமம்
நம் இறைவன் காக்கின்றார்
என்றும் உதவிடுவார்
என்றும் தீமையை கண்டு நான் அஞ்சேன்.
நலமாய் நிதமும் நான் வாழ்வேன் - 2 - இறைவனே

## இறைவா என்னிதயம்

இறைவா என்னிதயம் நீர் ஏற்றிய இறைவாக்கு
ஒளிரட்டுமே உலகில் ஒளிரட்டுமே

1. நல்லாரை ஏற்கின்ற திருவுள்ளமும்
பொல்லாரை அணைக்கின்ற இறை உள்ளமும்
எல்லார்க்கும் பணி செய்யும் அன்புள்ளமும்
என் வாழ்வில் உனை ஏற்று மலரட்டுமே

2. நலம் யாவும் அருள்கின்ற நற்செய்தியாய்
நாள்தோறும் பலியாகும் இறைமகனாய்
மாந்தர் முன் ஒளிர்கின்ற மறை ஒளியாய் - பன்
மடங்காகப் பலன் தரும் நல் நிலமாய்.

**ஆண்டவரைச் சிக்கெனப் பிடித்துக்கொள்; அவரை விட்டு விலகிச் செல்லாதே. உன் வாழ்க்கையின் முடிவில் வளமை அடைவாய்.**
**(சீராக் 2:3)**

## இறைவழி செல்வோர் (தி.பா. 1)

இறைவழி செல்வோர் பேறுபெற்றோர் -2
பேறு பெற்றோர் - 4

1. தீயோரின் அறிவுரைக் கேளாதவன்
பாவியின் வழியில் செல்லாதவன்
பழிகாரர் கூட்டத்தில் அமராதவன்
பேறு பெற்றோன் - 2

2. மாசற்ற வாழ்க்கை நடத்துபவன்
நீதி நியாயத்தில் நிலை நிற்பவன்
இதயத்தில் இனியவை தியானிப்பவன்
பேறு பெற்றோன் - 2

3. தீயோரை இழிவாகக் கருதுபவன்
பிறரைப் பழித்து பேசாதவன்
நாவால் பழிச்சொல் கூறாதவன்
பேறு பெற்றோன் - 2

## இறைவா உம் இல்லத்திலே (தி.பா. 15)

இறைவா உம் இல்லத்திலே தங்கி வாழ்வோர் யார்?
இறைவா உம் திருமலையில் குடியிருப்போர் யார்?

1. மாசற்ற வாழ்க்கை நடத்துபவன்
நீதி நியாயத்தில் நிலை நிற்பவன்
இதயத்தில் நேரியவை **தியானிப்பவன்** - 2

2. நாவால் எப்பழிச் சொல்லும் கூறாதவன்
அயலானுக்குத் தீமை செய்யாதவன்
பிறரைப் பழித்து **உரைக்காதவன்** - 2

3. தீயோரை இழிவாகக் கருதுபவன்
ஆண்டவருக்கு அஞ்சுவோரை உயர்வாக மதிப்பவன்
தனக்குத் துன்பம் வந்தாலும் தந்த வாக்குறுதியை **மீறாதவன்** - 2

## உன்னை நான் ஒருபோதும்

உன்னை நான் ஒருபோதும் மறப்பதே இல்லை
உனக்காக உன்னில் இருக்கின்றேன்
உன் அன்பன் இயேசுவே நானிருக்கின்றேன் - 2
உன் நண்பன் இயேசுவே அருகில் இருக்கின்றேன் - 2

1. பாவியாய் எனதன்பை மறந்து நீ சென்றாலும்
பரிவுடனே தேடி நான் அணைத்துக்கொள்வேன் - உன்னை - 2

2. சோதனையால் வேதனையில் சோர்ந்து நீ துவண்டாலும்
அன்னையாய் அரவணைத்தே காத்திடுவேன் - உன்னை - 2

3. உண்மை நீதி வாழ்வினிலே எதிர்ப்பு நிதம் வந்தாலும்
உறுதி தந்து உன்னையே நான் உயர்த்திடுவேன் - என்றும் - 2

## உன்னை நான் அழைத்தேன்

உன்னை நான் அழைத்தேன்
உன் பெயரைப் பொறித்தேன்
என் பணிக்காய் தேர்ந்தெடுத்தேன்
கண்மணியாய் நான் காப்பேன்
பணிவிடை பெற அன்று
பணிவிடை புரிந்திடவே
பணிவிடை பெற அன்று
பகிர்வினில் வாழ்ந்திடவே.

1. எளியோர்க்கு நற்செய்தி நல்கிடவே
சிறைப்பட்டோர் விடுதலை வாழ்வு வாழ்ந்திடவே
நோயுற்றோர் நோய் நீங்கி நலம் பெறவே
நிறைவாழ்வில் சாட்சியங்கள் பகிர்ந்திடவே
**உம்மை கண்டேன் உம்மை கண்டேன் உடனே வா என்றேன்**
**உள்ளம் கண்டேன் உம்மில் கண்டேன் உறவில் வாழ்கின்றேன்**
**- 2**
**துன்பம் சூழ்ந்த போதிலும் உனக்கு**
**துணையாய் நான் இருப்பேன் - 2**
ஒரு துணையாய் நான் இருப்பேன் - (பணிவிடை)

2. எரிகின்ற முட்புதரின் நடுவினிலே
என் குரலை உன் காதில் ஒலித்தேனே
ஒன்றுமில்லா உள்ளத்தின் ஓரத்திலே
ஓராயிரம் திறமைகளை வளர்த்தேனே
**தீயின் நடுவே நடக்கின்ற போதும் தீமை தீண்டாது**
**ஆழ்கடலைக் கடக்கின்ற போதும் ஆபத்து அணுகாது - 2**
**தாயின் வயிற்றில் உன்னை தெரிந்தேன்**
**ஆவியைப் பொழிந்திட்டேன் - 2**
தூய ஆவியைப் பொழிந்திட்டேன் - (பணிவிடை).

## உன் சிறகுகள் நிழலில்

உன் சிறகுகள் நிழலில் எந்நாளும் என்னை
அரவணைத்திடு இறைவா - 2
அந்த இருளிலும் ஒளி சுடரும்
வெண் தனலிலும் மனம் குளிரும் - உன்
கண்களின் இமைபோல் எந்நாளும் என்னை
காத்திடு என் இறைவா

1. பாவங்கள் கறைகளாய் இருந்தும் - உம்
பரிவினில் பனிபோல் கரையும் - 2
கருணையை மழையெனப் பொழிந்தால் - உம்
ஆலயம் புனிதம் அடையும்

2. வலையினில் விழுகின்ற பறவை - அன்று
இழந்தது அழகிய சிறகை - 2
வானவன் அருள்மழை பொழிந்தே - நீ
வளர்த்திடு அன்பதன் உறவை

## உன் திரு யாழில் என் இறைவா

உன் திரு யாழில் என் இறைவா - பல
பண் தரும் நரம்புண்டு
என்னையும் ஓர் சிறு நரம்பெனவே - அதில்
இணைத்திட வேண்டும் இசையரசே

1. யாழினை நீயும் மீட்டுகையில் - இந்த
ஏழையின் இதயம் துயில் கலையும் - 2
யாழிசை கேட்டு தனை மறந்து - உந்தன்
ஏழிசையோடு **இணைந்திடுமே** - 2

2. விண்ணகச் சோலையின் மரரெனவே - திகழ்
எண்ணிலாத் தாரகை உனக்குண்டு
உன் அருள் பேரொளி நடுவினிலே - நான்
என் சிறு விளக்கையும் **ஏற்றிடுவேன்** - 2

## உன் புகழை பாடுவது

உன் புகழை பாடுவது என் வாழ்வின் இன்பமைய்யா
உன் அருளை போற்றுவது என் வாழ்வின் செல்வமைய்யா

1. துன்பத்திலும் இன்பத்திலும் - நல்
தந்தையாய் நீ இருப்பாய்
கண்ணயராக் காத்திருக்கும் - நல்
அன்னையாய் அருகிருப்பாய்
அன்பு என்னும் அமுதத்தினை - நான்
அருந்திட எனக்களிப்பாய்
உன் நின்று பிரியாமல்
**நீ என்றும் அணைத்திருப்பாய் - 2**

2. பல்லுயிரைப் படைத்திருப்பாய் - நீ
என்னையும் ஏன் படைத்தாய்
பாவத்திலே வாழ்ந்திருந்தும் - நீ
என்னையும் ஏன் அழைத்தாய்

அன்பினுக்கு அடைக்கும் தாழ் ஒன்று
இல்லை என்றுணர்ந்தேன்
உன் அன்பை மறவாமல்
நான் என்றும் வாழ்ந்திருப்பேன் - 2.

## உன் சொல்லில் என் பாதை

உன் சொல்லில் என் பாதைக்கொளியில்லையோ
என் நோய்க்கு உன் சொல்லில் குணம் இல்லையோ

1. நீரோடு நீ பேச மதுவானது - சொல்லை
சீரோடு பிணம் கேட்டு உயிரானது - வேறு
யாரோடு யான் பேசி முன்னேறுவேன் - 2

2. நோயோடு நீ பேசக் குணமானது - சொல்லை
பேய் கேட்டு பணிந்தோடிப் புறம்பானது - உந்தன்
வாய் பேசி நான் கேட்டு மனம் மாறேனோ - 2

3. புயலோடு நீ பேசத் தணிவானது - சொல்லை
கயல் கேட்டு மலைமேலே உணவானது - நெஞ்சில்
பயம் போக்க உனதன்றி வேறுள்ளதோ - 2

## உயிர்ப்பும் உயிரும் நானே

உயிர்ப்பும் உயிரும் நானே - என்னில்
விசுவாசம் கொள்பவன் ஒரு போதும் சாகான்
உயிர்ப்பும் உயிரும் நானே - நானே - நானே

1. விதை ஒன்று பூமிக்குள் விதைக்கப்பட்டு - அது
மடிந்தால்தான் பல பங்கு வாழ்வு தரும் - உன்
கதையெல்லாம் ஒரு நாளில் முடிக்கப்பட்டு (2) - நீ
மடிந்தால் தான் புதுவாழ்வு பெற முடியும் ( உயிர்ப்பு)

2. எனையென்றும் முழுமையாய் அன்பு செய்து என்னில்
நம்பிக்கை வைத்தென்றும் வாழ்ந்திருந்தால் - நான்
உன்னையும் அந்நாளில் எழுப்படுவேன் - (2) - உன்னை
பேரின்ப வாழ்வுக்கு அழைத்துச் செல்வேன் (உயிர்ப்பு).

## உலகில் வாழும் உயிர்களில்

உலகில் வாழும் உயிர்களில் இல்லை உன்னதம்
உயிரில் கலந்து உள்ளம் வாழும் நீயே நிஜம் - உன்
குறையாத அன்பு உன் நிறைவான அன்பு
என் வாழ்வில் நிலையாகவே
நீயே நிஜம் நீயே நிஜம் - 2
என் இறையே என் உறவே என் வாழ்விலே
நீயே நிஜம் நீயே நிஜம் - 2

1. வலுவின்றி நான் இங்கு வாழ்க்கையிலே
உன் வலிமை என்னுள்ளில் நான் உணர்கிறேன்
பிறர்காண குறையோடு நான் வீழ்கையில்
மனதார உன்னில் பெருமைகொள்வேன்
இறைவா உன் வல்லமை என்னில் வாழும்
நீ எனக்கு தருகின்ற அருள் போதும்
என் இறையே என் உறவே என் வாழ்விலே
நீயே நிஜம் நீயே நிஜம் - 2.

2. ஆதாயம் என்றெண்ணும் அனைத்தையுமே
உம் பொருட்டு இழப்பெனக் கருதுகிறேன்
உனைக் குறித்த எந்தன் அக அறிவே
அளவற்ற செல்வம் என உணர்கிறேன்
உம்மை நான் ஆதாயமாக்கிடவே
உலகெல்லாம் குப்பையெனக் கருதுகிறேன்
என் இறையே என் உறவே என் வாழ்விலே
நீயே நிஜம் நீயே நிஜம் - 2.

## எந்தன் நெஞ்சம் சிந்து பாடும்

எந்தன் நெஞ்சம் சிந்து பாடும் - நீரே
நெஞ்சம் என்று உம்மைத் தேடும்
அரணும் நீரே கோட்டையும் நீரே
சரணடைந்தேனே ஆண்டவர் நீரே
என் வாழ்வின் நம்பிக்கை நீரே

1. காரிருளில் ஒளி தந்தவரே
உம்மைக் காலமெல்லாம் இனி நான் மறவேன்
கண்மணி போல் என்னைக் காப்பவரே
உம் காலடியை இனி நான் தொடர்வேன்
கனிவாய் என்னில் உறைபவனே
உம் கடைக்கண் பார்வையால் தாங்குமைய்யா
கடைசிவரை என்னைக் காப்பவனே
உம் கருணையின் நிழலில் தேற்றுமைய்யா
கரம்பிடித்து வழி நடத்துமைய்யா.

2. ஆண்டவரே உம் இல்லத்திலே
நான் ஆயுள் முழுதும் குடியிருப்பேன்
ஆண்டவரே உம் தியானத்திலே
தினம் அமர்ந்து உம்மொழி கேட்டிடுவேன்
என் வார்த்தைகள் எல்லாம் இனிதாகும்
என் எண்ணங்கள் எல்லாம் நிறைவேறும்
கனவுகள் எல்லாம் நனவாகும்
மனக் காயங்கள் எல்லாம் குணமாகும்
உம் சிறகினில் என்னை சுமந்திடுவாய்

## என் ஆயனாய் இறைவன்

என் ஆயனாய் இறைவன் இருக்கின்றபோது
என் வாழ்விலே குறைகள் என்பது ஏது

1. என்னை அவர் பசும்புல் பூமியிலே
எந்நேரமும் நடத்திடும் போதினிலே
என்றும் இன்பம் ஆஹா என்றும் இன்பம்
ஆஹா என்றென்றும் இன்பம் அல்லவா

2. என்னோடவர் நடந்திடும் போதினிலே
எங்கே இருள் சூழ்ந்திடும் பாதையிலே
எங்கும் ஒளி ஆஹா எங்கும் ஒளி
ஆஹா எங்கெங்கும் ஒளி அல்லவா

## என் வாழ்வில் இயேசுவே

என் வாழ்வில் இயேசுவே எந்நாளும் இங்கே
எல்லாமும் நீயாக வேண்டும் - எந்தன்
எல்லாமும் நீயாக வேண்டும்
சோகங்கள் ஆறாமல் நான் வாடும்போது
தாயாக நீ மாற வேண்டும் - அன்புத்
தாயாக நீ மாற வேண்டும்

1. பாரங்கள் தாங்காமல் சாய்கின்றபோது
**பாதங்கள் நீயாக வேண்டும்** - எந்தன்
பாவங்கள் கடலாகி நான் மூழ்கும் போது
**ஓடங்கள் நீயாக வேண்டும்** - வரும்

2. காலங்கள் எல்லாமும் என் நெஞ்ச வீட்டில்
**தீபங்கள் நீயாக வேண்டும்** - சுடர்
தாகங்கள் தீராமல் நான் ஏங்கும் போது
**மேகங்கள் நீயாக வேண்டும்** - மழை

3. போராட்டம் சூழ்ந்தென்னை தீவாக்கும்போது
**பாலங்கள் நீயாகவேண்டும்** - இணை
தீராத ஆர்வத்தில் நான் தேடிப் பயிலும்
**பாடங்கள் நீயாக வேண்டும்** - இறை

## என் ஆற்றலின் ஆண்டவரை (தி.பா. 18)

என் ஆற்றலின் ஆண்டவரை
நான் எந்நாளும் போற்றிடுவேன் - நல்
அருள்மொழி கேட்க காலமெல்லாம் அவர்
காலடி அமர்ந்திடுவேன்

1. ஆண்டவர் எனது அரணாவார்
அவரே எனக்கென்றும் துணையாவார்
வலிமையும் வாழ்வும் வழங்கும் நல் தேவன்
என்னுடனிருக்கின்றார்
என்றும் இருக்கின்றார்.

2. ஆண்டவர் எனது மீட்பராவார்
அவரே எனக்கென்றும் ஒளியாவார்
வாழ்வாய் வழியாய் விளங்கும் நல்தேவன்
சீர் வழி நடத்திடுவார்
அவர் வழி தொடர்ந்திடுவேன்.

## என் ஆன்மா இறைவனையே

என் ஆன்மா இறைவனையே
ஏற்றிப் போற்றியே மகிழ்கின்றது
என் மீட்பராம் கடவுளை நினைக்கின்றது.

1. தாழ்நிலை நின்ற தம் அடியவரை
தயையுடன் கண்கள் நோக்கினார்
இந்நாள் முதலாம் தலைமுறைகள்
எனைப் பேறுடையாள் என்றிடுமே.

2. ஏனெனில் வல்லமை மிகுந்தவரே
எனக்கரும் செயல் பல புரிந்துள்ளார்
அவர் தம் பெயரும் புனிதமாகும்
அவருக்கஞ்சுவோர்க்(கு) இரக்கமாகும்.

## என் ஆன்மா எந்நாளுமே

என் ஆன்மா எந்நாளுமே
ஆண்டவரை ஏற்றி ஏற்றிப் போற்றுகின்றது - என்
மீட்பரை நினைந்து நினைந்து
எந்தன் நெஞ்சம் மகிழ்கின்றது.

1. ஏழைகளை எளியவரை உயர்த்தினார் - பல
இன்னல்படும் உள்ளங்களைத் தேற்றினார்
செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார் - நெஞ்சில்
செருக்குற்ற மனிதரைச் சிதறடித்தார்.

2. அடிமைகளை அன்புடனே நோக்கினார் - அவர்
ஆள்பவரின் ஆணவத்தை நீக்கினார்
தாழ்ந்தோரை மேன்மையாக உயர்த்தினார் - வாழ்வில்
வீழ்ந்தோரை கருணையினால் ஆதரித்தார்.

## என்னோடு நீ பேச

என்னோடு நீ பேச வந்தாய்
என் வாழ்வை நீ மாற்றி நின்றாய்
**என் தெய்வமே - 2**
நீயின்றி நானில்லையே - உன்
நினைவின்றி வாழ்வில்லையே

1. உயிரின் கீதம் நீ உலகின் தெய்வம் நீ
மழையின் மேகம் நீ மலரின் மணமும் நீ
என் பாதையில் ஒளியாகவா
கண் போலவே எனைக் காக்கவா
ஆதாரம் நீயாகவே உன் அன்போன்றே எனதாகவே

2. இதயத் தாகம் நீ இதயத் தீபம் நீ
உதய காலை நீ உறவின் பாலம் நீ
தள்ளாடி நான் தடுமாறினேன்
கண் மூடி நான் வழிமாறினேன்
தீராத துன்பங்களில் நீ தாயாகித் தாலாட்டினாய்

## என்னை உமது கருவியாய் மாற்றிடு தேவா

என்னை உமது கருவியாய் மாற்றிடு தேவா
உமது ஆவி ஆற்றலோடு நடத்திடு தேவா

1. உள்ளம் உடைந்தவர் உருக்குலைந்தவர்
உமதாற்றல் பெற்றிட வேண்டும்
உறவை இழந்தவர் ஒதுக்கப்பட்டவர்
உன் துணையில் எழுந்திட வேண்டும்
இருளினை அகற்றவும் விலங்கினை உடைக்கவும்
நீதி நேர்மை உண்மை ஓங்க
நிம்மதியே வாழ்வில் தொடர - என்னை
உமது கருவியாக்கும்.

2. மனித நேயங்கள் மதிக்கும் பண்புகள்
மனதில் தினம் வளர்ந்திட வேண்டும்
இறைவன் வார்த்தையில் இனிதோராட்சியை
இம்மண்ணில் கட்டிட வேண்டும்
பிளவுகள் நீங்கவும் ஒற்றுமை ஓங்கவும்
உண்மை அறிவு ஆள - உரிமை
வாழ்வு நிறைவு காண என்னை உமது கருவியாக்கும்.

தூபம் போல் என் ஜெபம் உந்தன் பாதம் சேர வேண்டும்,
நேச தந்தாய் உந்தன் அருள் என்னைத் தேற்ற வேண்டும்

## ஒரு நிமிடம் உன் அருகினில் இருக்க

ஒரு நிமிடம் உன் அருகினில் இருக்க
அருள்வாயோ என் தலைவா
அங்கு சிறு பொழுதும் ஒரு யுகமாய் மாறும்
அறிவாயோ என் இறைவா

1. விழிகளை மூடி உனை நினைக்கையிலே விந்தைகள்
நிகழ்வதும் ஏன் இறைவா (2)
மொழிகளைத் தாண்டி மனம் உறவாட
மகிழ்வினில் மிதப்பதும் ஏன் இறைவா

2. அளவில்லாத உன் அன்பினை நினைக்க
அழுகை வருவதன் ஞாயமென்ன
தொழுதுனை வணங்கி கவலைகள் கூற
சுமைகள் மறைந்திடும் மாயமென்ன.

## ஒரு போதும் உனைப்பிரியா

ஒருபோதும் உனைப்பிரியா
நிலையான உறவொன்று வேண்டும்
என் உடல் கூட எரிந்தாலும்
உன் நாமம் நான் சொல்ல வேண்டும்
நினைவிலும் நீயே என் கனவிலும் நீயே
நீங்காத நிழலாக வா இறைவா

1. உன் கையில் என்னை நீ பொறித்தாய்
பெயர் சொல்லி அன்பாய் என்னை அழைத்தாய்
ஏன் என்னை நீ தெரிந்தாய்
என் வாழ்வில் ஏன் நுழைந்தாய்
உன் மாறாத அன்பில் மகிழ்வொன்று கண்டேன் - தாய்
உறவொன்று தேடும் பிள்ளைபோல் நின்றேன்
உன்னோடு நான் வாழுவேன்

2. நீர் தேடும் மான் போல தேடி வந்தேன்
நீயின்றி வாழ்வில்லை என்றுணர்ந்தேன்
என்னுள்ளே வாழும் தெய்வம்
என்னை நீ ஆளும் தெய்வம்
என் இயேசு நீயே என்னுள்ளம் நின்றாய் - நிதம்
என் பாதை முன்னே நீ தானே சென்றாய்
உன்னோடு நான் வாழுவேன்

ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானமும் நற்பயிற்சியுமாகும். பற்றுறுதியும் பணிவும் அவருக்கு மகிழ்ச்சி தரும். (சீராக் 1:27)

## கலைமான் நீரோடையை

கலைமான் நீரோடையை
ஆர்வமாய் நாடுதல் போல்
இறைவா என் நெஞ்சம் மறவாது உம்மை
ஏங்கியே நாடியே வருகின்றது.

1. உயிருள்ள இறைவனில் தாகம் கொண்டலைந்தது
இறைவா உம்மை என்று நான் காண்பேன்
கண்ணீரே எந்தன் உணவானது.

2. மக்களின் கூட்டத்தோடு விழாவில் கலந்தேனே
அக்களிப்போடு இவற்றை நான் நினைக்க
என் உள்ளம் பாகாய் வடிகின்றது.

## கலைமான்கள் நீரோடை தேடும்

கலைமான்கள் நீரோடை தேடும்
எந்தன் இதயம் இறைவனை நாடும்
உள்ளத்தாகம் உந்தன் மீது கொண்டபோது
எனக்கு வேறென்ன வேண்டும்?

1. காலம் தோன்றா பொழுதினிலே
கருணையில் என்னை நீ நினைத்தாய்
உயிரைத் தந்திடும் கருவினிலே
அருளினைப் பொழிந்து அரவணைத்தாய்
குயவன் கையாலே மண்பாண்டம் வனைத்திடும்
கதையின் நாயகன் நான் இன்று . . . .

2. பாறை அரணாய் இருப்பவரே
நொறுங்கிய இதயம் நான் சுமந்தேன்
காலை மாலை அறியாமல்
கண்ணீர் வடித்திடும் நிலையானேன்
சிதறிய மணிகளைக் கோர்த்து எடுப்பாய்
அழகிய மணிமாலை நானாவேன் . . . . .

## கடல் கடந்து சென்றாலும்

கடல் கடந்து சென்றாலும்
நீ நடவே நின்றாலும்
புயல் சூழ்ந்து எழுந்திடும் காரிருளை
நீ கடந்திட நேர்ந்தாலும்
உன்னோடு நானிருப்பேன் - 2
அஞ்சாதே கலங்காதே

1. தேவனின் பார்வையில் நீ மதிப்புள்ளவன்
பொன் விளைநிலம் போலே
பூமியில் வாழ்ந்திடும் யாவிலும் உன் நிலை
உயர்ந்தது அவராலே
பாலினை ஊட்டிடும் தாய் மறந்தாலும்
நீ அவர் மடிமேலே
மனம் தேற்றுவார் பலம் ஊற்றுவார்
வாழ்வு இனி ஒளி தானே
அஞ்சாதே கலங்காதே.

2. பாலையில் பாதையும் பாழ்வெளி ஓடையும்
தோன்றிடும் அவர் கையால்
வான்படை ஆண்டவர் வாய் மொழியால்
வரும் மேன்மையை எவர் சொல்லுவார்
பார்வை இழந்தவர் வாய் திறவாதோர்
யாவரும் நலம் அடைவார்
இறையாட்சியில் அவர் மாட்சியில்
மானிடம் ஒன்றாகும்
அஞ்சாதே கலங்காதே.

## கடவுள் உனக்கு வாழ்வு தந்தார்

கடவுள் உனக்கு வாழ்வு தந்தார்
வாழ்வுக்கு நீ என்ன தந்தாய்? (2)
கடவுள் எனக்கு வாழ்வு தந்தார்
வாழ்வுக்கு நான் என்னைத் தந்தேன் (2)

1. பார்த்திட உனக்கு கண்கள் தந்தார்
கனிவுடன் மனிதரைப் பார்த்தாயா?
பார்த்தாயா? இனி பார்ப்பாயா?
பார்த்திட எனக்கு கண்கள் தந்தார்
கனிவுடன் மனிதரைப் பார்த்தேனே - 2
பார்த்தேனே இனி பார்ப்பேனே.

2. மன்னிக்க நல்ல மனதை தந்தார்
முழு மனதுடன் நீ மன்னித்தாயா?
மன்னித்தாயா இனி மன்னிப்பாயா?
மன்னிக்க நல்ல மனதைத் தந்தார்
முழு மனதுடன் நான் மன்னித்தேனே - 2
மன்னித்தேனே இனி மன்னிப்பேனே.

3. உழைத்திட நல்ல கரங்கள் தந்தார்
நேரிய நிலை நின்று உழைத்தாயா?
உழைத்தாயா? இனி உழைப்பாயா? 6

உழைத்திட நல்ல கரங்கள் தந்தார்
நேரிய நிலை நின்று உழைத்தேனே - 2
உழைத்தேனே இனி உழைப்பேனே.

## சம்மதமே இறைவா

சம்மதமே இறைவா சம்மதமே தலைவா
உன் மாலையிலே ஒரு மலராகவும்
பாலையிலே சிறு மணலாகவும்
வாழ்ந்திட சம்மதமே இறைவா மாறிட சம்மதமே.
சம்மதமே இறைவா.

1. தயங்கும் மனதுடைய
நான் உனக்காகவே உன் பணிக்காகவே
வாழ்ந்திட வரம் தருவாய் - 2
கருவாக எனைப் படைத்து - உயர்
கண்மணியாய் எனை வளர்த்து - 2
கரமதிலே உருப்பதித்து
கருத்துடனே எனைக் காக்கின்றாய்.

2. மலையாய் நான் கணித்த
பெருங் காரியமும் உயர் காவியமும்
மறைந்தே போனது
திருவாக உனை நினைத்து - உயர்
உறவாகவே நெஞ்சில் பதித்து - 2
உன் பெயரை சாற்றிடவே
நலம் தரவே என்னை அழைக்கின்றாய்.

## சுமை சுமந்து சோர்ந்திருப்போரே

சுமை சுமந்து சோர்ந்திருப்போரே
வாருங்கள் நம் ஆண்டவர் அழைக்கின்றார்
இளைப்பாற்றி கொடுக்கின்றார்.

1. இருகரம் விரித்தவராய்
இதயத்தை திறந்தவராய் - 2
இறைவன் இருக்கின்றார்
இனியும் தாமதமேன்?

2. வரும் வழி பார்த்தவராய்
வரம் மழை பொழிந்தவராய்
வந்தவர் இருக்கின்றார்.
விரைந்திட தாமதமேன்?

## நீ எந்தன் பாறை

நீ எந்தன் பாறை என் அரணான இயேசுவே
நீ எந்தன் உள்ளத்தில் அணையாத தீபமே
அணையாத தீபமே **இயேசுவே இயேசுவே** - 2

1. ஒளி கொண்டு தேடினால் இருள் நிற்குமோ
உன் துணையில் வாழ்க்கையில் துயர் வெல்லுமோ
தடை கோடி வரலாம் உள்ளம் தவித்தோடி விடலாம் - 2
ஆனாலும் உன் வார்த்தை உண்டு
எது போனாலும் உனில் தஞ்சம் உண்டு - **இயேசுவே** - 2

2. இரவுக்கும் எல்லை ஓர் விடியல் அன்றோ
முடிவாக வெல்வதும் நன்மை அன்றோ
தளராது வாழ்வோம் அருள் அணையாது காப்போம் - 2
என்றென்றும் உன் ஆசீர் கொண்டு
வரும் நல்வாழ்வைக் கண் முன்னே கண்டு - **இயேசுவே** - 2

## நீ ஒளியாகும் என் பாதைக்கு

நீ ஒளியாகும் என் பாதைக்கு விளக்காகும்
நீ வழியாகும் என் வாழ்வுக்குத் துணையாகும்
அரணும் நீயே கோட்டையும் நீயே
அன்பனும் நீயே நண்பனும் நீயே இறைவனும் நீயே

1. நீ வரும் நாளில் அமைதி வரும்
உன் நீதியும் அருளும் சுமந்து வரும்
இரவின் இருளிலும் பயம் விலகும்
உன் கரத்தின் வலிமையில் உயர்வு வரும்
கால்களும் இடறி வீழ்வதில்லை
தோள்களும் சுமையால் சாய்வதில்லை
என் **ஆற்றலும் வலிமையும் நீயாக - 2**

2. விடியலைத் தேடும் விழிகளிலே - புது
விளக்கினை ஏற்றிடும் பேரொளி நீ
பால் நினைந்தூட்டும் தாயும் நீ - என்
பாழ்வெளிப் பயணத்தில் பயணமும் நீ
அருவிக்கு நடத்திடும் ஆயனும் நீ
அகமனம் அமர்ந்தென்னை ஆள்பவன் நீ
என் மீட்பரும் நேசரும் நீயாகும் - 2

உனக்கு அப்பாற்பட்ட செயல்களில் தலையிடாதே; ஏனெனில் உனக்குக் காட்டப்பட்டவையே மனித அறிவுக்கு எட்டாதவை.
(சீராக் 3:23)

## நீரே எமது ஒளி

நீரே எமது ஒளி நீரே எமது வழி
நீரே எமது வாழ்வு இயேசையா

1. நான்கு திசையும் பாதைகள் சந்திக்கின்ற வேளைகள்
நன்மை என்ன தீமை என்ன அறியாத கோலங்கள்
நீரே எங்கள் வழியாவாய்
நீதியின் பாதையில் பொருளாவாய்
உமது பாதப் பதிவுகள் எமது வாழ்வின் தெரிவுகள்
அவற்றில் நாம் நடந்தால் வெற்றியின் கனிகள்

2. துன்ப துயர நிகழ்வுகள் இருளின் ஆட்சிக் காலங்கள்
சுட்டுக் கடுமாறி விழ தகுமான சூழல்கள்
நீரே எங்கள் ஒளியாவாய்
நீதியின் பாதையில் சுடராவாய்
உம்மை நாங்கள் போற்றிட பொய்மை எங்கும் போக்கிட
உண்மையின் இறைவா உனதருள் தாரும்.

## பாடுங்கள் ஆண்டவர்க்கு ((தி.பா. 150)

பாடுங்கள் ஆண்டவர்க்கு
புதியதோர் பாடல் பாடுங்கள்
அல்லேலூயா . . . அல்லேலூயா அல்லேலூயா - 4

1. ஆண்டவர் தம் திருத்தலத்தில் அவரைப் புகழ்ந்து பாடுங்கள்
மாண்புயர் வான் மண்டலத்தில் "

2. எக்காளத் தொனி முழங்க "
வீணையுடன் யாழ் இசைத்து "

3. முரசொலித்து நடனம் செய்து "
நரம்பிசைத்து குழலூதி "

4. நாதமிகு தாளத்துடன் "
கைத்தாள ஒலி முழங்க "

5. அவருடைய செயல்களுக்காய் "
அவருடைய மாட்சிமைக்காய் "

## பொன்மாலை நேரம்

பொன்மாலை நேரம் பூந்தென்றல் காற்றில்
என் ஜீவ இராகம் கரைந்தோடுதே
என் இயேசு உன்னில் உறவாடும் நேரம்
என் துன்ப மேகம் கலைந்தோடுதே
உன் வாழ்வு ஒன்றே என் தேடலாகும்
உன் அன்பு ஒன்றே என் பாடலாகும்

நீ இல்லாத நாளெல்லாம்
நிலவில்லாத வானம் நான் - உன்
நினைவில்லாத வாழ்வெல்லாம்
மழையில்லாத மேகம் நான்
காலந்தோறும் கண்ணின் மணிபோல் காக்கும் தெய்வமே
கவலை சுமந்து சோர்ந்த வாழ்வை தேற்றும் இறைவனே
என் இயேசுவே அபயம் நீ தர வேண்டுமே
என் தெய்வமே அருகில் நீ வரவேண்டுமே
காற்றில் ஆடும் தீபம் என்னை சிறகில் மூடுமே
ஆ – ஆ — ஆ— ம் ... ம் ... ம் ...

ஒரு கணம் என் அருகினில்
நீ அமரும் போது ஒரு யுகம்
உனை தினம் நான் புகழ்கையில்
எனக்குள் தோன்றும் புது யுகம்
முள்ளில் பூக்கும் ரோஜா என்னை அள்ளிப் பறிப்பதேன்
சொல்ல முடியா அன்பில் என்னைச் சூடி மகிழ்வதேன்
என் இயேசுவே என் அன்புக்கு வானம் எல்லை
என் தெய்வமே உன் அன்புக்கு எல்லை இல்லை
அன்பில் நிழலில் இந்த இதயம் உன் அன்பைப் பாடுதே
ஆ – ஆ — ஆ ... ம் ... ம் ... ம் ...

## போற்றுங்கள் ஆண்டவரை (தி.பா. 135)

போற்றுங்கள் ஆண்டவரை
வாழ்த்துங்கள் அவர் பெயரை
பாடுங்கள் அவர் புகழை
மகிழுங்கள் நினைத்து அவர் செயலை
அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர் - 2

1. உயர்ந்த இரக்கம் உள்ளவரை வாழ்த்துங்கள் (2)
அளவற்ற மேன்மை மிகுந்தவரை ,,
சொற்களைக் கடந்த வல்லவரை ,,
மக்கள் புகழுக்கு உரியவரை

2. வியத்தகு செயல்பல செய்தவரை வாழ்த்துங்கள் (2)
அச்சம் மிகுந்த செயலோனை ,,
சினம் கொள்ளத் தாமதம் செய்பவரை ,,
நன்மையைப் பொழியும் ஊற்றவரை

## யாக்கோபின் இறைவனை (தி.பா. 81)

யாக்கோபின் இறைவனை நினைத்து
ஆர்ப்பரியுங்கள் - அவரது
திருப்புகழ்பாடி மகிழ்ந்திடுங்கள்

1. வீணை மீட்டுங்கள் முரசு கொட்டுங்கள் - 2
மத்தளத்தோடும் தாளத்தோடும்
மகிழ்ந்து பாடுங்கள் - 2

2. விண்ணின் தூதரே விரைந்து வாருங்கள் - 2
மண்ணில் வாழும் மாந்தரோடு
மகிழ்ந்து பாடுங்கள் - 2

3. நம்மில் வாழ்கிறார் நம்மைக் காக்கின்றார் - 2
நாளும் பொழுதும் நம்மைச் சூழ்ந்து
பாதுகாக்கின்றார் - 2.

## யாரிடம் செல்வோம் இறைவா

யாரிடம் செல்வோம் இறைவா
வாழ்வு தரும் வார்த்தையெல்லாம்
உம்மிடம் அன்றோ உள்ளன - இறைவா (2)

1. அலைமோதும் உலகினிலே ஆறுதல் நீர் தரவேண்டும் ( 2)
அண்டி வந்தோம் அடைகலம் நீ
**ஆதரித்தே அரவணைப்பாய் (2)**

2. மனதினிலே போராட்டம் மனிதனையே வாட்டுதைய்யா (2)
குணமதிலே மாறாட்டம்
**குவலயம் தான் இணைவதெப்போ ( 2)**


3. வேரறுந்த மரங்களிலே விளைந்திருக்கும் மலர்களைப் போல் (2)
உலகிருக்கும் நிலை கண்டு
**உனது மனம் இரங்காதோ (2)**





புனித அந்தோணியார் - அன்பின் நகரம்

புனித அந்தோணியார் ஆலயம்,
அன்பின்நகரம்.



அன்பியங்கள்

- விண்ணரசி மாதா அன்பியம்
- இராயப்பர் அன்பியம்
- கபிரியேல் தூதர்
- அந்தோணியார் அன்பியம்
- தொன்போஸ்கோ அன்பியம்
- மத்தேயு அன்பியம்

# 3. காணிக்கைப் பாடல்கள்

## அன்போடு வந்தோம் காணிக்கை

அன்போடு வந்தோம் காணிக்கை தந்தோம்
கனிவோடு ஏற்பாய் ஆண்டவரே - உம்
பலியோடு சேர்ப்பாய் தூயவனே

1. பொன்னான வாழ்வை புடமிட்டு வைத்தோம்
பூவாக மனம் வீச வைத்தோம் - ஆ ... ஆ ... ஆ ...
புதிரான வாழ்வு எதிரானதாலே - 2
பொலிவாகச் செய்வாய் ஆண்டவனே - உம்
அருளோடு அணைப்பாய் மாபரனே

2. அருளான வாழ்வு இருளானதாலே
திரியாக எமை ஏற்றி வைத்தோம் - ஆ ... ஆ ... ஆ ...
திரியாகக் கருகி மெழுகாக உருகி
பலியாக வைத்தோம் ஆண்டவனே - புது
ஒளியாக மாற்றும் தூயவனே

## அடியோர் யாம் தரும் காணிக்கையை

அடியோர் யாம் தரும் காணிக்கையை
அன்பாய் ஏற்பாய் ஆண்டவரே

1. பாவியென்றெம்மைப் பாராமல்
பாவத்தின் தீர்வையை அடையாமல் - 2
பரிகாரம் என ஏற்றிடுவாய்
பலியாய் எமை நீ மாற்றிடுவாய்

2. மேலொரு வாழ்வு உண்டு என்று - எம்
மேலெழும் துன்பத்தை மறக்கின்றோம் - 2
மேலும் துன்பங்கள் அடைந்தாலும்
மேன்மையின் பலியாய் தருகின்றோம்.

## இதயம் பாடும் இனிய பாடல்

இதயம் பாடும் இனிய பாடல்
இறைவா உமக்காக
இகத்தில் காணும் படைப்பு யாவும்
இறைவா உமக்காக
நினைத்தேன் நினைத்தேன் நான் தர
அனைத்தும் உந்தன் காணிக்கை

1. பூத்துக் குலுங்கும் மலர்களும் இங்கு
காய்த்துக் கனிந்த கனிகளும்
ஓங்கி உயர்ந்த மரங்களும் இங்கு
சூழ்ந்து வளர்ந்த செடிகளும்
இயற்கை கூறும் கவிதைகள் யாவும்
இறைவன் தந்த கொடைகளே - நினைத்தேன்

2. பறந்து திரியும் பறவைகள் அலை
பாயும் கடல் வாழ் விலங்குகள்
காற்றும் கடலும் கார்முகில் வான
வில்லும் நிலவும் விண்மீன்களும்
இயற்கை கூறும் கவிதைகள் யாவும்
இறைவன் தந்த கொடைகளே - நினைத்தேன்

## இதோ உமது அடிமை

இதோ உமது அடிமை
இறைவா ஏற்பாய் என்னை

1. எரியா விளக்கு எனை நான் உனக்கு
தந்தேன் ஏற்றிடுவாய் - 2
உன்னொளி துலங்கத் தன்னையே வழங்கும்
சுடராய் மாற்றிடுவாய்

2. மலராக் கொத்து வாழ்வினைக் கொய்து
தாள்களில் படைக்கின்றேன் - 2
புனிதம் சிந்தும் பூவாய் என்றும்
வாழ்ந்திட வரம் கேட்பேன்.

## இறைவனின் அருள்மொழி

இறைவனின் அருள்மொழி கோபுரத்தில் நான்
இருவிழி தீபங்கள் ஏற்றி வைத்தேன்
புதுமை நினைவின் அலைகளினால் - நான
பூப்போல் மனதை அலங்கரித்தேன்.

1. ஆவியின் அருளால் வாழ்ந்திடுவேன் - நான்
ஆண்டவர் குரலாய் மாறிடுவேன்
ஆபேல் அளித்திட்ட ஆடாவேன் - 2 - நான்
அபிரகாம் தந்த மகளாவேன்

2. இறைவனின் வேள்வி நேரத்திலே - என்
எண்ணமும் பலியாய் மாறிடட்டும்
எல்லா வரங்களும் குவிந்திடட்டும் - 2 - மனம்
இறைவா ஒளியால் மலர்ந்திடட்டும்.

3. கள்வரின் குகையாய் மாறாமல் - இதை
கண்ணின் மணிபோல் காத்திடுவேன்
இதயங்கள் கூடிடும் ஜெபவீடாய் - 2 - நான்
என்றும் வாழ்த்தி வணங்கிடுவேன்.

## உடல் பொருள் ஆவி எல்லாம்

உடல் பொருள் ஆவி எல்லாம்
உன்பாதம் நான் படைத்தேன் - 2

1. நான் பார்க்கும் உலகெல்லாம்
உன் சொல்லின் விரிவுரையே - 2
அதில் வாழும் உயிர்களெல்லாம்
உன் அன்பின் தொடர்கதையே
அதை தந்தேன் பலிபொருளாய் ஏற்பாய்
எனைத் தந்தேன் ஒருபொருளாய் சேர்ப்பாய் - 2
திரு அப்பம் போல அதைப் பகிர்ந்து
அனைவர்க்கும் வாழ்வருள்வாய் - 2

2. நிறைவாழ்வ உனதாகும்
நான் கண்டேன் பலி வாழ்வில் - 2
பொருள் வடிவில் பலி தந்தேன் - உன்
வாழ்வை தர வருவாய்
புது உரு என எனை மாற்றிடுவாய்
புது உலகிது என நான் வாழ்வேன்

## எதை நான் தருவேன்

எதை நான் தருவேன் இறைவா - உம்
இதயத்தின் அன்பிற் கீடாக
எதை நான் தருவேன் இறைவா.

1. குறை நான் செய்தேன் இறைவா - பாவக்
குழியில் விழுந்தேன் இறைவா
**கறையாம் பாவத்தை நீக்கிடவே** - 2 - நீர்
கல்வாரி மலையில் இறந்தாயோ.

2. பாவம் என்றொரு விஷத்தால் - நான்
பாதகம் செய்தேன் இறைவா
**தேவனே உம் திருப்பாடுகளால்** - 2 - எனைத்
தேற்றிடவோ நீர் இறந்தாயோ.

3. அகிலமே அறிவால் அளந்தேன் - உன்
அன்பையும் அறிந்து மறந்தேன்
**மகிமை நிறைந்த எம் இறைவா** - 2 - நீர்
மனிதன் எனக்காய் இறந்தாயோ.

## எல்லாம் கொணர்ந்தோம்

எல்லாம் கொணர்ந்தோம் திருவடி வைத்தோம்
ஏற்றிடு என் இறைவா
பலியாய் மாற்றிடுவாய் தலைவா

1. அன்பும் அருளும் பண்பும் பாசமும்
எல்லாம் நீ தந்தது
வாழ்வும் வளமும் வளர்ச்சியும் தளர்ச்சியும்
மகிழ்வுடன் நீ தந்தது

2. சிந்தனை சொல் செயல் எந்தன் திறமைகள்
எல்லாம் நீ தந்தது
உடல் பொருள் ஆவி உணர்வுகள் எல்லாம்
உவப்புடன் நீ தந்தது.

3. உழைப்பின் பயனும் உழைத்திட்ட சக்தியும்
எல்லாம் நீ தந்தது
படைப்புகள் எல்லாம் உன் அருள் விளக்கும்
எனக்காக நீ தந்தது

## எல்லாம் தருகின்றேன்

எல்லாம் தருகின்றேன் - தந்தாய்
என்னையும் தருகின்றேன்

1. இயற்கை ஈந்த மலர்கள் பறித்தே
தருவேன் உனக்கு காணிக்கை
உழைப்பின் பயனாய் கிடைத்த பொருளை - 2
என்னோடு இணைத்தே தருகின்றேன்

2. பிறருக்காக வாழ்வதில் நானும்
என்னையே உம்மிடம் தருகின்றேன்
பிறரின் சுமையை விரும்பிச் சுமக்க - 2
என்னையும் தகுதி ஆக்குவாய் - 2

## என்னையே முழுவதும்

என்னையே முழுவதும் உம்மிடம் தருகின்றேன்
என் மனம் அறிந்து நீ உன் கையில் ஏற்றிடுவாய்

1. உண்மைக்காக வாழ்ந்திடும் நெஞ்சம் என்னில் உண்டு
உயிர்கொடுக்கவும் துணிந்திடும் உந்தன் பாதை சென்று
என் நெஞ்சில் வாழ்பவன் நீ தானே
இனி அச்சம் கொள்வதும் வீண் தானே - 2
எந்தன் பணியில் ஆயிரம் தடைகள் வந்திடும் ஆயினும் இயேசுவே
உனது வழியில் பயணம் தொடரும்

2. எந்தன் வாழ்வின் பொருளினை உந்தன் வாழ்வில் கண்டேன்
சுயநலத்தின் திரைகளை களைந்து என்னைத் தந்தேன்
ஒரு ஜீவன் என்னாலே உயிர் வாழ்ந்தால்
அது தானே உம் முன்னால் பெரிதாகும் - 2
மகிழ்வைத் தேடும் மானிடர் மகிழ்ந்திட
தந்திடும் என்னை இயேசுவே
உனது கரத்தில் ஏற்க வேண்டி.

## எல்லையில்லாத அன்பாலே

எல்லையில்லாத அன்பாலே - உம்
ஏக மகனை எமக்களித்த பிதாவே
ஏற்றருள்வீர் எம் பலிப்பொருளிதையே
கல்மனம் வெயில் முன் பனிமலைபோல
கசிந்துருகிடுமே உம் நினைவாலே.

1. புலன்களை அடக்கி மனதினை ஒடுக்கி
புரிந்திடும் ஒறுத்தல் முயற்சிகள் அனைத்தும்
நலன்களின் சுனையே உமக்களிக்கின்றோம்
நலிந்திடும் எளியோர் நலம் பெறச் செய்வீர்.

2. உடலினை ஒறுத்து வன்செயல் அகற்றி
உள்ளத்தை என்றும் மேலே உயர்த்தி
இடர்களைப் பொறுத்து உம் மகனோடு
இனிதுமைப் புகழும் வரமருள்வீரே.

## என் நெஞ்ச நாயகா

என் நெஞ்ச நாயகா இறைவா - என்றும்
என் அன்பை பலியாக ஏற்பாய்
ஏழையென் பலிதன்னை நீ ஏற்கும் வேளை
என் வாழ்வுன் அருளன்பில் நிலை பெறுமே.

1. காற்றினில் ஆடுகின்ற தீபம் நான்
உந்தன் கோவிலில் ஏற்றி வைத்தாய்
சேற்றினில் வாழுகின்ற சிறுமலர் நான்
உந்தன் பூசையில் சேர்த்துவிட்டாய்
என்னை உன் நெஞ்சோடு இணைக்கின்றபோது - 2
என் இயேசுவே என்னைத் தருகின்றேன்.

2. பலிபொருள் உன்னிடம் தரும் முன்னே
எந்தன் பகைவரை ஏற்கச் சொன்னாய்
விழியினை இழந்திட்ட மானிடர்க்கு
என்னை ஒளியாய் மாறச் சொன்னாய்
தினந்தோறும் நான் உந்தன் திருமுகம் காண - 2
எளியோருக்கு என்னை அளிக்கின்றேன்.

## எடுத்து வருகிறேன்

எடுத்து வருகிறேன் கொடுத்து மகிழ்கிறேன்
ஏற்றிடு என் இறைவா - உம்
திருப்பலி பீடம் அர்ச்சனை மலராய்
மலர்ந்திட அருள் புரிவாய்

1. உழைப்பின் கனியிது உமக்கெனத் தந்தேன்
ஏற்றிடு என் இறைவா
உமக்குகந்த பலியில் பலிப்பொருளாய் நிதம்
தருவேன் ஏற்றிடுவாய்
எனைத் தருவேன் ஏற்றிடுவாய்
தருவேன் ஏற்றிடுவாய்
என் இறைவா ஏற்றிடுவாய்

2. ஏழை எளியோர் வறியோர் வாழ்ந்திட
ஏற்றிடு என் இறைவா
துயர் துடைத்திடும் கரமாய் பணிவிடை புரிய
வருவேன் ஏற்றிடுவாய்
எனைத் தருவேன் ஏற்றிடுவாய்
வருவேன் ஏற்றிடுவாய்
என் இறைவா ஏற்றிடுவாய்

## எந்தன் மனம் ஏந்தி வந்தேன்

எந்தன் மனம் ஏந்தி வந்தேன் உந்தன் பதம் வாழ்வைத் தந்தேன்
ஏற்பாய் இறைவா பரம்பொருளே
தந்திடு உன் தரிசனம் கண்டிடவே வந்தேன்
தவித்திடும் மனதையே உன்னிடம் தர வந்தேன்

1. உறவின் நிறைவே உண்மையின் திருவே
உம் பலியில் எனைச் சேர்க்க இதயம் தருகின்றேன்
நல்லுறவை தேடித் தேடி உலகெங்கும் நான் திரிந்தேன்
உள்ளிருக்கும் உனை உணர நானும் மறந்திட்டேன்
எதை நான் தருவேன் என் அன்பு தெய்வமே
இருப்பதை பகிரவந்தேன் அன்பு தெய்வமே
உன்னில் நானும் என்னில் நீயும் இணைந்திடவே வந்தேன்.

2. பற்பல முறைகளிலே பல்வேறு வகைகளிலே
முன்னோர்கள் வாழ்வினிலே இறைவா பேசினீர்
இவ்விருதி நாட்களிலே இறைமகன் வழியாக
நிறைவாக எம்மோடு பேசும் கடவுளே
நிறை வாழ்வை தேடுகிறேன் அன்பு தெய்வமே
திருமகனை பலியாக தந்த தெய்வமே
உந்தன் அன்பில் என்னை நீயும் இணைத்திடவே வந்தேன்.

## என்ன என்ன ஆனந்தம்

என்ன என்ன ஆனந்தம்
எல்லையில்லா ஆனந்தம்
என்னை உனக்கு கொடுப்பதுதானே ஆனந்தம்
உம்மில் உமக்காய் வாழ்வது எந்தன் ஆனந்தம் - 2

1. கனிகளை ஏந்தி உம் பீடம் நான் வந்தேன்
கனிவாய் உள்ளம் வேண்டும் என்று நீர் கேட்டீர்
மலர்களை ஏந்தி உம் பீடம் நான் வந்தேன்
எனக்கா மலர்கள் வேண்டும் என்று நீர் கேட்டீர்
உன்னில் என்னைத் தந்துவிட்டேன்
உம் பணி செய்ய துணிந்துவிட்டேன் - 2
என்னை ஏற்று மகிழ்வாயா
என்றும் உன்னில் வாழ்ந்திடுவேன் - 2.

2. கோதுமை மணிகள் கையில் ஏந்தி நான் வந்தேன்
எனக்காய் வாழ வேண்டும் என்று நீர் கேட்டீர்
தீபம் ஏந்தி உம் பீடம் நான் வந்தேன்
எனக்காய் ஒளிர வேண்டும் என்று நீர் கேட்டீர்
உன்னில் வாழ முடிவெடுத்தேன்
உம் பணி செய்ய துணிந்துவிட்டேன் - 2
என்னை ஏற்று மகிழ்வாயா
என்றும் உன்னில் வாழ்ந்திடுவேன் - 2.

## என்னை நான் தருகின்றேன்

என்னை நான் தருகின்றேன்
ஏற்றிடுவாய் இறை மைந்தா
உன் அன்பை உணர்ந்துள்ளேன்
என்னை நான் தருகின்றேன் - என்னை

1. நல்லவர் நீரே ஆண்டவரே
நலமும் வளமும் தருகின்றாய் - 2
பயமதைப் போக்கி என்னிடம்
பாசம் நேசம் பொழிகின்றாய் - 2
எந்தன் நேச ஆண்டவரே - என்னை.

விண்ணக வாழ்வை தரவந்தாய்
இறைவா உம்மைப் புகழ்கின்றேன்.
மகிழ்வும் புகழும் வாழ்விலே
நாளும் நீயே தருகின்றாய்
எந்தன் நேச ஆண்டவரே - என்னை.

கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும், சகோதரியும் தாயும் ஆவார். (மாற்கு 4:35)

## என்னை உன்னிடம் தந்தேன்

என்னை உன்னிடம் தந்தேன் என்னை
ஏற்றிடுவாய் இறைவா
இருப்பதெல்லாம் கொடுத்து விட்டேன்
உன்னைப் போல் மாற்றிடுவாய்

1. நொறுங்கிய உள்ளம் தருகின்றேன்
நிறைவினை காண விழைகின்றேன் (2)
உன்னிடத்தில் சரணடைந்தேன்
இனி எல்லாமும் நிறைவாகும் (2)
அதை உணர்ந்து கொண்டேன் இறைவா.

2. கொடுப்பதில் இன்பம் காண்கிறேன்
கோடி சுகம் அதில் பெருகின்றேன் (2)
என்னிடத்தில் என்ன உண்டு
எல்லாம் நீ தந்த கொடைதானே (2)
அதை ஏற்றிடுவாய் இறைவா.

## ஏழை என்னைக் காணிக்கையாக

ஏழை என்னைக் காணிக்கையாக
தருகின்றேன் தெய்வமே
ஏற்றுக் கொள்ளுமே - 2.

1. என் உயிரும் உடலும் உள்ளமும்
சிந்தனையும் செயலும் - என்
உணர்வுகள் உறவுகள் என்னில்
உள்ள திறமைகள் - யாவும்
உந்தன் கருணையின் கொடைகள்
தந்தாய் ஏற்றுக்கொள்.

2. என் கடந்த கால வாழ்க்கையும்
நிகழும் வாழ்க்கையும் - நான்
எதிர் கொள்ளும் வாழ்க்கையும்
அதன் வளர்ச்சி தளர்ச்சியும் - 2
யாவும் உந்தன் கருணையின் கொடைகள்
தந்தாய் ஏற்றுக்கொள்.

## காணிக்கை தந்தோம் கர்த்தாவே

காணிக்கை தந்தோம் கர்த்தாவே
ஏற்றுக்கொள் எம்மையே இப்போதே
கண்கொண்டு பாரும் கடவுளின் மகனே
காணிக்கை யார் தந்தார் நீ தானே

நாங்கள் தந்த காணிக்கை எல்லாம் இரட்சகன் கொடுத்தது
மேகம் சிந்தும் நீர்த்துளி எல்லாம் பூமி கொடுத்தது
காலங்கள் மாறும் கோலங்கள் மாறும் - 2
ஆகாயம் மாறும் கடவுளின் மகனே
ஆனாலும் உன் அன்பு மாறாது.

2. ஆலயத்தின் வாசல் வந்தால் அழுகை வருவதேன்
ஆனமட்டும் அழுதுவிட்டால் அமைதி பெருகுதே
கண்ணீரைப் போல காணிக்கை இல்லை - 2
கண்கொண்டு பாரும் கடவுளின் மகனே
கண்ணீரின் அர்த்தங்கள் நீ தானே.

## காணிக்கை தர நான் வருகின்றேன்

காணிக்கை தர நான் வருகின்றேன்
உன் கரங்களில் என்னைத் தருகின்றேன்
காணிக்கை தர நான் வருகின்றேன்

1. என்ன கொடுத்தாலும் பயனில்லை - நான்
என்னைக் கொடுக்காமல் பொருள் கொடுத்தால்
என்னையே தான் நீ கேட்கின்றாய் - நான்
என்னையே முழுவதும் தருகின்றேன்

2. சிந்தனை சொல் செயல் திறன் அனைத்தும் - மனம்
உள் எழும் ஆசைகள் ஒவ்வொன்றும்
ஒரு துளி நீராய் கலக்கின்றேன் - அதை
பயனுள்ள பணியாய் மாற்றிடுவாய்

## காணிக்கைப் பொருட்களை இறைவா

காணிக்கைப் பொருட்களை இறைவா - எம்
கரங்களில் ஏந்தி உம் பீடம் வந்தோம்

1. எங்களின் இதய தோட்டத்திலே
எழில் மலர் காய்கனி நிறைந்ததய்யா
பொங்கிடும் மகிழ்வுடன் பறித்து வந்து - உம்
பொன்னொளி பீடத்தில் குவித்து வைத்தோம்

2. கோதுமை மாவுடன் எம் மனதில்
கொண்டுள்ள ஆசையைப் பிசைந்தெடுத்து
வேதனைத் தீயினில் வேகவைத்து - நல்
வெண்ணிற அப்பமாய்க் கொண்டுவந்தோம்

தந்தையரை மதிப்போர் பாவங்களுக்குக் கழுவாய் தேடிக் கொள்கின்றனர். அன்னையரை மேன்மைப்படுத்துவோர் செல்வம் திரட்டி வைப்போருக்கு ஒப்பாவர். (சீராக் 3:3-4)

## காணிக்கை தந்தேன் கனிவுடன்

காணிக்கை தந்தேன் கனிவுடன் ஏற்பாய்
இறைவா என்னையும் ஏற்றிடுவாய் - 2
ஏற்பாய் . . . இறைவா . . . இறைவா ஏற்பாய் - 2

1. உழைப்பின் பயனை உம்மிடம் தந்தேன்
ஏற்பாய் நீ என் இறைவா
பணிகளில் வருகின்ற தடைகளையும் - 2
பலியென ஏற்பாய் என் இறைவா (காணிக்கை)

2. சிந்தனை சொல் செயல் நலன்களும் தந்தேன்
ஏற்பாய் நீ என் தலைவா - 2
உடல் பொருள் ஆவி அனைத்தையுமே - 2
உன் பாதம் ஏற்பாய் என் இறைவா (காணிக்கை)
ஏற்பாய் . . . இறைவா . . . இறைவா . . . ஏற்பாய் - 2
ஏற்பாய் . . . இறைவா . . . இறைவா . . . ஏற்பாய் . . . ஏற்பாய் - 2
இறைவா . . . ஏற்பாய் . . . இறைவா.

## தந்தேன் தந்தேன் இறைவா

தந்தேன் தந்தேன் இறைவா
என்னைத் தந்தேன் தந்தேன் தலைவா
உள்ளதையெல்லாம் உமக்காக
உயிர்பலியானாய் எமக்காக - அதில்
என்னையும் இணைத்திட வா . ஆ . . ஆ . . (தந்தேன்)

1. இயற்கை அழகு உந்தன் எழில் வண்ணம்
அங்கு இருக்கும் வளங்கள் உந்தன் அருட்கோலம் - 2
கண்டேன் கண்டேன் உந்தன் கருணை உள்ளம்
தினம் வந்தேன் வந்தேன் உந்தன் மலர் பாதம்
தயவுடன் என்னையும் ஏற்றிடுவாய்
உம் பலியாய் என்னையும் மாற்றிடுவாய்.

2. இதழ்கள் விரிக்கும் நல் மலர்க்கூட்டம்
எங்கும் இறைவன் இருப்பதை பறைசாற்றும் - 2
என்றும் இன்றும் என் இயேசு தேவா
நீ தங்கும் தங்கும் உள்ளம் இறைவன் இல்லம்
காணிக்கைப் பொருளாய் நான் மாறி
உன் காலடி வந்தேன் சரணடைந்தேன்.

## தந்திட்ட பொருட்கள்

தந்திட்ட பொருட்கள் யாவையும் எடுத்து
தந்தோம் தந்தாய் ஏற்றிடுவாய்

வழங்கிட கனியோ உணவோ இன்றி
வாடிடும் வறியோர் பலர் இறைவா - 2
வெறும் விழிநீர் வியர்வை வேதனை அன்றி
வேறேதும் இல்லா நிலை இறைவா.

உனக்கென எம்மை வழங்கிடும் வேளை
உன்னருள் இவர்க்காய் கேட்கின்றோம் - 2
எங்கள் மனம்பொருள் ஆற்றல் அனைத்தையும் இவர்தம்
மனத்துயர் நீங்கப் படைக்கின்றோம்.

## தெய்வீக பலியில் உறவாடும் தெய்வமே

தெய்வீக பலியில் உறவாடும் தெய்வமே
உன்னோடு பலியாக நானும் இணைகின்றேன்
காணிக்கை ஏற்றிடுவாய் - 2

வானம் காணும் ஒளியெல்லாம் - என்
தேவன் தந்த காணிக்கை
மேகம் சிந்தும் துளியெல்லாம் - என்
தேவன் தந்த காணிக்கை
இந்த நினைவில் எந்தன் வாழ்வை
காணிக்கை தந்தேன் உன் மலர் பாதம்

வேதம் சொன்ன வழியெல்லாம் - என்
தேவன் தந்த காணிக்கை
பாதம் படைத்த கனியெல்லாம் - என்
தேவன் தந்த காணிக்கை
இந்த நினைவில் எந்தன் வாழ்வை
காணிக்கை தந்தேன் உன் மலர் பாதம்

## நானே ஒரு காணிக்கை

நானே ஒரு காணிக்கைப் பொருளாக
உன் பீடத்தின் முன் வந்தேன் பணிவாக
தந்தையே ஏற்பாயோ பலியாக.

சிந்தித்தேன் சிந்தித்தேன் வெகுவாக
சிந்தையில் படவில்லை உயர்வாக
தந்திட்டேன் என்னையே முடிவாக
தந்தையே ஏற்பாயோ பலியாக.

படைத்திட்டாய் படைத்திட்டாய் பலவாக
படைப்பு அனைத்தும் எனக்காக
என் அன்புக் கொடை தன்னைப் பரிசாக
தந்தையே ஏற்பாக பலியாக.

## படைப்பு எல்லாம் உமக்கே

படைப்பு எல்லாம் உமக்கே சொந்தம்
நானும் உந்தன் கை வண்ணம்
குயில்கள் பாடும் கிளிகள் பேசும் - 2
என் வாழ்வு இசைக்கும் உன் இராகமே.

1. இயற்கை உனது ஓவியம்
இணையில்லாத காவியம்
அகிலம் என்றும் ஆலயம்
நானும் அதில் ஓர் ஆகமம்
உள்ளம் எந்தன் உள்ளம் - அது
எந்நாளும் உன் இல்லமே.

2. இதயம் என்னும் வீணையில்
அன்பை மீட்டும் வேளையில்
வசந்த இராகம் கேட்கவே
ஏழை என்னில் வாருமே
தந்தேன் என்னைத் தந்தேன் - என்றும்
என் வாழ்வு உன்னோடுதான்.

## பலிபீடத்தில் வைத்தேன் என்னை

பலிபீடத்தில் வைத்தேன் என்னை
பாவி என்னை ஏற்றுக்கொள்ளும்.

1. நிலையில்லா இந்தப் பூவுலகில்
நித்தம் உம் பாதையிலே
நின் சித்தம் போல் உம் கரத்தால்
நித்தம் வழிநடத்தும் - 2.

2. பரிசுத்தம் இல்லா இவ்வுலகில்
பரிசுத்தமாய் ஜீவிக்க
பரிசுத்தமான உம் இரத்தத்தால்
பரிசுத்தமாக்கிவிடும் - 2.

## பலியிடும் நேரம்

பலியிடும் நேரம் பரிசுத்த நேரம்
பரமனே பலியாக பணிந்திடும் நேரம்

1. உள்ளதைக் கொடுத்து நல்லதை கேட்கும்
நம்மவரின் நேரம் - உன்னதர் உறவில்
உன்னையும் என்னையும் இணைக்கின்ற நேரம்
இறைவனே . . என் தலைவனே
பலிப்பொருளாய் உன்னோடு என்னையும் மாற்றிடும் தேவா.

2. கவலைகள் சொல்ல கஷ்டங்கள் நீங்கிடும்
கர்த்தரின் நேரம் - கல்லான மனிதனும்
கறையுள்ள மனமும் கசிந்திடும் நேரம்
இறைவனே . . என் தலைவனே
பிறர்வாழ என்னையும் உன் பணி இணைத்தேன் தேவா.

## வந்தோம் தந்திடவே தந்தாய்

வந்தோம் தந்திடவே
தந்தாய் ஏற்றிடுவாய்
எம் வாழ்வை உமக்கே பலியாய் தந்தோம்
அன்பாய் ஏற்றிடுவாய்.

1. இறைவா உம்மில் இணையா வாழ்வு
இருந்தும் பயனென்ன ஆ .. ஆ .. ஆ . ஆ . ஆ
இகத்தில்ந நீ தந்த வாழ்வைத் தந்தால்
எனக்கு இழப்பென்ன
இனி வாழும் இனிதாக வேண்டும்
இறைவா உன்னோடு **இணைந்தாக வேண்டும் - 3**

2. இறைவா எந்தன் உள்ளம் என்றும்
உன்னைத் தேடுதே ஆ .. ஆ .. ஆ . ஆ . ஆ
உன்னில் இணைந்து உயர்வு பெறவே
விரைந்து நாடுதே
உம் நாமம் ஓங்க எந்நாளும் வாழ்ந்து
இறைவா உன்னோடு **இணைந்தாக வேண்டும் - 3**

## வாழ்வின் நாயகனே நான்

வாழ்வின் நாயகனே நான் வாழ்ந்ததைத் தரவந்தேன்
காலடி பணிந்து முன்னே காணிக்கை தருகின்றேன்
கருணை பொழிந்து என்னை ஏற்பாய்.

1. திறந்த மனதுடன் பரந்த அன்புடன்
பகைவரை ஏற்றுக் கொண்டேன்
நிறைந்த மகிழ்ச்சி கண்டேன் - அது
மன்னிப்பில் எழக்கண்டேன்
சிறந்த மனிதனாய் வாழ்ந்திட நினைத்தேன்
முயற்சியைத் தருகின்றேன் - 2
இறந்தேன் எனக்குள் தன்னலம் அழித்த
**அதனைக் கொண்டுவந்தேன்** - நான் - 2

2. மரமாய் வளர விதையும் தன்னை
அழிக்கும் நிலை கண்டேன்
உரமாய் ஆகிவிட்டேன் - பிறர்
வாழ்ந்திட எனைக் கொடுத்தேன்

பரமே உந்தன் கரமாய் இணைந்து
பலியினைத் தருகின்றேன் - 2
சிரமே பணிந்தேன் அன்பின் மனிதனாய்
**என்னை மாற்றிடுவாய் - நீ - 2**

## *வாழ்வைப் பலியாய் மாற்ற*

வாழ்வை பலியாய் மாற்ற வந்தேன்
என்னையே ஏற்றிடுவாய்
முழுமனதுடனே கையளிக்கின்றேன்
காணிக்கை ஏற்றிடுவாய்.

1. கோதுமை மணியும் திராட்சைக் கனியும்
புது உரு பெறுவது போல் - 2
அன்பும் அமைதியும் நீதியும்
மனிதனில் மலர்ந்திட உயிர் தருவாய்


2. நான் வாழ பிறரும் பிறர்வாழ நானும்
தேவை என்றுணர்ந்தேன் - 2
சமத்துவ சோதர நோக்குடனே
புதுயுகம் காண்போம் அகத்தினிலே.

## *கையளிக்கின்றேன் இறைவா*

கையளிக்கின்றேன் இறைவா - எந்தன்
மெய்ப்பொருள் ஆவி அனைத்தையும் உமக்கு

1. வாழ்க்கையைவிட எந்தன் வளமையைவிட உந்தன்
அருள்நிலை ஒன்றே மேலானதே - 2
வாழ்க்கையில் உம்மை வாழ்த்துவது - எல்லா
வரங்களையும் விட மேலானதே.

2. செழுமையும் கொழுமையும் பெறுவதுபோல் எந்தன்
இதயமும் உனது முன் நிறைவு பெறும் - 2
முழுமை என் உள்ளமதை நிரப்பிடவே - நாவில்
மகிழ்ச்சியின் புகழ்ச்சியின் பாடல் எழும்.



# 4. திருவிருந்துப் பாடல்கள்

## அகவிருந்தாக என் இறைவா

அகவிருந்தாக என் இறைவா வா - மனம்
மகிழ்ந்திட வாழ்க்கையின் நிறைவே வா.

1. ஆறுதல் அளித்திடும் அருள்மொழியே - திரு
ஆகமம் முழங்கிடும் உயிர் மொழியே
உடலோடு உலகோர் நடுவெழுந்தாய் - உம்
உடலென எமை நீ மாற வைத்தாய்.

2. தேன்மொழி மொழிந்த ஒள் திரு இதழால் - எம்
தூன்ம நற்குணம் பெற மொழிந்திடுவாய்
உமையடைந்திடயாம் தகுதியற்றோம் - இனி
உமதருள் கிடைத்தால் வாழ்ந்திடுவோம்.

3. நேரிய மனத்தவர் குறை தணிப்பாய் - எமை
நீடிய மகிழ்வினில் நிலைக்க வைப்பாய்
நலமிகு உணவாய் நிறைந்திடுவாய் - இனி
உலகிலே உன்னில் வாழ வைப்பாய்.

## அன்பனே விரைவில் வா

அன்பனே விரைவில் வா - உன்
அடியேனைத் தேற்ற வா
அன்பனே விரைவில் வா.

1. பாவச் சுமையால் பதறுகிறேன்
பாதை அறியாது வருந்துகிறேன்
பாதை காட்டிடும் உன்ன்னயே நான்
பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

2. அமைதி வாழ்வைத் தேடுகிறேன்
அருளை அளிக்க வேண்டுகிறேன்.
வாழ்வின் உணவே உன்னையே நான்
வாழ்வு அளிக்க வேண்டுகிறேன்.

3. இருளே வாழ்வில் பார்க்கின்றேன்
இதயம் நொந்து அழுகின்றேன்
ஒளியாய் விளங்கும் உன்னையே நான்
வழியாய் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

பாவத்துக்கு மேல் பாவம் செய்யும் அளவுக்குப் பாவ மன்னிப்புப் பற்றி அச்சம் இல்லாமல் இராதே. ஆண்டவரின் பரிவு எல்லை அற்றது. (சீராக் 5:5)

## அன்பெனும் வீணையிலே

அன்பெனும் வீணையிலே - நல்
ஆனந்தக் குரலினிலே
ஆலய மேடையிலே - உன்
அருளினைப் பாடிடுவேன்.

1. அகமென்னும் கோவிலிலே - என்
தெய்வமாய் நீ இருப்பாய் - 2
அன்பென்னும் விளக்கேற்றி - உன்
அடியினை வணங்கிடுவேன்.

2. வாழ்வென்னும் சோலையிலே - நல்
தென்றலாய் நீ இருப்பாய் - 2
தூய்மையென்னும் மலரை - நான்
தாள் மலர் படைத்திடுவேன்.

## அன்பு எந்தன் இதய வாசல்

அன்பு எந்தன் இதய வாசல் தேடி வந்தது
இந்தப் பகிர்வில் நாளும் என்னை அழைத்து தேடிச்சென்றது
துன்ப சூழல் முன் வந்தாலும்
துயரம் என்னை அழுத்தினாலும்
அரணாக எனைக் காக்க வருகின்றது (அன்பு).

1. மனித வாழ்வில் துயர் துடைக்கும் உயர்நோக்கமே
என் இறை வாழ்வின் நிறை சார என்றுணர்த்தியது - 2
வானமெல்லாம் ஒருவர் கையில் குவிந்திருப்பதை
பசித்தோர் நலனுக்காக பகிர்ந்தளிக்க ஊக்கம் தந்தது - 2
ஏழை வாழ்வு உயர ஏற்றத்தாழ்வு மறைய - 2
திரு உணவு பந்தியிலே கலந்திடுவீரே (அன்பு).

2. உண்மை உறவுக்காய் நம்மை இழக்க அழைப்பு விடுத்தது
உலகில் அனைவருமே ஒரு குடும்பம் என்றுணர்த்தியது
பிறப்பினால் உயர்வு தாழ்வு வேண்டாமென்று
பேதமை களைந்து மகிழ்வில் நிலைக்க சொன்னது - 2
அமைதி மண்ணில் ஓங்க அகிலம் நிறைவு காண
அன்பன் இயேசு தேடி வருகிறார் (அன்பு).

## அன்பே அன்பே இறை அன்பே

அன்பே அன்பே இறை அன்பே
எந்தன் ஒளியாக வா
அன்பே அன்பே உண்மை அன்பே
எந்தன் வழியாக வா.

1. மதங்கள் பல இன்று மதமானாலும்
உந்தன் அன்பு மதம் ஒன்றே
வேதங்கள் பல இன்று இருந்தாலும்
உன் உண்மை வேதம் என்றும் ஒன்றே
என் பாதையெல்லாம் ஒளியாக வீசி
கரம்பிடித்து நடத்திடு (2).

2. செல்வங்கள் பல இங்கு குவிந்தாலும்
உன் இதய அமைதி ஒன்றே போதும்
மனித சுதந்திரங்கள் மலர்ந்தாலும்
உன் அன்பன் மீட்பு இனி போதும்
என் உள்ளமெல்லாம் உன் அமைதி பொழிந்து
என் இதயம் மீட்டிடு (2).

## ஆனந்த மழையில் நானிலம்

ஆனந்த மழையில் நானிலம் மகிழ
மன்னவர் எழுகின்றார்
ஆயிரம் நிலவொளியோ எனை
ஆண்டிடும் இறையரசோ
அவனியை மாற்றிடும் அருட்கடலோ

1. மன்னவனே என்னிதம் பொன்னடி பதிக்கின்றார்
விண்ணகமே என்னிதயம் அன்புடன் அழைக்கின்றார்
இனி என் வாழ்விலே ஒரு பொன்னாளிதே
பண்பாடவோ என்றும் கொண்டாடவோ
**மலர்கின்ற புதுவாழ்விலே இனி சுகமான புதுராகமே - 2**
என்றென்றும் உண்டாகும் **பேரின்பமே - 2.**

2. சேற்றினிலே தாமரையாய் தேர்ந்தென்னை எடுத்தாரே
காற்றினிலே நறுமணமாய் கலந்தெனில் நிறைந்தாரே
எனில் ஒன்றாகினார் நான் நன்றாகினேன்
பணி வாழ்வுக்காய் எனைப் பரிசாக்குவாய்
**மலர்கின்ற புதுவாழ்விலே இனி சுகமான புதுராகமே - 2**
என்றென்றும் உண்டாகும் **பேரின்பமே - 2.**

## இயற்கையில் உறைந்திடும்

இயற்கையில் உறைந்திடும் இணையற்ற இறைவா
என் இதயத்தில் எழுந்திட வா
என்றும் இங்கு என்னோடு
நின்று என்னை அன்போடு
காத்திடு என் தலைவா

1. உந்தன் அன்பு உறவின்றி எனக்கு இங்கு
சொந்தம் சுற்றம் சூழ்ந்திட பயன் என்னவோ - 2
மெழுகாகினேன் திரியாகவா
மலராகினேன் மணமாகவா - 2

2. உருவில்லா இறைவன் உன் உதவியின்றி
உலகத்தில் எதுவும் நடந்திடுமோ - 2
குயிலாகினேன் குரலாகவா
மயிலாகினேன் நடனமாடவா - 2

## இயேசுவே என் உள்ளம்

இயேசுவே என் உள்ளம் வாருமே - என்
உள்ளத்தில் நீர் வந்து தங்குமே
பேசுமே என்னோடு பேசுமே
இயேசுவே இயேசுவே பேசுமே.

1. ஆசையாய் நான் காத்திருக்கின்றேன்
ஆண்டவர் இயேசு என்னில் வரவேண்டும்
ஆண்டவர் இயேசு என்னில் வளர்ந்திட வேண்டும்
ஆண்டவர் இயேசு என்னை ஆட்கொள்ள வேண்டும்.

2. நீ இல்லாமல் வாழ்ந்தபோது வெறுமையாகினேன்
நீ என் வாழ்வில் கலந்தபோது முழுமையாகினேன்
நீ என்னோடும் நான் உன்னோடும் கலந்திட வேண்டும்
நாளும் நெஞ்சில் புதிய ராகம் மலர்ந்திட வேண்டும்.

3. பாவத்திலே வீழ்ந்தபோது தாழ்ந்துபோயினேன் - உன்
பாசத்திலே சேர்ந்தபோது மேன்மையாகினேன்
அன்பும் அருளும் இனி என் வாழ்வில் நிறைந்திட வேண்டும்
அமைதியும் ஆனந்தமும் விளைந்திட வேண்டும்.

## இறையவனே என் வழித்துணை நீயே

இறையவனே என் வழித்துணை நீயே
இறைஞ்சிடும் ஏழையில் வாழ்க . . வாழ்க . . வாழ்க

1. திசை தெரியாத மரக்கலம் போல
திரிந்திடும் வாழ்வு உனதொளி காண
கலங்கரைத் தீபம் எனக்கு நீயாவாய்
நலந்தரும் வானின் உணவென வாராய்

2. இகவழியாக அக ஒளியாவாய்
பகைமையை நீக்கிப் புது உறவாய்
தகுதியில்லாத எளியேனைத் தேடி
எழுந்துள்ளம் வாழ இறைவனே வாராய்.

## இறைமகன் விருந்தொன்று

இறைமகன் விருந்தொன்று தருகின்றார்
இதயம் மகிழ்ந்திட வருகின்றார்
சுமைகளைக் கண்டு சோர்ந்திருப்போரே
சுகங்களைத் தருவார் வாருங்களே

1. உயிருக்கு மருந்தாய் உடலுக்கு உறவாய்
உவந்து நம்மில் வருகின்றார் - 2
உதயத்தைக் காண தவம் இருப்போரே
உள்ளத்தைத் திறந்தே வாருங்களே - 2
உயிராய் உணவாய் வருகின்றார்
உள்ளத்தை நமக்காய் தருகின்றார்

2. மாசில்லா மனதில் மகிழ்ந்தே பொங்கிட
மன்னவன் மகிழ்ந்தே வருகின்றார் - 2
கள்ளமே இல்லா உள்ளத்தில் வாழ
களித்தே உவந்தே வருகின்றார் - 2
அருளாய் பொருளாய் வருகின்றார்
நிறைவாய் ஏற்றிட வாருங்கள்.

## உன்னில் நான் ஒன்றாக

உன்னில் நான் ஒன்றாக உயிரே நீ என்றாக
என்னில் வா என் மன்னவா - 3

1. நினைவாக சொல்லாக செயலாக எனில் வாழும்
துணையாளன் நீயல்லவா - 2
எனை நாளும் பிரியாமல் உயிராடு உயிராக
இணைகின்ற என் மன்னவா

2. முதலாகி முடிவாகி முழுதான அன்பாகி
மூன்றாகி ஒன்றானவா - 2
இனிதாக கனிவாக அருள்வாழ்வின் நிறை காண
எனைத் தேர்ந்த என் மன்னவா - 2

3. நிலம் வாழ நீராகி மலர் வாழ ஒளியாகி
நலம் சேர்க்கும் என் மன்னவா - 2 - என்
உளமென்னும் மலர்வாழ அன்பென்னும் மணம் நல்கும்
இளந்தென்றல் நீயல்லவா - 2

4. என் நெஞ்சம் திருக்கோயில் இதிலென்றும் வாழ்கின்ற
என் தெய்வம் நீயல்லவா - 2 - உன்
திருமுன்னே எந்நாளும் சுடராக எரிகின்ற
மணிதீபம் நானல்லவா - 2

## உயிரைத் தந்து உறவைத் தேடும்

உயிரைத் தந்து உறவைத் தேடும்
தேவன் பலி இதுதான் இது
உலகம் வாழ உணவாய் வந்த
வானின் அமுதம்தான் (2)
தீபம் ஈந்து உருகும் மெழுகாய் வருவோம்
தாகம் தீர்க்க பொழியும்
வான் மழையாய் வருவோம்

1. நெஞ்சம் அது கோவில் நேசம் அதன் வாசல்
உறவென்னும் பலி செய்யலாம்
உலகம் கலைக்கூடம் அன்பே அதன் பீடம்
இறையாட்சி நிலை காணலாம்
பகைமை பழி மறந்து கருணை வழிப்போவோம்
அன்பாலே உலகம் செய்வோம்
இரத்தம் நிறம் ஒன்று நித்தம் நிறைக்கொண்டு
புவி எங்கும் வேதம் சொல்வோம்
அடிமை விலங்கும் இல்லை
ஆட்சி முடிவும் இல்லை
இறைவனின் தலைமையில் வாழ்ந்திட வந்திடுமே. (உயிரை)

2. பணமும் தோள் பலமும் வாழ்வின் வழி என்று
பொய்யான கொள்கை கொண்டோம்
எளியோர் அழும் கண்ணீர் உழைப்போர் சிந்தும் வேர்வை
எல்லாமே காசாய் கண்டோம்
மனிதம் இறைவுலகம் வாழ்ந்தால் அதுபுரியும்
பாசத்தால் புரியாததா
உள்ளம் அது நொந்தால் உறவே அதன் மருந்தாம்
விழியாலே வழி காணலாம்
மனதில் மாசும் இல்லை
வாழ்வில் குறையும் இல்லை
நிறையுடன் பலி செய்ய
நித்தம் வந்திடுமே. (உயிரை)

## உலகாளும் தலைவன்

உலகாளும் தலைவன் உயிருள்ள இறைவன்
உதிக்கின்ற நேரமிது
உள்ளங்கள் எல்லாம் உண்மையில் வாழ
உணவாகும் தருணமிது
கரம் கூப்பி சிரம் தாழ்த்தி பணிவோம்
அவர் பணி செய்யும் சீடராய் உயர்வோம்

1. செல்கின்ற இடமெல்லாம் நன்மைகள் செய்தவர்
நமையெல்லாம் அழைக்கும் நேரமிது
தேவையில் இருப்பவர் அனைவரைத் தேடி
பணி செய்ய அழைக்கும் நேரமிது
**ஆனந்த நேரமிது (2) அருள்மழை பொழிகிறது**
கரம் கூப்பி . . . . .

2. அயலாரைத் தேடி நேசித்த இறைவன்
பாதையில் சென்றிடும் நேரமிது
நண்பருக்காக உயிர்தர அழைத்தவர்
தியாகத்தை உணரும் நேரமிது
**ஆனந்த நேரமிது (2) அருள்மழை பொழிகிறது**
கரம் கூப்பி . . . . .

## என் ஆயன் யேசு

என் ஆயன் இயேசு
என் உள்ளம் தேடி வருகின்ற நேரமிது
என் ஆன்மா அவரை
ஏற்றிப் போற்றி மகிழும் வேளையிது
என்ன தவம் நான் செய்தேன்
எந்நன்றி நான் சொல்வேன்

1. பசியால் வாடும் ஏழையின் நிலையில்
பாவி நான் நின்றிருந்தேன்
பரமன் இயேசு என் பாவத்தை அகற்றி
அருளமுதை ஈந்தார் - 2.

2. ஆயிரம் குறைகள் என்னிடம் கண்டும்
அணைத்திடவே வந்தார்
ஆண்டவர் இயேசு அன்பினால் என்னை
மாற்றிடவே வந்தார் - 2.

## எனில் வாரும் என் இயேசுவே

எனில் வாரும் என் இயேசுவே - என்றும்
என்னோடு உறவாடவே
நீயின்றி ஒன்றில்லையே - இங்கு
நீர் தாமே என் எல்லையே

1. என் நெஞ்ச வீட்டினில் என் இன்ப பாட்டினிலே
உம் நாமம் நான் பாட என் உள்ளம் நீர் வாருமே
என் அன்புத் தாயாக எந்நாளும் எனைக்காக்கவே
என் சொந்தம் நீயாக என் வாழ்வும் நீயாகவே

தேவா எழுந்து வா தேடும் அமைதி தா - 2
உனை அழைத்தேன் உயிர் கொடுத்தேன்
உறவைத் தேடியே

2. பயணம் தான் நான் செல்ல பாதையும் நீயாகவே
வழியெல்லாம் துணையாக வாழ்வெல்லாம் இனிதாகவே
சுமையெல்லாம் சுகமாக பகையெல்லாம் பரிவாகவே
நினைவெல்லாம் நிறைவாக நெஞ்சோடு நீ வாழவே -

தேவா எழுந்து வா .......

## என்னோடு நீ பேச

என்னோடு நீ பேச வந்தாய்
என் வாழ்வை நீ மாற்றி நின்றாய்
என் தெய்வமே ( 2)
நீயின்றி நானில்லையே - உன்
நினைவின்றி வாழ்வில்லையே

1. இதயத் தாகம் நீ இருளின் தீபம் நீ
உதயக்காலை நீ உறவின் பாலம் நீ
தள்ளாடி நான் தடுமாறினேன்
கண்மூடி நான் வழிமாறினேன்
தீயாகும் துன்பங்களில் - நீ
தாயாகித் தாலாட்டினாய்.

2. உயிரின் தீபம் நீ உலகின் தெய்வம் நீ
மழையின் மேகம் நீ மலரின் மணமும் நீ
என் பாதையில் முன்போக வா
கண் போலவே எனைக்காக்க வா
ஆதாரம் நீயாகவே - உன்
அன்பொன்றே எனதாகவே.

## என்னைச் சுமப்பதனால் இறைவா

என்னைச சுமப்பதனால் இறைவா
உந்தன் சிறகுகள் உடைவதில்லை
என்னை நேசிப்பதால் இறைவா
உந்தன் அன்பு குறைவதில்லை
இயேசுவே என் சொந்தமே
இயேசுவே என் பந்தமே
எந்நாளும் எனைக் காக்கும் என் தெய்வமே

1. அன்பு ஒன்றால் உலகை ஆள
உண்மை வழி காட்டினாய்
பகையை நீக்கி பாசம் ஓங்க

நேச தீபம் ஏற்றினாய்
உன் சிலுவை நிழலில் பயணம் தொடர்வேன்
பாதுகாப்பாய் இறைவா - என்னை - 2

2. நீதி வழியில் நிறைவினை காண
நீயும் உலகில் தோன்றினாய்
சேயை நேசிக்கும் தாயைப் போல
தயவாய் என்னைக் காக்கின்றாய்
உன் அமைதியின் வழியில் அனைத்துமாய் ஆனேன்
ஆண்டு நடத்தும் இறைவா - என்னை - 2.

## என் தேடல் நீ

என் தேடல் நீ என் தெய்வமே
நீயின்றி என் வாழ்வு நிறம் மாறுதே
உனை மனம் தேடுதே
நீர் வழிகாட்டுமே

1. ஒரு கோடி விண்மீன்கள் தினம் தோன்றினும்
நீயின்றி என் வாழ்வு இருள் சூழ்ந்திடும்
பிறர் அன்பை என் பணியில் நான் ஏற்கையில்
உன் அன்பு உயிர் தந்து வாழ்வாகிடும்
இறைவார்த்தையில் நிறைவாகுவேன்
மறைவாழ்விலே நிலையாகுவேன்
வழிதேடும் எனைக்காக்க நீ வேண்டுமே

**இறைவா இறைவா வருவாய் இங்கே**
**இதயம் அருகில் அமர்வாய் இன்றே**

2. உன்னோடு நான் காணும் உறவானது
உள்ளத்தை உருமாற்றி உனதாக்கிடும்
பலியான உனை நானும் தினம் ஏற்கையில்
எளியேனில் உன் வாழ்வு ஒளியாகிடும்
உன் மீட்டலால் எனில் மாற்றங்கள்
உன் தேடலால் எனில் ஆற்றல்கள்
வழி தேடும் எனைக்காக்க நீ வேண்டுமே

**இறைவா இறைவா . . . .**

## எந்தன் உயிரே நீ தான் இயேசுவே

எந்தன் உயிரே நீ தான் இயேசுவே
உன்னை மட்டும் சுவாசிப்பேன் - 2
நான் உன்னை மறந்தாலும்
நீ என்னை மறவாமல் - 2
என் மீது பாசம் கொண்டாய்
என் நெஞ்சில் வாசம் செய்தாய்

1. கல்வாரி நினைவுகள் தான்
என் வாழ்வின் பலமாகுமே
உன்னோடு ஒன்றாதினால்
என் வாழ்வின் நலமாகுமே
உணவாய் எழுந்து என்னில் வந்து
என் உணர்வாய் கலந்து உயிர் சுமந்தாய்
மெழுகாய் உருகி ஒளிர்ந்திடவே
உனது ஆற்றல் வேண்டுமே

2. என் வாழ்வின் தேடல்களில்
வழியாகி ஒளியாக வா
என் வாழ்வின் சோகங்களில்
தாயாகி தாலாட்ட வா
உறவாய் என்னை நீ அணைத்தால்
உன் உறவுகள் இங்கு உயிர் பெறுமே
சிலுவைகள் தோளில் நான் சுமக்க
உனது சிறகுகள் வேண்டுமே

## ஏழிசை நாதனே

ஏழிசை நாதனே எழுவாய் - இறை
அருளை என்னில் நீ பொழிவாய் - பல
வர ங்கள் தந்து என்னைக் காப்பாய்
வழிகாட்ட எழுந்து வருவாய்

1. வாழ்வும் வழியும் நீ எனக்கு
வளங்கள் சேர்க்கும் அரு மருந்து - 2
**உறவை வளர்க்கும் விருந்து** - 2 - எனில்
நிறைவை அளிக்கும் அருளமுது
**பாடுவேன் பாடுவேன் பல சிந்து**
**பாரினில் வாழுவேன் உனில் இணைந்து - 2**

2. விழியும் ஒளியும் நீ எனக்கு
விடியல் காட்டும் ஒளிவிளக்கு - 2
**மனிதம் வாழும் தெய்வம்** - 2 - என்னில்
புனிதம் வளர்க்கும் நல் இதயம்
**பாடுவேன் பாடுவேன் . . . .**

## என்னுயிரே எந்தன் உயிரே

என்னுயிரே எந்தன் உயிரே என்னில் கலந்திட வா
உன் அன்பில் நான் என்றும் வாழ
என்னுள்ளம் எழுந்து நீ வா.

1. வாழ்வென்னும் பயணத்தில் வழியெங்கும் துணையாய்
என்னோடு இருப்பவரே
வாடிய பொழுதினில் வசந்தமாய் என்னில்
வலுவூட்டும் இறையருளே
**நீ மட்டுமே நிலையானவா**
**நீ மட்டுமே உறவானவா (2)**
நீ மட்டுமே என் உறவானவா.

2. பணிவிடை பெற அன்று பணிவிடை புரியவே
எம்மோடு வாழ்ந்தவரே
வானக விருந்தின் முன்சுவை இரவினில்
தன்னுடலை தந்தவரே
**நீ மட்டுமே . . . . .**

## என்னில் நீ வா

என்னில் நீ வா
என் இறைவா
என் வாழ்வில் வா
என் வாழ்வில் நீ வா
என்னில் வா என்னில் வா
என்னிலே நீ வா - 2
உன்னை நான் காணவா
என்னை நீ காக்கவா
வண்ண ஒளியாக வா
விண்ணின் வழியாக வா
எந்தன் நினைவாக வா
என்னில் உறவாட வா

1. உனது ஒளி கொண்டு என்னிலே வா
உலகாளும் தேவ என்னிலே வா
உதயம் நான் காண என்னிலே வா
உறவாடும் தேவா என்னிலே வா
எனையாள என்றும் என்னிலே வா
என்னோடு இருக்க என்னிலே வா
உணவாக வா . . . வா . . .
உறவாட வா . . . வா . . .
உயிர்வாழ உயிரே நீ வா - 2

2. மன இருள் அகற்றிட என்னிலே வா
மகிழ்வோடு இருக்க என்னிலே வா

வளமோடு வாழ என்னிலே வா
வரமருள் பொழிந்திட என்னிலே வா
இகமதில் வளர்ந்திட என்னிலே வா
அகமதில் ஒளிர்ந்திட என்னிலே வா
உணவாக வா . . . வா . . .
உறவாட வா . . . வா . . .
உயிர்வாழ உயிரே நீ வா - 2

## ஒளியாம் இறையே வாராய்

ஒளியாம் இறையே வாராய்
எளியோர் நெஞ்சம் தனிலே
ஒளியாம் இறையே வாராய்

1. விண்ணில் வாழும் விமலா
மண்ணில் வாழும் மாந்தர்
உம்மில் என்றும் வாழ
எம்மில் எழுமே இறைவா
ஒளியே எழிலே வருக - 2

2. நீரும் மழையும் முகிலால்
பூவும் கனியும் ஒளியால்
உயிரும் உறவும் உம்மால்
வளமும் வாழ்வும் உம்மால்
ஒளியே எழிலே வருக - 2

## ஒருபோதும் உனைப் பிரியா

ஒருபோதும் உனைப்பிரியா நிலையான
உறவொன்று வேண்டும்
என் உடல் கூட எரிந்தாலும்
உம் நாமம் நான் சொல்ல வேண்டும்
நினைவிலும் நீயே என் கனவிலும் நீயே
நீங்காத நிழலாக வா இறைவா.

1. உன் கையில் என்னை நீ பொறித்தாய்
பெயர் சொல்லி அன்பால் என்னை அழைத்தாய்
**ஏன் என்னை நீ தெரிந்தாய்**
**என் வாழ்வில் ஏன் நுழைந்தாய் - (2)**
உன் மாறாத அன்பில் மகிழ்வொன்று கண்டேன்
தாய் உறவொன்று தேடும் பிள்ளைபோல் நின்றேன்
உன்னோடு நான் வாழுவேன்.

2. நீர் தேடும் மான்போல தேடி வந்தேன்
நீயின்றி வாழ்வில்லை என்றுணர்ந்தேன்

என்னுள்ளே வாழும் தெய்வம்
என்னை நீ ஆளும் தெய்வம் - (2)
என் இயேசு நீயே நிதம் என்னுள்ளம் நின்றாய்
நிதம் என் பாதை முன்னே நீதானே சென்றாய்
உன்னோடு நான் வாழுவேன்.

## செந்தமிழில் உந்தன்

செந்தமிழில் உந்தன் புகழ் எழுதி - நான்
பாடிடுவேன் இறைவா - என்
சிந்தனையில் நீ இருந்து வாழ
எழுந்தருள்வாய் தலைவா - என்னில்
எழுந்தருள்வாய் தலைவா.

உன் உடல் உயிர்த்ததுன் வல்லமையால்
உலகினர் உயிர்ப்பதுன் வல்லமையால்
என்னுடல் உயிருடன் வாழ்ந்திடவே - 2
இறைமகனே இன்று எழுந்தருள்வாய் - 2

உன்னுயிர் தியாகம் புரிந்ததினால்
மண்ணுயிர் தினமும் மகிழ்கின்றது
என்னுயிர் மெழுகாய்க் கரைவதனால் - 2
என்னுயிர் காத்திட எழுந்தருள்வாய் - 2

பாலையில் மன்னா வழங்கி நின்றாய்
பலியினில் உன்னை வழங்குகின்றாய்
காலையில் உணவின்றித் தவிக்கின்றேன் - 2
கனியமுதாய் என்னில் எழுந்தருள்வாய் - 2

## செம்மறியின் விருந்துக்கு

செம்மறியின் விருந்துக்கு
அழைக்கப் பெற்றோர் பேறுபெற்றோர்
அவ்விருந்தை உண்டிட
சென்றிடுவோம் இன்பம் பொங்க

இறைவன் தரும் விருந்திது அதை உண்ணத் தடையென்ன
உறைய வரும் இறைவனை நாம் ஏற்கத் தடையென்ன
உள்ளக் கதவு திறந்தது அதன் உள்ளே வாழுவாய்
உவகை என்னும் ஒளிகொணர்ந்து எம்மை ஆளுவாய்

வானம் பொழிய பூமி விளையும் வளமும் பொங்குமே
வளமே தரும் ஒளியால் சோலை மலரும் எங்குமே
எந்தன் உணவாய் நீ வந்தாலே இன்பம் தங்குமே
உந்தன் அருளை விதைத்தால் இந்த உலகம் உய்யுமே

3. உலகம் எல்லாம் இணைவது உன் உள்ளம் ஒன்றிலே
இயற்கை நிறைவு கொள்வது உன் செயலின் பண்பிலே
மனித உள்ளம் மகிழ்வது உம் புனித உறவிலே
மறையும் வாழ்வு மலர்வது உன் மகிழ்வின் பங்கிலே

## தாயான தெய்வமே

தாயான தெய்வமே
துணையான செல்வமே
தேன் தமிழில் கவி புனைந்து
தினமும் உன்னை வாழ்த்துவேன்

1. பாடி உன்னைச் சரணடைந்தேன் பாச மழை பொழிந்தாய்
கோடி நலம் செய்தாய் என் குறைகள் எல்லாம் தீர்த்தாய்
கறை காணா உன் அன்பில் நான் வாழ்கிறேன்
கரம் கூப்பி உன் பாடல் நான் பாடுவேன்.

2. தஞ்சமென்று உன்னையே செந்தமிழில் பாடினேன்
பண்போடு வாழ்ந்திட நல்ல மனம் தந்தாய்
உன் வழியில் உண்மையாய் நாளும் நடந்திட
உலகெங்கும் நீ வாழ்ந்து சக்தியாகிறாய்.

## தெய்வ தரிசனம் தேடும் மனம்

தெய்வ தரிசனம் தேடும் மனம் தினம்
தேவன் வரவிலே ஜீவன் உருகிடும்
**இதைப் பாடாத நாளில்லையே**
**இதைத் தேடாமல் வாழ்வில்லையே**
இறைவா இறைவா என் இதயம் இணைவாய்
நிறைவாய் நிறைவாய் என் இதயம் உறைவாய்

1. வாழ்வு வழங்கும் வல்ல தேவன் வரவு என்னிலே
வசந்தம் என்றும் வசந்தம் எந்தன் வாழ்வு தன்னிலே
வான தேவன் வார்த்தை இங்கு வடிவமானதே
வானும் மண்ணும் அழிந்த பின்பும் வாழ்வு என்னிலே
ஒளியே ஒளியே உலகின் ஒளியே
உயிரே உயிரே உயிரின் உயிரே - **இதைப்பாடாத . . . .**

2. அன்பிற்காக ஏங்கும் எந்தன் ஆசை ஓய்ந்திடும்
அளவில்லாத அன்பன் நேசம் அரவணைத்திடும்
நினைவில் ஆடும் நிழல்கள் யாவும் நிஜங்களாகிடும்
நீங்கிடாமல் நிறைவின் நேசம் நிதமும் தொடர்ந்திடும்
ஒளியே ஒளியே உலகின் ஒளியே
உயிரே உயிரே உயிரின் உயிரே - **இதைப்பாடாத . . . .**

## தேவா எந்தன் நாவிலாடும்

தேவா எந்தன் நாவிலாடும் பாடலாக வா
தேவா உந்தன் வான்புகழை பாட வரம் தா
உன் அருள் மேன்மையால் பூமி எங்கும் புன்னகை
உன் புகழ் பாடவே பொங்கி எழும் வல்லமை
மாமரா வாழ்த்த எழும் இறையரசின் வைகறை - தேவா

நான் எந்தன் வேலியாக எந்நலம் கொண்டேன்
நீ பூமி எங்கும் வாழும் தென்றல் ஆகின்றாய் - 2
உன் ஒளி காணக் காண உள்ளம் மலர வேண்டுமே
உன் வழி போகப் போக உறவு பெருக வேண்டுமே
இறையே திருவே வாழ்வு உந்தன் கீதமாகவே

நான் சிறு கணம் எரியும் ஒளித்துகளானேன்
நீ அதை ஏற்றி வைத்த ஒளிக்கடலானாய் - 2
உன் பணி செய்வதிலே எந்தன் ஆசை தீரவே
தன் தலை தியாகம் ஏற்கும் தீப வாழ்வைப் போலவே
இறையே திருவே வாழ்வு உந்தன் கீதமாகவே.

## தேடும் அன்பு தெய்வம்

தேடும் அன்பு தெய்வம் - எனை
தேடி வந்த நேரம்
கோடி நன்மை கூடும்
வாழும் நிலைகள் மாறும்
இந்த வான தேவன் தந்த வாழ்வுப் பாதை
எந்தன் வாழும் காலம் போகும் - (2).

1. வார்த்தையாகி நின்ற இறைவன் - இந்த
வாழ்வைத் தேர்ந்த தலைவன்
பாரில் எங்கும் புது பாதை தந்து - அந்த
பாதையில் அழைத்த அறிஞன்
காலம் கடந்த கலைஞன் என் தலைவன் - இந்த வான . . .

அடிமை அமைப்பு இங்கு ஒழிய - எங்கும்
மனித மாண்பு நிறைய
புரட்சிக் குரல் கொடுத்து புதிய வழி வகுத்து
புதுமை செய்த பெரும் புனிதன்
வாழ்வைக் கடந்த இறைவன் என் தலைவன் - இந்த வான . . .

நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும். (யோவான் 15:7)

## நற்கருணை ஆண்டவர் விருந்திது

நற்கருணை ஆண்டவர் விருந்திது
நமக்குத் தரும் ஆன்ம உணவிது
இதனை நாம் உண்டிடுவோம் ஒருடலாய் வாழ்ந்திடுவோம்
இயேசுவோடு இணைந்திடுவோம் இயேசுவாக வாழ்ந்திடுவோம்

1. நற்கருணை ஆண்டவர் எழுந்து
நம்மில் வருகின்றார் - அவர்
விருந்திலே நாமும் பங்கு கொள்வோம் - 2
தகுதியோடு நற்கருணை நாளும் நாமும் உண்டால்
இனி வாழ்வது நானல்ல
இயேசு வாழ்கின்றார் - 2

2. நற்கருணை விருந்திலே நாமும்
தினம் மகிழ்ந்திடுவோம்
நாமெல்லாம் ஒன்றுகூடி பகிர்ந்து உண்போம் - 2
நல்லவராம் இயேசு நம்மில் எழுந்து இன்று வருகின்றார்
நலமோடு வாழ்வு வாழ
அருளைப் பொழிகின்றார் - 2

## நானே வானினின்று

நானே வானினின்று இறங்கி வந்த
உயிருள்ள உணவு - இதை
யாராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார்
அவர் என்றுமே வாழ்வார் - நானே.

1. எனது உணவை உண்ணும் எவரும்
பசியை அறிந்திடார் ஆ .. ஆ .. ஆ ... - என்றும்
எனது குருதி பருகும் எவரும்
தாகம் தெரிந்திடார்.

2. அழிந்து போகும் உணவிற்காக
உழைத்திட வேண்டாம் ஆ .. ஆ .. ஆ ... - என்றும்
அழிந்திடாத வாழ்வு கொடுக்கும்
உணவிற்கே உழைப்பீர்.

## நீ ஒளியாகும்

நீ ஒளியாகும் என் பாதைக்கு விளக்காகும்
நீ வழியாகும் என் வாழ்வுக்கு துணையாகும்
அரணும் நீயே கோட்டையும் நீயே
அன்பனும் நீயே நண்பனும் நீயே இறைவனும் நீயே

1. நீ வரும் நாளில் அமைதி வரும்
உன் நீதியும் அருளும் சுமந்து வரும்

இருளின் இருளிலும் பயம் விலகும்
உன் கரத்தின் வலிமையால் உயர்வு வரும்
கால்களும் இடறி வீழ்வதில்லை
தாய் மனம் சுமையால் சாய்வதில்லை
**என் ஆற்றலும் வலிமையும் நீயாக - 2**

2. விடியலைத் தேடும் விழிகளிலே
புது விளக்கினை ஏற்றிடும் பேரொளி நீ
பால் நினைந்தூட்டும் தாயும் நீ
என் வாய்மொழி ஏற்றும் தாரகை நீ
அருட்கடல் கடந்திடும் ஆயனும் நீ
அகமனம் அமர்ந்தென்னை ஆள்பவன் நீ
**என் மீட்பரும் நேசரும் நீயாகும் - 2.**

## நெஞ்சமெல்லாம் கோவில் செய்தேன்

நெஞ்சமெல்லாம் கோவில் செய்தேன்
உனையழைத்தேன் நீ வா
சிந்தையெல்லாம் நொந்தழுதேன்
சொந்தமெல்லாம் நீ தானே.

1. அன்புமொழி பேசும் இன்ப முகில் ஏசு
எந்நாளும் நண்பன் நீயே
கண்ணின் மணிபோல காத்திவோனே
உன் அன்பு ஒன்றே நான் வேண்டினேன்.

2. வானின் முழு நிலவே வாழும் உயிர் சுடரே
நீயின்றி வாழ்வேதைய்யா
பாடிவரும் தென்றலில் ஆடிடும் மலராய்
உன் ஆசீர் கண்டால் மகிழ்வேனைய்யா.

## நெஞ்சத்திலே தூய்மையுண்டோ

நெஞ்சத்திலே தூய்மை உண்டோ
இயேசு வருகின்றார்
நொறுங்குண்ட நெஞ்சத்தையே
இயேசு அழைக்கின்றார்.

1. வருந்தி சுமக்கும் பாவம் - நம்மை
கொடிய இருளில் சேர்க்கும் - 2 - செய்த
பாவம் இனி போதும் - **அவர்**
**பாதம் வந்து சேரும் - 2**

2. குருதி சிந்தும் நெஞ்சம் - நம்மை
கூர்ந்து நோக்கும் கண்கள் - 2 - அங்கு
பாரும் செந்நீர் வெள்ளம் - **அவர்**
**பாதம் வந்து சேரும் - 2.**

## பொன்னான நேரம் பூந்தென்றல்

பொன்னான நேரம் பூந்தென்றல் காற்றில்
என் ஜீவ இராகம் கரைந்தோடுதே
என் இயேசு உன்னில் உறவாடும் நேரம்
என் துன்ப மேகம் கலைந்தோடுதே
உம் வாழ்வு ஒன்றே என் தேடலாகும்
உம் அன்பு ஒன்றே என் பாடலாகும்.

1. நீயில்லாத நாளெல்லாம் நிலவில்லாத வானம் நான்
உன் நினைவில்லாத வாழ்வெல்லாம் மழையில்லாத மேகம் நான்
காலம் தோறும் கண்ணின் மணிபோல் காக்கும் தெய்வமே
சுமை சுமந்து சோர்ந்த வாழ்வை தேற்றும் இறைவனே
என் இயேசுவே அபயம் நீ தரவேண்டுமே
என் இயேசுவே அருகில் நீ வரவேண்டுமே
காற்றில் ஆடும் தீபம் என்னை சிறகில் மூடுமே.

2. ஒரு கணம் என் அருகினில் நீ அமரும் போது ஒரு யுகம்
உனை தினம் நான் புகழ்கையில் எனக்குள் தோன்றும் புது யுகம்
முள்ளில் பூக்கும் ரோஜா என்னை அள்ளிப் பறிப்பதேன்
சொல்ல முடியா அன்பில் என்னைச் சூடி மகிழ்வதேன்
என் இயேசுவே என் அன்புக்கு வானம் எல்லை
என் இயேசுவே உம் அன்புக்கு எல்லை இல்லை
அன்பின் நிழலில் எந்தன் இதயம் உன் அன்பை நாடுதே.

## வசந்த இராகம் பாடுவோம்

வசந்த ராகம் பாடுவோம் - இந்த
புனிதமான விருந்தினில்
ஆனந்த கீதங்கள்
பாடிப் போற்றுவோம் நாம்

1. விண்வெளி போற்றி பாடும் - எந்தன் மன்னன் வருகையில்
காற்றும் ராகம் பாடும் - எந்தன் இதயம் எழுகையில் - (2)
கடல் அலைகள் கவி பாடும் எந்தன் மீட்பர் புகழினை
அவர் அன்பு நம்மைக் காக்கும் அவரைப் போற்றுவோம் நாம்

2. தன்னொளி வீசும் நிலவும் - எந்தன் இனிய இயேசுவே
பாய்ந்து ஓடும் நதியும் - தன்னை அழைத்த தேவனை - (2)
உறை பனியும் தென்றல் காற்றும் இன்று இணைந்து பாடுமே
அவர் வரவால் உள்ளம் இணைந்து அவரைப் போற்றுவோம் நாம்.

தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை. நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும் என்பதே என் கட்டளை. (யோவான் 15:13, 17).

## வாழ்வை அளிக்கும் வல்லவா

வாழ்வை அளிக்கும் வல்லவா
தாழ்ந்த என்னுள்ளமே
வாழ்வில் ஒளியை ஏற்றவே
எழுந்து வாருமே.

1. ஏனோ இந்தப் பாசமே
ஏழை என்னிடமே - 2
எண்ணில்லாத பாவமே
புரிந்த பாவிமேல்.

2. உலகம் யாவும் வெறுமையே
உன்னை யான் பெறும் போது - 2
உறவு என்று இல்லையே உன்
உறவு வந்ததால்.

## சக்தியானவா ஜீவநாயகா

சக்தியானவா ஜீவநாயகா
அன்பாலே வாழும் தேவா
ஆதி அந்தமாய் அருள் நீதி உண்மையாய்
என்றென்றும் வாழும் தேவா

1. மக்கள் யாவரும் அன்பில் அக்களிக்கவா
அக்களிக்கவா அன்பில் அக்களிக்கவா
அச்சம் நீங்கியே வாழ்வில் ஒத்துழைக்கவா
ஒத்துழைக்கவா வாழ்வில் ஒத்துழைக்கவா
திக்கனைத்துமே உண்மை எதிரொலிக்கவா
எதிரொலிக்கவா உண்மை எதிரொலிக்கவா
தாழ்த்திக் கொண்டவர் உள்ளம் ஊக்கமூட்டவா
ஊக்கமூட்டவா உள்ளம் ஊக்கமூட்டவா
நீதி நேர்மையில் எம்மை நானும் ஆளவே
அன்பாலே வாழும் தேவா

2. ஆணவத்தையே வென்று பணிய வைக்க வா
பணிய வைக்க வா வென்று பணிய வைக்க வா
சமத்துவத்திலே மனித மாண்புயர்த்த வா
மாண்புயர்த்த வா மனித மாண்புயர்த்த வா
வறுமை நீங்கியே வளமை மகிழ்வளிக்க வா
மகிழ்வளிக்கவா வளமை மகிழ்வளிக்க வா
யுத்தம் நீங்கியே அமைதி உதிக்கச் செய்ய வா
உதிக்கச் செய்யவா அமைதி உதிக்கச் செய்யவா
அன்பு வழியிலே எம்மை நாளும் ஆளவே
அன்பாலே வாழும் தேவா.

## சுமை சுமந்து

சுமை சுமந்து சோர்ந்திருப்போரே
வாருங்கள் நம் ஆண்டவர் அழைக்கின்றார்
இளைப்பாற்றி கொடுக்கின்றார்

1. இருகரம் விரித்தவராய்
இதயத்தை திறந்தவராய்
இறைவன் இருக்கின்றார்
இனியும் தாமதமேன்

2. வரும் வழி பார்த்தவராய்
வரம் மழை பொழிந்தவராய்
வந்தவர் இருக்கின்றார்
விரைந்திட தாமதமேன்

3. துயரினில் ஆறுதலாய்
நோயினில் மருத்துவராய்
அடிமையின் விடுதலையாய்
ஆண்டவர் இருக்கின்றார்.

## விருந்தாக வரும் தேவா

விருந்தாக வரும் தேவா விரைவாக வருவாய்
எனதாத்துமம் பசியாறவே
உன்னோடு ஒன்றாகவே.

1. சலனங்கள் வருகின்ற தருணம்
சரணம் என்றே உனைத்தேடினேன் - (2)
சிறை மீட்டு மண்ணில் நிறைவாழ்வை அளித்த
உமக்கே என் ஆராதனை - (2)
உம் திருப்பாதமே தஞ்சம் என்று
நாள்தோறும் துதிப்பேனைய்யா.

2. மனச்சோர்வு எனை வாட்டும் பொழுது
உம் வார்த்தைகள் மருந்தாகுமே - (2)
மனத்தோடு எழும் துயரங்கள் அகற்றி
மகிழ்வூட்ட வருவாயைய்யா - (2)
உன் மலர்ப்பாதமே சரணம் என்றே
சங்கீதம் இசைப்பேனைய்யா.

**ஆண்டவரின் வாக்கு நேர்மையானது; அவருடைய செயல்கள் எல்லாம் நம்பிக்கைக்கு உரியவை. அவர் நீதியையும் நேர்மையையும் விரும்புகின்றார்; அவரது பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது (தி.பா. 33:4–5).**

## நிலையில்லா உலகு

நிலையில்லா உலகு நிஜமில்லா உறவு
நிலையானதொன்றும் இங்கில்லை
நேற்று இன்றும் என்றும் மாறாத தெய்வம்
நீ மட்டும் போதும் எப்போதும்
**நீ மட்டும் போதும் நீ மட்டும் போதும்**
**நீ மட்டும் போதும் எப்போதும் - 2**

1. ஆசையிலே பிறந்து ஆணவத்தில் தொடர்ந்து
ஆடி இங்கு அடங்குது வாழ்க்கை
வாழ்வு தரும் வார்த்தை வாழ்க்கையிலே நினைத்தால்
வசந்தம் வந்து நம்மில் என்றும் தங்கும்
**நீ மட்டும் போதும் என் வாழ்வு மாறும் - 2**
நீ மட்டும் போதும் எப்போதும்


2. பொய்மையிலே பிறந்து போலியாக வளர்ந்து
பொழுதிங்கு போகுது கழிந்து
உண்மைதனை உணர்ந்து உறுதியுடன் எழுந்தால்
ஊதியங்கள் தேவையில்லை நமக்கு
**நீ மட்டும் போதும் என் வாழ்வு மாறும் - 2**
நீ மட்டும் போதும் எப்போதும்.





திரு இருதய ஆண்டவர் - அச்சங்குளம்

# திரு இருதய ஆண்டவர் ஆலயம்
## அச்சங்குளம்



அன்பியங்கள்

- திரு இருதய ஆண்டவர் அன்பியம்
- மின்னல் மாதா அன்பியம்
- ரபேல் தூதர் அன்பியம்

# 5. நன்றிப் பாடல்கள்

## அழகிய கவிதையில் பாடுவேன்

அழகிய கவிதையில் பாடிடுவேன்
அவனியில் அவர் புகழ் சாற்றிடுவேன்

1. அறிவிலி எனையே அவர் நினைத்தார்
ஆற்றல் அனைத்தும் எனக்களித்தார்
எரிந்திடும் துயரில் என்னைக் காத்தார்
எனவே அவர் என் ஆண்டவரே.

2. துன்பச் சூழல்கள் சூழ்கையிலே
துயரக் கறைகள் படர்கையிலே
அன்பின் கரத்தால் அரவணைத்தார்
ஆகவே அவர் என் ஆண்டவரே.

## அன்பர் இயேசு என்னை

அன்பர் இயேசு என்னை இன்று சொந்தமாக்கினார்
புதிய வாழ்வு பாதை தந்து புனிதமாக்கினார்
எந்தன் வாழ்விலே . . . தனிமை இல்லையே . . .
சொந்தம் யாவுமே . . . இந்த இயேசுவே . . .
அன்பிலே உறவிலே நெஞ்சம் வாழுமே.

1. அன்னையாக என்னை எங்கும் அணைத்துச் செல்கிறார்
தந்தையாக எந்த வழியும் நடத்திச் செல்கிறார்
நண்பனாக என்னை என்றும் ஏற்றுக் கொள்கிறார்
தன்னிகர் தலைவனாய் என்னை ஆளுவார் - 2.

2. அழுது வாடும் மாந்தர்களே கூடி வாருங்கள்
அன்பர் இயேசு பாதம் தன்னில் அமைதி காணுங்கள்
அவனி எங்கும் பெற்ற வாழ்வை பகிர்ந்து வாழுங்கள்
அன்பினால் என்றுமே . . . உலகை வெல்லுங்கள் - 2

## அன்பினில் துள்ளிடும் நெஞ்சம்

அன்பினில் துள்ளிடும் நெஞ்சம்
உந்தனின் இல்லிடம் தஞ்சம்
விந்தையில் உன் செயல் எண்ணி
நன்றியில் மகிழ்ந்து பாடும்
நன்றி நன்றி நன்றி என்றும் நன்றி
நன்றி நன்றி நன்றி நெஞ்சம் சொல்லும் நன்றி.

1. வாழ்வினை பிறர் வாழ்ந்திடத் தரும்
அன்பு சிறந்ததென்றாய்
சொன்னதைப் பலர் ஏற்றிட உயிர்
மண்ணில் கொடுத்துச் சென்றாய்
உன்னருள் இன்று எம் உள்ளம் சேர்ந்ததே
உன் துணை பெற்றதால் நெஞ்சம் பாடுதே.

2. இயேசு உன் வழி ஏகிட வரும்
நெஞ்சில் சோகமில்லை
பேசும் உன் மொழி கேட்டபின் எனில்
அச்சம் ஏதும் இல்லை
உன் வழி அன்புடன் என்னைக் கண்டதே
உன்னிலே கலந்ததே என் நெஞ்சமே.

## ஆயிரம் துதிப்பாடல்

ஆயிரம் துதிப் பாடல் - எந்தன்
நாவினில் அசைந்தாடும்
ஆனந்தம் ஆனந்தம் என் மனதில்
**ஆண்டவா உனைப்பாட - 2**

1. வான்முகிலும் உயர் மலையும் உந்தன் புகழ்பாட
தேன் மொழியும் நறுமலர்கள் உன்பெயர் சுவைபாட - 2
வான் பொழியும் நீர்த்துளிகள் உந்தன் அருள்பாட
நான் உனது திருப்புகழை கவியால் நிதம்பாட.

2. பகல் ஒளியும் பால் நிலவும் ஒளியாம் உனைப்பாட
அலைகடலும் அதன் சிறப்பும் கருணையின் விதம் பாட - 2
மழலைகளின் தேன்மொழிகள் தூய்மையின் நிறம்பாட
நான் உனது திருப்புகழை கவியால் நிதம்பாட.

## இதுவரை செய்த செயல்களுக்காக

இதுவரை செய்த செயல்களுக்காக
இறைவா உமக்கு நன்றி

1. உவர் நிலமாக இருந்த என்னை
விளை நிலமாக மாற்றிய உன்னை
**அலைகடல் அலைந்து ஓய்கின்ற வரையில் - 2**
**நாவினால் புகழ்ந்து பாடுவேன் நன்றி - 2**

2. தனி மரமாக வளர்ந்த் என்னை
பழமரமாக சிறப்பித்த உன்னை
**திசைகளும் கோள்களும் அசைகின்ற வரையில் - 2**
**இன்னிசை முழங்கியே பாடுவேன் நன்றி - 2**

## இறைவன் படைத்த நளிதே

இறைவன் படைத்த நாளிதே
நன்றி நன்றி பாடுவோம்
இதயம் மகிழும் நாளிதே
நன்றி நன்றி பாடுவோம்
**நன்றி இறைவா - 4**

1. வானம் பூமி யாவுமே நன்றி கூறட்டும்
வாழும் உயிர்கள் இயேசுவை வணங்கி மகிழட்டும்
இதயம் இன்று இனிய கீதம் பாடட்டும் - 2
இறைவன் இயேசு என்றும் நம்மைக் காப்பதால்.
**நன்றி இறைவா - 4**

2. கவலை யாவும் மறைந்தது கலக்கமில்லையே
காலமெல்லாம் கர்த்தர் இயேசு நம்மோடு உள்ளார்
புதிய வானம் புதிய பூமி **தந்திட - 2**
புதிய பயணம் புவியில் இன்று தொடங்குவோம்
**நன்றி இறைவா - 4.**

## இயேசு இரட்சகர் பெயரை

இயேசு இரட்சகர் பெயரைச் சொன்னால்
எதுவும் நடக்குமே - அவர்
இதயத்தோடு கலந்துவிட்டால்
எல்லாம் கிடைக்குமே எல்லாம் கிடைக்குமே

1. வாடிக்கிடந்த உயிர்களெல்லாம் வாழ வைத்தாரே - அவர்
வாழ்வு சத்யம் ஜீவனுமாய் நன்மை செய்தாரே
2. பரமபிதா ஒருவர் என்று வகுத்துச் சொன்னவர் - இயேசு
பாசம் அன்பு கருணையோடு உலகைக் கண்டவர் இயேசு.

## இயேசுவின் இருதயமே

இயேசுவின் இருதயமே - என்றும்
எரிந்திடும் அருள்மயமே - உந்தன்
ஆசியும் அருளும் சேர்ந்து வந்தால் - எங்கள்
ஆனந்தம் நிலைபெறுமே.

1. இறைவனுக்கிதயம் உண்டு - அந்த
இதயத்தில் இரக்கம் உண்டு - என்றும்
இரங்கிடும் இறைவன் இருப்பதனால் - எங்கள்
அனைவர்க்கும் வாழ்வு உண்டு.
2. பாவிக்குப் பொறுத்தலுண்டு - அந்த
பரலோக வாழ்வு உண்டு - நாங்கள்
கூவிடும் குரலைக் கேட்பதற்கு - இந்த
கோயிலில் தெய்வம் உண்டு.

## இயேசுவின் நாமம் இனிதான நாமம்

இயேசுவின் நாமம் இனிதான நாமம்
இணையில்லா நாமம் இன்ப நாமம்

பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும்
பரம சந்தோஷம் பக்தருக்களிக்கும்

பரிமள தைலமாம் இயேசுவின் நாமம்
பார் எங்கும் வாசனை வீசிடும் நாமம்

வானிலும் பூவிலும் மேலான நாமம்
வானாதி வானவர் இயேசுவின் நாமம்

## இயேசுவின் பின்னால்

இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்
திரும்பிப் பார்க்கமாட்டேன் - 2
சிலுவையே முன்னால் உலகமே பின்னால்
இயேசு சிந்திய குருதியினாலே விடுதலை அடைந்தேனே

அச்சமும் இல்லை அதிர்ச்சியும் இல்லை
அடியேன் உள்ளத்திலே
ஆண்டவர் இயேசு அடைக்கலப் பாறை
ஆதலின் குறையில்லை
**ஆண்டவர் முன்னால் அகிலமே பின்னால் - 2**
அன்பர் இயேசுவின் வார்த்தையினாலே
விடுதலை அடைந்தேனே.

தாயும் அவரே தந்தையும் அவரே
தரணியில் நமக்கெல்லாம்
சேயர்கள் நம்மை செவ்வழி நடத்தும்
ஆயனும் அவரன்றோ
**ஆயனே முன்னால் அலகையே பின்னால் - 2**
அழைக்கும் இயேசுவின் அன்பு மொழியிலே
ஆறுதல் அடைந்தேனே.

## இந்த நாள்வரை எந்தன்

இந்த நாள்வரை எந்தன் வாழ்வினில்
எத்தனை நன்மைகள் நெஞ்சில் நினைந்து
அன்பு இராகத்தில் சந்தம் பூட்டியே
நன்றியாகவே தந்தேன் என் வாழ்வையே - 2
**நன்றி நாதா நன்மை நாயகா**
**நன்றியாக்கினேன் தந்த வாழ்வினை - 2.**

1. சுமைகளால் வீழும் என் வாழ்வில் - உன்
சுமந்திடும் தோள்களே தோழன்
இமையெனக் காக்கும் உன்கருணை - எனை
இமையெனத் தாங்கிடும் அரணாய்
உந்தன் தோழமை தரும் நிறைவில்
எந்தன் வாழ்வினில் அர்த்தம் காண்கிறேன்
**நன்றி நாதா நன்மை நாயகா**
**நன்றியாக்கினேன் தந்த வாழ்வினை - 2**

2. தடைகளால் முடங்கிடும் வேளையில் - உன்
தாங்கிடும் கரங்களே கால்கள்
நியாயங்கள் வீழ்ந்திடும் பொழுதில் - உன்
நியமங்கள் எழுந்திடும் கனலாய்
நீதி பாதையில் நாளும் நடந்தால் நீயும்
உடன் வந்து என்னில் வாழ்கிறாய்
**நன்றி நாதா . . . .**

## உம்மைப் போற்றுகின்றோம்

உம்மைப் போற்றுகின்றோம்
உம்மைப் புகழுகின்றோம்
நன்றி கூறுகின்றோம்

1. இறைவா உம் திருப்பெயர் மேலானது
இறைவா உம் திருப்புகழ் மேலானது

2. இறைவா உம் மாட்சிமை மேலானது
இறைவா உம் மகத்துவம் மேலானது

3. இறைவா உம் வல்லமை மேலானது
இறைவா உம் வார்த்தைகள் மேலானது

4. இறைவா உமதன்பே மேலானது
இறைவா உமதருளே மேலானது

## உம் புகழை பாடுவது

உம் புகழை பாடுவது என் வாழ்வின் இன்பமைய்யா
உன் அருளை போற்றுவது என் வாழ்வின் செல்வமைய்யா

1. துன்பத்திலும் இன்பத்திலும் - நல்
தந்தையாய் நீ இருப்பாய்
கண்ணயரக் காத்திருக்கும் - நல்
அன்னையாய் அருகிருப்பாய்
அன்பு என்னும் அமுதத்தினை நான்

அருந்திட எனக்களிப்பாய்
உன் நின்று பிரியாமல்
**நீ என்றும் அணைத்திருப்பாய் - 2**

பல்லுயிரைப் படைத்திருப்பாய் - நீ
என்னையும் ஏன் படைத்தாய்
பாவத்திலே வாழ்ந்திருந்தும் - நீ
என்னையும் ஏன் அழைத்தாய்
அன்பினுக்கு அடைக்கும் தாழ்
ஒன்று இல்லை என்றுணர்ந்தேன்
உன் அன்பை மறவாமல்
**நான் என்றும் வாழ்ந்திருப்பேன் - 2**

## உலகிற்கு ஒளியாய் உயிருக்கு

உலகிற்கு ஒளியாய் உயிருக்கு வழியாய்
வழங்கிடும் உமக்கே இறைவா
நன்றி நன்றி இறைவா நன்றி
நன்றி கூறுகின்றோம்.

இயேசுவின் குரலை இதயத்தில் கொண்டு
இணையில்லாப் பலியில் இறைவனை உண்டு - 2
சென்றிடும் வழியில் சொல்லிடும் மொழியில் - ஆ . . . - 2
நின்றிட அழைத்தோம் நிற்பாய் தினமும்.

உண்மை வழியை உலகுக்குக் காட்ட
உலகத்தை அன்பால் ஒன்றாய்த் திரட்ட - 2
அக இருள் அகற்றி இறையருள் புகுத்த - ஆ . . . -2
அன்புடன் அளித்தோம் எம்மையே உமக்கு.

## என்னிடம் எழுந்த இயேசுவே

என்னிடம் எழுந்த இயேசுவே உமக்கு
அன்பு ஆராதனை நன்றியும் என்றும்.

பரலோக வாசிகள் அருமையாய் உம்மை
புகழ்ந்து கொண்டாடிட புவியிலே இந்த
நீசனாம் என்னிடம் எழுந்ததும் ஏனோ
நேசமும் அதிசய இரக்கமும் அல்லோ.

ஆசீர் அருளும் என்தாய் தந்தை சோதரர்
சோதரி நண்பர் சுற்றமெல்லோர்க்கும்
பேருதவி செய்வோர் பகைமையில் உழல்வோர்
பாவிகள் மரித்தோர் திருச்சபையோர்க்கும்.

## எத்துணை நன்று

எத்துணை நன்று எத்துணை நன்று
அத்தனை பேரும் ஒன்றி வாழ்வது
எத்துணை நன்று - 2

1. ஒரு கொடிக் கிளையாய் நாமிருக்கின்றோம்
எத்துணை நன்று - அந்த
ஒரே திருச்சபையில் நாமிருக்கின்றோம்
எத்துணை நன்று - அங்கு
ஒரே குடும்பமாய் நாமிருக்கின்றோம்
எத்துணை நன்று - இன்று
ஒரேவித அழைப்பை நாம் பெற்றுக்கொண்டோம்
எத்துணை நன்று

2. புதியதோர் உலகம் கண்டிடுவோம்
எத்துணை நன்று - இதில்
புதுமை வாழ்வை அடைந்திடுவோம்
எத்துணை நன்று - என்றும்
பிரிவினை எல்லாம் தீர்த்திடுவோம்
எத்துணை நன்று - என்றும்
இறைவனில் ஒன்றாய் வாழ்ந்திடுவோம்
எத்துணை நன்று.

## எந்தன் நாவில் புதுப்பாடல்

எந்தன் நாவில் புதுப்பாடல்
எந்தன் இயேசு தருகிறார் - 2
ஆனந்தம் கொள்ளுவேன்
அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில்
அல்லேலூயா - 2 - எந்தன்

1. பாவ இருள் என்னை வந்து
சூழ்ந்து கொள்கையில்
தேவன் அவர் தீபமாய் என்னைத்
தேற்றினார் - ஆனந்தம்

2. வாதை நோயும் வந்தபோது
வேண்டல் கேட்டிட்டார்
பாதை காட்டி துன்பமெல்லாம்
நீக்கி மீட்டிட்டார் - ஆன்ந்தம்

## எத்தனை நன்மைகள்

எத்தனை நன்மைகள் எனக்குச் செய்தீர்
எப்படி நன்றி சொல்வேன் நான் - 2
நன்றி ராஜா - நன்றி ராஜா - 2

1. தாழ்மையில் இருந்தேன் தயவுடன் நினைத்தீர்
தேவனே உம்மைத் துதிப்பேன் - 2

2. பெலவீனன் என்று தள்ளிவிடாமல்
பெலத்தால் இடைக்கட்டினீர் - 2

3. பாவத்தினாலே மரித்துப் போய் இருந்தேன்
கிருபையால் இரட்சித்தீரே - 2

4. எனக்காக மரித்தீர் எனக்காக உயிர்த்தீர்
எனக்காய் மீண்டும் வருவீர் - 2

5. கரங்களைப் பிடித்து கண்மணி போல
காலமெல்லாம் காத்தீர் - 2

## எல்லாம் உமக்காக

எல்லாம் உமக்காக
இயேசுவின் தூய இருதயமே

1. எந்தன் சிந்தனை சொல் அனைத்தும்
எந்தன் செயல்கள் ஒவ்வொன்றும்
எந்தன் உடல்பொருள் ஆவி முற்றும்
உன் புகழ் அதிமிக மகிமைக்கே

2. ஒளியை நோக்கா மலரில்லை
நீரைத் தேடா வேரில்லை
உன் புகழ் நாடா வாழ்வனைத்தும்
வாழ்வில்லை அதில் பயனில்லை.

## என்ன சொல்லி பாடுவேன்

என்ன சொல்லிப் பாடுவேன் என்ன சொல்லிப் போற்றுவேன்
எனக்குச் செய்த நன்மை எண்ணியே - 2
என்ன சொல்லிப் பாடியும் என்ன சொல்லிப் போற்றியும்
ஈடு இணை உமக்கு இல்லையே - அய்யா
ஈடு இணை உமக்கு இல்லையே
நன்றி தந்தையே நன்றி இயேசுவே
வழி நடத்தும் தூய ஆவியே - 4

1. கண்ணீர் துடைத்ததைச் சொல்லிப் பாடவா
கவலையில் அணைத்ததைச் சொல்லிப் பாடவா

வீழ்ந்தேன் தூக்கியதைச் சொல்லிப் பாடவா
சாய்ந்தேன் தாங்கியதைச் சொல்லிப் பாடவா - நன்றி

2. வாழ்வைத் தந்ததைச் சொல்லிப் பாடவா
வளமை நிறைந்ததைச் சொல்லிப் பாடவா
ஊக்கம் தந்ததைச் சொல்லிப் பாடவா
உறுதி செய்ததைச் சொல்லிப் பாடவா - நன்றி.

## ஒரு கோடி பாடல்கள்

ஒரு கோடி பாடல்கள் நான் பாடுவேன் - அதை
பாமாலையாக நான் சூடுவேன்
உலகெல்லாம் நற்செய்தி நானாகுவேன் - உந்தன்
புகழ்பாடி புகழ்பாடி நான் வாழுவேன்

1. மணவீனை தனை இன்று நீ மீட்டினாய்
அதில் மலர்ப்பாக்கள் பலகோடி உருவாக்கினாய்
என் வாழ்வும் ஒரு பாடல் இசை வேந்தனே - அதில்
எழும் இராகம் எல்லாம் உன் புகழ் பாடுதே
ஆதியும் நீயே அந்தமும் நீயே
பாடுகிறேன் உனை இயேசுவே
அன்னையும் நீயே தந்தையும் நீயே
போற்றுகிறேன் உனை இயேசுவே

2. இளங்காலைப் பொழுதுந்தன் புகழ் பாடுதே
அங்கு விரிகின்ற மலர் உந்தன் புகழ் பாடுதே
அலை ஓயாக் கடல் உந்தன் கருணை மனம் - வந்து
கரை சேரும் நுரை யாவும் கவிதைச் சரம்
ஆதியும் நீயே ...

## ஒவ்வொரு மனிதனும்

ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன் என் சகோதரன்

1. வறுமையில் வாழ்பவன் என் நண்பன்
வருத்தத்தில் இருப்பவன் சகோதரன்
அல்லல் படுபவன் என் நண்பன்
ஆபத்தில் இருப்பவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்

2. பிறர்குலம் சேர்ந்தாலும் என் நண்பன்
பிற இனம் வாழ்ந்தாலும் சகோதரன்

பிறமொழி பேசினாலும் என் நண்பன்
பிறமதம் சார்ந்தாலும் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்

அழகை இழந்தவன் என் நண்பன்
அறிவை இழந்தவன் சகோதரன்
ஊனமாய் இருப்பவன் என் நண்பன்
ஊமையாய் பிறந்தவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்

## கிறிஸ்துவின் ஆத்துமமே

கிறிஸ்துவின் ஆத்மமே என்னை அர்ச்சியும்
கிறிஸ்துவின் தேகமே என்னை இரட்சியும்
கிறிஸ்துவின் இரத்தமே என்னை பூர்ப்பியும்
திருவிலாத் தீர்த்தமே என்னை தூய்ப்பியும்

கிறிஸ்துவின் பாடுகள் என்னைத் தேற்றிட
அருள்நிறை இயேசுவே என்னைக் கேட்டிடும்
அரிய காயங்களுள் என்னை வைத்திடும்
பிரிந்திடா வண்ணமாய் என்றும் கட்டிடும்

பொருது சத்ருவிடம் நின்றே காத்திடும்
மரண வேளையிலே என்னைக் கூப்பிடும்
பரகதியில் நிதம் உம்மை வாழ்த்தவே
வருகவென்றன்போடு என்னை ஏவிடும்.

## சந்தோஷம் பொங்குதே

தோஷம் பொங்குதே - 2
தோஷம் என்னில் பொங்குதே - அல்லேலூயா
யேசு என்னை இரட்சித்தார்
றும் என்னை மாற்றினார்
தோஷம் என்னில் பொங்குதே

வழிதப்பி நான் திரிந்தேன் - பாவப்
பழியதை சுமந்தலைந்தேன்
அவர் அன்புக் குரலே அழைத்தது என்னையே
அந்த இன்ப நாளில் எந்தன் பாவம் நீங்கிற்றே.

சாத்தான் சோதித்திட - தேவன்
காத்திட உடன் வருவார்
அன்பர் இயேசு கைவிடார் தானாய் வந்து இரட்சிப்பார்
இந்த நல்ல இயேசு எந்தன் சொந்தமானாரே.

## நன்றிகள் பல கூறி நாம் பாடுவோம்

நன்றிகள் பல கூறி நாம் பாடுவோம்
நாளும் நமைக் காக்கும் இறை இயேசுவை
அல்லும் பகலிலும் செல்லும் இடமெங்கும்
**அன்னையாய் தந்தையாய்**
**அருகில் இருந்து அணைக்கும் தெய்வமே**

1. கருவினிலே தேர்ந்து என்னைக் கருத்தினிலே வைத்து நாளும்
கடைக்கண் கொண்டு கனிவாய்ப் பார்த்திட்டாய்
அழைப்பினில் அடிபணிய ஆற்றலும் அளித்திட்டாய்
அன்பினில் நாளுமே மூழ்கிடச் செய்திட்டாய்
**அன்னையாய் . . . .**

2. உந்தன் அரசு எங்கும் பரவ உரிமைக் குரலாய் வறியோர் வாழ்வில்
ஒளியேற்ற ஊக்கம் தந்திட்டாய்
இமைத்திடும் பொழுதெல்லாம் நீங்கா துறைகின்றாய்
இணையில்லா உமதன்பை அருவியாய் அளிக்கின்றாய்
**அன்னையாய் . . . .**

## நன்றியால் துதிபாடு

நன்றியால் துதி பாடு - நம் இயேசுவை
உள்ளத்தால் என்றும் பாடு
வல்லவர் நல்லவர் போதுமானவர்
வார்த்தையில் உண்மையுள்ளவர்

1. எரிக்கோ மதிலும் முன்னே வந்தாலும்
இயேசு உந்தன் முன்னே செல்கிறார்
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்து விழும்

2. செங்கடல் நம்மைச் சூழ்ந்து கொண்டாலும்
சிலுவையின் நிழலுண்டு
பாடிடுவோம் துதித்திடுவோம்
பாதைகள் கிடைத்துவிடும்

3. கோலியாத் நம்மை எதிர்த்து வந்தாலும்
கொஞ்சமும் பயம் வேண்டாம்
இயேசு என்னும் நாமம் உண்டு
இன்றே ஜெயித்திடுவோம்.

நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கிறார். நானும் தந்தையை அறிந்திருக்கிறேன். அதுபோல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன். என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக என் உயிரைக்கொடுக்கிறேன். (யோவான் 10:14-15)

## நன்றி பாடுவேன் இனிய இயேசுவே

நன்றி பாடுவேன் இனிய இயேசுவே
வாழும் நாளெல்லாம் போற்றி பாடுவேன்
என்னைத் தேடியே வந்த தெய்வமே
என்றும் உன்னையே வாழ்த்திப் பாடுவேன்
நன்றி நன்றி நன்றி இயேசுவே - (2)

1. உயிரைத் தந்ததால் உருவம் தந்ததால்
உறவைத் தந்ததால் நன்றி இயேசுவே
வாழ்வைத் தந்ததால் வளமும் தந்ததால்
வாழ வைத்ததால் நன்றி இயேசுவே
உந்தன் அன்பை என்றும் பெறுவதால்
உன்னில் என்னை இணையச் செய்வதால் (2)
உந்தன் பாதையில் எந்தன் பாதங்கள்
வழிநடக்க ஆசீர் தந்ததால் (நன்றி நன்றி . . .)

## நீ செய்த நன்மை நினைக்கிறேன்

நீ செய்த நன்மை நினைக்கிறேன் - என்
நெஞ்சுருக நன்றி சொல்கின்றேன் இறைவா - 4

1. உண்டிட உணவும் உடையுமே கொடுத்து
ஒரு குறைவின்றிக் காத்து வந்தாய் - ஒரு
அன்னையைப் போலவே அன்பினைப் பொழிந்து
அல்லல்கள் யாவையும் தீர்த்து வைத்தாய் - 2

2. பயிருக்கு பதிலாய் களையெங்கும் தோன்றி
மனத்தினை நிரப்புதல் பார்த்திருந்தாய் (2) - உடன்
உலரட்டும் என்றே ஒதுக்கிவிடாமல்
களைகளை அகற்றி காத்திருந்தாய்.

## மகிழ்வோம் மகிழ்வோம் தினம்

மகிழ்வோம் மகிழ்வோம் - தினம்
அகமகிழ்வோம்
யேசுராஜன் நம் சொந்தமாயினார்
இந்த பாதளத்தில் சொந்தக்காரரவர்
எந்தன் உள்ளத்தில் சொந்தமானார்
ஆ - ஆ . . ஆனந்தமே பரமானந்தமே - இது
மாபெரும் பாக்கியமே - இந்தப் பாதளத்தில் . . .

1. சின்னஞ்சிறு வயதில் என்னைக் குறித்துவிட்டார்
தூரப் போயினும் கண்டு கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
ஜீவன் பெற்றுக்கொள் என்றுரைத்தார் - ஆ . . ஆ . . .

2. எந்த சூழ்நிலையிலும் அவர் அன்பினின்று
என்னைப் பிரிக்காது காத்துக்கொள்வார்
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும் வரை காத்துக்கொள்வேன் - ஆ . . ஆ . .

## மலர் சொல்லும் நன்றி

மலர் சொல்லும் நன்றி தேனாகுமே
வான் சொல்லும் நன்றி மழையாகுமே
நிலம் சொல்லும் நன்றி பயிராகுமே
நீர் சொல்லும் நன்றி வளமாகுமே
நீ சொல்லும் நன்றி என்ன
நெஞ்சே நீ சொல்லும் நன்றி என்ன? - 2

1. ஆண்டவர் வாழும் ஆலயமாவேன்
அன்பென்னும் தீபம் ஏற்றிவைப்பேன்
யான் எனதென்றும் ஆணவம் வெல்வேன்
யாவர்க்கும் நற்செய்தி நான் சொல்வேன் - நீ

2. மரம் சொல்லும் நன்றி நிழலாகுமே
மணி சொல்லும் நன்றி ஒலியாகுமே
கரம் சொல்லும் நன்றி உழைப்பாகுமே
கடல் சொல்லும் நன்றி அலையாகுமே. - நீ



# 6. திருப்பலி பொதுப் பாடல்கள்

## ஆண்டவரே ஈசோப் புல்லினால்

ஆண்டவரே ஈசோப்புல்லினால் என்மேல் தெளிப்பீர்
நானும் தூய்மை ஆவேன்
நீரே என்னைக் கழுவ
நானும் உரைபனி தனிலும் வெண்மையாவேன்

இறைவா! உமது இரக்கப் பெருக்கத்திற்கேற்ப
என்மேல் இரக்கம் கொள்ளுவீர்
பிதாவும் சுதனும் தூய ஆவியும்
துதியும் புகழும் ஒன்றாய்ப் பெருக
ஆதியில் இருந்ததுபோல்
இன்றும் என்றும் நித்தியமாகவும் - ஆமென்.

## தேவாலய வலப்புறமிருந்து

தேவாலய வலப்புறமிருந்து
தண்ணீர் புறப்படக் கண்டேன் - அல்லேலூயா
அந்தத் தண்ணீர் யாரிடம் வந்ததோ
அவர்கள் யாவருமே ஈடேற்றம் பெற்றுக் கூறுவர்
**அல்லேலூயா - 3**

ஆண்டவரைப் புகழுங்கள் ஏனெனில் அவர் நல்லவர்
அவரது இரக்கம் என்றென்றும் உள்ளது
பிதாவும் சுதனும் தூய ஆவியும்
துதியும் புகழும் ஒன்றாய்ப் பெருக
ஆதியில் இருந்ததுபோல்
இன்றும் என்றும் நித்தியமாகவும் - ஆமென்.

## உன்னதங்களிலே இறைவனுக்கு

உன்னதங்களிலே இறைவனுக்கு மாட்சிமை உண்டாகுக
உலகினிலே நல் மனத்தவர்க்கு அமைதியும் உண்டாகுக
புகழ்கின்றோம் யாம் உம்மையே
வாழ்த்துகின்றோம் - இறைவனே
உமக்கு ஆராதனை புரிந்து உம்மை
மகிமைப்படுத்துகின்றோம் யாம்

உமது மேலாம் மாட்சிமைக்காக
உமக்கு நன்றி நவில்கின்றோம்
ஆண்டவராம் எம் இறைவனே
இணையில்லா விண்ணரசே!
ஆற்றல் அனைத்தும் கொண்டு இலங்கும்
தேவ தந்தை இறைவனே
ஏக மகனாக ஜெனித்த ஆண்டவர்
இயேசு கிறிஸ்து இறைவனே!

ஆண்டவராம் எம் இறைவனே
இறைவனின் திரு செம்மறியே
தந்தையினின்று நித்தியமாக ஜெனித்த
இறைவன் மகனே நீர்
உலகின் பாவம் போக்குபவரே
நீர் எம்மீது இரங்குவீர்
உலகின் பாவம் போக்குபவரே
எம்மன்றாட்டை ஏற்றருள்வீர்

தந்தையின் வலத்தில் வீற்றிருப்பவரே
நீர் எம்மீது இரங்குவீர்
ஏனெனின் இயேசு கிறிஸ்துவே
நீர் ஒருவரே தூயவர்
நீர் ஒருவரே ஆண்டவர்
நீர் ஒருவரே உன்னதர்
பரிசுத்த ஆவியுடன் தந்தை இறைவனின்
மாட்சியில் உள்ளவர் நீரே - ஆமென்.

## உன்னதங்களிலே இறைவனுக்கு (புது மெட்டு)

உன்னதங்களிலே இறைவனுக்கு மாட்சிமை உண்டாகுக
உலகினிலே நல் மனத்தவர்க்கு அமைதியும் ஆகுக
புகழுகின்றோம் போற்றுகின்றோம்
பாடுகின்றோம் இறைவனே
வாழ்த்துகிறோம் வணங்குகிறோம்
வழிபடுகின்றோம் தெய்வமே
ஆராதனை - (3) புரிந்து
மகிமைப்படுத்துகின்றோம் யாம் - 2

உமது மேலாம் மாட்சிமைக்காக
உமக்கு நன்றி நவில்கின்றோம்
ஆண்டவராம் எம் இறைவனே
இணையில்லாத விண்ணரசே
ஆற்றல்மிகு வல்லவரே தந்தையே இறைவனே

ஆண்டவரே இறைமகனே இயேசு கிறிஸ்து தெய்வமே
செம்மறியே - (3) இறை
தந்தையினின்று ஜெனித்தவர் நீர் - 2

உலகின் பாவம் போக்குபவரே
நீர் எம்மீது இறங்குவீர்
உலகின் பாவம் போக்குபவரே
எம்மன்றாட்டை ஏற்றருள்வீர்
தந்தையிடம் வலப்புறத்தில்
வீற்றிருக்கும் மீட்பரே
இறங்குமைய்யா எம்மீது
இயேசு கிறிஸ்து தெய்வமே
தூயவர் - (3) - ஐயா
நீர் ஒருவரே ஆண்டவர்
நீர் ஒருவரே உன்னதர்
பரிசுத்த ஆவியுடன் தந்தை இறைவனின்
மாட்சியில் உள்ளவர் நீரே
ஆ .. ஆ .. ஆ ... ஆ .. ஆ .. ஆமென்.

## *வானமும் பூமியும் படைத்தவராம்*

1. வானமும் பூமியும் படைத்தவராம்
கடவுள் ஒருவர் இருக்கின்றார்
தந்தை மகன் தூய ஆவியுமாய்
தன்னில் உறவுடன் வாழ்கின்றார்

2. பரிசுத்த ஆவியின் வல்லமையால்
இறைமகன் மரியிடம் மனுவானார்
மனிதரைப் புனிதராய் மாற்றிடவே
புனிதராம் கடவுள் மனிதரானார்

3. பிலாத்துவின் ஆட்சியில் பாடுபட்டார்
கல்லறை ஒன்றில் அடக்கப்பட்டார்
மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்
மரணத்தின் மீதே வெற்றி கொண்டார்

4. பரலோகம் வாழும் தந்தையிடம்
அரியணை கொண்டு இருக்கின்றார்
உலகம் முடியும் காலத்திலே
நடுவராய் திரும்பவும் வந்திடுவார்

5. பரிசுத்த ஆவியை நம்புகிறோம்
பாரினில் அவர் துணை வேண்டிடுவோம்
பாவ மன்னிப்பில் தூய்மை பெற்று
பரிகார வாழ்வில் இணைந்திடுவோம்

6. திருச்சபை உரைப்பதை நம்புகிறோம்
புனிதர்கள் உறவை நம்புகிறோம்
உடலின் உயிர்ப்பை மறு வாழ்வை
விசுவாசப் பொருளாய் நம்புகிறோம்.

## வானமும் பூமியும் படைத்தாளும்

1. வானமும் பூமியும் படைத்தாளும் இறைவனை
விசுவசிக்கின்றேன்
தந்தையின் ஒரே மைந்தனாம் இயேசுவை
விசுவசிக்கின்றேன்

2. இவர் தூய ஆவியால் மரியிடம் பிறந்ததை
விசுவசிக்கின்றேன்
பிலாத்துவின் ஆட்சியில் சிலுவையில் மரித்ததை
விசுவசிக்கின்றேன்

3. பாதாளம் இறங்கி மூன்றாம் நாள் உயிர்த்ததை
விசுவசிக்கின்றேன்
நாற்பதாம் நாளில் விண்ணகம் சென்றதை
விசுவசிக்கின்றேன்

4. தந்தையின் வலப்பக்கம் அமர்ந்து ஆள்வதை
விசுவசிக்கின்றேன்
வாழ்வோர் இறந்தோரை நடுத்தீர்க்க வருவோரை
விசுவசிக்கின்றேன்

5. உள்ளுயிர் தந்து தேற்றிடும் ஆவியை
விசுவசிக்கின்றேன்
தூய கத்தோலிக்க திருச்சபை தன்னையும்
விசுவசிக்கின்றேன்

6. புனிதர் அனைவரின் உன்னத உறவை
விசுவசிக்கின்றேன்
பாவ மன்னிப்பின் ஞானஸ்நானத்தை
விசுவசிக்கின்றேன்

7. இறுதி நாளில் அனைவரும் உயிர்ப்பதை
விசுவசிக்கின்றேன்
இறைவன் அளிக்கும் முடிவில்லா வாழ்வினை
விசுவசிக்கின்றேன்

## இறைவா உம்மைப் போற்றுகிறோம்

இறைவா உம்மைப் போற்றுகிறோம்
நீர் ஒருவரே என்று நம்புகிறோம்
இல்லாமைதனில் இருந்து இன்றுள்ள
எல்லாம் படைத்ததை நம்புகின்றோம்
கடவுளின் திருமகன் இயேசு உலகினை
மீட்க வந்தார் என நம்புகின்றோம்
கன்னிமரியிடம் தூய ஆவியால்
கர்த்தர் பிறந்ததை நம்புகின்றோம்
பாடுகள் ஏற்று சிலுவையில் மாண்டு
மண்ணில் மறைந்ததை நம்புகின்றோம்
பாவத்தை வென்றது போலவர் சாவினை
வென்று உயிர்த்ததை நம்புகின்றோம்
வானகம் சென்ற வல்ல நம் தந்தையின்
வலப்புறம் திகழ்வதை நம்புகின்றோம்
வாழ்வோர் இறந்தோர் யாவருக்கும் இறுதியில்
தீர்ப்புரைப்பார் என நம்புகின்றோம்
அருள்நிறை ஆவியை ஒன்றிப்பின் ஆவியை
ஆற்றலின் ஆவியை நம்புகின்றோம்
இறைமகன் உலகிற்கு மீட்பை வழங்கிய
திருச்சபை அமைந்ததை நம்புகின்றோம்
இறைவனுக்குகந்தவர் புனிதர்களோடு எம்
உறவுகள் மங்களம் நம்புகின்றோம்
நரிசென்னும் பாவத்தில் உழல்வதை விடுவிக்கும்
பாவமன்னிப்பை நம்புகின்றோம்
கர்த்தரின் வழியில் உலகின் இறுதியில்
உயிர்த் தெழுவோமென நம்புகின்றோம்
நற்செயல் பரிசு விண்ணரசதுபோல்
தீமைக்கு நரகம் நம்புகின்றோம்

# 7. பரலோகத்தில் . . .

## அப்பா பிதாவே

அப்பா பிதாவே (3) பிதாவே

1. உம் தூய நாமம் வாழ்கவே
உம் தூய அரசு வருகவே
உம் அன்பு எம்மில் பெருகவே
உம் பண்பு எம்மில் வளரவே

2. விண்ணகவாசிகள் வாழ்வது போல்
மண்ணக மாந்தரும் வாழ்ந்திடுக
உம் சித்தம் எம்மில் நிறைவேறுக
உம் திட்டம் எம்மில் பலன் தருக.

3. அன்றாட உணவை தந்தருளும்
ஆவியை என்மேல் பொழிந்தருளும்
உம் திருவாக்கை நல் உணவாக
உண்டு மகிழவே செய்தருளும்

4. பிறர் குற்றம் நாங்கள் பொறுப்பது போல
என் குற்றம் நீரே பொறுத்தருளும்
சோதனை நின்று நீர் காத்தருளும்
சோதிக்கும் சாத்தானை விரட்டிவிடும்.

## வானிலே அரசு கொண்ட

வானிலே அரசு கொண்ட
வடிவுடை எங்கள் தந்தாய்
மண்ணிலே உமது நாமம்
மாபெரும் புனிதம் போற்றி

1. விண்ணுடை உமது ஆட்சி
விரைந்திங்கு வருதல் வேண்டும்
அண்ணலே உமது உள்ளம்
மானிடம் விளங்கும் வண்ணம்
மண்ணிலே விளங்க வேண்டும்
மைந்தர்கள் இறைஞ்சுகின்றோம்

2. உலகினில் எமக்கு நாளும்
உணவினை அளித்தல் வேண்டும்
விலங்கையும் பகல்வர் தம்மை
என் உள்ளம் பொருத்தலைப் போல்

நலமில்லா குறையில்லா செய்தாய்
நாடினைப் பொருத்தல் வேண்டும்

சோதனை துன்பம் எம்மை
தொடரா காவல் கொள்வீர்
துயர் தரும் மனதை மாற்றி
தொடர்ந்தெம்மை மனம் மாற்றும்
அவரிடமிருந்து எம்மை
ஆண்டவா காப்பாய் போற்றி.

## உன்னதத்தில் வீற்றிருக்கும்

உன்னதத்தில் வீற்றிருக்கும் எங்கள் அன்புத் தந்தையே
உம் தூய நாமம் போற்றப்படுவதாக.
உமது அரசு எங்கும் அமைவதாக

விண்ணுலகில் உமது சித்தம் செயல்படுவதுபோல - இப்
பூவுலகிலும் செய்யப்படுவதாக
நீர் எமக்கு அருளுகின்ற அனுதின உணவை
என்றும் எமக்கு அளித்தருள்வீராக - (உன்னதத்தில் . .)

எமக்கு தீமை செய்தவரை யாம் பொறுப்பது போல - எம்
பாவங்களைப் பொறுத்தருள்வீராக
சோதனையில் எங்களை விழவிடாது தந்தையே
தீமை நீக்கி காத்தருள்வீராக - (உன்னதத்தில் . .)

## பரலோகத்தில் இருக்கும்

பரலோகத்தில் இருக்கும் எங்கள் கருணை
நிறைந்த பிதாவே
உம்முடைய நாமம் வாழ்த்தப் படுகவே
உம்முடைய ராஜ்யம் வருகவே


பூலோகம் போல பூமியிலும் - உம்
சித்தங்கள் நிறையட்டுமே
என்றென்றும் நாங்கள் பசியாகும் போது
உணவாக வாருமே. (ஆமென்) - 3

என்றென்றும் பாவங்களைப் பொறுத்தருளும்
என்றும் பாவியை மீட்டருளும்
சோதனையில் எம்மை விழவிடாதேயும்
தீமையில் காத்தருளும். (ஆமென்) - 3.



தூய ஆரோக்கிய மாதா - ஏழாயிரம்பண்ணை

தூய ஆரோக்கிய மாதா ஆலயம்
ஏழாயிரம்பண்ணை



...யிரம்பண்ணை
- ஆரோக்கிய மாதா அன்பியம்

இளமையின் பொலிவால் திகழ் திருச்சபையும்
யாவரும் வாழத் தயை புரிவீர்

3. ஞானம் மிகுந்த எம் பாரதத்தில்
நல் ஒளி பாய்ச்சும் இறைவனே நீர்
ஞாலமெல்லாம் இருள் நீங்கிடவே
நாடும் வீடுகள் எங்கணுமே
நலம் பல பொழிவீர் நல் இறைவா
நற்கருணை வாழ் நாயகனே.

## அருட்திரு தேவ தேவன் போற்றி

1. அருட்திரு தேவ தேவன் போற்றி
அவர் தம் திரு நாமம் போற்றி

2. அவர் மகன் இயேசு கிறிஸ்து போற்றி
அவர்தம் திரு அன்பே போற்றி

3. அருட்திரு தூய ஆவி போற்றி
அவர் தம் திரு ஞானம் போற்றி

4. அருட்திரு அன்னை மரியாள் போற்றி
அவர் தம் திரு தூயமை போற்றி

5. அருட்திரு சூசை முனியும் போற்றி
அவர்தம் திரு வாய்மை போற்றி

6. அருட்திரு தூதர் அமரர் போற்றி
அவர்தம் திரு சேவை போற்றி

7. அருட்திரு தேவ தேவன் போற்றி
அவர்தம் திரு நாமம் போற்றி

## அன்புருவாய் எம் நடுவில்

1. அன்புருவாய் எம் நடுவில்
ஆசையுடன் வந்துதித்து
இந்தப் பொன்னொளியில் வீற்றிருக்கும்
பூபதியே நமஸ்காரம்

2. பரலோக உன்னதத்தில்
பாக்கியமாய் வாழ்பவர் நீர்
நரலோக வாசிகளுள்
நலமேது தேடி வந்தீர்

3. நித்தியப் பிதாவினண்டை
நிரந்தாம் நீர் வீற்றிருக்க
சுத்தமில்லாப் பூவுலகை
சுதந்திரமாய்க் கொண்டதேனோ

விண்ணுலக தூதர்களின்
விளக்கொளியே பாக்கியமே
மண்ணுலக வாசிகளுள்
வந்ததென்ன வானரசே!

### அன்பே உயிரே ஆராதனை

அன்பே உயிரே ஆராதனை
அளித்தோம் உமக்கே ஆராதனை

உலகம் முடியும் நாள் வரையில்
உமக்கே என்றும் ஆராதனை
தலைவா எங்கள் உள்ளங்களில்
தந்தோம் என்றும் ஆராதனை - 2

விண்ணில் மின்னும் தாரகைகள்
விடுக்கும் என்றும் ஆராதனை
கண்ணில் ஆடும் கண்மணிகள்
சொல்லும் என்றும் ஆராதனை - 2

அழைப்பை ஏற்று ஆலயத்தில்
தங்கிட வந்தாய் ஆராதனை
உழைப்பை ஏற்று உள்ளமெல்லாம்
உவந்தே செலுத்தும் ஆராதனை - 2

# 9. தூய ஆவி பாடல்கள்

### அப்பா பிதாவே அன்பான தேவா

அப்பா பிதாவே அன்பான தேவா
அருமை இரட்சகரே ஆவியானவரே - 2

எங்கோ நான் வாழ்ந்தேன் அறியாமல் அலைந்தேன்
என் நேசர் தேடி வந்தீர் - 2
நெஞ்சார அணைத்து முத்தங்கள் கொடுத்து
நிழலாய் மாறிவிட்டீர் - 2
நன்றி உமக்கு நன்றி - 2

தாழ்மையில் இருந்தேன் தள்ளாடி நடந்தேன்
தயவாய் நினைவு கூர்ந்தீர் - 2
கலங்காதே என்று கண்ணீரைத் துடைத்து
கரம் பற்றி நடத்துகிறீர் - 2
நன்றி உமக்கு நன்றி - 2

## ஆவியானவரே அன்பின் ஆவியானவரே

ஆவியானவரே அன்பின் ஆவியானவரே
இப்போ வாரும் இறங்கி வாரும்
எங்கள் மத்தியிலே

1. உளையான சேற்றினின்று தூக்கி எடுத்தவரே
பாவம் கழுவி தூய்மையாக்கும் இந்த வேளையிலே

2. சீனாய் மலையினிலே இறங்கி வந்தவரே
ஆத்ம தாகம் தீர்க்க வாரும் இந்த வேளையிலே

3. உமது வரங்களினால் என்னையும் நிரப்பிடுமே
எழுந்து ஜொலிக்க எண்ணெய் ஊற்றும் இந்த வேளையிலே

## ஆவியிலே புதுமை அடைவோம்

ஆவியிலே புதுமை அடைவோம் - அருள்
ஆழியிலே மூழ்கிக் களிப்போம்
மேதினியை மாற்றியமைப்போம் - நம்மை
மேய்ப்பவரின் மந்தை வளர்ப்போம்

1. அன்பு என்னும் ஆடையணிவோம் - நல்ல
ஆனந்த அமைதி அடைவோம்
ஆதிசபை வாழ்க்கையினை
ஆண்டவரின் ஆவியிலே
வீதியெங்கும் கண்டு களிப்போம்.

2. வேதனையாம் அலைகள் ஓங்கலாம் - பெரும்
சோதனையாம் புயலும் வீசலாம்
இறைவன் நம்மைக் காக்கின்றார்
இன்பமுற அழைக்கின்றார்
நிறைவாழ்வு இன்று அடைவோம்.

## ஆவியே என்னை நிரப்பும்

ஆவியே என்னை நிரப்பும் - தூய
ஆவியே என்னை நிரப்பும்

1. அன்பினால் என்னை நிரப்பும் - இறை
அமைதியால் என்னை நிரப்பும்

2. மகிழ்ச்சியால் என்னை நிரப்பும் - இறை
புகழ்ச்சியால் என்னை நிரப்பும்

3. பொறுமையால் என்னை நிரப்பும் - உம்
கருணையால் என்னை நிரப்பும்

## ஆவியைத் தர வேண்டும் இறைவா

ஆவியைத் தர வேண்டும் இறைவா - தூய
ஆவியைத் தர வேண்டும் தயவாய் - எம்மை
ஆட்கொள்ள வரவேண்டும் இறைவா

1. கோவிலாய் நெஞ்சத்தைக் கொண்டிட வேண்டும்
கோபுரம் போல் ஞானம் ஓங்கிட வேண்டும்
மூவிதப் பகையினை வென்றிட வேண்டும்
மூச்சிலும் பேச்சிலும் நின்றிட வேண்டும்

2. சான்று பகர்ந்திட ஆர்வமும் வேண்டும்
சத்தியம் காத்திட வீரமும் வேண்டும்
நோன்புகள் ஏற்றிட ஆவலும் வேண்டும்
நோய் நொடி தீர்த்திட ஆற்றலும் வேண்டும்.

3. ஆறுதல் ஆறாகப் பாய்ந்திட வேண்டும்
ஆனந்த வெள்ளத்தில் தோய்ந்திட வேண்டும்
மாறுதல் இல்லா நல்மனம் வேண்டும்
மாசற்ற வாழ்வினில் நிலைத்திட வேண்டும்.

## ஆவியே தூய ஆவியே

ஆவியே தூய ஆவியே
உனைத் தேடியே வந்தோம்
ஆவியே தூய ஆவியே
உனை நாடியே வந்தோம்

1. ஆறுதல் அளிப்பவர் நீரே - எம்மில்
ஆனந்தம் விளைவித்திடுவீரே - 2
அன்பே உனையே நம்பி - ஆவியே

2. அறிவினைக் கொடுப்பவர் நீரே
எங்கள் அமைதியைப் பெருக்கிடுவீரே - 2
அருளே உனக்காய் ஏங்கி - ஆவியே

தெளிவினை விதைப்பவர் நீரே
மனத்திடன் தனை மிகுத்திடுவீரே - 2
வாழ்வே உனையே வணங்கி - ஆவியே

வறண்டதை நனைப்பவர் நீரே
எம்மில் வாட்டங்கள் நீக்கிடுவீரே - 2
வந்தோம் அன்பே பணிந்து - ஆவியே.

இறைவனின் ஆவி என்னைப் படைத்தது; எல்லாம் வல்லவரின் மூச்சு என்னை வாழ்விக்கின்றது. (யோபு 33:4)

## இயேசுவாய் நான் வாழ வேண்டும்

இயேசுவாய் நான் வாழவேண்டும்
இயேசுவாய் நான் மாறவேண்டும்
மாற்றும் என்னை மாற்றும்
தூய ஆவியே என்னை மாற்றும்

1. எந்தன் நினைவும் சொல்லும்
உந்தன் நினைவாய் மாறவேண்டும்
உம் ஆவி என்னில் தங்க வேண்டும்
ஆவியின் வழி நான் வாழவேண்டும்.

2. எந்தன் உணர்வுகளெல்லாம்
உந்தன் உணர்வாய் மாறவேண்டும்
உம்மை நான் நன்கு அறியவேண்டும்
உம் அன்பு என்னில் பெருக வேண்டும்.

## உன்னதத்தின் ஆவியை

உன்னதத்தின் ஆவியை
உந்தன் பக்தர் உள்ளத்தில்
ஊற்ற வேண்டும் இந்த நாளிலே
உலகமெங்கும் சாட்சி நாங்களே

1. பெந்தகோஸ்தே பெரு விழாவிலே
பெருமழை போல் ஆவி ஊற்றினீர்
துயரமான உலகிலே சோர்ந்து போகும் எங்களைத்
தாங்க வேண்டும் உந்தன் ஆவியால்

2. ஆவியின் கொடைகள் வேண்டுமே
அயல் மொழியில் துதிக்க வேண்டுமே
ஆற்றலோடு பேசவும் அன்பு கொண்டு வாழவும்
ஆவி ஊற்றும் அன்பு தெய்வமே

## ஊற்றுத் தண்ணீரே எந்தன்

ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே
ஜீவ நதியே என்னில் பொங்கிப் பொங்கி வா
ஆசீர்வதியும் என் நேச கர்த்தரே
ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும்

1. கல்மலையைப் பிளந்து வனாந்தரத்திலே
கர்த்தாவே உம் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே
பள்ளத்தாக்கிலும் மலைகளிலும்
தண்ணீர் பாயும் தேசத்தை நீர் வாக்களித்தீரே

2\. ஜீவ தண்ணீராம் எந்தன் நல்ல கர்த்தரே
ஜீவ ஊற்றினால் என்னை நிரப்பிடுமே
கனி தந்திட நான் செழித்தோங்கிட
கர்த்தரின் கரத்தில் நித்தம் கனம் பெற்றிட

3\. இரட்சிப்பின் ஊற்றுகள் எந்தன் சபைதனிலே
எழும்பிட இந்த வேளை இரங்கிடுமே
ஆத்ம பலமும் பரிசுத்தமும்
ஆவலுடன் பெற்றிடவே வரம் தாருமே.

## எல்லா வரமும் நிரம்பித் ததும்பும்

எல்லா வரமும் நிரம்பித் ததும்பும்
திவ்விய தூய ஆவியே
அடியோர் உள்ளத்தில் எழுந்து வருவீர்
இனிய சிநேக தேவனே

உலக இருளை அகற்ற உமது
பரலோக ஒளி தாருமே
உம்மைக் கண்டு நன்மை பெற
நாதனே அருள் புரிகுவாய்

நன்மை பயக்கும் ஞானக் கொடைகள்
யாவும் அளிப்பாய் பரமனே
நல்வழியே நாங்கள் கண்டு
நற்கதி பெறச் செய்குவாய்

ஞானம் புத்தி விமரிசையுடன்
அறிவு திடம் பக்தியும்
தெய்வ பயமான வரங்கள்
ஏழும் எமக்கு ஈவாயே.

## என் ஆவியும் தூய ஆவியும்

ன் ஆவியும் தூய ஆவியும்
ன்னுள்ளே இணைந்துவிட்டால்
னந்தம் ஆனந்தமே - 2

ஆனந்தம் என்று சொல்வதா - அதை
அருட்பெருக்கு என்றுரைப்பதா
இன்ப வனம் என்று கூறவா - அதை
இறையாற்றல் என்றழைப்பதா
பேரானந்தம் பரமானந்தம்
நிறையானந்தம் இறையானந்தம் - 2

2. நீ நாக்கு தூய ஆவியா - அதன்
தீப்பிழம்பு எந்தன் ஆவியா
தீமைகளை சுட்டெரிக்குமே - அதன்
தீச்சுடரில் வளர்ச்சி தோன்றுமே
**பேரானந்தம் பரமானந்தம்**
**நிறையானந்தம் இறையானந்தம் - 2**

## வல்லமை தேவை தேவா

வல்லமை தேவை தேவா
வல்லமை தாரும் தேவா
இன்றே தேவை தேவா
இப்போ தாரும் தேவா
பொழிந்திடும் வல்லமை
உன்னதத்தின் வல்லமை
ஆவியின் வல்லமை
அக்கினியின் வல்லமை

1. இறுதி நாளில் எல்லோர் மேலும்
ஆவியைப் பொழிவேன் என்றீர்
**மூப்பர் வாலிபர் யாவரும்**
**தீர்க்க தரிசனம் சொல்வாரே - 2 - பொழிந்திடும்**

2. பெந்தகோஸ்தே நாளின் போதே
பெரிதான முழக்கத்தோடு
**வல்லமையாக இறங்கி**
**வரங்களினாலே நிரப்பும் - 2 - பொழிந்திடும் ...**


3. மீட்கப்படும் நாளுக்கென்று
முத்திரையில் ஆவி தாரும்
**பிதாவே என்று அழைக்க**
**புத்திர சுவிகாரம் ஈந்திடும் - 2 - பொழிந்திடும் ...**





தூய இஞ்ஞாசியார் - நடுச்சூரங்குடி

தூய இஞ்ஞாசியார் ஆலயம்
நடுச்சூரங்குடி



அன்பியம் :

- இன்னாசியார் அன்பியம்

# 10. பஜனைப் பாடல்கள்

## அன்பு செய்ய வரம்

அன்பு செய்ய வரம் வேண்டும் இறைவா

1. உதவி செய்ய நான் நினைக்க
   உதைத்து என்னை வதைப்பவரை
2. உறவு கொள்ள நான் நினைக்க
   ஊறு செய்ய நினைப்பவரை
3. பிழை பொறுக்க நான் நினைக்க
   பேதை என பழைப்பவரை
4. துன்ப துயர் நான் சுமக்க
   துணைவராது அகல்பவரை
5. கண் கலங்கி நான் துடிக்க
   காணாமல் செல்பவரை.

## இயேசு இயேசு இயேசுவே

இயேசு இயேசு இயேசுவே - 2

1. அறிவினைத் துலக்கிடும் திருப்பெயராம்
   அறநெறி காட்டிடும் திருப்பெயராம்
2. ஆறுதல் அளித்திடும் திருப்பெயராம்
   மாறுதல் இல்லா திருப்பெயராம்
3. அன்பினை வளர்த்திடும் திருப்பெயராம்
   அஞ்சா மனம் தரும் திருப்பெயராம்
4. நாவினில் இனித்திடும் திருப்பெயராம்
   பாவியை மீட்டிடும் திருப்பெயராம்
5. நீதியை வளர்த்திடும் திருப்பெயராம்
   தீதில்லா வழிதரும் திருப்பெயராம்
6. கதிதனைக் காத்திடும் திருப்பெயராம்
   முடிவில்லாப் பலன்தரும் திருப்பெயராம்
7. விடுதலை அளித்திடும் திருப்பெயராம்
   மகிழ்வினை வழங்கிடும் திருப்பெயராம்

**நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் தம் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார். (யோவான் 10:11)**

## இயேசு உன் பாதத்தில்

1. இயேசு உன் பாதத்தில் அமர்ந்திடவே
ஆசைநான் வளர்த்தேன் அருள்வாயே.

2. காலமும் உனையே காண்பதற்கே
காரிருள் நீக்கி அருள்வாயே

3. இயேசு உன் பொன்மொழி கேட்டிடவே
இதயத்தில் அமைதியை அருள்வாயே.

## இயேசுவே என்னை

1. இயேசுவே என்னை உன் வீணையாக்கு
வீணையை மீட்டும் நல்ராகமாக்கு.

2. இயேசுவே என்னை உன் தீபமாக்கு
தீபத்தில் எரிந்திடும் ஜோதியாக்கு

3. இயேசுவே என்னை உன் கோவிலாக்கு
கோவிலில் நீ வந்து வாசமாகு.

4. இயேசுவே என்னை உன் வேதமாக்கு
அன்பினை பரப்பிடும் கருவியாக்கு.

## இறைவன் தந்தையை

1. இறைவன் தந்தையை நினைத்துவிட்டால்
ஆனந்தம் ஆனந்தம் பரமானந்தம்

2. இயேசு மீட்பரை நினைத்துவிட்டால்
ஆனந்தம் ஆனந்தம் பரமானந்தம்

3. ஆவி இறைவனை நினைத்துவிட்டால்
ஆனந்தம் ஆனந்தம் பரமானந்தம்

## இறைவா உம் தயவினிலே

இறைவா உம் தயவினிலே வாழ்ந்திட வந்தோம்

1. பருவமழை பொழிகவென்று வேண்டியே நின்றோம்
2. நீர் நிலைகள் பெருகவென்று வேண்டியே நின்றோம்
3. பயிர் நிலைகள் செழிக்கவென்று "
4. உயிர்களெல்லாம் மகிழ்கவென்று "
5. நோய் நொடிகள் ஒழிகவென்று "
6. பசிப்பிணிகள் ஒழிகவென்று "
7. வறுமையெல்லாம் ஒழிகவென்று "
8. சிறுமையெல்லாம் ஒழிகவென்று "
9. செழுமையெல்லாம் சேர்கவென்று "
10. நீதிநெறி செழிக்கவென்று "
11. மனக் குறைகள் தீர்க்கவென்று "
12. மனித குலம் வாழ்கவென்று "

## என்னுயிரே இறைவா

என்னுயிரே இறைவா
உம் திருவடி சரணம்
உன் பதம் அமர்ந்து உன் முகம் காண
என்ன தவம் நான் செய்தேன் - நான்
என்ன தவம் செய்தேன்

1. உம் மொழி கேட்க
2. உன் அன்பைச் சுவைக்க
3. உன் புகழ் பாட
4. உன்னுடன் பேச
5. உன் அருள் பெறவே.

## கருணை இறைவா சரணம்

கருணை இறைவா சரணம்
கடைக்கண் பாராய் சரணம்

1. கண்களை மூடி கனிவுடன் வந்தோம்
2. உணர்வினை உணர்த்தும் உம்மிடம் வந்தோம்
3. ஆவியின் அருளில் மூழ்கிட வந்தோம்
4. சந்நிதி தேடி களிப்புடன் வந்தோம்
5. மூச்சினில் உணர்ந்து உம்மையே அடைவோம்
6. நட்பினை விடுத்தோம் நலந்தனை இழந்தோம்
7. நீதியை மறந்தோம் நேர்மையைத் துறந்தோம்.

## தந்தையே உம்மை வணங்குகிறோம்

1. தந்தையே உம்மை வணங்குகிறோம்
வாழ்வை உமக்கு அளிக்கின்றோம்
உம்மை அன்பு செய்கின்றோம்

2. இயேசுவே உம்மை வணங்குகிறோம்
வாழ்வை உமக்கு அளிக்கின்றோம்
உம்மை அன்பு செய்கின்றோம்

3. ஆவியே உம்மை வணங்குகிறோம்
வாழ்வை உமக்கு அளிக்கின்றோம்
உம்மை அன்பு செய்கின்றோம்

4. மூவொரு இறைவா வணங்குகிறோம்
வாழ்வை உமக்கு அளிக்கின்றோம்
உம்மை அன்பு செய்கின்றோம்

## தனிமுதல் இறைவனாம்

தனிமுதல் இறைவனாம் தந்தையே வாழி
தனியொரு மைந்தனாம் இயேசுவே வாழி
தூய நல் ஆவியாம் இறைவனே வாழி
மூவொரு இறைவா என்றுமே வாழி

## தேவாதி தேவா உன் திருவடி

1. தேவாதி தேவா உன் திருவடி சரணம்
2. திரு ஆதி தந்தாய் உன் திருவடி சரணம்
3. திரு இயேசு நாதா உன் திருவடி சரணம்
4. திருத்தூய ஆவி உன் திருவடி சரணம்

## புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு

1. புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு இயேசுவை
புகழ்ந்திடு **காலையிலே - 2 (பகலினிலே)**
2. புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு இயேசுவை
புகழ்ந்திடு **மாலையிலே - 2 (இரவினிலே)**
3. புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு இயேசுவை
புகழ்ந்திடு பொழுதெல்லாம்.

## மரியே எம்மைப் பாரம்மா

1. மரியே எம்மைப் பாரம்மா
திருமகன் அன்பில் சேரம்மா
2. வான் உயர் வான் தந்தையும்
வாழ்த்துயர் மகளும் நீயம்மா
3. தாழ்மையுடன் சரணடைந்தாய்
தாய்மையிலே அருள் நிறைந்தாய்
4. ஆவியினால் நிறைந்தவள் நீ
பாவிகளை அணைப்பவள் நீ
5. பகைமையை நான் விலக்கிடவே
பாசத்தையே ஊட்டிடுவோம்

## வந்தருளும் ஆண்டவரே

வந்தருளும் ஆண்டவரே உடனே வந்தருளும்
வேண்டுகின்றேன் தினமும் தொடர்ந்து
வேண்டுகின்றேன் தினமும்

1. துவளுகின்றேன் தினமும் தனியே
துவளுகின்றேன் தினமும்

தேடுகின்றேன் தினமும் உன்னையே
தேடுகின்றேன் தினமும்

அழுகின்றேன் தினமும் நொந்து
அழுகின்றேன் தினமும்

புலம்புகின்றேன் தினமும் அழுது
புலம்புகின்றேன் தினமும்

வருந்துகின்றேன் தினமும் நினைத்து
வருந்துகின்றேன் தினமும்

## வந்தோம் தந்தாய்

வந்தோம் தந்தாய்
உள்ளம் ஒன்றி வாழ்த்துச் சொல்ல
வந்தோம் தந்தாய்

உங்கள் அன்பில் உள்ளம் ஒன்றி
நிலைத்து நாங்கள் வாழவே
வந்தோம் . . . .

தூய உள்ளம் கொண்டு என்றும்
துணிந்து நாங்கள் வாழவே
வந்தோம் . . . .

உண்மை அன்பு உறவில் என்றும்
தொடர்ந்து நாங்கள் வாழவே
வந்தோம் . . . .

## வாழிய மூவொரு இறைவா

வாழிய மூவொரு இறைவா

தூய மூவொரு இறைவா - இறைவா - 2
வாழிய மூவொரு இறைவா

இணைந்த மூவொரு இறைவா - இறைவா - 2
வாழிய மூவொரு இறைவா

மீட்கும் மூவொரு இறைவா - இறைவா - 2
வாழிய மூவொரு இறைவா

அர்ச்சிக்கும் மூவொரு இறைவா - இறைவா - 2
வாழிய மூவொரு இறைவா

படைக்கும் மூவொரு இறைவா - இறைவா - 2
வாழிய மூவொரு இறைவா

# 11. ஜெப வழிபாட்டுப் பாடல்கள்

## அஞ்சாதே அஞ்சாதே

அஞ்சாதே அஞ்சாதே
நான் என்றும் உன்னோடு
எந்தத் துன்பம் வந்தாலும்
என் அன்பு உன்னோடு

1. குன்றும் அசையலாம் குகைகள் பெயரலாம்
உலகம் முழுவதும் உன்னை வெறுக்கலாம்
எந்த துன்பம் வந்தாலும்
எந்தன் அன்பு மாறாது
**அஞ்சாதே அஞ்சாதே உன்னை நான் காப்பேன் -2**

2. அன்னை குழந்தையை அணைக்க மறப்பாளோ
சின்ன துன்பமும் நெருங்க விடுவாளோ
அன்னை உன்னை மறந்தாலும்
உன்னை நானோ மறவேனே
**அஞ்சாதே அஞ்சாதே உன்னை நான் காப்பேன் -2**

## அதிசயங்கள் செய்கிறவர்

அதிசயங்கள் செய்கிறவர் நம் நடுவில் இருக்கிறார்
அற்புதங்கள் செய்கிறவர் என்றும் நமக்குள் வாழ்கிறார்

1. தண்ணீரை இரத்தமாய்
மாற்றினார் அதிசயம் - எகிப்து - 2
கானா தண்ணீரை திராட்சை இரசமாய்
மாற்றினார் அதிசயம் - 2

2. செங்கடலை இரண்டாக
பிரித்திட்டார் அதிசயம் - 2
புயல்காற்றைத் தன் ஆணையாலே
அடக்கினார் அதிசயம் - 2

3. குருடருக்கும் செவிடருக்கும்
சுகம் தந்தார் அதிசயம் - 2
ஒரு சொல்லாலே மரித்தோரை
எழுப்பினார் அதிசயம் - 2.

**தீய வழியில் ஈட்டிய செல்வம் பயன் தராது. நேர்மையோ நடத்தையோ சாவுக்குத் தப்புவிக்கும். (நீதி. 10:2)**

## அப்பா நான் உம்மை

அப்பா நான் உம்மைப் பார்க்கிறேன்
அன்பே நான் உம்மைத் துதிக்கிறேன்

1. நீரே என் வழி நீரே என் சத்யம்
நீரே என் ஜீவனன்றோ

2. அப்பாவும் நீரே அம்மாவும் நீரே
நான் உந்தன் பிள்ளையன்றோ

3. நல்ல மேய்ப்பன் நீர் தானே
நான் உந்தன் ஆட்டுக்குட்டி

4. ஜீவ நீரூற்று நீர்தானே
உந்தன்மேல் தாகம் கொண்டேன்

## அதிசீக்கிரத்தில் நீங்கிவிடும்

அதிசீக்கிரத்தில் நீங்கிவிடும்
இங்கு லேசான வேதனைகள்
சோர்ந்து போகாதே - நீ

1. உள்ளார்ந்த மனிதன் நாளுக்கு நாள்
புதிதாக்கப்படுகின்ற நேரமிது - சோர்ந்து

2. ஈடு இணையில்லா மகிமை
இதனால் நமக்கு வந்திடுமே - சோர்ந்து

3. காண்கின்ற உலகம் தேடவில்லை
காணாத பரலோகம் நாடுகிறோம் - சோர்ந்து

4. கிறிஸ்துவின் பொருட்டு நொறுக்கப்பட்டால்
பாக்கியம் நமக்கு பாக்கியமே - சோர்ந்து

5. மன்னவன் இயேசு வருகையிலே
மகிழ்ந்து நாமும் களிகூறுவோம் - சோர்ந்து

6. மகிமையின் தேவ ஆவிதாமே
மண்ணான நமக்குள் வாழ்கின்றார் - சோர்ந்து.

## ஆராதிக்கின்றோம் நாங்கள்

ஆராதிக்கின்றோம் நாங்கள் ஆராதிக்கின்றோம்
ஆண்டவராம் இயேசுவையே ஆராதிக்கின்றோம்
ஆராதிக்கின்றோம் நாங்கள் ஆராதிக்கின்றோம்
ஆவியிலும் உண்மையிலும் ஆராதிக்கின்றோம்

1. வானதூதர் ஆராதிக்கும் பரிசுத்தரை
மகிழ்வோடு உம் மக்கள் ஆராதிக்கின்றோம்

துன்பங்கள் விலகும் கட்டுக்கள் உடையும் ஆராதனையால்
கோட்டைகள் உடையும் வாதைகள் ஒழியும் ஆராதனையால்

2. வியாதிகள் நீங்கும் சோர்வுகள் நீங்கும் ஆராதனையால்
தீமைகள் அகலும் அன்பு பெருகும் ஆராதனையால்
அப்போஸ்தலர்கள் நள்ளிரவில் ஆராதித்தனர்
சங்கிலி அறுந்து கட்டுக்கள் உடைந்து விடுதலை ஆனரே.

## ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்

ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்
ஆண்டவர் இயேசுவை ஆராதிப்பேன்

1. வல்லவரே உம்மை ஆராதிப்பேன்
நல்லவரே உம்மை ஆராதிப்பேன்

2. பரிசுத்த உள்ளத்தோடு ஆராதிப்பேன்
பணிந்து குனிந்து ஆராதிப்பேன்

3. ஆவியிலே உம்மை ஆராதிப்பேன்
உண்மையிலே உம்மை ஆராதிப்பேன்

4. காண்பவரை நான் ஆராதிப்பேன்
காப்பவரை நான் ஆராதிப்பேன்

5. வெண்ணாடை அணிந்து ஆராதிப்பேன்
குருத்தோலை ஏந்தி ஆராதிப்பேன்

## இயேசு இயேசு என்று அழைத்து

இயேசு இயேசு என்று அழைத்து
பேசு பேசு உன் கதையை - 2
உந்தன் குரலைக் கேட்டு
உன்னை மீட்டு வானகம் சேர்க்கும் தேவனவர்

1. வாழ்வாய் வழியாய் உயிராய் மண்ணில்
சுடராய் அணையா ஒளியாய் - 2
வந்தார் மாபரன் இயேசு - செந்நீர்
தந்துனை மீட்டார் இயேசு
**கல்வாரி சிகரமதில் - 2**

2. பாவிகள நம்மை மீட்கவே மண்ணில்
ஆதவனாய் ஒளிர்ந்தெழுந்தார்
போதனைகள் பல தந்து - நம்மை
வேதனையில் வெற்றிபெறச் செய்தார்
**கல்வாரி சிகரமதில் - 2**

## இயேசு கிறிஸ்து ஆண்டவர்

இயேசு கிறிஸ்து ஆண்டவர்
என்றும் என்றும் இருப்பவர்
இன்னல் நீக்கி என்னை என்றும் காப்பவர்
ஆனந்தம் அல்லேலூயா - 2
இறைவன் இயேசு என்றும் என்னில் இருப்பதால்

பாவக் கறைகள் நிறைந்த எந்தன் உள்ளத்தை
பரமன் இயேசு குருதி சிந்திக் கழுவினார்
அமைதியின்றி அலைந்த எந்தன் மனதினை
ஆவி அனுப்பி அன்பு பொழிந்து மாற்றினார்

இரவும் பகலும் மகிழ்ச்சியோடு இருக்கின்றேன்
இயேசு அருளால் இனி எனக்குக் குறையில்லை
இன்பம் துன்பம் எது வந்தாலும் பயமில்லை
இயேசு எனது இறைவனாக இருப்பதால்.

## இயேசு நாமம் பாடப் பாட

இயேசு நாமம் பாடப்பாட
இனிமை பொங்குதே
அவர் இல்லம் வாழ எந்தன் இதயம்
ஏங்கித் தவிக்குதே - 2

ஓங்கும் குரலைக் காக்க வேண்டும்
உன் நாமம் பாடவே
என் உள்ளம் தேறவே என் தாகம் தீரவே
உன் அன்பில் வாழவே
என் தேவா தேவா வா.

எங்கும் விழிகள் தேற்ற வேண்டும்
வான் தீபம் காணவே
உன் அன்பில் வாழவே உன்னோடு சேரவே
என்னில் நீ வாழவே
என் தேவா தேவா வா.

## இயேசுவின் நாமம் இனிதான நாமம்

இயேசுவின் நாமம் இனிதான நாமம்
இணையில்லா நாமம் இன்ப நாமம்

பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும்
பரம சந்தோசம் பக்தருக்களிக்கும்

பரிமளத் தைலமாம் இயேசுவின் நாமம்
பாரெங்கும் வாசனை வீசிடும் நாமம்

3. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வானாதி வானவர் இயேசுவின் நாமம்

4. நேற்றும் இன்றும் மாறிடா நாமம்
நம்பினோரை என்றும் கைவிடா நாமம்

5. முழங்கால் யாவும் முடக்கிடும் நாமம்
மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம்

6. சாத்தானின் சேனையை ஜெயித்திட்ட நாமம்
சாபப் பிசாசை துரத்திடும் நாமம்

3. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வானாதி வானவர் இயேசுவின் நாமம்

4. நேற்றும் இன்றும் மாறிடா நாமம்
நம்பினோரை என்றும் கைவிடா நாமம்

5. முழங்கால் யாவும் முடக்கிடும் நாமம்
மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம்

6. சாத்தானின் சேனையை ஜெயித்திட்ட நாமம்
சாபப் பிசாசை துரத்திடும் நாமம்

## இயேசுவின் நாமத்தினால் கூடிடும்

இயேசுவின் நாமத்தினால்
கூடிடும் சமயங்களில்
திவ்விய அவர் சமூகம்
நம் அருகினில் இருக்கிறது.

1. கேளுங்கள் கொடுக்கப்படும்
தேடுங்கள் கண்டடைவீர்
மாறாத தேவன் மறைவாக்கு இதுவே
மாறாது எந்நாளிலும்.

2. பாடுங்கள் பரவசமாய்
பரமன் இயேசு அன்பினையே
துதிக்கின்றபோது எழுகின்ற நெருப்பு
மகிமையைக் காணச் செய்யும்.

3. கண்ணீர் துடைத்திடுவார்
கரங்கள் பற்றி நடத்திடுவார்
அழைக்கின்ற பக்தன் குரலினைக் கேட்டு
ஆசிகள் அளித்திடுவார்

ஆண்டவரின் எதிரில் நிற்கக்கூடிய ஞானமுமில்லை
விவேகமுமில்லை, அறிவுரையுமில்லை (நீதி. 21:30)

## இயேசுவின் பின்னால் நானும்

இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்
திரும்பிப் பார்க்க மாட்டேன் - 2
சிலுவையே முன்னால் உலகமே பின்னால்
இயேசு சிந்திய குருதியினாலே
விடுதலை அடைந்தேனே

1. அச்சமும் இல்லை அதிர்ச்சியும் இல்லை
அடியேன் உள்ளத்திலே
ஆண்டவர் இயேசு அடைக்கலப் பாறை
ஆதலின் குறையில்லை
ஆண்டவர் முன்னால் அகிலமே பின்னால் - 2
அன்பர் இயேசுவின் வார்த்தையினாலே
விடுதலை அடைந்தேனே.

2. தாயும் அவரே தந்தையும் அவரே
தரணியர் நமக்கெல்லாம்
சேயர்கள் நம்மை செவ்வழி நடத்தும்
தெய்வமும் அவரன்றோ
ஆயனே முன்னால் அனைத்துமே பின்னால்
அன்பர் இயேசுவின் அன்பு மொழியிலே
ஆறுதல் அடைந்தேனே.

## இன்று என் வாழ்விலே

இன்று என் வாழ்விலே பொன்னாள்
கண்டேன் நான் கண்டிலா பேறு
நன்றி என் தேவனே கோடி
தந்தேன் நான் தாள் மலர் சூடி
ஆ .. ஆ .. ஆ .. ஆ ...

1. அன்னை தன் உதிரம் உதித்திட்ட நேரம்
தந்தை நீர் என்னை தேர்ந்தெடுத்தீர்
அன்பினை பாலாய் அவள் தந்த வேளை
என் பணி எழுதி வைத்தீர்
இந்நாள் வரை என்னை கண்போலக் காத்தீர்
இறைவா உம் கருணைக்கு விளக்கம் நீர் ஆனீர் (2)

2. அகிலத்தில் எனது பயணம் தான் நீள
விந்தைகள் பல நீர் புரிந்து நின்றீர்
இரவிலும் எல்லா பகலிலும் நீரே
நட்போடென் வழி நடந்தீர்
இயலாமையில் உன் பலம் நீர் அளித்தீர்
தேவா என் வாழ்க்கையில் நிறைவும் நீர் ஆனீர் (2).

## இயேசு இரட்சகர் பெயரைச் சொன்னால்

இயேசு இரட்சகர் பெயரைச் சொன்னால்
எதுவும் நடக்குமே - அவர்
இதயத்தோடு கலந்துவிட்டால்
எல்லாம் கிடைக்குமே எல்லாம் கிடைக்குமே

1. வாடிக்கிடந்த உயிர்களெல்லாம் வாழ வைத்தாரே - அவர்
வாழ்வு சத்யம் ஜீவனுமாய் நன்மை செய்தாரே.

2. பரமபிதா ஒருவர் என்று வகுத்துச் சொன்னவர் இயேசு
பாசம் அன்பு கருணையோடு உலகைக் கண்டவர் இயேசு.

## இறைவன் இயேசு என்னிடம் எழுந்தார்

இறைவன் இயேசு என்னிடம் எழுந்தார்
இதயம் மகிழ்ந்ததுவே - 2
நிறையருள் எனக்கு நிதமும் தருவார் - 2
நிம்மதி பிறந்ததுவே

1. மன்னவன் இன்று மனதினில் வந்தார்
மனமோ மகிழ்கின்றது - 2
அன்புடன் வந்து அருள்மிகத் தந்தார்
ஆனந்தம் நிறைகின்றது.

2. கடவுள் அன்பு ஏழை என் மனதினில்
கனலாய் எரிகின்றது - 2
கடவுளின் அன்பில் நிலைத்துமே வாழ
கருணை பொழிகின்றது.

## உந்தன் அரசு வருக

உந்தன் அரசு வருக எம்
உள்ளம் அமைதி பெறவே - 2
உந்தன் அரசு வருக.

1. நீதி உலகில் ஆளும் எம் நெஞ்சில் வீரம் ஆடும்
ஆதி பாவம் நீங்கும் உன் அரசு இங்கே வந்தால்

2. வாழ்வு இல்லை என்று மனம் வாடும் மாந்தர்க்கெல்லாம்
வாழ்வின் வழியாய் அமைய தினம் வருமா உந்தன் அரசு

3. பூகல் போர்கள் ஓயும் கடும் போட்டி குணங்கள் மாயும்
நேசக் கரங்கள் நீளும் உன் நேர்மை அரசு வந்தால்.

> துணிவுள்ள மனைவியை அடைந்த கணவன் பேறு பெற்றவ
> அவனுடைய வாழ்நாளின் எண்ணிக்கை இரு மடங்காகும்.
> (சீராக் 26:1)

## உம் இரத்தத்தால் என்னைக் கழுவும்

உம் இரத்தத்தால் என்னைக் கழுவும்

லகின் பாவம் போக்கும் இயேசுவே
னாய் மண்ணில் பிறந்த இயேசுவே
ள்ளையாய் திரு இரத்தம் சிந்திய இயேசுவே
யால் அடிபட்டு நொந்த இயேசுவே
முடி தலையில் தாங்கிய இயேசுவே
பாவச் சிலுவையை சுமந்த இயேசுவே
க்காக சிலுவையில் அறையுண்ட இயேசுவே
லுவையில் தொங்கியே மரித்த இயேசுவே
த்து மூன்றாம் நாள் உயிர்த்த இயேசுவே
லியைத் தேடி மன்னிக்கும் இயேசுவே.

## உம்மைப் போற்றுகின்றோம்

மைப் போற்றுகின்றோம்
மைப் புகழுகின்றோம்
ற்றி கூறுகின்றோம்

இறைவா உம் திருப்பெயர் மேலானது
இறைவா உம் திருப்புகழ் மேலானது

இறைவா உம் மாட்சிமை மேலானது
இறைவா உம் மகத்துவம் மேலானது

இறைவா உம் வல்லமை மேலானது
இறைவா உம் வார்த்தைகள் மேலானது

இறைவா உமதன்பே மேலானது
இறைவா உமதருளே மேலானது

## உன்னைப் பார்க்க நான்

ன்னைப் பார்க்க நான் துடிக்கின்றேன்
ன் பேச நான் அழைக்கின்றேன்
ந்து சந்திப்பாயா இறைவா - 2

வழிகாட்டும் உன் மொழி கேட்கின்றேன்
பலிபீடம் தவறாது விழைகின்றேன்
வெளிவேடம் கொண்டே நான் வாழ்கின்றேன்
தலைவா நீ என் வாழ்வில் சந்திப்பாயா.

பாதையில் வறியவர் பார்க்கின்றோம்
வாதையில் துடிப்பதைக் காண்கின்றோம்
வீதியில் வெறுத்தே ஓடுகின்றோம்
வேந்தனே என் வாழ்வில் சந்திப்பாயா.

## எந்தன் நாவில் புதுப்பாடல்

எந்தன் நாவில் புதுப்பாடல்
எந்தன் இயேசு தருகின்றார் -2
ஆனந்தம் கொள்ளுவேன் அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில் - அல்லேலூயா

1. பாவ இருள் என்னை வந்து சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாய் என்னைத் தேற்றினார் - ஆனந்தம்
2. வாதை நோயும் வந்தபோது வேண்டல் கேட்டிட்டார்
பாதை காட்டி துன்பமெல்லாம் நீக்கி மீட்டிட்டார்
3. சேற்றில் வீழ்ந்த என்னை அவர் தூக்கியெடுத்தார்
நாற்றமெல்லாம் ஜீவரத்தம் கொண்டு மாற்றினார்
4. தந்தை தாயும் நண்பனுற்றார் யாவுமாகினார்
நிந்தை தாங்கி எங்குமவர் மேன்மை சொல்லுவேன்
5. இவ்வுலகப் பாடு என்னை என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வைக் காணக் காத்திருக்கிறேன்.

## எல்லாக் காலத்திலும்

எல்லாக் காலத்திலும் எல்லா நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
துதிப்பேன் (3) இயேசுவே
எல்லா வேளையிலும் துதிப்பேன்

1. ஆதியும் நீரே அந்தமும் நீரே ஜோதியும் நீரே
எந்தன் பாக்கியமும் நீரே
2. வழியும் நீரே வாழ்வும் நீரே வாய்மையும் நீரே
எந்தன் மகிழ்ச்சியும் நீரே
3. ஒளியும் நீரே உயிரும் நீரே உண்மையும் நீரே
எந்தன் சொந்தமும் நீரே
4. தாயும் நீரே தந்தையும் நீரே தலைவனும் நீரே
எந்தன் துணைவனும் நீரே
5. இறைவனும் நீரே அரசனும் நீரே நண்பரும் நீரே
எந்தன் அடைக்கலம் நீரே
6. அன்பனும் நீரே அரசனும் நீரே வள்ளலும் நீரே
எந்தன் பாசமும் நீரே

**கனி, மரத்தின் கண்காணிப்பைக் காட்டுகின்றது. சொல், மனிதரின் உள்ளப் பண்பாட்டைக் காட்டுகின்றது. (சீராக் 27:6)**

## என்ன என் ஆனந்தம்

என்ன என் ஆனந்தம்
என்ன என் பேரின்பம் சொல்லக்கூடாதே
மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம்
மன்னித்துவிட்டாரே.

1. ஆடுவோம் பாடுவோம் ஆண்டவர்
புகழ்தனை என்றுமே பாடுவோம்
அடியவன் என்னையே ஆட்கொண்ட
ஏசுவின் அன்பினைப் பாடிடுவோம்

2. போற்றுவோம் புகழுவோம் புனிதராம் - இயேசுவைப்
புவிதனில் போற்றுவோம்
மண்ணையே விண்ணாக மாற்றிட்ட இயேசுவின்
மாண்பினைப் பாடிடுவோம்.

## என் விழியே இயேசுவை

என் விழியே இயேசுவை நீ பாரு
என் நாவே இயேசுவை நீ பாடு

1. என் சிரசே இயேசுவை நீ வணங்கு
என் நெஞ்சே இயேசுவிடம் உனை வழங்கு - 2

2. என் கரமே இயேசுவின் மொழி எழுது
என் காதே இயேசுவின் மொழி கேளு - 2

3. என் காலே இயேசுவின் வழி செல்லு
என் உயிரே இயேசுவின் பதம் சேரு - 2

## எத்துணை நன்று

எத்துணை நன்று எத்துணை நன்று
அத்துனை பேரும் ஒன்றி வாழ்வது
எத்துணை நன்று எத்துணை நன்று

1. ஒரு கொடிக் கிளையாய் நாமிருக்கின்றோம்
எத்துணை நன்று - அந்த
ஒரே திருச்சபையில் நாமிருக்கின்றோம்
எத்துணை நன்று - அங்கு
ஒரே குடும்பமாய் நாமிருக்கின்றோம்
எத்துணை நன்று - இன்று
ஒரேவித அழைப்பை நாம்
பெற்றுக் கொண்டோம் எத்துணை நன்று

2. ஒரே விருந்தினிலே சேர்ந்து கொண்டோமே எத்துணை நன்று
இன்று ஒரே அப்பத்தினில் நாமுணவுண்டோம் எத்துணை நன்று
ஒரே கிண்ணத்தில் பருகுகின்றோமே எத்துணை நன்று
இன்று ஒரே உடலாக மாறிவிட்டோம் எத்துணை நன்று.

## எத்தனை நன்மைகள்

எத்தனை நன்மைகள் எனக்குச் செய்தீர்
எப்படி நன்றி சொல்வேன் நான் - 2
நன்றி ராஜா - நன்றி ராஜா - 2

1. தாழ்மையில் இருந்தேன் தயவுடன் நினைத்தீர்
தேவனே உம்மைத் துதிப்பேன் - 2

2. பெலவீனன் என்று தள்ளிவிடாமல்
பெலத்தால் இடைக்கட்டினீர் - 2

3. பாவத்தினாலே மரித்துப் போய் இருந்தேன்
கிருபையால் இரட்சித்தீரே - 2

4. எனக்காக மரித்தீர் எனக்காக உயிர்த்தீர்
எனக்காய் மீண்டும் வருவீர் - 2

5. கரங்களைப் பிடித்து கண்மணி போல
காலமெல்லாம் காத்தீர் - 2

## ஒப்பற்ற என் செல்வமே

ஒப்பற்ற என் செல்வமே
ஓ எந்தன் இயேசு நாதா
உம்மை அறிந்து உறவாட
உள்ளதெல்லாம் இழந்தேன் - நான்
உள்ளதெல்லாம் இழந்தேன்

1. உம்மை நான் ஆதாயமாக்கவும்
உம்மோடு ஒன்றாகவும்
எல்லாமே குப்பை என
எந்நாளும் கருதுவேன்

2. என் விருப்பம் எல்லாமே
இயேசுவே நீர் தானன்றோ
உம் திரு ஆவி பெற
உம் பாடுகள் ஏற்பேன்

3. கடந்ததை மறந்தேன்
கண்முன்னால் என் இயேசுதான்
தொடர்ந்து ஓடுவேன்
தொல்லைகள் என்ன செய்யும்?

2. ஒரே விருந்தினிலே சேர்ந்து கொண்டோமே எத்துணை நன்று
இன்று ஒரே அப்பத்தினில் நாமுணவுண்டோம் எத்துணை நன்று
ஒரே கிண்ணத்தில் பருகுகின்றோமே எத்துணை நன்று
இன்று ஒரே உடலாக மாறிவிட்டோம் எத்துணை நன்று.

## எத்தனை நன்மைகள்

எத்தனை நன்மைகள் எனக்குச் செய்தீர்
எப்படி நன்றி சொல்வேன் நான் - 2
நன்றி ராஜா - நன்றி ராஜா - 2

1. தாழ்மையில் இருந்தேன் தயவுடன் நினைத்தீர்
தேவனே உம்மைத் துதிப்பேன் - 2

2. பெலவீனன் என்று தள்ளிவிடாமல்
பெலத்தால் இடைக்கட்டினீர் - 2

3. பாவத்தினாலே மரித்துப் போய் இருந்தேன்
கிருபையால் இரட்சித்தீரே - 2

4. எனக்காக மரித்தீர் எனக்காக உயிர்த்தீர்
எனக்காய் மீண்டும் வருவீர் - 2

5. கரங்களைப் பிடித்து கண்மணி போல
காலமெல்லாம் காத்தீர் - 2

## ஒப்பற்ற என் செல்வமே

ஒப்பற்ற என் செல்வமே
ஓ எந்தன் இயேசு நாதா
உம்மை அறிந்து உறவாட
உள்ளதெல்லாம் இழந்தேன் - நான்
உள்ளதெல்லாம் இழந்தேன்

1. உம்மை நான் ஆதாயமாக்கவும்
உம்மோடு ஒன்றாகவும்
எல்லாமே குப்பை என
எந்நாளும் கருதுவேன்

2. என் விருப்பம் எல்லாமே
இயேசுவே நீர் தானன்றோ
உம் திரு ஆவி பெற
உம் பாடுகள் ஏற்பேன்

3. கடந்ததை மறந்தேன்
கண்முன்னால் என் இயேசுதான்
தொடர்ந்து ஓடுவேன்
தொல்லைகள் என்ன செய்யும்?

## கலங்காதே மனமே

கலங்காதே மனமே திகையாதே மனமே
கன்மலையாம் கிறிஸ்து காத்திடுவார் தினமே - 2

1. கவலைப்படாதே கண்ணீர் சிந்தாதே
   கடைசிவரை உன்னைக் கைவிடமாட்டார் -2

2. அனாதி தேவனே உனக்கு அடைக்கலம்
   அவரது புயங்களே உந்தன் ஆதாரம் - 2

3. அண்டிக்கொள் இயேசுவை அடைக்கலம் அவரே
   ஆதரிப்பாரே அமைதி கொள் மனமே - 2

## காண்கின்ற தேவன் நம் தேவன்

காண்கின்ற தேவன் நம் தேவன்
காலமும் அவரைத் துதித்திடுவோம்

1. தம்மைத் தேடும் உணர்வுள்ளவன்
   தரணியில் எவரேனும் உண்டோ
   கர்த்தர் இயேசு காண்கின்றார்
   கருத்தாய் அவரைத் தேடிடுவோம் - 2

2. ஆண்டவர் வார்த்தைக்குப் பயந்து
   அவரது கிருபைக்குக் காத்திருந்தால்
   பஞ்ச காலத்தில் உணவளிக்க
   பரிவாய் நம்மைப் பார்க்கின்றார் - 2

3. ஆவியிலே நொறுக்கப்பட்டு
   ஆண்டவர் வார்த்தைக்கு நடுங்குகிற
   அன்பு இதயம் காண்கின்றார்
   அணுகிடுவோம் நாம் தாழ்ச்சியோடு - 2

4. உத்தம இதயம் கொண்டிருப்போம்
   உன்னத வல்லமை பெற்றிடுவோம்
   கர்த்தரின் கண்கள் பூமியெங்கும்
   கருத்தாய் உலாவிப் பார்க்கின்றன.

## தாய்க்கு அன்பு வற்றிப் போகுமா?

தாய்க்கு அன்பு வற்றிப்போகுமா
தனது பிள்ளை அவள் மறப்பாளோ
தாய் மறந்தாலும் நான் மறவேனே
தயவுள்ள நம் கடவுள் தான் உரைத்தாரே

1. குன்றுகூட அசைந்து போகலாம்
   குகைகள் கூட பெயர்ந்து போகலாம்
   அன்பு கொண்ட எந்தன் நெஞ்சமே
   அசைவதில்லை பெயர்வதில்லையே.

2. தீ நடுவே நீ நடந்தாலும்
ஆழ்கடலைத் தான் கடந்தாலும்
தீமை ஏதும் நிகழ்வதில்லையே
தீதின்றியே காத்திடுவேன் நான்

3. கழுகு சிறகில் குஞ்சை அமர்த்தியே
கனிந்த அன்பில் சுமந்து செல்லுமே
கழுகைப் போல நான் உன்னைத்தானே
காலமெல்லாம் சுமந்து செல்வேனே.

4. உன்னை அன்று மீட்டதும் நாமே
உரிய பெயரில் அழைத்ததும் நாமே
என்னை கண்டு வந்ததினாலே
என்றும் நீயே எனக்குச் சொந்தமே.

## திருக்கரத்தால் தாங்கி என்னை

திருக்கரத்தால் தாங்கி என்னை
திருச்சித்தம் போல் நடத்திடுமே
குயவன் கையில் களிமண் நான்
அனுதினமும் வனைந்திடுமே - 2

1. ஆழ்கடலில் அலைகளினால்
அசையும் போது என் படகில்
ஆத்ம நண்பர் இயேசு உண்டு
சேர்ந்திடுவேன் அவர் சமூகம்

2. உம் வசனம் தியானிக்கையில்
இதயமதில் ஆறுதலே
காரிருளில் நடக்கையிலே
தீபமாக வழிநடத்தும்.

3. அவர் நமக்காய் ஜீவன் தந்து
அளித்தனரே உண்மை மீட்பு
கனிகளினால் காண்கின்றேன்
இன்பக் கானான் தேசமதை

## நான் உன்னைவிட்டு

நான் உன்னை விட்டு விலகுவதில்லை
நான் உன்னை என்றும் கைவிடுவதில்லை
நான் உன்னைக் காண்கின்ற தேவன்
கண்மணிபோல் உன்னைக் காப்பேன்

1. பயப்படாதே நீ மனமே - நான்
காத்திடுவேன் உன்னை தினமே

அற்புதங்கள் நான் செய்திடுவேன் - உன்னை
அதிசயமாய் நான் நடத்திடுவேன்.

2. திகையாதே கலங்காதே மனமே - நான்
உன்னுடனிருக்க பயமேன்
கண்ணீர் யாவையும் துடைத்திடுவேன் - உன்
கவலைகள் யாவையும் போக்கிடுவேன்

3. அனுதினம் என்னைத் தேடிடுவாய் -நான்
அளித்திடும் பலனைப் பெற்றிடுவாய்
அத்திமரம் போல் செழித்திடுவாய் - நான்
ஆசையாய் உண்ணக் கனிகொடுப்பாய்

4. நீதியின் வலக்கரத்தாலே - உன்னைத்
தாங்குவேன் நான் அன்பினாலே
ஆவியில் உண்மையாய் ஜெபித்திடுவாய் - தினம்
அல்லேலூயா என்றே ஆர்ப்பரிப்பாய்.

## விசுவாசத்தினால் நீதிமான்

விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்
விசுவாசியே பதறாதே
கலங்காதே திகையாதே விசுவாசியே
கல்வாரி நாயகன் கைவிடாரே.

1. தந்தை தாயென்னை வெறுத்திட்டாலும்
பந்த பாசங்கள் அறுந்திட்டாலும்
நிந்தை தாங்கிட்ட தேவன் நம்மை
சொந்தக் கரங்களால் அணைத்துக் கொள்வார்

2. கொடும் வறுமையில் உழன்றாலும்
கடும் பசியினில் வாடினாலும்
அன்று எலியாவை போஷித்தவர்
இன்று உன் பசி ஆற்றிடாரோ.

3. பிறர் வசை கூறி துன்புறுத்தி
இல்லாததை சொல்லும்போது
நீ மகிழ்ந்து களி கூறு
விண் கைமாறு மிகுதியாகும்.



தூய சவேரியார் - சோலைப்பட்டி

தூய சவேரியார் ஆலயம்
சோலைப்பட்டி




அன்பியங்கள் :

- அமலோற்பவ மாதா அன்பியம்
- சவேரியார் அன்பியம்

# 12. மரியன்னைப் பாடல்கள்

## அன்னை மாமரி எங்கள் அன்பின் தாய்

அன்னை மாமரி எங்கள் அன்பின் தாய் மரி
என்றும் உந்தன் புகழைப் பாடுவோம்
வாடும் மாந்தரை தேற்றிக் காத்திடும்
உந்தன் அருள் வரங்கள் இன்று தேடினோம்

எண்ணிறந்த உதவிகளைப் பெற்றுத் தந்த நீ
எங்கள் வாழ்வின் உடனிருந்து காத்து வருகின்றாய்
நன்றி பூக்கள் ஒன்று சேர்த்தோம் உந்தன் பாதத்தில்
சகாயத்தாய் மரியே - எம்மை
அரவணைத்துக் காப்பாய் நீயே.

அண்ணல் இயேசு அன்பன் வழியைக் கற்றுத் தந்த உன்
அன்புமிகு ஆதரவில் அச்சம் நீங்குதே
நன்றி பூக்கள் . . . .

## அம்மா உந்தன் அன்பினிலே

அம்மா உந்தன் அன்பினிலே
அருள்வாய் எமக்கு அடைக்கலமே

இறைவன் படைத்த எழிலே
இயேசுவைத் தந்த முகிலே
தூய்மை பொழியும் நிலவே
துணை வாழ்வில் நீயே

புவியோர் எங்கள் புகழே
புனிதம் பொங்கும் அழகே
உம்மகன் புதிய உறவில்
எம்மையும் வதியச் செய்வாய்.

## அமலோற்பவியே அருள்நிறை தாயே

அமலோற்பவியே அருள்நிறை தாயே வாழ்க வாழ்க
மாசறு கன்னியே மாபரன் தாயே வாழ்க வாழ்க
வாழ்க தாயே வாழ்க நீயே வாழ்க வாழியவே
அன்னையே வாழ்க அமலியே வாழ்க வாழ்க வாழியவே

மாமரியே மாதவமே வாழ்க, வாழ்க
மாந்தர்களைக் காப்பவளே வாழ்க வாழ்க - 2
மனம் மகிழ்ந்து பாடிடுவோம் வாழ்க வாழ்க
தினம் நினைந்து பாடிடுவோம் வாழ்க வாழ்க

2. இறைமகனின் திருத்தாயே வாழ்க வாழ்க
மறைபோற்றும் பேரெழிலே வாழ்க வாழ்க
வான் மண்ணின் இராக்கினியே வாழ்க வாழ்க
வாழ்த்துகிறோம் போற்றுகிறோம் வாழ்க வாழ்க.

## அம்மா அன்பின் சிகரம் நீ

அம்மா அன்பின் சிகரம் நீ
அருளைப் பொழியும் முகிலும் நீ
அம்மா அழகின் முழுமை நீ
அம்மா என்றதும் கனிபவள் நீ
அம்மா அன்பின் சிகரம் நீ

1. மாசுடன் பிறந்த மனுக்குலத்தில்
மாசின்றிப் பிறந்த மாணிக்கம் நீ
இயேசுவை அணைத்த கரங்களினால்
சேயரை அணைத்திடாய் தாய்மரியே

2. புழுதியில் பிறந்தோர் புழுதி சென்றார்
பழுதிலா உனக்கோ அழிவுண்டோ
மனிதனின் மாளிகை தகர்ந்து விடும்
மாபரன் ஆலயம் தகர்தலுண்டோ

3. பாரதம் வான் புகழ் பெறவேண்டும்
பாதத்தின் நிழலில் வரவேண்டும்
திருமகன் வழியில் நடைபயில
தினமும் இறைவன் அருள் தருவாய்

## அலையொளிர் அருணனை

அலையொளிர் அருணனை அணிந்திடுமா
மணிமுடி மாமரி நீ
வாழ்க்கையின் பேரரசி - வழுவில்லா மாதரசி
கலையெல்லாம் சேர்ந்தெழு தலைவியும் நீயல்லோ
காலமும் காத்தருள்வாய்

1. அகால வேளையிலே - அம்மா உன் கருணையாலே - 2
பொல்லாத கூளியின் தொல்லைகள் நீங்கிட
வல்ல உன் மகனிடம் கேள்

2. அகோரப் போர் முழங்கி - அல்லலும் தோன்றுதன்றோ
எல்லோரும் விரும்பிடும் நல்லதோர் அமைதியை
சொல்லாமல் அளித்திடுவாய்

## அழகின் முழுமையே தாயே

அழகின் முழுமையே தாயே
அலகையின் தலை மிதித்தாயே
உலகினில் ஒளி ஏற்றிடவே
அமலனை எமக்களித்தாயே

இருளே சூழ்ந்திடும் போதே
உதயத் தாரகை போலே
அருளே நிறைந்த மாமரியே
அருள் வழி காட்டிடுவாயே

அன்பும் அறமும் செய்வோம்
அன்னை உனைப் பின் செல்வோம்
உன்னைத் துணையாய்க் கொள்வோம்
என்றும் பாவத்தை வெல்வோம்.

## அன்னைக்குக் கரம் குவிப்போம்

அன்னைக்குக் கரம் குவிப்போம் - அவள்
அன்பைப் பாடிடுவோம் - அவள்
அன்பைப் பாடிடுவோம்

கன்னிமையில் இறைவன் உருக்கொடுத்தார் - அந்த
முன்னவனின் அன்னை எனத் திகழ்ந்தாள்
மனுக்குலம் வாழ்ந்தி பாதை படைத்தார்
தினம் அவள் புகழினைப் பாடிடுவோம்

பாவமதால் மனிதன் அருள் இழந்தான் - அன்று
பாசமதால் அன்னை கருணை கொண்டாள்
பாரினில் வாடினோர் வாழ்வு கண்டார்
பாவினில் அவள் புகழ் பாடிடுவோம்.

## அருள்நிறை மரியே

அருள்நிறை மரியே ஆரோக்கிய தாயே
வாழிய வாழியவே
அருள் நிறை உலகில் இறையொளிக் கொணர்ந்தாய்
வாழிய வாழியவே.

வேளாங்கண்ணியில் கோயில் கொண்டாய்
பேரன்பால் எமைத் தேடி
தாளாத் துயரால் உன் துணை வேண்டி
நலமடைந்தோர் கோடி.

2. அலைகடலோரம் ஆறுதல் வடிவாய்
திகழ்கின்ற திருமகளே
தலைமகன் கிறிஸ்துவின் தயவினை அடைந்து
தமியோர்க் கருள்பவளே.

## அருள்நிறை மரியே

## (மங்கள வார்த்தை செபம்)

அருள்நிறை மரியே வாழ்க
ஆண்டவர் உம்முடனே - நீர்
பெண்களில் பேறுபெற்றீர் - உம்
வயிற்றின் கனியாம் கிறிஸ்துவும் பெரியோரே
பரிசுத்த மாமரியே எங்கள் பரமனின் மாதாவே
பாவியர் எமக்காய் மன்றாடுவீர்
இன்றுமே அந்திய காலமுமே - ஆமென்.

## அலைகடலின் ஓசையிலே

அலைகடலின் ஓசையிலே
அன்பு மொழி கேட்குதம்மா
அன்னை அவள் ஆலயத்தில்
அருள் நிறைந்து காணுதம்மா.

1. வேளை நகர் திருத்தலத்தில்
வீற்றிருக்கும் அன்னை அவள் - 2
வேண்டும் வரம் தந்திடுவாள்
வேதனைகள் தீர்த்திடுவாள் - 2

2. கண்கவரும் ஆலயமும்
காணிக்கைப் பொருளறையும் - 2
எண்ணில்லாக் கவிதைகளை
என்றென்றும் கூறுதம்மா - 2

3. நொண்டி முடம் கூன் குருடு
நோய்கள் எல்லாம் தீர்ந்திடவே - 2
அண்டி வந்த அனைவருக்கும்
அருள் வழங்கும் அன்னையம்மா - 2

## அலைகடல் ஒளிர் மீனே

அலைகடல் ஒளிர்மீனே - செல்வ
ஆண்டவர் தாயாரே
நிலை பெயராக் கன்னி - மோட்ச
நெறி கதவே வாழி.

1. வானவன் கபிரியேலின் - துத்ய
மங்கள மொழி ஏற்பாய்

ஞான சமாதான வழி நான்
நடந்திட தயை செய்வாய் - 2

2. பாவ விலங்கறுப்பாய் - குருடர்
பார்த்திட ஒளி கொடுப்பாய்
சாவுறுந்தீமை எல்லாம் - நீக்கி
சகல நன்மை அளிப்பாய் - 2.

## ஆரோக்கிய மாதாவே உமது புகழ்

ஆரோக்ய மாதாவே - உமது
புகழ் பாடி துதித்திடுவோம் - எந்நாளும்
பாடித் துதித்திடுவோம்

1. அலைகள் மோதிடும் கடற்கரை தனிலே
வசித்திட ஆசை வைத்தாயே - 2
பலவிதக் கலைகளும் பாரினில் சிறந்திட
**அனைவருக்கும் துணை புரிந்தாயே - 2**

2. தேன் கமழும் சோலை சேர்ந்து விளங்கும்
வேளாங் கன்னியில் அமர்ந்தாயே - 2
வானகமும் இந்த வையகமும்
**அருள் ஓங்கிட எங்கும் நிறைந்தாயே - 2**

## ஆவே கீதம் பாடியே

ஆவே கீதம் பாடியே
உன் புகழைப் பாடுவேன்
உன் அன்பின் பெருமை
அகிலம் விளங்கும்
மாண்பைப் போற்றுவேன் - **ஆவே - 3**

1. பாவிகளின் ஆதரவே
பாருல கோர்க் கொளியே -2
அன்பின் தாய் நீயே
என் குரல் கேளம்மா.

தாயெனவே அழைப்போம்
தாயன்பில் வாழுவோம்
மாய உலகினில்
காத்திடுவாய் அம்மா.

**எவராவது உனக்கு ஏதேனும் ஒரு வேலை செய்திருந்தால் உடனே அவனுக்கு கூலி கொடுக்க வேண்டும். (தொபியாஸ் 4:15)**

## இதயம் மகிழுதம்மா

இதயம் மகிழுதம்மா - துயர்
கரைகள் மறையுதம்மா
உள்ளமும் துள்ளுதம்மா - உந்தன்
தாய்மையின் நிறைவாலே - அம்மா.

1. தாயெனும் போதினிலே - மனம்
தானுன்னைத் தேடுதம்மா
ஈன்ற தாயும் போற்றும் உந்தன்
பாதம் பணிந்திடுவேன் - அம்மா

2. வாழ்வெனும் பாதையிலே - ஒளி
விளக்காய் நீ இருப்பாய்
உண்மை மனதும் உயர்ந்த நெறியும்
இணைந்து வாழ்ந்திடுமே - அம்மா.

## இனிய உன் நாமம்

இனிய உன் நாமம் ஓதிடல் தினமும்
அனைவரும் மகிழ்வோமே
தாயினும் மேலாம் தாயுமே நீயே
தமியோர் திரவியமே
அன்பிதே அன்பிதே மாதா
தன்னலமே அற்ற மாதா
தாயினும் ....

1. கலைமொழியால் உனைத் துதித்திடல் நாளும்
கவலைகள் நீங்குமம்மா
தேனிசைப் பாவால் தாயுன்னைப் பாட
தெவிட்டா உணவாமே

2. பஞ்சமும் நோயும் பகைமையும் தீர
பரிவுடன் காருமம்மா
வளமோடு வாழ்வும் நலமுடன் வாழ
வரமொன்று தாருமம்மா.

## உம்மைத் தேடி வந்தேன்

உம்மைத் தேடி வந்தேன் சுமை தீருமம்மா
**உலகாளும் தாயே அருள் தாரும் அம்மா - 2**

1. முடமான மகனை நடமாட வைத்தாய்
கடல் மீது தவித்த கப்பலைக் காத்தாய்
பால் கொண்ட கலசம் பொங்கிடச் செய்தாய்
**பொருள் கொண்ட சீமான் உன் பாதம் சேர்த்தாய் - 2**

2. கடல் நீரும் கூட உன் கோயில் காண
அலையாக வந்தே உம் பாதம் சேரும்
அருள்தேடி நாங்கள் உம் பாதம் பணிந்தோம்
**அன்பாகி எமக்கு அருள் தாருமம்மா -2.**

3. மலடான மங்கை மடிமீது மகனை
மகிழ்ந்தாடச் செய்த மகிமையின் தாயே
குருடானோர் உம்மை கரங்கூப்பி நின்றால்
**அருளாகி எமக்கு ஒளி தாரும் அம்மா - 2.**

## என் ஆன்மா எந்நாளுமே

ன் ஆன்மா எந்நாளுமே ஆண்டவரை
ற்றி ஏற்றி போற்றுகின்றது
ன் மீட்பரை நினைத்து நினைத்து
ந்தன் நெஞ்சம் மகிழுகின்றது.

1. ஏழைகளை எளியவரை உயர்த்தினார் - பல
இன்னல்படும் உள்ளங்களைத் தேற்றினார்
செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார்
நெஞ்சில் செருக்குற்ற மனிதரை சிதறடித்தார்

2. அடிமைகளை அன்புடனே நோக்கினார் - அவர்
ஆள்பவரின் ஆணவத்தை அடக்கினார்
தாழ்ந்தோரை மேன்மையாக உயர்த்தினார்
வாழ்வில் வீழ்ந்தோரைக் கருணையினால் ஆதரித்தார்.

## கலங்கரை தீபமே

லங்கரை தீபமே
லங்களின் தாரகையே
லங்கிடும் மணியே
லங்குவோர் கதியே
த்திடுவாய் தாயே

1. மாதர்களின் மாதிரியே
மாயிருளில் ஒளிர் தாரகையே - 2
மாதரசியே மனவொளி தாராய்
மாசு அகலச் செய்வாய்

2. தாயெனவே தாவி வந்தோம்
சேயெனவே எமைச் சேர்த்திடுவாய் - 2
பாவி என்னுள்ளம் தாயுனைத் தேடி
கூவிடும் குரல் கேளாய்.

## குழலும் யாழும் குரலினில்

குழலும் யாழும் குரலினில் தொனிக்க
கும்பிடும் வேளையிலே
மழலை இயேசுவை மடியில் சுமந்து
மாதா வருவாளே - ஆரோக்கிய
மாதா வருவாளே

1. செபமே செய்து தபமே புரிந்து
   செபிக்கும் வேளையிலே - 2
   ஜெயமே தருவாள் பயமே வேண்டாம்
   ஜெகத்தின் இராக்கினியே - மாதா

2. வேளாங்கன்னி மாதா அருளை
   வியந்து போற்றுவோமே - 2
   நாளும் பொழுதும் நாயகி அவளை
   நயந்து வாழ்த்துவோமே - என்றும்.

## சூரியன் சாய காரிருள் மெல்ல

1. சூரியன் சாய காரிருள் மெல்ல
   சூழ்ந்திட யாவும் சோர்ந்திடும் வேளை
   பாருலகெங்கும் நிற்றெழுந் தோங்கும்
   பண்புயர் கீதம் வாழ்க மரியே -2

2. மாய உலகில் சிக்கி உழன்று
   வாடியே உள்ளம் சோர்ந்திடும் வேளை
   தாயகம் காட்டி கண்ணீர் துடைத்து
   சஞ்சம் தீர்க்கும் வாழ்க மரியே

3. சுந்தர வாழ்க்கை தோற்றம் மறைய
   துன்ப அலைகள் கோஷித்தெழும்பும்
   அந்திய காலை எம்மறு குற்றுன்
   ஆதரவியும் வாழ்க மரியே -2.

## ஞானம் நிறை கன்னிகையே

ஞானம் நிறை கன்னிகையே
நாதனைத் தாங்கிய ஆலயமே
ஞானம் நிறை கன்னிகையே
**மாண்புயர் ஏழு தூண்களுமாய் - 2**
பலிபீடமுமாய் அலங்கரித்தாயே

1. பாவ நிழலே அணுகா
   பாதுகாத்தான் உன்னையே பரமன்
   **தாய் உதரம் நீ தரித்திடவே - 2**
   தனதோர் அமலன் தலமெனக் கொண்டார்

2. வாழ்வோர் அனைவரின் தாயே
வானுலகை அடையும் வழியே
**மக்கள் இஸ்ராயேல் தாரகையே - 2**
வானோர் துதிக்கும் இறைவியே வாழி.

## தரணியர் வாழ்த்தும்

தரணியர் வாழ்த்தும் தாய்மரியே
வரம் விழைந்தோம் யாம் வாழ்வளிப்பாயே.

1. குவலயம் போற்றிடும் கோமகனை
குறையினைப் போக்கிடக் கொடுத்தவளே
கறையற மனுக்குலம் மிளிர்ந்திடவே
கருணையின் முகில் தனைப் பரப்பிடுவாய்

2. சிலுவையின் அடியிலே தாயானாய்
சிறுமையில் மனிதரின் துணையானாய்
சிலுவையைச் சுமந்திட துணை புரிவாய்
சிதறிய மனிதரைச் சேர்த்திடுவாய்

3. தரணியின் அரசியும் நீயன்றோ
தாழ்ச்சியின் வடிவமும் நீயன்றோ
தாயினும் சிறந்தவள் நீயன்றோ
தாசருக்குறு துணை நீயன்றோ.

## தாரகை சூடும் மாமரியே

தாரகை சூடும் மாமரியே
தாளினைப் பணிந்தோம் காத்திடுவாய்
தாரகை சூடும் மாமரியே

1. தேவனை உலகுக்கு அளித்தவளே
தேடிய துணையைக் கொடுப்பவளே
வாடிய மகவை அணைப்பவளே
வாழிய ஞானியர் காவலியே.

2. தென்னகக் கன்னிக் கடலலையும்
பன்னெழில் இமய மாமலையும்
மின்னெழில் எம் தாயகமும்
உன் புகழ் பணிந்தே பாடாதோ.

3. ஞானமும் அன்பும் நிறைந்தவளே
பாலொளிர் நிலவை மிதித்தவளே
ஈனரெம் இதய மாளிகையில்
இயேசுவை அகலாய் ஏற்றி வைப்பாய்.

## தாவீதின் குலமலரே

தாவீதின் குல மலரே - ஒளி
தாங்கிடும் அகல் விளக்கே - என்னைக்
காத்திடும் ஆரணங்கே - அருள்
சுரந்திடும் தேன் சுனையே
தாவீதின் குல மலரே

1. இறைவனே முதலில் உனைத் தெரிந்தார்
கறை சிறிதில்லாக் காத்திருந்தார் - 2
மறையவர் புகழும் மாமணியே
கரை சேர்ப்பதுவே உன் பணியே.

2. மக்களின் மனமே மகிழ்ந்திடவே
நற்கனி சுதனை எமக்களித்தாய் - 2
கற்றவர் மற்றவர் யாவருமே
பொற்பாதம் சேர்ந்திட வேண்டுமம்மா

## தாயே மாமரி தஞ்சம் தாராய்

தாயே மாமரி தஞ்சம் தாராய் தாய்மரி
மாய உலகினில் காப்பாய் தாய்மரி

1. துன்பக் கடல் தனில் துயரில் மூழ்கையில்
இன்பமாக இனிக்கும் உந்தன் இனிய நாமமே - 2

2. முட்கள் நடுவினில் முளைத்த லீலியே
முப்பொழுதும் கன்னியே உன் புகழைப் பாடுவேன் -2

## தினமும் வாழ்த்துவோம்

தினமும் வாழ்த்துவோம் - ஓ அன்னையே
நாம் தொழுதுனை ஏற்றி
தினமும் வாழ்த்துவோம்

1. தினமும் உமது பதத்தை ஏற்றி
வனமே அரும்பும் மலரைத் தூற்றி
மனமே உமது புகழைச் சாற்றி
தனமோர் அன்னை யென்றுனையே போற்றி.

2. சிறுமை நிறைந்த மனிதன் பூச்சி
வெறுமை அடர்ந்த உலகக் காட்சி
அருமை உமது தயையின் மாட்சி
பெருமை அதற்கு உலகம் சாட்சி.

3. அமுதுநிறை உன் தயைக்குத் துத்யம்
எமது நாவே படிக்கும் நித்யம்
உமது சலுகை எமக்கு சத்யம்
சமயம் உதவி தருவாய் துத்யம்

## தேவ தாயின் மாதம் இதுவல்லவோ

தேவ தாயின் மாதம் இதுவல்லவோ - இதைச்
சிறப்பாய்க் கொண்டாடிடவே
புறப்பட்டு வாரீர் தோழர்

1. பூவில் உள்ள மானிடர்க்குத் தேவ சுதன் தந்த அன்னை
புண்ணிய வரங்கள் எல்லாம் கொண்ட அன்னையே - 2
ஆவலுடன் நாம் எல்லோரும் தேவமரி பாதம் கூடி
ஆனந்த மிகுந்த பல கீதங்களைப் பாடுவோமே.

2. தோட்டங்களில் உள்ள பல வாட்டமில்லா புஷ்பங்களை
சோடு சோடாய் சேர்த்து நல்ல மாலை கட்டுவோம் - 2
கூட்டமாக எல்லோரும் வீட்டில் உள்ள பேரைச் சேர்த்து
கோவிலுக்கு சாயரசைஷ ஆவலுடன் போவோம் வாரீர்.

## நாதத்தின் இனிமையில் பண்

நாதத்தின் இனிமையில் பண்பாடுவோம் - எந்
நாளுமே அன்னையின் புகழ்பாடுவோம்
நெஞ்சத்தில் நிறைந்திடும் நல் அன்னைக்கே
புகழ்பாக்கள் பாடிடுவோம். ஆ ... ஆ ...
அன்னையே வாழ்க - 2
அருளால் நிறைந்த அன்னையே நீ வாழ்க

1. இறைவனின் திருஉளத்தை நிறைவேற்றிட
மனமுவந்தாய் என்றும்
மறைபுகழ் உன் வழி இறையுளம் அறிந்திட
குறையின்றிக் காத்திடுவாய்

2. தரணிக்குத் தாயானாய் - திருத்
தாய்மையைப் பாடுகிறோம் - என்றும்
திருவாம் இயேசுவின் அன்பர்களாக
தாயே உன் அருள் தாராய்.

## மனசெல்லாம் மெல்ல மெல்ல

மனசெல்லாம் மெல்ல மெல்ல
மரியே உன் பேரைச் சொல்ல
அகமே அகமே அருள் நிறையுதம்மா
பூ பூக்கும் நந்தவனம் போல்
எந்தன் மனம் தினம்
அருளால் அருளால் அம்மா உன் அருளால்
கைத்தாளம் போடுவோம் மகிழ்ந்து கூடுவோம்
எக்காளம் ஊதுவோம் புகழ்ந்து பாடுவோம்
ஜெபமாலை சூட்டி மங்களங்கள் கூறுவோம்

1. இறைவன் வாழும் சீயோன் நகரமே
யாவே தங்கிய சீனாய் சிகரமே - 2
அழிந்திடா பேழையை அழகான சோலையே
விண்ணக வாசலே மாசில்லாத கன்னியே
ஆணவத்தை தாழ்ச்சியினால் ஆளும் அமல அன்னையே.

2. இறைவன் உம்மை விரும்பியதாலே
உறைவிடமாக உமைத் தேர்ந்தாரே - 2
ஆண்டவர் உம்மிலே வாழ்கிறார் என்றுமே
அனுதினம் தீமைகள் அழியுமே மண்ணிலே
ஆர்ப்பரிப்போம் அகமகிழ்வோம் நன்றி சொல்லிப் பாடுவோம்.

## மாதாவே சரணம்

மாதாவே சரணம் - உந்தன்
பாதாரம் புவிக்காதாரம் - கன்னி மாதாவே சரணம்
மாபாவம் எம்மை மேவாமல் - 2
காப்பாயே அருள் ஈவாயே.

1. மாசில் நும் மனமும் இயேசுவின் உளமும்
மாந்தரின் தவறால் நோவுறக் கண்டோம் - 2
செபம் செய்வோம் தினம் செபமாலை சொல்வோம்
பாவத்திற்காக பரிகாரம் புரிவோம்.

2. நானிலத்தில் சமாதானமே நிலவ
நாணமில் நாத்தீக ஆணவம் ஒழிக - 2
இனிமை துடலாவி அனைத்துமே உமக்கே - 2
பணிபுரிவோம் உமதாணையின் படியே.

## மாதாவே துணை நீரே

மாதாவே துணை நீரே உம்மை
வாழ்த்திப் போற்ற வரம் தாரும்
இதோ பிள்ளைகள் வந்தோம் அம்மா
ஏற்றன்பாக எமைப்பாரும்.

1. வானோர் தம்மரசே தாயே - எம்
மன்றாட்டைத் தயவாய்க் கேளும்
ஈனோர் என்றெம்மை நீர் தள்ளாமல்
எக்காலத்துமே தற்காரும் - மாதாவே ....

2. ஒன்றே கேட்டிடுவோம் தாயே - நாம்
ஓர் சாவான பாவந்தானும்
இன்றேனும் செய்திடாமற் காத்து
எம்மை சுந்தர்களாய்ப் பேணும் - மாதாவே ...

## மாமறை புகழும் மரியென்னும்

மாமறை புகழும் மரியென்னும் மலரே
மாதரின் மா மணியே

1. அமலியாய் உதித்து அலகையை மிதித்து
அவனியைக் காத்த ஆரணங்கே
உருவிலா இறைவன் கருவினில் மலர
உறைவிடம் தந்த ஆலயமே.

2. பழியினைக் சுமந்த உலகினில் பிறந்து
ஒளியினை ஏற்றிய அகல் விளக்கே
இருள் திரை அகற்றி அருள் வழிகாட்டி
வானக வாழ்வை அளிப்பாயே.

3. வாழ்வினில் வளமே வறுமையில் பலமே
வான்வழி காட்டும் தாரகையே
கலங்குவோர் கதியே கருணையின் நிதியே
கவலைகள் நீக்க வருவாயே.

## மாநிலம் போற்றும் மாரியே

மாநிலம் போற்றும் மாமரியே - புகழ்
மாலைகள் சாற்றிப் பாடிடுவோம் - 2
அம்மா என்று அழைப்போம் - தினம்
ஆறுதல் காட்டி அணைப்பாய் - 2

1. எங்கள் எண்ணம் எண்ணில
எடுத்துச் சொல்லத் தெரியல
சொல்லும் வகைதான் புரியல - அதைச்
சொல்லா திருக்க முடியல
கலக்கம் கொண்ட இதயம்
ஒரு விளக்கம் காண அருள்வாய் -2.

## வியாகுல மாமரியே

வியாகுல மாமரியே தியாகத்தின் மாதாவே
சிலுவை அடியினிலே சிந்தை நொந்தழுதாயோ.

1. பன்னிரு வயதில் ஆலயத்தில் - அன்று
அறிஞர்கள் புகழ்ந்தவரை
கரங்களை விரித்தே கள்வனைப் போல்
கழு மரத்தினில் கண்டதினால்

2. திருமணப் பந்தியில் கனிரசம் - அன்று
அருளிய திருமகனை
குருதிசிந்தக் கடற்காடியினை - இன்று
பருகிடக் கண்டதனால்.

3. கண்ணீர் சிந்திய மனிதருக்கு - அருள்
பண்ணிய திருமகனை
மண்ணவர்க்காகத் தன்னுயிரை - இன்று
மாய்த்திடக் கண்டதினால்.

# 13. கிறிஸ்து அரசர் பாடல்கள்

## மகிமையின் ராஜனே

கிமையின் ராஜனே
துவ தேவனே
கத்தை மீட்டோனே
க்கே ஆராதனை

ஜெயப் போரிகை முழங்க
ஜெகத் தலத்தோர் களிக்க
படைப்புகளெல்லாம் மகிழ
உமக்கே ஆராதனை.

இறையே எம் அரசே
இயேசு பெருமானே
எங்கள் குல உருவே
உமக்கே ஆராதனை.

சிலுவைக் கொடியேற்றி
ஜெபமே முடிதாங்கி
வானகம் திறந்த இறையே
உமக்கே ஆராதனை.

## ராஜாதி ராஜனே

தி ராஜனே தேவாதி தேவனே
ண்ணோர் வணங்கிடும் விமல ராஜனே

வானின்று இறங்கிய உணவு நான் என்றீர்
ஆவலாய் உண்பவர் ஆன்ம வாழ்வைக் கண்டிடுவீர்
  தேவாதி தேவனை ராஜாதி ராஜனை
  போற்றித் துதித்துப் பாடிடுவோம்

அன்பினால் உம்மையே உணவாகத் தந்தீர்
அன்புடன் உலகினில் வாழ்வும் வழியும் கட்டினீர்
  தேவாதி தேவனை ராஜாதி ராஜனை
  போற்றித் துதித்துப் பாடிடுவோம்

சிலுவை மீது ஜீவன் ஈந்த ஜீவ நாடியே
பாவி எங்கள் பாவம் போக்கி பரகதியில் சேர்ப்பீரே
  தேவாதி தேவனை ராஜாதி ராஜனை
  போற்றித் துதித்துப் பாடிடுவோம்

# 14. இயேசுவின் திரு இருதயப் பாடல்கள்

## இயேசுவின் இருதயமே

இயேசுவின் இருதயமே - எங்கும்
எரிந்திடும் அருள்மயமே - உந்தன்
ஆசீரும் அருளும் சேர்ந்து வந்தால் - எங்கள்
ஆனந்தம் நிலை பெறுமே.

1. இறைவனுக்கியதம் உண்டு - அந்த
இதயத்தில் இரக்கம் உண்டு - என்றும்
இரங்கிடும் இறைவன் இருப்பதனால் - இங்கு
அனைவர்க்கும் வாழ்வு உண்டு.

2. கடவுளின் கருணை உண்டு - அந்த
கருணைக்கு உருவம் உண்டு - அவர்
உருவத்தில் உயிர்த்தெழும் உயிர் அதனால் - எங்கள்
உள்ளத்தில் உவகை உண்டு.

3. இரவினில் தீபமுண்டு - இந்த
இல்லத்தில் ஒளியுமுண்டு - எங்கள்
இருதய அன்பர் விழித்திருந்தால் - எந்த
இரவிலும் காவலுண்டு.

## இயேசுவின் மதுர

இயேசுவின் மதுர திரு இருதயமே
சிநேக அக்கினி மயமே
தினமும் நீர் எங்கள் சிநேகமாயிருப்பீர்
தேவதயா நிதியே

1. மனிதரை மோட்ச கதியில் சேர்க்க
மனு மகனாய்ப் பிறந்தாய்
மகிமைப் பிரதாபக் கடவுள் ஆனாலும்
மாபழி மேற்சுமந்தாய்

2. கள்வனைப் போல் கசடர்கள் உன்னைக்
கடுஞ்சிலுவையில் அறைந்தார்
கருணையால் உந்தன் இருதய அன்பின்
கரை எவர் கண்டறிவார்

3. உன் திரு இரத்தம் ஒரு துளி முதலாய்
உனக்கென வைத்தாயோ
ஒய்வில்லா அன்பால் உன்னையே மறந்தாய்
ஓ திரு இருதயமே.

எல்லாம் உமக்காக
இயேசுவின் தூய இருதயமே

எந்தன் சிந்தனை சொல் அனைத்தும்
எந்தன் செயல்கள் ஒவ்வொன்றும்
எந்தன் உடல் பொருள் ஆவி முற்றும்
உன் புகழ் அதிமிக மகிமைக்கே.


எந்தன் பணியும் வளர்ச்சிகளும்
எந்தன் பதவியும் பயிற்சிகளும்
எந்தன் படைப்பும் ஆய்வுகளும்
உன்புகழ் அதிமிக மகிமைக்கே.

ஒளியை நோக்கா மலரில்லை
நீரைத் தேடா வேரில்லை
உன்புகழ் நாடா வாழ்வனைத்தும்
வாழ்வில்லை அதில் பயனில்லை.



தூய வனத்து அந்தோணியார் - புல்லக்கவுண்டன்பட்டி

தூய வனத்து அந்தோணியார் ஆலயம்
புல்லக்கவுண்டன்பட்டி.



புல்லக்கவுண்டன்பட்டி
- வனத்து அந்தோணியார் அன்பியம்
- பாத்திமா மாதா அன்பியம்
- அருளானந்தர் அன்பியம்

# 15. புனிதர்கள் பாடல்கள்

## புனித சூசையப்பர்

### எங்கள் காவலாம் சூசை

எங்கள் காவலாம் சூசை தந்தையின்
மங்களங்கள் எங்கும் சொல்லி இங்கு பாடுவோம் - 2
செங்கை அதிலே தங்க புஷ்பம்
தங்க கோலலை ஏந்திடும் - 2

1. கன்னித் தாயாரின் பத்தா நீ அல்லோ - 2
உன்னதமாய் பேறுமாட்சி உற்ற பாக்கியனே
சென்னி மகுட முடி புனைந்த
மன்னர் கோத்ர மாதவா - 2

2. இயேசு நாதரின் செல்வ தாதை நீ - 2
நேசபுத்திர இன்று ஸ்துத்யம் பாடவந்தோமே
தேசம் ஒருங்கும் திசைகள் எங்கும்
ஆசை கொண்டு பாடவே - 2.

### தந்தையாகும் எம் சூசை

தந்தையாகும் எம் சூசை முனியே - இந்தத்
தருணத்தனிலுமது கருணை புரிந்தருள்வீர்

1. சுந்தர வானோர்களெல்லாம்
சிந்தை மகிழ்ந்தே புகழும்
அந்தமில்லா கைத்தாதையாம் எந்தை முனியே
உந்தன் உதவியடைய வந்தோம்
உந்தன் பாதம் தேடி
உன்னதக் கடவுளான நின்மகனை வேண்டுவாயே.

2. ஆதாம் ஏவையால் புவியில் விளைந்த - பொல்லா
அகந்தை முதல் பாவத்தை நிவர்த்தி செய்ய உதித்தோன்
நீதனான கடவுளுக்காதி தந்தையாக வந்த
நிர்மல மகத்துவம் சேர் தர்ம குணனே
ஆதரவு நீயென்றுந்தன் பாதமதை அண்டி வந்தோம்
அன்புடன் இறங்கி எமக்கின்ப ஆசி நீ அளிப்பாய்

> பொல்லாருக்கு வரும் துன்பங்கள் பல; ஆண்டவரில் நம்பிக்கை கொள்வோரை அவரது பேரன்பு சூழ்ந்து நிற்கும்.
> (திரு. 32:10)

## மது மலர் நிறை கொடி

மதுமலர் நிறைகொடி கையிலேந்தும்
மாட்சிமை நிறை சூசை மாமுனியே
துதிவளர் உமது நற்பதம் வந்தோம்
துணை செய்து எமை ஆளுந்தாதையரே.

வான் உலகிழந்ததால் கர்வமுற்ற
வன்மனக் கூளியின் வலையறுக்க
தான் மனுவாய் உதித்த கடவுள்
தாதையாம் சூசை உன் தஞ்சம் வந்தோம்.

ஒளிநிறை கதிரோனை ஆடை எனும்
உருவைத் தலையிலும் முடி புனைந்த
துளிர் நிகர் அருள் மொழி மாமரியாள்
துணைவனாம் சூசை உன் துணை புரிவாய்.

## மாநிலம் போற்றிடும்

...லம் போற்றிடும் மாவளனே - திரு
...மரிக் காவலனே
...தருள் முதல்வனே புகழ் சுமந்த
...வளனே உம்பாதம் பணிவோம்.

உழைப்பதன் வருத்தம் நீங்கியதோ
இறைவன் கையில் தவழ்வதனால்
மலைபோல் வருந்துயர் வாழ்வினிலே
மறைந்ததுவோ தாய்மரித் துணையால்.

இறைவனின் பணிகள் செய்வதற்கு
இரவும் நண்பகலுமுமக்கு
மறைதரும் அருள்மொழி பெறுவதற்கு
மனத்திடன் தா உம் அடியவர்க்கு.

# புனித அருளானந்தர்

## ஆனந்தரே அருளானந்தரே

...னந்தரே . . . அருளானந்தரே
...றையவனின் ஒளியானாய்
...ரியூர் தந்த விளக்கானாய்

அருளின் ஊற்றாகவே எழுந்தாய்
ஆனந்தரை வாழ்த்திடுவோம்
அவர் புகழைப் பாடிடுவோம்
எளியோர் குரலாகவே ஒலித்தாய்
ஆனந்தரை வாழ்த்திடுவோம்
அவர் புகழைப் பாடிடுவோம்

2. செந்நீர் குளமாகவே நனைந்தாய்
ஆனந்தரை வாழ்த்திடுவோம்
அவர் புகழைப் பாடிடுவோம்
தேவன் மறைசாட்சியாய் திகழ்ந்தாய்
ஆனந்தரை வாழ்த்திடுவோம்
அவர் புகழைப் பாடிடுவோம்.

## புனித அருளானந்தரே

புனித அருளானந்தரே வாழ்க
வாழ்க வாழ்க
புகழ்வோம் பரனே என்றும்
வாழ்க வாழ்க
புனித அருளானந்தரே வாழ்க.

1. மறவ நாட்டின் மாணிக்கமே - எங்கள்
மறைமாநிலத்தின் காவலரே
மனந்தனில் நீர்கொண்ட விசுவாசம் - செம்
மணல்தனில் யாம் கண்ட அருள்வாசம்
வாழ்க வாழ்க வாழ்க

2. இயேசு ஒருவரே தெய்வம் என்று - யாம்
போற்றிடும் திடனைத் தாருமைய்யா
எங்களின் வாழ்வை மலரச்செய்து - இறை
அன்பினில் திளைத்திட வரமருள்வாய்
வாழ்க வாழ்க வாழ்க.

## புனிதர் வாழ்வில்

புனிதர் வாழ்வில் புனிதம் நிறைந்த
இறை குணங்கள் ஆயிரம் - அவை
வாழ்வில் மிளிர்ந்து செயலில் வடித்த
புனிதர் புகழைப் பாடுவோம்

1. நம்பிக்கை விசுவாச ஒளியில் வாழ்ந்த
நம் புனிதர் வாழ்க - 2
எளிமையான வழியினிலே வீறு கொண்டு வாழ்ந்திடவே - 2
நம்மையும் பின்செல்ல அவர் வழியில் அழைக்கின்றாரே.

2. தம் வாழ்வில் பிறரன்பை இறைவனிலே
நிறைவாக்கி வாழ்ந்த எங்கள் புனிதரே
உம்மைப் போல் யாங்களும் எந்நாளும் வாழ்ந்திடவே - 2
எமக்காக என்றும் ஜெபித்திடவே வேண்டுகிறோம்.

2. செந்நீர் குளமாகவே நனைந்தாய்
ஆனந்தரை வாழ்த்திடுவோம்
அவர் புகழைப் பாடிடுவோம்
தேவன் மறைசாட்சியாய் திகழ்ந்தாய்
ஆனந்தரை வாழ்த்திடுவோம்
அவர் புகழைப் பாடிடுவோம்.

## புனித அருளானந்தரே

புனித அருளானந்தரே வாழ்க
வாழ்க வாழ்க
புகழ்வோம் பரனே என்றும்
வாழ்க வாழ்க
புனித அருளானந்தரே வாழ்க.

1. மறவ நாட்டின் மாணிக்கமே - எங்கள்
மறைமாநிலத்தின் காவலரே
மனந்தனில் நீர்கொண்ட விசுவாசம் - செம்
மணல்தனில் யாம் கண்ட அருள்வாசம்
வாழ்க வாழ்க வாழ்க

2. இயேசு ஒருவரே தெய்வம் என்று - யாம்
போற்றிடும் திடனைத் தாருமைய்யா
எங்களின் வாழ்வை மலரச்செய்து - இறை
அன்பினில் திளைத்திட வரமருள்வாய்
வாழ்க வாழ்க வாழ்க.

## புனிதர் வாழ்வில்

புனிதர் வாழ்வில் புனிதம் நிறைந்த
இறை குணங்கள் ஆயிரம் - அவை
வாழ்வில் மிளிர்ந்து செயலில் வடித்த
புனிதர் புகழைப் பாடுவோம்

நம்பிக்கை விசுவாச ஒளியில் வாழ்ந்த
நம் புனிதர் வாழ்க - 2
எளிமையான வழியினிலே வீறு கொண்டு வாழ்ந்திடவே - 2
நம்மையும் பின்செல்ல அவர் வழியில் அழைக்கின்றாரே.

தம் வாழ்வில் பிறரன்பை இறைவனிலே
நிறைவாக்கி வாழ்ந்த எங்கள் புனிதரே
உம்மைப் போல் யாங்களும் எந்நாளும் வாழ்ந்திடவே - 2
எமக்காக என்றும் ஜெபித்திடவே வேண்டுகிறோம்.

# புனித அந்தோனியார்

## அந்தோனியார் புகழ்பாடி

அந்தோனியார் புகழ்பாடி - அவர்
அன்பின் அடைக்கலம் தேடி
இன்னல் துயர் போக்க எண்ணில்லா நோய் நீங்க
இன்பக் களிப்போடு கூடி - அவர்
செய்யும் புதுமைகள் கோடி.

1. பொல்லாத நோய் பிணியிலே - இங்கு
சொல்லொண்ணா துன்பத்தினாலே
இல்லாத குறையொன்றினாலே - குற்றம்
எல்லாம் நிறைந்ததினாலே
ஆதரவாய் உம்மை அண்டினேன் நண்பரே
ஆறுதல் தந்திடுவீர் - எந்தன்
ஆபத்தில் வந்திடுவீரே.

2. எண்ணற்ற பாவங்களாலே - என்
எண்ணத்தின் தாபங்களாலே
முன்னுற்ற மோகத்தினாலே - என்
முன்னேற்ற வேகத்தினாலே
ஆதரவாய் உம்மை . . . .

3. தணியாத தாகத்தினாலே - நான்
தனியாகத் தவித்ததினாலே
துன்பங்கள் தொடர்ந்ததினாலே -நான்
துணிவின்றி துவண்டதனாலே
ஆதரவாய் உம்மை . . . .

## அன்புத் தந்தையே

அன்புத் தந்தையே கருணை தீபமே
எங்கள் அந்தோனியாரே
**புனித நகரிலே புதுமை புரிந்திடும்**
**பதுவைப் புனிதனே வாழ்க**
**வாழ்க வாழ்க வண்ணத் திருவடி**
**புனிதப் பூவனே வாழ்க.**

1. பணியில் வாழ்வும் பகிர்வில் நிறைவும்
பரமன் உன் வரவால்
தணியும் நோய்கள் தகரும் பிணிகள்
தலைவன் உன் நினைவால்

தவிக்கும் உள்ளம் தனை உயர்த்த
தருமம் தாய் என்றாய்
உரிமை வாழ்வை உலகிற்கு உணர்த்த
**புனித நகரிலே .......**

இறைவன் ஒளியில் நாங்கள் செல்ல
வழியைச் சொன்னவனே
நிறை நல்வாழ்வில் நிதமும் வாழ
பாதை தந்தவனே
எந்தன் நெஞ்சில் நீ இருந்து
உண்மை நெறி செல்ல
இறைவன் வாக்கை வாழ்ந்து காட்டி
**புனித நகரிலே .......**

## போற்றிப் புகழ்ந்திடுவோம்

...ாற்றிப் புகழ்ந்திடுவோம்
...ழ்பெறும் புனித அந்தோனியாரை - 2
...ன்னத நாதரின் உத்தம நேயா
...ர் பரனருள் பெற்றிலங்கும் தூயா

சத்திய மறைக்கொரு சற்குண உருவே
நித்திய தேவனின் நிர்மல திருவே
நிதம் பதம் சரண் செய்தோம் அருள் பெறவே
நிதம் எமக்காய் யேசுவை மன்றாடுவாயே.

பேய்களை அஞ்சிட வைத்திடுபவரே
தவறிய பொருளைத் தந்திடுபவரே
நிதம் பதம் சரணம் செய்தோம் அருள் பெறவே
நிதம் எமக்காய் இயேசுவை மன்றாடுவாயே.

## ஆயிரம் ஆயிரம் *(வானமும் பூமியும் மெட்டு)*

ஆயிரம் ஆயிரம் அதிசயங்கள்
அனுதினம் ஆற்றிடும் தூயவனே
ஆவலாய் உன் துணை நாடி வந்தோம்
அடியவர் எமை தினம் ஆதரிப்பீர்

பதுவையாம் நகரில் பிறந்தவனே
பரமனின் அன்பில் உயர்ந்தவனே
புதுமைகள் புரியும் புண்ணியனே
போற்றிடும் எங்கள் காவலனே.

கேட்பதை கேட்க யாம் மறந்தாலும்
கொடுப்பதைக் கொடுக்க நீ மறப்பதில்லை

கேட்பதை மறுப்பது இல்லையென்றோ
கேட்குமுன் வழங்கும் வள்ளல் அன்றோ

4. இயேசுவை உம் திரு கரங்களிலே
ஏந்திய பெருமை பெற்றவரே
இயேசுவின் அருளை எங்களுக்காய்
எந்நாளும் வேண்டும் அந்தோனியாரே.

# 16. கிறிஸ்து பிறப்பு பாடல்கள்

## கருணைக் கடலே வா

கருணைக் கடலே வா
கதித்த தயாபரா வா
சுருதி மறையோர்க்கு
சுடரொளியே வா.

1. ஆதொனாயீ ஆனந்தமே
ஆவலுடன் காத்திருக்கும்
அடிமைகளைச் சந்திக்க

2. எம்மானுவேல் ஏக நாதா
எங்கள் பாலம் தோஷம் தீர
ஏன் இன்னும் வரத் தாமதம்

3. பேய் மயக்கு பாவ வழிப்
பீடையினால் வாடும் உந்தன்
பிள்ளைகளின் மேலிரங்கி.

## கன்னி ஈன்ற செல்வமே

கன்னி ஈன்ற செல்வமே - இம்
மண்ணில் வந்த தெய்வமே
கண்ணே மணியே அமுதே
என் பொன்னே தேனே இன்பமே
எண்ணம் யாவும் வண்ணமே
என்னைத் தேடி வந்ததேன்
ஆரிரோ - ஆரிரோ - 2

1. எங்கும் நிறைந்த இறைவன் நீ
நங்கை உதரம் ஒடுங்கினாய்
ஞாலம் தாங்கும் நாதன் நீ
சீலக் கரத்தில் அடங்கினாய்

தாய் உன் பிள்ளை அல்லவா
சேயாய் மாறும் விந்தை ஏன்

2. வல்ல தேவன் வார்த்தை நீ
வாயில்லாத சிசுவானாய்
ஆற்றல் அனைத்தின் ஊற்று நீ
அன்னை துணையை நாடினாய்
இன்ப வாழ்வின் மையம் நீ
துன்ப வாழ்வைத் தேர்ந்ததேன்.

## கீழ்வானம் சிவக்கும்

கீழ்வானம் சிவக்கும் இயேசுவின் வரவால்
தூள் தூளாய் போகும் தீமையின் வடிவம்
வீழாத உன் தலைமை என் வாழ்நாளில் விளக்கானாய்
வாழாத இவ்வுலகம் செங்கதிராய் நிமிர்ந்து நிற்கும்
இயேசு எம் தலைவா நீர் வருக
புது வாழ்வு தரவே வந்திடுக.

1. எரிந்திடும் மெழுகாய் தியாகமே செய்தால்
செல்லாத காசாக மதிக்கப்பட்டோம்
புரியாத அன்பை பலியாலே விளக்கி
புரிய வைத்தீரே பணியின் மகிமை

2. பொருளினைச் சேர்க்கும் ஆசைகள் குவிந்து
பொன்னான உறவினை முறிக்கின்றது
தலைசாய்க்க இடமே இல்லாமல் வாழ்ந்து
தந்தை அரசின் இல்லாம் அமைத்தீர்.

## சின்னக் குழந்தை இயேசுவுக்கு

சின்னக் குழந்தை இயேசுவுக்கு
என்ன கொடுப்பது - நாம் - 2

மலரைப் படைத்த மழலைக்கு
மலரைக் கொடுப்பதா
கனியைப் படைத்த கண்மணிக்கு
கனியைக் கொடுப்பதா

குரலைக் கொடுத்த குழந்தைக்கு
இசையை எழுப்பவா
விரலைக் கொடுத்த விமலனுக்கு
வீணை மீட்டவா

புவியைப் படைத்த பரமனுக்கு
புவியைக் கொடுப்பதா
பகலும் இரவும் அவரின் புகழை
பாடித் தொழுவதா.

## பெத்லகேம் ஊருக்குச் சென்றிடுவோம்

பெத்லகேம் ஊருக்குச் சென்றிடுவோம் - அந்த
பாலனைக் கண்டிடுவோம்
பேரின்பம் அனைத்தும் குழந்தை வடிவில்
ஒளிரும் காட்சியைக் கண்டிடுவோம்

1. உண்மை ஒளியாய் உதித்ததே
வேற்றுமை அகற்றப் பிறந்ததே
இறைமை வடிவைக் கொணர்ந்ததே - 2
மாமரியின் நல்மகனாய்
மனித உருவை எடுத்ததே - 2.

2. இருண்ட உலகை மீட்கவே
மருண்ட மனதைத் தேற்றவே - 2
உலகின் ஒளியாய் பிறந்தாரே - 2
உள்ளமதைக் கொள்ளை கொள்ளும்
குழந்தை வடிவில் உதித்தாரே - 2.

## மாரனாதா மாரனாதா

மாரனாதா மாரனாதா எம் ஆண்டவரே வருக
மண்ணகத்தோரை மீட்க மனுவேலா வருக

1. அகவிருளை அனற்றும் எழில் ஒளியே வருக
இனிய விடிவெள்ளியே எழுந்தருளி வருக

2. புனித ஈசாயின் வேரில் பூத்த தாவீதின் மைந்தா
புதுமை நிறை வாழ்வினைப் பொழிந்தருள வருக

3. ஏக குரல் எழுப்பி இயங்கும் திருச்சபையின்
அகில மனுமக்களின் அழைப்பினை உவந்தேற்க.

## வானவர் இசையில் வாழ்த்தொழி

வானவர் இசையில் வாழ்த்தொழி கேட்டு
மன்னவனே துயிலாய் -2
அமைதியான இரவு - நம்
அமலன் பிறந்த இரவு
இறைவன் கொண்ட துறவு - நம்
இதயம் வென்ற உறவு
ஆரிராராரோ - ஆரிராராரோ - 2

1. அன்பென்னும் மலர் விரித்து
அருளெனும் மணம் விடுத்து -2
இறைமகன் பிறந்திருக்க
இமையெல்லாம் விழித்திருக்கும்

2. தன்னலம் அறமறந்து
மன்னவன் நிலையுணர்ந்து
விண்ணவர் விழித்திருக்க
மண்ணவர் மகிழ்ந்திருப்பர்

3. நம்மவர் விழி திறக்க
நற்புது வழி பிறக்க
நலந்தரு சொல்லுருவோன்
நம்மிடை பிறந்துள்ளார்.

## விண்ணோர் மகிழ்ந்து பாடும்

விண்ணோர் மகிழ்ந்து பாடும் பாடல்
உன்னைத் தாலாட்ட
மண்ணோர் உவந்து பாடும் பாடல்
உன்னை வரவேற்க
ஆ.. ஆ.. ஆ..

1. தந்தை நெஞ்சில் மஞ்சம் கொண்ட
வார்த்தை நீயன்றோ
தேவ வாழ்வின் தூய மேன்மை
ஏன் துறந்தாயோ - எம்
தாழ்ந்த உள்ளம் தன்னில்
நீ வந்தருள்வாயோ

2. மாபெரும் மகிழ்வை வழங்கும் செய்தி
வானவன் அறிவித்தான்
தாவீதின் நகரில் மாமரி மடியில்
மாபரன் பிறந்துள்ளார் - நின்
பாதம் தொழுதிட வந்தோம்
என் தாகம் தீர்ப்பாயோ.



தூய சூசையப்பர் - மடத்துப்பட்டி

## தூய சூசையப்பர் ஆலயம்
## மடத்துப்பட்டி.



பியங்கள்

- ஜெபமாலை மாதா அன்பியம்
- மாற்கு அன்பியம்
- சூசையப்பர் அன்பியம்
- வனத்து சின்னப்பர் அன்பியம்.

# 17. தவக்காலப் பாடல்கள்

## திருநீற்றுப் புதன்

### கருணை தெய்வமே கண்பாரும்

கருணை தெய்வமே கண்பாரும்
எங்கள் பாவங்களை நீர் பொறுத்தருளும்

1. உடலும் அறிவும் மனமும்
ஒன்று சேர்ந்து உம்மை எதிர்த்ததய்யா
தேவ கட்டளை வழியை
மனம் பன்முறை அறிந்தே வெறுத்தய்யா
பாவச் சேற்றை வாழ்வில் எம்
வாழ்வைக் கொண்டு நிறைந்ததய்யா.

2. பாதை தெளிவுறத் தெரிந்தும்
அதைப் பார்த்த நாங்கள் நடக்கவில்லை
உண்மை விளக்கு எரிந்தும் - அதன்
ஒளியின் அருகே வாழவில்லை
இறைவன் அன்பு அழைத்தும் அதை
உணர்ந்த பின்னும் திருந்தவில்லை.

3. அன்பு செய்யும் இறைவா
உன்னை மறந்து சென்றதை எண்ணுகிறோம்
நீதி நிறையும் தலைவா - எம்
பாவத்தை நினைத்தே கலங்குகிறோம்
தூய வாழ்வின் நிறைவே உன்
மன்னிப்புத் தருவாய் உயிர் பெறுவோம்.

### தயை செய்வாய் நாதா

தயை செய்வாய் நாதா
என் பாவங்களை நீக்கி

1. அன்புடனே ஏழை என்மேல் இரக்கம் வையும்
அனுதபித்து என் பிழையை அகற்றுமையா
பாவமதை போக்கி என்னைப் பனிபோலாக்கும்
தோஷமெல்லாம் தீர்த்து என்னைத் தூய்மையாக்கும்.

2. என் குற்றம் நானறிவேன் வெள்ளிடை மலைபோல்
தீவினையை மறவாதென் மனது என்றும் - உம
புனிதத்தைப் போக்கி நான் பாவியானேன் நீர்
தீமையென்று கருதுவதைத் துணிந்து செய்தேன்

3. பாவத்தில் ஜென்மித்தேன் நீயறிவாய்
தோஷத்தில் பெற்றெடுத்தாள் என் தாயே - உம்
தீர்ப்புதனில் குற்றமோ குறையோ இல்லை நின்
முடிவுகளின் நீதியையும் எதிர்ப்பாரில்லை.

4. உள்ளத்தில் உண்மையை நீர் விரும்புகிறீர் - என்
ஆத்துமத்தின் அந்தரத்தில் அறிவையூட்டும்
என் பாவம் தீர்ப்பாயின் தூய்மையாவேன்
பனிவெண்மைக்குயர்வாகப் புனிதமாவேன்.

5. வல்லவராம் பிதாவை நாம் வாழ்த்திடுவோம்
சுதனேசுக் கிறிஸ்துவுக்கும் தோத்திரமே
உள்ளத்தில் குடி கொள்ளும் ஆவிக்கும்
என்றெக்றும் புகழ் ஒலிக்க - ஆமென்.

## தவக்காலம் இது தவக்காலம்

வக்காலம் இது தவக்காலம்
டிவுகள் மலர்ந்திடும் அருட்காலம்

1. இருளின் வாழ்வு கார்காலம் - அது
மறையவேண்டும் போர்க்காலம் -2
உறுதிகள் கொள்வோம் நிகழ்காலம் -2
உதய வாழ்வே எதிர்காலம்.

2. உள்ளம் நிகழும் ஆராய்ச்சி - அங்கு
பாவ வாழ்வின் பொருட்காட்சி
கலைகள் களைந்து எழுந்திடுவோம்
நிலவும் அன்பின் அரசாட்சி.

## மனிதனே நீ மண்ணாக

னிதனே நீ மண்ணாக இருக்கின்றாய்
ண்ணுக்குத் திரும்புவாய் மறவாதே என்றும்
வாதே மறவாதே - மனிதனே

பூவும் புல்லும் போல் புவியில் வாழ்கிறோம்
பூவும் உதிர்ந்திடும் புல்லும் உலர்ந்திடும்

மரணம் வருவதை மனிதன் அறிவானோ
தருணம் இதுவென இறைவன் அழைப்பானோ

இறைவன் இயேசுவோ இறப்பைக் கடந்தவர்
அவரில் வாழ்பவன் இறந்தும் வாழ்கிறான்.

உலகமனைத்துமே உன்னையே ஏற்றலாம்
ஒரு நாள் வரும் அன்று உடலைப் புதைத்திடும்

எரியும் சுடரையே ஏந்தும் சீடராய்
சிறப்பை எதிர்நோக்கி என்றும் வாழ்ந்திடுவீர்

6. பாவச் சேற்றிலே வீழ்ந்து மடிகிறாய்
பாவம் இறைவனோ பரிதவிக்கின்றார்
7. இறைவன் மனிதனை தேடி அலைகின்றார்
பாவம் மனிதனோ பாவத்தில் திரிகின்றான்
8. துன்ப வேளையிலே துவண்டு துடிக்கின்றாய்
அன்பர் இயேசுவை நாட மறுக்கின்றாய்.

### மன்னிப்பு மன்னிப்பு

மன்னிப்பு மன்னிப்பு மன்னிப்பு தேவா
மன்னிப்பு மன்னிப்புத் தாருமே இறைவா
1. ஆண்டவர் ஆன்மாவை விரும்புகின்றார்
மாண்டிட்ட ஆன்மாவைத் தேடுகின்றார்
அண்டிடும் பாவிக்கு அருளுகின்றார் நேரில்
வேண்டிடும் துரோகிக்கு இரங்குகின்றார்
2. ஆண்டவர் ஞானத்திற்கினிமை யுண்டு
கண்டிக்கக் காலத்தைக் கடத்துகின்றார்
கண்டித்துக் கருணைசொல் கூறுகின்றார் - பாவி
திருந்திட அருட்கொடை வழங்குகின்றார்
3. குற்றங்கள் இல்லையே என்று சொன்னால்
நம்மைத்தான் ஏமாற்றி நலிந்திடுவோம்
குற்றங்கள் அனைத்தையும் எடுத்துரைத்தால்
குற்றத்தை மன்னித்து வாழ்வளிப்பார்.
4. பாவத்தை வெறுத்துத் தள்ளிடுவோம்
ஆபத்தை விலக்கிச் சென்றிடுவோம்
ஆன்மாவை அவரிடம் காட்டிடுவோம் - அதன்
பாவத்தைக் கழுவிட வேண்டிடுவோம்.

# 18. புனித வாரப் பாடல்கள்

## குருத்து ஞாயிறு

### தாவீதின் மகனுக்கு ஓசான்னா

தாவீதின் மகனுக்கு ஓசான்னா
ஆண்டவர் பெயரால் வருகிறவர்
ஆசி நிரம்பப் பெற்றவரே
இஸ்ராயேலின் பேரரசே
உன்னதங்களிலே ஓசான்னா - 2

### எபிரேயர்களின் சிறுவர் குழாம்

எபிரேயர்களின் சிறுவர்குழாம்
ஒலிவக் கிளைகள் பிடித்தவராய்
உன்னதங்களிலே ஓசான்னா
என்று முழங்கி ஆர்ப்பரித்து
ஆண்டவரை எதிர் கொண்டனரே.

மண்ணுலகும் அதில் நிறைந்த யாவும் ஆண்டவருடையன
பூவுலகும் அதில் வாழும் குடிகள் யாவரும் அவர் தம் உடைமையே
ஏனென்றால் கடல்களின் மீது பூவுலகை நிலை நிறுத்தியவர் அவரே
ஆறுகளின் மீது அதை நிலைநாட்டியவர் அவரே

ஆண்டவரது மலை மீது ஏறிச் செல்லத் தகுந்தவன் யார்?
அவரது திருத்தலத்தில் நிற்கக் கூடியவன் யார்?
மாசற்ற செயலினன் தூய உள்ளத்தினன் பயனற்றதில்
மனத்தைச் செலுத்தாதவன்
தன் அயலானுக்கு எதிராக வஞ்சகமாய் ஆணையிடாதவன்

இவனே ஆண்டவரிடம் ஆசி பெறுவான்
இவனே தன்னைக் காக்கும் ஆண்டவரிம் மீட்பு அடைவான்
இறைவனைத் தேடும் மக்களிம் இதுவே
யாக்கோப்பின் கடவுளது திருமுகம் நாடுவோர் இவர்களே

வாயில்களே உங்கள் நிலைகளை உயர்த்துங்கள்
பழங்காலக் கதவுகளே உயர்ந்து நில்லுங்கள்
மாட்சிமிகு மன்னர் உள்ளே நுழையட்டும்
மாட்சிமிகு மன்னர் இவர் யாரோ?
வீரமும் வலிமையும் கொண்ட ஆண்டவரே இவர்.

## ஆயிரக்கணக்கான வருடங்களாய்

ஆயிரக் கணக்கான வருடங்களாய் - எம்
ஆண்டவரே உம்மை எதிர்பார்த்தோம்
இஸ்ராயேல் ஜனங்களை ஆளவரும் - எம்
இயேசு இரட்சகரே எழுந்தருள்வீர்
ஓசான்னா தாவீதின் புதல்வா
ஓசான்னா ஓசான்னா ஓசான்னா

மாமரி வயிற்றினில் பிறந்தவரே
மாமுனி சூசை கரங்களில் வளர்ந்தவரே
மானிடர் குலத்தினில் உதித்தவரே - உம்
மன்னவரே எழுந்தருள்வீரே - ஓசான்னா

தாவீது அரசனின் புத்திரரே - ஓர்
தெய்வீக முடியோடு வந்தவரே
தருமர் எனப் புகழ் அடைந்தவரே - எம்
தேவனே தேவனே வருவீரே - ஓசான்னா

அற்புத யோர்தானில் தீட்சை பெற்றீர் - மா
அருள் போதனரால் வரவேற்றீர்
ஆகாயங்களை நீர் திறக்கச் செய்தீர் - உம்
ஆதி பிதாவினால் புகழப்பட்டீர் - ஓசான்னா

## கிறிஸ்து அரசே இரட்சகரே

கிறிஸ்து அரசே இரட்சகரே
மகிமை வணக்கம் புகழ் உமக்கே
எழிலார் சிறுவர் திரள் உமக்கே
அன்புடன் பாடினர் ஓசான்னா

1. இஸ்ராயேலின் அரசர் நீர்
தாவீதின் புகழ்சேர் புதல்வர் நீர்
ஆசி பெற்ற அரசே நீர்
ஆண்டவர் பெயரால் வருகின்றீர் - கிறிஸ்து

2. வானோர் அணிகள் அத்தனையும்
உன்னதங்களிலே உமைப் புகழ
அழிவுறும் மனிதரும் படைப்புக்களும்
யாவும் ஒன்றாய்ப் புகழ்ந்திடுமே - கிறிஸ்து

3. எபிரேயர்களின் மக்கள் திரள்
குருத்துக்கள் ஏந்தி எதிர் கொண்டனர்
செபமும் கீதமும் காணிக்கையும்
கொண்டு யாம் இதோ வருகின்றோம் - கிறிஸ்து

## ஆண்டவர் புனித நகரத்தில்

1. ஆண்டவர் புனித நகரத்தில்
நுழைகையில் எபிரேயர் சிறுவர் குழாம்
உயிர்த்தெழுதலை அறிவித்தவராய்
**குருத்து மடல்களை ஏந்தி நின்று**
**உன்னதங்களிலே ஓசான்னா**
**என்று மகிழ்வுடன் ஆர்ப்பரித்தார்**

2. எருசலேம் நகருக்கு ஏசு பிரான்
வருதைக் கேட்ட மக்களெல்லாம்
அவரை எதிர் கொண்டழைத்தனரே
**குருத்து மடல்களை ... ..**

## என் இறைவா (தி.பா. 22)

என் இறைவா என் இறைவா
ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர்?

1. என்னைப் பார்ப்போர் எல்லாரும் என்னை ஏளனம் செய்கின்றனர்
உதட்டைப் பிதுக்கித் தலையை அசைக்கின்றனர்
ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்தானே அவர் மீட்கட்டும்
அவருக்கு இவன் மீது பிரியமிருந்தால்
இவனை விடுவிக்கட்டும் என்றார்கள்.

ஏனெனில் பல நாய்கள் என்னைச் சூழ்ந்து கொண்டன
பொல்லாதவர்கள் கூட்டம் என்னை வளைத்துக்கொண்டது
என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள்
என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணிவிட முடியும்
அவர்களோ என்னைப் பார்க்கிறார்கள்
பார்த்து அக்களிக்கிறார்கள்.

என் ஆடைகளை தங்களுக்குள் பகிர்ந்து கொள்கிறார்கள்
என் உடை மீது சீட்டுப் போடுகிறார்கள் ஆனால் நீரோ
ஆண்டவரே என்னை விட்டுத் தொலைவில் போய்
விடாதேயும் எனக்குத் துணையான நீர்
எனக்கு உதவி புரிய விரைந்து வாரும்.

நானோ உம் நாமத்தை என் சகோதரருக்கு
வெளிப்படுத்துவேன் சபை நடுவே உம்மை இவ்வாறு
போற்றுவேன். ஆண்டவருக்கு அஞ்சுவோரே,
அவரைப் புகழுங்கள். யாக்கோபின் சந்ததியே,
நீங்கள் அனைவரும் அவரைப் போற்றுங்கள்
இஸ்ராயேல் மக்களே, நீங்கள் அனைவரும்
அவருக்கு அஞ்சுங்கள்.

# புனித வியாழன்

### *நான் உங்களுக்கு (பாதம் கழுவும்போது)*

ஆண்டவரே, "நீரோ என் பாதங்களைக் கழுவுவது?"
அதற்கு இயேசு : நான் உன் பாதங்களைக் கழுவாவிடில்
உனக்கு என்னோடு பங்கில்லை - என்றார்

சீமோன் இராயப்பரிம் அவர் வரவே
இராயப்பர் அவரை நோக்கிச் சொன்னது :
ஆண்டவரே, நீரோ என் பாதங்களைக் கழுவுவது?
அதற்கு இயேசு : நான் உன் பாதங்களைக் கழுவாவிடில்
உனக்கு என்னோடு பங்கில்லை - என்றார்

நான் செய்வது இன்னதென்று
உனக்கு இப்போது தெரியாது. பின்னரே விளங்கும்.

ஆண்டவரே, நீரோ என் பாதங்களைக் கழுவுவது?
அதற்கு இயேசு : நான் உன் பாதங்களைக் கழுவாவிடில்
உனக்கு என்னோடு பங்கில்லை - என்றார்

## அன்பும் நட்பும் எங்குள்ளதோ

அன்பும் நட்பும் எங்குள்ளதோ
அங்கே இறைவன் இருக்கின்றார்

1. கிறிஸ்துவின் அன்பு நம்மையெல்லாம்
ஒன்றாய்க் கூட்டிச் சேர்த்ததுவே
அவரில் அக்களித்திடுவோம் யாம்
அவரில் மகிழ்ச்சி கொள்வோமே
ஜீவிய தேவனுக்கு அஞ்சிடுவோம்
அவருக்கன்பு செய்திடுவோம்
நேரிய உள்ளத்துடனே யாம்
ஒருவரை ஒருவர் நேசிப்போம்

2. எனவே ஒன்றாய் நாமெல்லாம்
வந்து கூடும் போதினிலே
மனதில் வேற்றுமை கொள்ளாமல்
விழிப்பாய் இருந்து கொள்வோமே
தீய சச்சரவுகள் ஒழிந்திடுக
பிணக்குகள் எல்லாம் போய் ஒழிய
நமது மத்தியில் நம் இறைவன்
கிறிஸ்து நாதர் இருந்திடுக.

## ஆசைமேல் ஆசையாய்

ஆசைமேல் ஆசையாய் இருந்தேன் - இந்த
பாஸ்கா உணவை உண்பதற்கு - நான் - 2

1. பாடுகள் துவங்கும் காலம் இது - நம்
கண்முன் தெரிகின்றது
பகிர்ந்திடும் விருந்து வேளையிது - இங்கு
அன்பு மலர்கின்றது
அன்பினில் பிறந்திடும் துன்பங்கள்
மகிமையின் வாசல்கள் - 2

2. உடலின் உழைப்பும் வலிமையையும் - நாம்
பகிர்ந்தே வாழ்ந்திடுவோம்
குருதியில் கலந்த நல்லறங்கள் - நம்
வாழ்வில் நிறைத்திடுவோம்
பகிர்ந்து வாழும் நெஞ்சங்கள்
பலியதன் பீடங்கள் - 2.

**உமக்கு நான் ஞானத்தைக் கற்பிப்பேன். நீர் என் வார்த்தைகளைக் கவனமாய்க் கேளும். (யோபு 33:33)**

## இறைவன் அழைக்கின்றார்

இறைவன் அழைக்கின்றார் இனிய விருந்திற்கு
இறைகுலமே நாம் இணைந்து சென்றிடுவோம்

பன்னிரு சீடர்களை பந்தியிலே அமர்த்தி
பாதம் கழுவினார் பணிந்து வாழ்ந்திடவே

அப்பத்தினையெடுத்து அன்புடனே கொடுத்து
இது என் உடல் என்றார் எல்லோரும் உண்ணும் என்றார்

இரசத்தைக் கையில் எடுத்து என் இரத்தம் என்றுரைத்தார்
எல்லோரும் பருகுவீர் எந்நாளும் வாழ்ந்திடவே.

## பாடுவாய் என் நாவே

பாடுவாய் என் நாவே
மாண்புமிக்க உடலின் இரகசியத்தை
பாரின் அரசர் சீருயர்ந்த
வயிற்றுதித்த கனியவர் தம்
பூதலத்தை மீட்கச் சிந்தும்
விலை மதிப்பில்லா துயர்
தேவ ரத்த இரகசியத்தை
எந்தன் நாவே பாடுவாயே

அவர் நமக்காய் அளிக்கப்படவே
மாசில்லா கன்னியினின்று
நமக்கென்றே பிறக்கலானார்
அவனி மீதில் அவர் வதிந்து
அரிய தேவ வார்த்தையான
வித்து அதனை விதைத்த பின்னர்
உலக வாழ்வின் நாளை மிகவே
வியத்தகு முறையில் முடிக்கலானார்

இறுதி உணவை அருந்த இரவில்
சகோதரர்கள் யாவரோடும்
அவர் அமர்ந்து நியமனத்தில்
உணவை உண்டு நியமனங்கள்
அனைத்தும் நிறைவு பெற்ற பின்னர்
தம்மைத் தாமே திவ்ய உணவாய்
தம் கையாலே அருளினாரே.

4. ஊன் உருவான வார்த்தையானவர்
வார்த்தையாலே உண்மை அப்பம்
அதனை சரீரம் ஆக்கினாரே
இரசமும் கிறிஸ்து இரத்தமாகும்
மாற்றம் இது நம் மனித அறிவை
முற்றிலும் கடந்ததெனினும்
நேர்மை உள்ளம் உறுதி கொள்ள
மெய் விசுவாசம் ஒன்றே போதும்.

# புனித வெள்ளி

## தந்தையே உம் கையில் *(தி.பா. 31)*

தந்தையே உம் கையில் - என்
ஆவியை ஒப்படைக்கின்றேன்

1. ஆண்டவரே, உம்மிடம் அடைக்கலம் புகுகிறேன்
நான் ஒருநாளும் ஏமாற்றம் அடைய விடாதேயும்
உம்முடைய நீதியின்படி என்னை விடுவித்தருளும்
உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்
ஆண்டவரே வார்த்தையில் தவறாத இறைவா
நீர் என்னை மீட்டருள்வீர்

2. என் எதிரிகள் அனைவருடையவும் பழிச்சொல்லுக்கு
நான் ஆளானேன். என் அயலாரின் நகைப்புக்கு
இலக்கானேன். எனக்கு அறிமுகமானவர்களின்
அச்சத்துக்குரியவனானேன்: வெளியே என்னைக்
காண்கின்றவர்கள் என்னை விட்டு ஓடுகின்றனர்
இறந்து போனவன்போல் பிறர் கண்ணுக்கு
மறைவானேன்: உடைந்து போல மட்கலத்தைப் போலானேன்.

## ஆணி கொண்ட உன்

ஆணி கொண்ட உன் காயங்களை
அன்புடன் முத்தி செய்கிறேன்

1. பாவத்தால் உம்மைக் கொன்றேனே
ஆயனே என்னை மன்னியும்
அன்புடன் முத்தி செய்கிறேன்

2. வலது கரத்தின் காயமே
அழகு நிறைந்த ரத்தினமே
அன்புடன் முத்தி செய்கிறேன்

3. இடது கரத்தின் காயமே
கடவுளின் திரு அன்புருவே
அன்புடன் முத்தி செய்கிறேன்

4. வலது பாதக் காயமே
பலன் மிகத்தரும் நற்கனியே
அன்புடன் முத்தி செய்கிறேன்

5. இடது பாதக் காயமே
திடம் மிகத் தரும் தேனமுதே
அன்புடன் முத்தி செய்கிறேன்

6. திருவிலாவின் காயமே
அருள் சொரிந்திடும் ஆலயமே
அன்புடன் முத்தி செய்கிறேன்.

## இயேசு நம் பிணிகளை

இயேசு நம் பிணிகளை ஏற்றுக்கொண்டார்
நம் நோய்களைச் சுமந்து கொண்டார் - இயேசு

1. நம் பாவங்களுக்காய் காயப்பட்டார்
அக்கிரமங்களுக்காய் நொறுக்கப்பட்டார்
நம்மை நலமாக்கும் தண்டனை
அவர்மேல் விழுந்தது
அவருடைய காயங்களால் குணமடைந்தோம் நாம்.

2. கொல்வதற்காய் இழுக்கப்படும்
ஆட்டுக்குட்டியைப் போல - மயிர்
கத்தரிப்போன் முன்னிலையில் கத்தாத செம்மறிபோல்
வாய்கூட அவர் திறக்கவில்லை
தாழ்மையுடன் அதைத் தாங்கிக்கொண்டார்
அவருடைய காயங்களால் குணமடைந்தோம் நாம்

நம் பாவங்கள் அகற்றிவிட்டார்
இறைவனின் பிள்ளைகளாய் மாற்றிவிட்டார்
கழுமரத்தின் மீது தம் உடலில்
நம் பாவங்கள் அவர் சுமந்தார்
அவருடைய காயங்களால் குணமடைந்தோம் நாம்

நான் உன்னை பிற இனத்தாருக்கு ஒளியாக ஏற்படுத்துவேன்
(எசா 49:6)

## இயேசுவின் அன்பை மறந்திடுவாயோ

இயேசுவின் அன்பை மறந்திடுவாயோ
மறந்திடுவாயோ மனிதப் பண்பிருந்தால்
இயேசுவின் அன்பை
மறந்திடாதிருக்க நீ சிலுவையிலே அவர்
மரித்துத் தொங்கிடும் காட்சி மனதில் நில்லாதோ

1. அளவில்லா அன்பு அதிசய அன்பு
ஆழம் அகலம் நீளம் எல்லை காணா அன்பு
களங்கமில்லா அன்பு கருணை சேர் அன்பு
கல்வாரி மலைக்கண்ணீர் சொல்லிடும் அன்பு

2. அலைகடலைவிடப் பரந்துப் பேரன்பு
அன்னைமார் அன்பெல்லாம் திரையிடுமன்பு
மலைபோல் எழுந்தென்னை வளைத்திடும் அன்பு
சிலையெனப் பிரமையில் நிறுத்திடுமன்பு

3. எனக்காக மனுவுரு தரித்த நல்லன்பு
எனக்காகத் தன்னையே உணவாக்கும் அன்பு
எனக்காக பாடுகள் ஏற்றப் பேரன்பு
எனக்காக உயிரையே தந்த தேவன்பு

4. கலைக்கடங்கா அன்பு கதிதரும் அன்பு
கைதிபோல் இயேசுவை சிறையிடுமன்பு
விதையில்லாப் பலியாக விளங்கிடுமன்பு
விவரிக்க விவரிக்க விரிந்திடுமன்பு.

## கல்மனம் கரைய

கல்மனம் கரைய கண்களும் பனிக்க
கைகளைக் குவித்தேதன் இறைவா
என் மனம் வருவாய் இறைவா.

1. என்னகம் புகுந்து இதயத்தில் அமர்ந்து
பொன்னகம் புனைவாய் இறைவா - 2 - அங்கு
புன்மைகள் நிறைந்து நன்மைகள் நிறைய
**இன்னருள் தருவாய் இறைவா - 2**
**இறைவா இறைவா - 2**

2. பாசத்தைக் களைந்து பாவத்தை விலக்க
பாதத்தைப் பிடித்தேன் இறைவா - 2 - துயர்
வீசிடும் புயலும் வெகுண்டெழும் அலையும்
**அமைந்திடப் பணிப்பாய் இறைவா - 2**
**இறைவா இறைவா - 2**

3. நானென்னும் அகந்தை நரகத்தை அழித்து
நல்லுலகமைப்போம் இறைவா - 2 - அங்கு
பூவெனும் இதய பீடத்தில் எனையே
**பலியாய் அளிப்பேன் இறைவா - 2**
**இறைவா இறைவா - 2**

## *கல்வாரி மலைமேலே*

கல்வாரி மலைமேலே
கள்வர்களின் நடுவினிலே
கனிவுள்ள முகம் பார்த்தேன் - அது
கர்த்தரின் முகமன்றோ - அது
கடவுளின் முகமன்றோ

1. தேகமெல்லாம் இரத்தமயம்
திணறுகிறார் மூச்சுவிட
தாகம் தாகம் என்கின்றார்
தண்ணீர் கொடுக்க யாருமில்லை

2. அழுவதற்கோ ஆட்களில்லை
அணைப்பதற்கோ கரங்களில்லை
அப்பா, தந்தாய் என்கிறார்
ஐயோ பாவம் தேவமைந்தன்.

## *கெட்டுப்போனோம் பாவியானோம்*

கெட்டுப் போனோம் பாவியானோம்
கிருபை செய் நாதனே
கட்டில்லாக் கருணை என்மேல்
வைத்திரங்கும் இயேசுவே.

1. பாடுகள் நீர் பட்டபோது
பாய்ந்து ஓடிய இரத்தம்
கோடிப்பாவம் தீர்ந்து மோட்சம்
கொள்ளுவிக்க வல்லதே.

2. தொல்லை யூதர் தூணினோடு
தூய கைகள் கட்டியே
கடுமையாய் அடித்தபோது
பாய்ந்த செந்நீர் எத்துணை

3. சென்னிமேற் கொடிய யூதர்
சேர்த்து வைத்த முள்முடி
தன்னால் வடிந்த இரத்தத்தால்
சர்வ பாவம் நீங்குமே.

## சிலுவையில் தொங்கும் இயேசுவை

சிலுவையில் தொங்கும் இயேசுவைப் பார்
திருஇரத்தம் சிந்தும் தேவனைப் பார்

1. முள்முடி தலையில் பாருங்களேன்
முகமெல்லாம் இரத்தம் அழகில்லை
கள்வர்கள் நடுவில் கதறுகின்றார் - 2
கருணை தேவன் உனக்காக.

2. கைகால் ஆணிகள் காயங்களே
கதறுகின்றார் தாங்க முடியாமல்
இறைவா ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர் - 2
என்றே அழுது புலம்புகிறார்.

## சிலுவையில் தொங்கும் செம்மறியே

சிலுவையில் தொங்கும் செம்மறியே - என்னைச்
சிலையென நிறுத்தும் அன்புருவே
கசையடி குதறிய உமைக்காண - மனம்
கசிந்திடக் கண்ணீர் பெருகிடுதே - 2

1. சாட்டையால் உமதெழில் மலருடலை - ஒரு
சாலென எண்ணி உழுதனரோ
வேட்டையில் விழுந்த மானெனவே உம்மை
வீணர்கள் எண்ணிக் கீறினரோ - 2

2. கூரிய முள்முடியால் தலையில் - இன்று
ஏறின துன்பம் எவ்வளவோ
யாருமே இல்லையோ நண்பரென உமக்கு
ஆறுதல் தந்து தேற்றிடவே - 2

3. அணைத்திட விரித்த கரங்களிலே - கொடும்
ஆணியே அமைவாய் நுழைந்ததுவோ
தேடிய திருவடி துளைபடவே - அது
திரண்டெழு குருதியில் குளித்ததுவோ - 2.

## எனது ஜனமே நான் உனக்கு

எனது ஜனமே
நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன் சொல்
எதிலே உனக்கு துயர் தந்தேன்
எனக்குப் பதில் நீ கூறிடுவாய்

1. நான் உனக்கான எகிப்தியரை
அவர்தம் தலைச்சன் பிள்ளைகளை
வதைத்து ஒழித்தேன் நீயோ என்னை
கசையால் வதைக்கக் கையளித்தாய்

பாரவோனை செங்கடலிலாழ்த்தி
எகிப்தில் நின்றுன்னை விடுவித்தேன்
நீயோ என்னைத் தலைமையாம்
குருக்களிடத்தில் கையளித்தாய்

3 நானே உனக்கு முன்பாக
கடலைத் திறந்து வழிசெய்தேன்
நீயோ எனது விலாவை ஓர்
ஈட்டியினாலே திறந்தாயே.

4 மேகத்தூணில் வழிகாட்டி
உனக்கு முன்னே யான் சென்றேன்
நீயோ பிலாத்தின் நீதிமன்றம்
என்னை இழுத்துச் சென்றாயே.

5 பாலைவனத்தில் மன்னாவால்
நானே உன்னை உண்பித்தேன்
நீயோ என்னைக் கன்னத்தில்
அறைந்து கசையால் வதைத்தாயே.

6 இனிய நீரைப் பாறையினின்று
உனக்குக் குடிக்க நான் தந்தேன்
நீயோ பிச்சும் காடியுமே
எனக்குக் குடிக்கத் தந்தாயே.

## *சிரசினில் முள்முடி*

சினில் முள்முடி மகுடம்
ளினில் சிலுவையின் பாரம்
லினில் பெருகுது இரத்தம்
வே இறைவனின் சித்தம்

1. மண்ணக வாழ்க்கை நலம் பெற வேண்டி
நாயகன் வருகின்றார்
மண்ணின் புழுதியில் புழுவாய் நெளிந்து
பயணம் செய்கின்றார்
உடலின் வேதனை உள்ளத்தில் உறுதி
இதுவே இறைவனின் நற்செய்தி.

இலட்சிய வாழ்க்கை நிறைவு பெறவே
தாயவள் அழுகின்றாள்
கொண்ட கொள்கையில் தோள் கொடுத்திடவே
நண்பனும் சுமக்கின்றார்
விழுகின்ற போதும் எழுகின்ற உறுதி
இதுவே இறைவனின் நற்செய்தி.

## கல்வாரித் தென்றலே வா

கல்வாரித் தென்றலே வா
கனிவாக தேற்றிட வா
தங்கும் பாவக் கனல் போக்க
எங்கும் தேவ அருள் வீச - 2

1. பெரும் யோர்தான் ஆற்றினிலே திருமுழுக்கானீரே
சிறு கல்வாரி மலை தன்னிலே திருப்பலி ஆனீரே
திருமறையின் உயிரே வா - அருட்
கொடையின் தென்றலே வா.

2. செங்கடல் கடந்திட சீர்பாதை ஆனீரே
பாவக்கடல் கடந்திட பலிப்பொருள் ஆனீரே
செங்கடல் தென்றல் காற்றிதுவே
கல்வாரித் தென்றல் ஆனதுவே.

3. கடும்கோடைக் காலத்திலே கல்வாரி சென்றீரே
கோடையிலே வாடையான குளிர்தந்திட வந்தீரே
பாவம் என்னும் கோடை போக்க
பாடிவரும் தென்றலே வா.

# 19. சிலுவைப் பாதை பாடல்கள்

## எங்கு போகிறீர் இயேசு தெய்வமே

எங்கு போகிறீர் இயேசு தெய்வமே
எனக்காய் சிலுவையைச் சுமக்கும் தெய்வமே

1. பாரச் சிலுவையோ என் பாவச் சிலுவையோ
நீர் சுமந்தது என் பாவச் சிலுவையோ
உம் உள்ளம் உடைந்ததோ என் பாவச் சேற்றினால்

2. கசையால் அடித்தது என் காம உணர்ச்சியால்
காறித் துப்பியது என் பகைமை உணர்ச்சியால்
உம் உள்ளம் . . . .

3. உலக ஆசையால் நான் உம்மை மறந்தேனே
உம் அருளை தேடாமல் நான் இருளை நாடினேன்
உம் உள்ளம் . . . .

4. துன்பம் வந்ததும் நான் சோர்ந்து போகிறேன்
அன்பர் இயேசுவே உம்மை மறந்து போகிறேன்
உம் உள்ளம் . . . .

5. பொறாமை கோபத்தால் உன் கன்னம் அறைந்தேனே
என் பெருமை எரிச்சலால் உன் விலாவில் குத்தினேன்
உம் உள்ளம் . . . .

6. வெரோணிக்காள் உம்மைக் கண்டு கொண்டாளே
நாங்களோ உம்மைக் காண மறுக்கின்றோம்
உம் உள்ளம் . . . .

7. மீண்டும் மீண்டும் நான் பாவம் செய்தேனே
மீட்பர் இயேசுவை விட்டு விலகிச் சென்றேனே
உம் உள்ளம் . . . .

8. தீய சிந்தனை நான் நினைத்ததால்
உம் சிரசில் முள்முடி நான் சூட்டினேன்
உம் உள்ளம் . . . .

9. அசுத்த பேச்சுகள் நான் பேசி மகிழ்ந்ததால்
கசப்புக் காடியை நான் குடிக்கக் கொடுத்தேனே
உம் உள்ளம் . . . .

10. அகந்தை அநீதியால் உன் ஆடை களைந்தேனே
என் ஆணவச் செருக்கால் உம்மை இழந்தேனே
உம் உள்ளம் . . . .

11. தீய வழியில் நான் நடந்து திரிந்ததால்
உன் காலில் ஆணிகள் துளைக்கச் செய்தேனே
உம் உள்ளம் . . . .

12. சிலுவை மரணத்தை நான் வாங்கிக் கொடுத்தேனே
உன் ஜீவன் பிரிந்திட நான் பாதை வகுத்தேனே
உம் உள்ளம் . . . .

13. துயரால் உன் அன்னை துடிக்கச் செய்தேனே
உம் உயிரற்ற உடலை மடி சுமக்கச் செய்தேனே
உம் உள்ளம் . . . .

14. ஆவி போகவே உம்மை அடக்கம் செய்தேனே
மாற்றான் கல்லறை உம் சொந்தமாக்கினேன்
உம் உள்ளம் . . . .

## வலிமை தந்திடும்

லிமை தந்திடும் பயணம் - நிறை
ாழ்வை நோக்கிய பயணம்
லைவன் யேசுவின் பா சுவடில்
ாடரும் வாழ்வில் பயணம்
-ஆ--ஆ--ஆ--ஆ--

எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக.

1. பழிகளைச் சுமத்தி பரிகசித்தார் - உயிர்
பறித்திட எண்ணி தீர்ப்பளித்தார்

2. தாளாச் சிலுவை சுமக்க வைத்தார் - உம்மை
மாளாத் துயரால் துடிக்க வைத்தார்

3. விழுந்தீர் சிலுவைப் பளுவோடு - மீண்டும்
எழுந்தீர் துயர்களின் நினைவோடு

4. தாங்கிட வொண்ணா துயறுற்றே - உம்மைத்
தாங்கிய அன்னை துயறுற்றாள்

5. மறுத்திட முடியா நிலையாலே - சீமோன்
வருத்தினார் தன்னை உம்மோடு.

6. நிலையாய்ப் பதிந்தது உம் வதனம் - அன்பின்
விலையாய் மாதின் சிறு துணியில்

7. ஓய்ந்தீர் பளுவினைச் சுமந்ததனால் - அந்தோ
சாய்ந்தீர் நிலத்தில் மறுபடியும்

8. விழிநீர் பெருக்கிய மகளிருக்கு - அன்பு
மொழிநீர் நல்கி வழி தொடர்ந்தீர்

9. மூன்றாம் முறையாய் நீர் விழுந்தீர் - கால்
ஊன்றி நடந்திடும் நிலை தளர்ந்தீர்

10. உடைகள் களைந்திட உமைத் தந்தீர் - இரத்த
மடைகள் திறந்திட மெய் நொந்தீர்

11. பொங்கிய உதிரம் வடிந்திடவே - உம்மைத்
தொங்கிடச் செய்தார் சிலுவையிலே

12. இன்னுயிர் அகன்றது உமை விட்டு - பூமி
இருளில் ஆழ்ந்தது ஒளி கெட்டு

13. துயருற்றுத் துடித்தார் உடல் நொந்து - அன்னை
உயிரற்ற உடலினை மடி சுமந்து

14. ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு - நீர்
அடங்கிய கல்லறை உமதன்று.

## எங்கு போகிறீர் இயேசு தெய்வமே

எங்கு போகிறீர் இயேசு தெய்வமே
எனக்காய் சிலுவையை சுமக்கும் தெய்வமே

1. குற்றம் ஏதுமில்லா தேவ மைந்தனே
எம் குறையை தீர்க்கவே மரணம் ஏற்றீரே
பிறர் சுமத்தும் குற்றத்தை சுமக்க அருள்தாரும்

2. பாரச்சிலுவையோ எம் பாவச் சிலுவையோ
நீ சுமந்தது எம் பாவச் சிலுவையோ
உன் உள்ளம் உடைந்ததோ எம் பாவ சேற்றினால்

3. உலகின் பாவமோ சிலுவை வடிவிலே
நீ தோளில் சுமக்கவே தளர்ந்து வீழ்ந்தீரே
என் பாவச் சுமையினால் உன் உள்ளம் உடைந்ததோ

4. உடலோ இரத்தத்தால் உருவமில்லாமலே
எதிர்கொண்டாள் அன்னை ஏதும் பேசாமல்
அவர் உள்ளம் துடித்ததோ அன்பு தாயின் வருகையால்

5. மனித வாழ்க்கையை உயர்த்தும் சிலுவையை
மறுக்க முடியாமல் சீமோன் வருந்தி சுமந்தானே
பிறரன்பு பணியிலே நிலைக்க அருள் செய்வீர்

6. துகள் படிந்த உம் திருமுகத்தையே
துணிந்து வெரோணிக்காள் துடைக்க வந்தாளே
நிலையாய் பதிந்ததோ உம் வதனம் துணியிலே

7. புழுதி வீழ்ந்தது எம் பாவ பளுவினால்
நீர் மீண்டும் எழுந்தது எம்மை மீட்கவே
உன் உள்ளம் உடைந்ததோ என் பாவ வாழ்க்கையால்

8. வருந்தும் மகளிருக்கு மொழி நீர் நல்கினீர்
பாவிகள் நாங்களும் வருந்த வரம் தாரீர்
பொங்கும் கடல் போல உம் அன்பை அறிவாரோ

9. மூன்றாம் முறையாக நிலத்தில் வீழ்ந்தீரே
கால் ஊன்றி நடந்திடும் நிலையும் தளர்ந்தீரே
என் அன்பு தேவனே எம் வாழ்வை மீட்கவா

10. உடைகள் களைந்திட உம்மைக் கொடுத்தீரே
மடை திறக்கும் வெள்ளம் போல் உதிரம் சொரிந்தீரே
உன் உள்ளம் உடைந்ததோ எம் பாவச்சேற்றினால்

11. மூன்று ஆணிகள் உம்மைத் துளைக்கவே
மீளாத் துயரினால் நீர் நொந்து வருந்தினீர்
உன் உதிரம் வடிந்திட உம்மை ஈந்திரே

12. இன்னுயிர் அகன்றது இருளில் ஆழ்ந்தது
இயற்கை சீற்றமும் மரணம் அறிவித்தது
உன் அன்பாம் உயிரையே எமக்காய் ஈந்திரே

13. துயருற்று துடிக்க உள்ளம் நைந்திட
உயிரற்ற உடலை அன்னை சுமந்திட
ஆறாத் துயரினால் உம் அன்னை வருந்தினாள்

14. ஒடுங்கிய உடலோ துணியால் பொதிந்திட
நீர் அடங்கிய கல்லறை உமக்குச் சொந்தமல்ல
எம் பாவ செயல்களை அடக்க வரம் தாரும்.

15. முன்னர் பன்முறை நீர் உரைத்ததுபோல
மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தாயே
உன் வரவை எண்ணியே நல்வழிநடப்போம்.

### என்னை நேசிக்கின்றாயா

என்னை நேசிக்கின்றாயா - 2
கல்வாரிக் காட்சியைக் கண்டவ பின்னும்
நேசியாமல் இருப்பாயா?
உம்மை நேசிக்கின்றேன் நான் - 2
கல்வாரிக் காட்சியைக் கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பேனோ?
அழகிய முகத்தினிலே
இரத்த வியர்வையைக் கண்டேனே
உம் வேதனை எனக்குப் புரியாமல்
நானும் உம்மைக் கையளித்தேன்.

1. பிலாத்துவின் அரண்மனையில்
நீர் சிலுவைக்கு தீர்ப்பானீர் - என்
பாவத்தின் தீர்ப்புதான் அந்த சிலுவை
என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளும்

2. இயேசுவின் திருத்தோளில்
பாரச் சிலுவையை சுமத்தினீரே - அதை
சுமக்க வைத்தது யூதர் அல்ல
எங்கள் பாவத்தின் சுமைதானே.

3 பாரம் தாங்காமல்
மன்னன் மண்ணில் வீழ்ந்தீரே - இந்த
மானிடர் செய்த பாவத்தினால்
உம்மை மண்ணில் விழச் செய்தேன்

4 இயேசுவின் துன்ப நிலையை
பெய்ய தாய்கண்டு பதறுகிறாள் - ஓர்
ஆறுதலும் சொல்ல முடியாமல்
அன்னை தவித்தே நின்றழுதாள்

5 சிலுவையைச் சுமக்கையிலே
பாரம் தாங்காமல் துடித்தீரே - சீமோன்
உமக்கு உதவி செய்ததுபோல்
நானும் உம் பாரம் தாங்கிடுவேன்

6 இரத்தமும் வியர்வையும்
வழிந்தோடிய உன் முகத்தை அன்பில்
துடைத்த மாதின் சிறுதுணியில்
நிலையாய் உன் உரு பதித்தாய்

7 இறைவா எனக்காக
மீண்டும் தரையில் விழுந்தீரே
இம்மானிடர் பாவம் போக்கிடவே
அந்தோ எழுந்து நடந்துவிட்டீர்

8 இயேசுவை பின்தொடர்ந்த
பெண்கள் கூவி அழுதனரே - உங்கள்
பிள்ளைகளுக்காக அழுங்கள் என்று
அன்பு கூறி வழி தொடர்ந்தீர்

9 மூன்றாம் முறை வீழ்கையிலே
யேசு நடந்திட மெய் நொந்தீர் கல்லும்
கலரயும் இக்காட்சியை கண்ட பின்னும்
மனம் மாறாமல் இருப்பேனோ

10. உரித்த உம் ஆடைகளை
வெகு கொடூரமாய் களைந்தனரே - மேலும்
குருதி மடையாய் திறந்திடவே
மெய் சிலிர்த்து நிற்பதைப் பார்

11. சுமந்த சிலுவையின்மேல்
உம்மைச் சுமையாய் அறைந்தனரே - அந்த
வேதனை தாங்க முடியாமல்
என் தேவன் தொங்குகின்றார்

12. இறைவனின் ஆவி இந்த
திருச்சிலுவையில் அகன்றதே - அன்று
இறைவன் உரைத்த அருள்வாக்கை
இன்று நிறைவேற்றி வைத்தீரே

13. உயிரற்ற இறைமகனை
அன்னை மடியில் தாங்கிக்கொண்டு
வேதனை தாங்க முடியாமல்
மனம் நொந்து அழுவதைப் பார்


14. மாற்றானின் கல்லறையில்
உடல் அடங்கியே இருந்தீரே - மூன்று
நாட்கள் முடியும் நாட்களிலே
உயிர் பெற்று எழுந்தீரே

15. மரணத்தை வென்றுவிட்டார்
பாவ உலகையே மீட்டுவிட்டார் - இனி
வரும் நாள் அவரை நாம் காண
நல் வழியில் நாம் நடப்போம்.



தூய ஆரோக்கிய அன்னை - மார்க்கநாதபுரம்

# தூய ஆரோக்கிய அன்னை ஆலயம்
# மார்க்கநாதபுரம்.



அன்பியங்கள்

- வேளாங்கன்னி மாதா அன்பியம்
- தோமையார் அன்பியம்
- யோவான் அன்பியம்

# 20. பாஸ்கா காலப்பாடல்கள்

## உயிர்ப்பு ஞாயிறு (புனித சனி)

### ஆண்டவர் மாண்புடன் புகழ் பெற்றார்

ஆண்டவர் மாண்புடன் புகழ் பெற்றார்
எனவே அவரைப் பாடிடுவோம்

குதிரை வீரனைக் குதிரையுடன்
அவரே கடலில் ஆழ்த்திவிட்டார்
எனக்கு மீட்பாய் அவரே
என் துணையும் காவலும் ஆயினாரே.

இறைவன் எனக்கு இவர்தானே
இவரைப் போற்றிப் புகழ்ந்திடுவேன்
என் முன்னோரின் இறைவனிவர்
இவரை ஏற்றிப் புகழ்ந்திடுவேன்
போர்களில் அழிப்பவர் ஆண்டவரே
ஆண்டவர் என்பது அவர் பெயராம்.

### உமது ஆவியை விடுவித்தருளும்

உமது ஆவியை விடுவித்தருளும்
ஆண்டவரே பூமியின் முகத்தைப் புதுப்பித்தருளும்

நெஞ்சே நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக
ஆண்டவரே என் இறைவா நீர் எத்துணை உயர்ந்தவர்
மாண்பும் மகத்துவமும் நீர் அணிந்திருக்கிறீர்

பூமியை நீர் அடித்தளத்தின் மேல் அமைத்தீர்
அது எந்நாளும் அசையவே அசையாது
கடல்களை அதற்கு உடையெனத் தந்திருக்கிறீர்
வெள்ளப்பெருக்கு மலைகளையும் மூடியிருக்கும்படி செய்தீர்

நீரூற்றுகள் ஆறுகளாய்ப் பெருக்கெடுக்க கட்டளை இடுகிறீர்
அலைகளிடையே அலைகளை ஓடச் செய்கின்றீர்
அவற்றினருகே வானத்துப் பறவைகள் குடியிருக்கின்றன
மரக்கிளைகளிடையே இன்னிசை எழுப்புகின்றன.

# உயிர்ப்புப் பாடல்கள்

## உயிர்த்தார் கிறிஸ்து உயிர்த்தார்

உயிர்த்தார் கிறிஸ்து உயிர்த்தார் - இந்த
உலகையே உய்த்துவிட்டார்
வென்றார் கிறிஸ்து வென்றார் - இந்த
அலகையை வென்றுவிட்டார்
ஆர்ப்பரிப்போமே ஆனந்திப்போமா
அல்லேலூயா பாடுவோம் - 2

1. மரணத்தை வென்ற மாவீரன்
மனுக்குலம் மீட்ட இறை மைந்தன்
கல்லறை விட்டு உயிர்த்தெழுந்தார்
கவலைகள் நமக்கு இனி இல்லை.

2. மரணத்தைக் கண்டும் பயமில்லை
மாபரன் இயேசு உயிர்த்துவிட்டார்
பேயின் தலையை மிதித்துவிட்டார்
பிணக்குகள் எல்லாம் போக்கிவிட்டார்.

## சாவை வென்று உயிர்த்தெழுந்தார்

சாவை வென்று உயிர்த்தெழுந்தார்
சாவின் கொடுக்கை தகர்த்தெறிந்தார்
சாவின் ஜெயத்தை முறியடித்தார்
எங்கள் இயேசுவே! அதிசயம் பாருங்கள்
அனைவரும் கூடுங்கள்! ஆண்டவர் வெற்றியில்
ஆனந்தம் அடையுங்கள்

1. மனித வாழ்வு மக்கிப் போகும் தன்மையுடையது - தினம்
புனித வாழ்வை நோக்கி அதுவும் செல்லுகின்றது
இவ்வுலக வாழ்வின் பின்னால் ஒரு வாழ்வு உள்ளது (2) என்று
இறைவன் இயேசு நமக்கு கூறும் திருநாள் இன்று - (சாவை)

2. பதறிப்போன சீடரெல்லாம் பதுங்கி நின்றனரே - அவரை
உதறிவிட்டு மறைந்தவரும் ஒளிந்து வந்தனரே
அந்த கல்லறையை திறந்து கொண்டு
உயிர்த்தெழுந்தாரே - (2) இயேசு
விந்தையான வகைதனிலே வாழ்வு தந்தாரே - (சாவை).

## சாவு வீழ்ந்தது வெற்றி கிடைத்தது

சாவு வீழ்ந்தது வெற்றி கிடைத்தது
இயேசு உயிர்த்தார் அல்லேலூயா
அல்லேலூயா - 7

1. விதைக்கப்படுவது அழிவுக்குரியது
உயிர்த்து எழுவது அழியாதது
புதைக்கப்பட்டதோ வலுவற்றது
உயிர்த்து எழுவதோ வலுவானது
மண்ணில் விழுந்து மடியும் விதைகள்
எழுந்தபோது தருமே பலன்கள்
அல்லேலூயா - 7

2. அழிவின் பாதைகள் சாவு மேடைகள்
அன்பின் ஆட்சிகள் உயிர்ப்பின் வாசல்கள்
பாவம் என்பது இருண்ட மேகங்கள்
திருந்தி வாழ்வது நீல வானங்கள்
பாவம் மறந்து பாதையில் வீழ்ந்து
உயிர்ப்பு வாழ்வே நமது விருந்து
அல்லேலூயா - 7

3. மனித வாழ்வுகள் சிறிது காலங்கள்
அன்புப் பாதையில் நடந்து வாருங்கள
இன்பம் என்பது நீரின் குமிழிகள்
தொடர்ந்தபோதிலும் சுமந்து வாருங்கள்
இருக்கும் வரைக்கும் சுமந்தே செல்வோம்
உயிர்ப்பு வாழ்வில் இறக்கி வைப்போம்.

## சிலுவையில் அறையுண்ட மெசியா

சிலுவையில் அறையுண்ட மெசியா
இறைவல்லமையும் இறைஞானமுமாய் உள்ளார்
இதை உள்ளங்கள் உணர்ந்திடட்டும் - இந்த
உலகமும் அறிந்திடட்டும்
அல்லேலூ . . . அல்லேலூ . . . அல்லேலூயா - 2

1. நெஞ்சினில் அமைதியை இழக்கின்றோம் - மன
நிம்மதி இழந்தே தவிக்கின்றோம்
நோவிலும் சாவிலும் துடிக்கின்றோம் - எங்கள்
தேவனே சிலுவையின் பொருள் சொல்வாய்
இந்தச் சிலுவை உமது வல்லமையோ
இந்தச் சிலுவை உமது ஞானமோ - அல்லேலூ . . .

2. உறவுகள் நிறைவு தருவதில்லை - எங்கள்
உள்ளத்தில் அன்பு வளர்வதில்லை
பிரிவுகள் பிளவுகள் பிணக்குகளே - எங்கள்
வீட்டிலும் நாட்டிலும் வளர்வதிங்கே
இந்தச் சிலுவை . . . . . .

## சொன்னபடி உயிர்த்தெழுந்தார்

சொன்னபடி உயிர்த்தெழுந்தார்
சொல் தவறா நம் இயேசு
அல்லேலூயா ஆனந்தமே
அன்பர் இயேசு உயிர்த்தெழுந்தார்

1. சாவே உன் வெற்றி எங்கே
சாவே உன் கொடுக்கு எங்கே
சாவு வீழ்ந்தது வெற்றி கிடைத்தது
சகல அதிகாரம் நமக்கு உண்டு.

2. விண்ணும் ஒழிந்து போகும்
மண்ணும் மறைந்து போகும்
ஆண்டவர் வாக்கு இன்றும் என்றும்
அழியாதது மாறாதது.

## மரித்த இயேசு உயிர்த்துவிட்டார்

மரித்த இயேசு உயிர்த்து விட்டார் அல்லேலூயா
மன்னன் இயேசு ஜீவிக்கிறார் அல்லேலூயா
அல்லேலூயா ஜீவிக்கிறார் - 2
அல்லேலூயா அல்லேலூயா ஜீவிக்கிறார்

1. மரணம் அவரைத் தடுத்து நிறுத்த முடியவில்லையே
கல்லறையோ கட்டிக்காக்க முடியவில்லையே
யூத சிங்கம் கிறிஸ்து ராஜா வெற்றி பெற்றாரே
சோர்ந்து போன மகனே நீ துள்ளிப் பாடிடு.

2. கண்ணீரோடு மரியாள் போல அவரைத் தேடுவோம்
கர்த்தர் இயேசு நமக்கும் இன்று காட்சி தருவார்
கனிவோடு பெயர் சொல்லி அழைத்திடுவார்
கலக்கமின்றி காலமெல்லாம் சாட்சி பகர்வோம்

3. எம்மாவூஸ் சீடரோடு நடந்து சென்றார்
இறைவார்த்தை போதித்து ஆறுதல் தந்தார்
அப்பம் பிட்டு கண்களையே திறந்து வைத்தார்
அந்த இயேசு நம்மோடு நடக்கின்றார்.

# 21. மன்னிப்புப் பாடல்கள்

## கருணை இறைவா சரணம்

கருணை இறைவா சரணம்
கடைக்கண் பாராண் சரணம்

1. நட்பினை விடுத்தோம்
நலம் தனை இழந்தோம்

2. ஆசைகள் வளர்த்தோம்
அன்பினை விடுத்தோம்

3. நீதியை மறந்தோம்
நேர்மையை துறந்தோம்

4. ஒளியினை வெறுத்தோம்
இருளினில் அலைந்தோம்

5. மன்னிக்க மறந்தோம்
மரம் என இருந்தோம்.

## என் பிழையெல்லாம் பொறுத்தருளும்

என் பிழையெல்லாம் பொறுத்தருளும்

1. செந்நீர் வியர்வை வியர்த்தவரே - என்
2. புண்படக் கசையால் துடித்தவரே - என்
3. முள்முடி சூடிய மன்னவரே - என்
4. துன்பச் சிலுவையைச் சுமந்தவரே - என்
5. தன்னுயிர் தியாகம் புரிந்தவரே - என்
6. மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தவரே - என்
7. நற்கருணை வாழ் நல்லவரே - என்

## அப்பா நான் தவறு செய்தேன்

அப்பா நான் தவறு செய்தேன்
உன் அன்பை உதறிச் சென்றேன் - நான்
கெட்டலைந்து ஓடி வந்தேன்
என்னைக் கண்பாரும் உந்தன் பிள்ளைநான்

1. பாடிவரும் பறவைகளும்
காடுகளின் மிருகங்களும்
உன் அன்பில் மகிழ்ந்திருக்க நான்
உன்னைப் பிரிந்து சென்றேன் - அப்பா

2. சுமைகளில் சோர்ந்தோரே
என்னிடத்தில் வாருமென்றீர் - அந்த
ஆறுதல் வார்த்தை என்னை
உன்னிடத்தில் ஈர்த்ததையா - அப்பா.

## *என் இறைவா என் இறைவா*

என் இறைவா என் இறைவா
மன்னித்து ஏற்றருள்வாய்

1. உனை மறந்து பாவம் செய்தேன்
(உனை விட்டு தூரப்போனேன்) - 2

2. சொல் மறந்து செயல் மறந்து
(பணியை நான் மறந்தேன் ) - 2 - உன்

3. வழி தொலைந்து மதி துறந்து
(வார்த்தையை நான் தவிர்த்தேன் ) - 2 - உன்

## *மனம் இரங்கி மன்னியுமே*

மனம் இரங்கி மன்னியுமே
என் தேவனே என்னை மன்னியுமே
மன்னியுமே! மன்னியுமே!
என் தேவனே என்னை மன்னியுமே

1. வார்த்தையால் குற்றம் செய்தேன்
பிறம் மனம் நோகச் செய்தேன் - மன்னியுமே

2. பொறாமையால் கோபம் கொண்டேன்
பிறர் பொருளை கவர்ந்தேனே

3. உலக ஆசையில் மூழ்கினேன்
உம்மை இழந்து தவித்தேன்

4. மனத்தினால் தீமை செய்தேன்
பெலன் இழந்து தவிக்கின்றேன்.

## *அப்பா அப்பா (10 கட்டளைகள்)*

அப்பா அப்பா - 2 வானிற்கெதிராகவும்
உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன்
உம் மகனெனும் தகுதி யற்றேன்
உம் மகளெனும் தகுதி யற்றேன்

1. **உன் ஆண்டவராகிய கடவுள் நாமே**
பில்லி சூனியம் மாந்திரீகம் ஜாதகம் பார்த்தேன்
தவறு நான் செய்தேன் - உம்
அன்பை இழந்துவிட்டேன்
திரும்பிவந்தேன் - (அப்பா . . . )

2. **கடவுளுடைய திருப்பெயரை வீணாகச் சொல்லாதே!**

இறைவன் பெயரை வீணாய்ச் சொல்லி
ஆணையிட்டு பாவம் பல செய்தேன்
புனிதம் இழந்துவிட்டேன் - உம்
அருளை இழந்துவிட்டேன் - ஆ . . .
திரும்பிவந்தேன் - (அப்பா . . .)

3. **கடவுளின் திரு நாட்களை புனிதமாய் அனுசரி!**

ஞாயிற்றுக்கிழமை கடன்திரு நாட்களில்
திருவிருந்தினில் பங்கு கொள்ளவில்லை
நேரம் வீண் செய்தேன் - தினம்
ஜெபிக்க மறுத்துவிட்டேன் - ஆ . . .
திரும்பிவந்தேன் - (அப்பா . . .)

4. **தாய் தந்தையை மதித்து நட!**

பெற்றோரை எதிர்த்தும் பிள்ளைகளை வதைத்தும்
பாசமின்றி பாவி நான் நடந்தேன்
மதிக்கத் தவறிவிட்டேன் - என்
பொறுப்பை இழந்துவிட்டேன் - ஆ . . .
திரும்பிவந்தேன் - (அப்பா . . .)

5. **கொலை செய்யாதே!**

பிறருக்கு தீங்கு நற்பெயருக்கு களங்கம்
வஞ்சகம் செய்து தீயவை நினைத்தேன்
கரு கலைப்பு செய்தேன்
உம் மன்னிப்பை இழந்துவிட்டேன் - ஆ . . .
திரும்பிவந்தேன் - (அப்பா . . .)

6. **மோக பாவம் செய்யாதே!**

நடையுடையிலும் பாவனையிலும் - வீண்
கவர்ச்சி நான் செய்தேன் தீயவை கண்டேன் - அதில்
இன்பம் அடைந்து வந்தேன் - ஆ . . .
திரும்பிவந்தேன் - (அப்பா . . .)

7. **களவு செய்யாதே!**

பிறரின் உடைமையை பிறரின் சொத்துக்களை
ஆசை மிகக்கொண்டு சேதப்படுத்தியுள்ளேன்
குடித்து சூது செய்தேன் - என்
கண்ணியம் இழந்துவிட்டேன் - ஆ . . .
திரும்பிவந்தேன் - (அப்பா . . .)

8. **பொய்சாட்சி சொல்லாதே!**

பொய்யென்று தெரிந்தும் என் சுய நலத்தால்
உண்மையை மறைத்து புறணி பேசி வந்தேன்
தீர்ப்பிட்டு கெடுத்தேன் - பல
தீமைகள் செய்தேன் - ஆ . . .
திரும்பிவந்தேன் - (அப்பா . . .)


9. **பிறர் தாரத்தை விரும்பாதே!**

பிறரின் தாரத்தை (கணவரை) போதை பொருளென
நினைத்து வாழ்ந்து அன்பை நான் இழந்தேன்
உறவை முறித்துக் கொண்டேன் - உம்
கட்டளை நான் மறந்தேன் - ஆ . . .
திரும்பிவந்தேன் - (அப்பா . . .)

10. **பிறர் உடைமையை விரும்பாதே!**

பிறரில் திறமையில் நல்ல குணத்தையும்
பொறாமை நான் கொண்டேன் பிறரை ஏமாற்றினேன்
தவறாய் அபகரித்தேன் - என்
தந்தை உனை இழந்தேன் - ஆ . . .
திரும்பிவந்தேன் --(அப்பா . . .)

**எண்ணங்களை மனிதர் எண்ணலாம். ஆனால் எதற்கும் முடிவு கூறுபவர் ஆண்டவர். மனிதருடைய நடத்தையெல்லாம் அவர் பார்வையில் களங்கமற்றதாய் தோன்றலாம்; ஆனால் ஆண்டவர் அவர் உள்ளெண்ணத்தைச் சீர்தூக்கிப் பார்க்கிறார் (நீதி. 16:1-2)**



திரு இருதய ஆண்டவர் - மேலப்புதூர்.

திரு இருதய ஆண்டவர் ஆலயம்
மேலப்புதூர்.



அன்பியங்கள்

- சின்னப்பர் அன்பியம்
- சலேசியார் அன்பியம்
- இன்னாசியார் அன்பியம்
- அன்னை தெரசாள் அன்பியம்

# 22. இறந்தோர் பாடல்கள்

## இறந்தோர் வாழ்வு ஒளி பெறுக

இறந்தோர் வாழ்வு ஒளி பெருக - அவர்
இறைவா உம்மிடம் வந்தடைக

1. நின் ஒளி அவர்மேல் ஒளிர்ந்திடுக - புவில்
நிதம் அவர் நினைவு நிலைத்திடுக
தீயவை யாவும் விலகிடுக - (2) - அவர்
தினமுன் மகிழ்வில் திளைத்திடுக.

2. விண்ணக சீயோன் நகரினிலே - நிதம்
பண்ணால் உம் புகழ் அவரிசைக்க
புனிதர் வான தூதருடன் - (2) - உம்மை
புகழ்ந்திடும் பேறு அவர் பெறுக.

3. உலகினில் அவர்கள் இறந்தாலும் - இறை
உறவினில் நிலைத்தே வாழ்ந்திடுக
சாவுயிர்க் கதவினை அடைந்தாலும் - (2) - நித்ய
சாந்தியில் என்றும் இடம் பெறுக.

## இறைவா இரக்கம் மிகுந்தவரே (தி.பா. 130)

இறைவா இரக்கம் மிகுந்தவரே
உந்தன் மீட்பும் உம்முடனே

ஆண்டவரே அளவில்லா வேதனையில்
உம்மை நோக்கிக் கூவி அழைக்கின்றேன்
ஆண்டவரே என் கூக்குரலுக்குச் செவி சாய்த்தருளும்
என் வேண்டுதலின் குரலை உம் செவிகள் கவனமுடன் கேட்கட்டும்

ஆண்டவரே யான் செய்த பாவங்களை நினைவு கூர்வீராகில்
உமக்கு முன் யார் நிற்க முடியும்
வணக்கமுடன் நாங்கள் உமக்கு ஊழியம் செய்யுமாறு
நீர் எங்கள் பாவங்களை மன்னிக்கிறீர்.

**எல்லா வகைக் காற்றிலும் தூற்றிக் கொள்ளாதே; எல்லா வழிகளிலும் போகாதே; இரட்டை நாக்குக் கொண்ட பாவிகள் இவ்வாறே செய்வார்கள். உன் மனச்சான்றை உறுதியோடு பின்பற்று; முன் பின் முரண்படாமல் பேசு.**
**(சீராக் 5:9–10)**

## சுவாமி பாதாளங்களிலிருந்து

சுவாமி பாதாளங்களிலிருந்து
உம்மை நோக்கிக் கூப்பிடுகின்றேன்
சுவாமி என் சப்தத்தைக் கேட்டருளும்
எனது விண்ணப்பத்தின் பேரொலியையும்
உமது செவிதந்து கேட்டருளும்
ஆண்டவரே நீர் எங்கள் குறைகளைப் பாராட்டுவீராகில்
உமக்கு முன் நிலை நிற்க இயல்பவன் யார்
ஆனால் உம்மிடம் மன்னிப்பு உள்ளதால்
பயபக்தியுடனே உம் பணிபுரிவோம்
ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டுள்ளேன்
அவரது மொழிகளை நம்பினேன்
உதய காலத்தை எதிர்நோக்கும் சாமக்காவலைவிட
என் ஆன்மா ஆவலாய் ஆண்டவரை எதிர்பார்க்கிறது
உதய காலத்தை எதிர்நோக்கும் சாமக்காவலைவிட
இஸ்ராயேல் ஆண்டவரை எதிர்பார்ப்பதாக
ஏனெனில் அவர் தயை நிறைந்தவர்
மீட்பும் அவரிடம் ஏராளம்
அக்கிரமங்களை அனைத்திலுமிருந்து
இஸ்ராயேலை அவரே மீட்டருள்வார்.

## தாயே உத்தரிக்கும் ஸ்தலத்தோர்க்கு

தாயே உத்தரிக்கும் ஸ்தலத்தோர்க்கு ஓயாத
தஞ்சமும் ஆதரவும் நீயே - 2

1. தீயில் விழுந்து வெந்து சோர்ந்து - உந்தன்
திருத்தயை கேட்க நீயோ அறிந்து
தூய வான்கதியினில் சேர்ந்து - உன்னை
துதித்திட அருள் செய்வாய் புரிந்து

2. உலகம் பசாசை தினம் வென்றார் - தங்கள்
உடலுக்கும் ஓயாதெதிர் நின்றார்
கலகமெல்லாம் கடந்த பின்னும் - சொற்பக்
கரையினால் துறை சேரார் இன்னும்.

## நித்திய இளைப்பாற்றியை

நித்திய இளைப்பாற்றியை
இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே
முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக

...திமானின் நினைவு என்றென்றும் நிலைத்திருக்கும்
...வை கேட்டாலும் அஞ்சமாட்டான்
...ண்டவரே இறந்த விசுவாசிகள்
...னைவரின் ஆன்மாக்களையும்
...வத்தளை அனைத்திலும் இருந்து விடுவித்தருளும்
...மது அருளின் துணையால் அவர்கள்
...ண்டனைத் தீர்ப்பிலிருந்து தப்பித்து
...த்திய ஒளியின் இன்பம் துய்க்கும்
...று பெறுவார்களாக.

## நித்திய சாந்தி அளித்தருளும் இறைவா

...த்திய சாந்தி அளித்தருளும் - இறைவா
... இவர் பரிசாய் இருந்தருளும்

1. உம் மகன் இவர்க்கென உயிர் துறந்தார் - தம்
உதிரமும் உடலும் பலி ஈந்தார் - 2
இறப்பில் அவருடன் ஒன்றித்த இவர்
உயிர்ப்பிலும் இணைந்து மாட்சியுற.

2. செபங்களும் புகழ்ச்சிப் பலிகளுமே - யாம்
செய்தோம் இறந்தோர் சாந்தியுற - 2
எம் பலிப்பொருள் இதை ஏற்றருளும் - நீர்
எளியரெம் செபங்கள் கேட்டருளும்.

## மரித்த எங்கள் நண்பருக்கு

...ரித்த எங்கள் நண்பருக்கு
...னமிரங்கி தேவா
இன்ப சாந்தி தாரும் - 2

1. மரணமும் பாவமும் வென்றவனே
மனுக்குலம் காத்த மாதவனே
மரித்தவர் தஞ்சம் ஆகிடுவாய்
மாண்புயர் வானில் சேர்த்திடுவாய்

2. வாழ்க்கையின் குறிக்கோள் நீயல்லவா
வாஞ்சையோடணைக்கும் தாயல்லவா
வாழ்வினை நீத்தும் வாழ்வெடுத்த
வாழ்வே இவர்களை ஏற்றிடுவாய்

3. பூதலம் பிறந்த மாந்தரெல்லாம்
சாவது திண்ணம் ஆக்கியவா
சாவினை வென்று வாழ்வளித்த
சேவடி இறந்தோர் சேர்த்திடுவாய்

## முடிவில்லாத வாழ்வைத் தேடி

முடிவில்லாத வாழ்வைத் தேடி வருகின்றேன் - இறைவா
உன் முன்னிலையில் மண்டியிட்டுக் கிடக்கிறேன் - இயேசைய்யா

1. நானே உயிர் தரும் உணவு - என்ற
வார்த்தையின் பொருள் என்னவோ - 2
உன் உடலை உண்ணும் எனக்கென்றும்
பசியில்லையோ துயரில்லையோ
துன்பமில்லையோ - முடிவில்லாத . . . .

2. நானே உயிர் தரும் ஊற்று - என்ற
வார்த்தையின் பொருள் என்னவோ - 2
உன் ஊற்றில் பருகும் எனக் கென்றும்
இறப்பில்லையோ இருளில்லையோ
தாகமில்லையோ - முடிவில்லாத . . . .

3. நானே உலகின் ஒளி - என்ற
வார்த்தையின் பொருள் என்னவோ - 2
உன் ஒளியில் நடக்கும் எனக்கென்றும்
வழியில்லையோ அருளில்லையோ
மீட்பு இல்லையோ - முடிவில்லாத . . . .

# 23.பொது செபங்கள்

## மூவொரு கடவுள் புகழ் (திரித்துவப் புகழ்)

பிதாவுக்கும், சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக. ஆதியிலே இருந்தது போல இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றும் இருப்பதாக, ஆமென்.

## திருச்சிலுவை அடையாள செபம்

அர்ச்சியசிஷ்ட சிலுவை அடையாளத்தினாலே எங்கள் சத்துருக்களிடமிருந்து எங்களை இரட்சித்தருளும். எங்கள் சர்வேசுரா, பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே, ஆமென்.

## கிறிஸ்து கற்பித்த செபம்

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப் -படுவதாக. உம்முடைய இராஜ்ஜியம் வருக. உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல, பூலோகத்திலும் செய்யப்படுவதாக.

எங்கள் அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும். எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பது போல, எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். எங்களை சோதனையில் விழவிடாதேயும். தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும், ஆமென்.

## மரியன்னை (மங்கள வார்த்தை) செபம்

அருள் நிறைந்த மரியே வாழ்க. கர்த்தர் உம்முடனே. பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சியசிஷ்ட மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக் கொள்ளும், ஆமென்.

## மனத்துயர் செபம்

என் இறைவனாகிய தந்தையே, நன்மை நிறைந்தவர் நீர் அனைத்திற்கும் மேலாக அன்புக்கு உரியவரும் நீரே. என் பாவங்களால் உமது அன்பைப் புறக்கணித்ததற்காகவும், நன்மைகள் செய்ய தவறியதற்காகவும் மனம் வருந்துகிறேன். உமது அருள் உதவியால் இனிமேல் பாவம் செய்வதில்லை என்றும், பாவத்துக்கு ஏதுவான சூழ்நிலைகளை விட்டு விலகுவேன் என்றும் உறுதி கூறுகிறேன், ஆமென்.

## பத்துக் கட்டளைகள்

(இறைவன் நமக்கருளிய கட்டளைகள் பத்து):
1) உன் ஆண்டவராகிய கடவுள் நாமே. நம்மைத் தவிர வேறு கட இல்லை. 2) கடவுளின் திருப்பெயரை வீணாகச் சொல்லாதே. 3) கடவுளி திரு நாட்களைப் புனிதமாக அனுசரி. 4) தாய், தந்தையை மதித்துப் பே 5) கொலை செய்யாதே. 6) மோக பாவம் செய்யாதே. 7) களவு செய்யா 8) பொய் சாட்சி சொல்லாதே. 9) பிறர் தாரத்தை விரும்பாதே. 10) பி உடைமையை விரும்பாதே.

## விசுவாசப் பிரமாணம்

பரலோகத்தையும், பூலோகத்தையும் படைத்த எல்லாம் வல்ல பிதாவாகி சர்வேசுரனை விசுவசிக்கிறேன்.

அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவை விசுவசிக்கிறேன். இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாய் உற்பவித் கன்னிமரியிடமிருந்து பிறந்தார். போஞ்சுபிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட் சிலுவையில் அறையுண்டு, மரித்து அடக்கம் செய்யப்பட்டார்.

பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் மரித்தோரிடமிரு உயிர்த்தெழுந்தார். பரலோகத்திற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல பிதாவாகி சர்வேசுரனுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிரு சீவியரையும், மரித்தவரையும் நடுத்தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியை விசுவசிக்கிறேன். பரிசுத்த கத்தோலி திருச்சபையை விசுவசிக்கிறேன். புனிதர்களுடைய சமூதீதப் பிரயோசனத் விசுவசிக்கிறேன். பாவப் பொறுத்தலை விசுவசிக்கிறேன். ச உத்தானத்தை விசுவசிக்கிறேன். நித்திய சீவியத்தை விசுவசிக்கிறே ஆமென்.

## மூவேளை செபம்

ஆண்டவருடைய தூதர் மரியாவுக்கு தூதுரைத்தார்,
தூய ஆவியால் அவர் கருத்தரித்தார் - அருள்நிறை -

இதோ ஆண்டவரின் அடிமை,
உம் சொற்படியே எனக்கு ஆகட்டும் - அருள்நிறை -

வாக்கு மனிதர் ஆனார்,
நம்மிடையே குடிகொண்டார் - அருள்நிறை -

கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும்படி இறைவனின் தூய அன்னையே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

### செபிப்போமாக

இறைவா! உம் திருமகன் மனிதன் ஆனதை உம்முடைய வானத் தூதர் வழியாக அறிந்திருக்கிறோம். அவருடைய பாடுகளினாலும், இறப்பினாலும் நாங்கள் உயிர்ப்பின் மகிமைபெற உமது அருளைப் பொழிவீராக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம், ஆமென்.

## பாஸ்கா கால மூவேளை செபம்

விண்ணக அரசியே, மனம் களிகூறும். அல்லேலூயா
ஏனெனில் இறைவனைக் கருத்தாங்கும் பேறு பெற்றீர் அல்லேலூயா
தாம் சொன்னபடியே அவர் உயிர்த்தெழுந்தார் அல்லேலூயா
எங்களுக்காக இறைவனை மன்றாடும் அல்லேலூயா
கன்னி மரியே, அகமகிழ்ந்து பூரிப்பு அடைவீர் அல்லேலூயா
ஏனெனின் ஆண்டவர் உண்மையாகவே உயிர்த்தெழுந்தார்
அல்லேலூயா

### மன்றாடுவோமாக

இறைவா! உம்முடைய திருமகனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் உலம் மகிழத் திருவுளம் கொண்டீரே. அவருடைய அன்னையாகிய கன்னி மரியாவின் பரிந்துரையால் நாங்கள் நிலை வாழ்வின் பெரு மகிழ்வில் பங்குபெற அருள்புரியும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம், ஆமென்.

* * * * * * * * * * * * * *



கிறிஸ்து அரசர் - வல்லம்பட்டி

## கிறிஸ்து அரசர் ஆலயம்
## வல்லம்பட்டி.




ன்பியங்கள்

- கிறிஸ்து அரசர் அன்பியம்
- லூர்து மாதா அன்பியம்

# 24. ஞாயிறு வழிபாடு

**(குரு இல்லாத இடங்களுக்கான வழிபாட்டு முறை)**

**முதல்வர்** : பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே,

**சபையார்** : ஆமென்.

**முதல்** : சகோதரரே / இறைவனின் அர்ச்சிக்கப்பட்ட மக்களாகிய நாம் / ஆண்டவரின் நாளாகிய இன்று அவரது வார்த்தையைக் கேட்கவும் / அவருக்கு நமது பங்கிலும் உலகெங்கும் செலுத்தப்பெறும் / திவ்விய பலி பூசையோடு ஒன்றித்து / நமது அன்பையும் தொழுகையையும் சமர்ப்பிக்க/ இங்கு வந்திருக்கிறோம்./ நம்மைத் தெரிந்தெடுத்த பிதா / நம்மைத் தமது திரு இரத்தத்தால் மீட்ட சுதன் / நம்மில் வாழ்ந்து நம்மை அர்ச்சிக்கும் தூய ஆவியாகிய / மூவொரு இறைவனைப் புகழ்ந்து பாடி / இந்த வழிபாட்டைத் தொடங்குவோம்.

**2. தொடக்க கீதம்** (நிற்கவும்)

**3. மனத்துயர்** (முழந்தாளிடவும்)

முதல் : நாம் தூய இதயத்தோடு இருந்தால்தான் / நமது வழிபாடு இறைவனுக்கு ஏற்றதாக இருக்கும். ஆகையால் / நம் குற்றங்களுக்காக மன்னிப்புக் கேட்போமாக (சற்று நேரம் மௌன ஆத்ம சோதனை)

சபை : ஆண்டவரே, எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்.

முதல் : எங்கள் விசுவாசக்குறை / செபம் செய்யாமை / சரியாகச் செபிக்காமை ஆகிய குற்றங்களுக்காக வருந்துகிறோம்.

சபை : ஆண்டவரே, எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்

முதல் : அன்புக்கு எதிராக / நாங்கள் செய்த பாவங்களுக்காக வருந்துகிறோம்.

சபை : ஆண்டவரே, எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்.

முதல் : எங்கள் சோம்பலுக்காகவும் / இயன்ற நன்மைகளைச் செய்ய நாங்கள் தவறியதற்காகவும் வருந்துகிறோம்.

சபை : ஆண்டவரே, எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்.

முதல் : எங்கள் ஆணவத்திற்காகவும் / எங்களின் அளவு கடந்த உலக நாட்டங்களுக்காகவும் வருந்துகிறோம்.

சபை : ஆண்டவரே எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்.

முதல் : என் இறைவனாகிய தந்தையே,

சபை : நீர் நன்மை நிறைந்தவர். எனவே, எல்லாவற்றிற்கும் மேலாக உம்மை நான் அன்பு செய்கிறேன். என் பாவங்களால் உமது அன்பை மறந்ததற்காக மனம் வருந்துகிறேன். உமது அருளுதவியால் இனிமேல் பாவம் செய்வதில்லை என்று உறுதி கூறுகிறேன். - ஆமென்.

## 4. புகழ்ச்சிப்பாடல்

(திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் இதைச் சொல்ல வேண்டாம்) (நிற்கவும்)

முதல் : உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக.

சபை : பூவுலகில் நன்மனத்தோர்க்கு அமைதியும் ஆகுக. உம்மைப் புகழ்கிறோம். உம்மை வாழ்த்துகிறோம்.உம்மை ஆராதிக்கிறோம். உம்மை மகிமைப்படுத்துகிறோம்./ உமது மேலான மாட்சிமையின் பொருட்டு / உமக்கு நன்றி கூறுகின்றோம். / ஆண்டவராகிய சர்வேசுரா / வானுலக அரசரே / எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரா, / ஏகசுதனாய் ஜெனித்த ஆண்டவரே/ இயேசு கிறிஸ்துவே / ஆண்டவராகிய சர்வேசுரா, சர்வேசுரனின் செம்மறியே / பிதாவின் சுதனே/ உலகின் பாவங்களைப் போக்குபவரே / எங்கள் மேல் இரக்கமாயிரும். / உலகின் பாவங்களைப் போக்குபவரே / எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும். / பிதாவின் வலப்பக்கம் வீற்றிருப்பவரே/ எங்கள் மேல் இரக்கமாயிரும்./ ஏனெனில் இயேசு கிறிஸ்துவே / நீர் ஒருவரே பரிசுத்தர் / நீர் ஒருவரே ஆண்டவர் / நீர் ஒருவரே உன்னதர் / பரிசுத்த ஆவியோடு பிதாவாகிய சர்வேசுரனின் மாட்சிமையில் இருப்பவர் நீரே, / ஆமென். (அல்லது பாடல்)

## 5. சபை மன்றாட்டு (நிற்கவும்)

(சபை புத்தகத்திலிருந்து இன்றைய சபை மன்றாட்டை வாசிக்கவும். புத்தகம் இல்லாவிடில் கீழ்க்கண்ட மன்றாட்டை சொல்லலாம்)

முதல் : இறைவா, / புனித விருப்பங்கள், நேர்மையான அறிவுரைகள், அறச் செயல்கள் எல்லாம் / உம்மிடமிருந்தே வருகின்றன. / உலகம் தர இயலாத அமைதியை / நீரே உம் அடியார்க்குத் தந்தருளும். / இவ்வாறு எங்கள் உள்ளம் உம்முடைய கட்டளைகளைக் காப்பதில் ஊன்றி நிற்க, / எதிரியின் அச்சம் ஒழிந்து, / உமது பாதுகாவலினால் எங்கள் வாழ்நாட்கள் அமைதியாய்

இருப்பனவாக. ஆண்டவரே, / எங்கள் இதயத்தையும், உள்ளத்தையும் தூய ஆவியாரின் அன்புத் தீயால் தூய்மைப்படுத்தி, உமக்கு உகர்ந்தவர்களாய் எம்மை மாற்றுவீராக. / உம்மோடு தூய ஆவியின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து / ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் / உம் திருமகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**சபை** : ஆமென்.

## 6. முதல் வாசகம் (பழைய ஏற்பாட்டிலிருந்து) (அமரவும்)

**முதல்** : இறைவாக்கினர் வழியாக இறைவன் கூறும் செய்தியினை வணக்கத்துடன் கேட்போம்.

வாசக முடிவில் **சபை** : இறைவா, உமக்கு நன்றி.

**7. பதில் பாடல்** (வழிபாட்டு காலத்திற்கும் வாசகத்திற்கும் ஏற்ற சங்கீதம் ஒன்றைப் பாடுக)

## 8. இரண்டாம் வாசகம்

**முதல்** : இப்போது இறைவன் தம் திருத்தொண்டர் வழியாக நம்மிடம் பேசுகிறார். வாசக முடிவில் **சபை** : இறைவா, உமக்கு நன்றி.

## 9. அல்லேலூயா ஆர்ப்பரிப்பு

(இறைவன் தம் திருமைந்தன் வழியாக பேசப் போகின்றார். அவர் நம் நடுவில் எழுந்து வருவதை உணர்ந்து மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரிப்போம்).

## 10. நற்செய்தி வாசகம் (நிற்கவும்)

**முதல்** : ... எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்

**சபை** : ஆண்டவரே, உமக்கு மகிமை. (நற்செய்தி பகுதியை தெளிவான குரலில் வாசிக்கவும்) அதன் முடிவில் **சபை** : கிறிஸ்துவே, உமக்குப் புகழ்.

## 11. திருவுரை

(பங்குக்குரு அங்கீகரித்த திருவுரை நூலிலிருந்து இன்றைய வழிபாட்டுக்குப் பொருத்தமான பகுதியை வாசிக்கவும்).

## 12. விசுவாச அறிக்கை (நிற்கவும்)

**முதல்** : இறைவனின் வார்த்தையைக் கேட்டோம். அவர் வெளிப்படுத்திய மறையுண்மைகளை / முழு மனத்தோடு ஏற்கிறோம் என்பதைக் காட்ட நம் விசுவாசத்தை அறிக்கையிடுவோம்.

சபை : பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த ........

## 13. விசுவாசிகளின் மன்றாட்டுகள் (நிற்கவும்)

முதல் : விண்ணுலகத் தந்தாய், உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகிலிருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருளுவார். ஏனெனில் இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என்று உம் அன்பு மகன் கூறினாரே, உமமுடைய சொந்த மக்களாக நீர் தெரிந்தெடுத்த நாங்கள் அவருடைய பெயரால் கூடி, அவரோடு சேர்ந்து உம்மை வழிபட்டு, உம்மிடம் வரம் பெற்றுச்செல்ல, இதோ வந்துள்ளோம். எங்கள் மன்றாட்டுகளைக் கேட்கும்படி உம்மைக் கெஞ்சுகிறோம்.

சபை : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முதல் : உமது திருச்சபையை ஒன்றுபடுத்தி, என்றும் காப்பாற்றியருள உம்மை இறைஞ்சி மன்றாடுகிறோம்.

சபை : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முதல் : எங்கள் திருத்தந்தை .... -ஐ / நற்சுகத்தில் காப்பாற்றி, உம் புனித மக்களை அன்பிலும், அமைதியிலும் ஆண்டு நடத்த அவருக்கு வரம் அருள, உம்மைப் பணிந்து மன்றாடுகிறோம்.

சபை : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முதல் : எங்கள் ஆயர்கள், குருக்கள், எங்கள் பங்குக்குரு, துறவியர், ஆசிரியர் இவர்களின் மீது உமது அருட்செல்வத்தைப் பொழிந்து, உமது திராட்சைத் தோட்டத்தில் உழைப்பவர்களின் எண்ணிக்கை இன்மேலும் வளரச் செய்ய உம்மைத் தாழ்ந்து மன்றாடுகிறோம்.

சபை : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முதல் : எங்கள் பெற்றோர், உற்றார், உறவினர்கள், உபகாரிகள், நண்பர்கள் ஆகிய உம் மக்கள் அனைவரும் உமது அன்பிலே வளர்ந்து, உமது மகிழ்ச்சியையும், அமைதியையும் நிறைவாகப் பெற, வரம் அருள மன்றாடுகிறோம்.

சபை : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முதல் : நாட்டை ஆள்வோர் அறநெறியில் நடந்து, நீதியையும், அமைதியையும், வளமான வாழ்வையும், மக்களுக்குப் பெற்றுத்தர உம்மை மன்றாடுகிறோம்.

சபை : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முதல் : பிற கிறிஸ்தவ சபையினரும், கிறிஸ்துவை இன்னும் அறியாத சகோதரர்களும், அவருடைய ஒரே மந்தையில் ஒன்றிக்கும் வரம் அருள உம்மை இறைஞ்சி மன்றாடுகிறோம்.

சபை : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முதல் : பற்பல பிணிகள், வறுமை, இன்னல்களால் வருந்துவோர் மீது உமது கருணைக் கண்களைத் திருப்பியருள உம்மைப் பணிந்து மன்றாடுகிறோம்.

சபை : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முதல் : இறந்த விசுவாசிகள் முடிவில்லாத இளைப்பாற்றியை அடைய வேண்டுமென மன்றாடுகிறோம்.

சபை : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முதல் : செபிப்போமாக. எங்கள் அடைக்கலமும், ஆற்றலுமான இறைவா, எங்களிடம் இறையுணர்வைத் தூண்டியெழுப்புகின்றவரே, உமது திருச்சபையின் உருக்கமான செபங்களைக் கேட்டருளி, நாங்கள் விசுவாசத்தோடு வேண்டிக் கேட்பவற்றைத் தந்தருளும். எங்கள் ஆண்டவரான கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

சபை : ஆமென்.

## 14. காணிக்கை (அமரவும்) (காணிக்கை எடுக்கும்போது காணிக்கைப் பாடல் ஒன்றைப் பாடவும். காணிக்கைத் தட்டைப் பக்தியுடன் ஏந்திச் சென்று பீடத்தில் வைக்கவும்)

## 15. பலி நினைவு (முழந்தாளிடவும்)

முதல் : தூயவரான தந்தையே, என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா, உலகெங்கும் உம் மக்கள் ஒன்று கூடி, தம் மீட்பின் பலியை, திருப்பலியில் தங்களுடையதாக்கி, உமக்கு ஒப்புக் கொடுக்கின்றனர். அந்த ஈடில்லாப் பலியை நாங்கள் ஒரு குருவோடு சேர்ந்து ஒப்புக்கொடுக்கும் பேற்றினைப் பெறவில்லை. ஆகவே, எங்கள் இதயங்களின் ஆசையையும், ஆர்வத்தையும் கண்ணோக்கி, நாங்களும் அத்திருப்பலி பலன்களில் பங்கு பெற அருள்வீராக.

சபை : ஆமென்.

முதல் : பரம தந்தாய், எங்கள் உன்னத குருவாம் இயேசு கிறிஸ்து திருப்பலியில் தம்முடைய திரு உடலாகவும், திரு இரத்தமாகவும் மாற்றி உமக்கு ஒப்புக் கொடுப்பதற்காக, உமக்கு அப்பமும், இரசமும் அர்ப்பணிக்கின்றனர். அவை அந்த விசுவாசிகளின் தியாகம் நிறைவுள்ளதைக் குறிக்கும் அடையாளங்களாகும். இதோ நாங்கள் எங்களை முழுவதும் எங்கள் உயிர், அன்பு, வேலைகள், இன்ப துன்பங்கள் அனைத்தையும் கிறிஸ்துநாதருடைய பலியோடு ஒன்றித்து உமக்கு அர்ப்பணிக்கின்றோம். அவற்றை அன்புடன் ஏற்று, வாழ்விலும், தாழ்விலும் நாங்கள் உம்முடையவர்களாயிருக்க அருள்புரியும்.

சபை : ஆமென்.

## 16. கிறிஸ்து கற்பித்த செபம் (நிற்கவும்)

முதல் : நம் ஆண்டவர் நமக்காக இறந்து, உயிர்த்து, நமக்கு மீட்பைக் கொணர்ந்ததைச் சிறந்த முறையில் நினைவு கூறும் இந்நாளில், திருச்சபையின் வழியாக அவர் நமக்களித்த போதனைகளுக்கு செவிசாய்த்தோம். அவர் வழியாக நம் விண்ணுலகத் தந்தைக்கு வழிபாடும், நன்றியும் செலுத்தினோம். நம்முடைய அன்றாட வாழ்க்கையே தொடர்ந்து நாம் செலுத்தும் நன்றியாகவும், வழிபாடாகவும் அமைய வேண்டும். அதற்கு இடைவிடாது நமக்கு அளிக்கப்படும் அருள் உதவியைக் கொண்டு நம் ஆண்டவரைப் போல, பரம தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற எப்போதும் முயல்வோம் என்ற தீர்மானம் நமக்கு இருக்க வேண்டும். இத்தகைய அன்புள்ளத்துடன் நம் அன்புத் தந்தையை நோக்கி, நமதாண்டவரே நமக்குக் கற்பித்த செபத்தை சொல்வோமாக.

சபை : பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, .......

## 17. ஞான நன்மை (முழந்தாளிடவும்)

முதல் : அன்புள்ள தந்தையே, உம் திருமைந்தனின் உடலும், இரத்தமும் எங்களுக்கு வாழ்வளிக்கும் உணவாக இருக்கவேண்டுமென அருளினீரே, இதோ உம் பிள்ளைகள் அந்த விண்ணுலக அப்பத்துக்காகப் பசியோடு காத்திருக்கிறோம். ஆனால் இப்போது நற்கருணை வழியாக அத்திருப் பந்தியில் பங்குபெற இயலாததினாலே, ஞான விதமாயாவது நாங்கள் அதில் பங்கு பெற்று, முடிவில்லா வாழ்வுக்கான ஊட்டத்தை அடைய அருள்வீராக.

சபை : ஆமென்.

(சற்று நேரம் மௌனமாக செபிக்கவும். பின்பு அமைதியும், அன்பும் கலந்த குரலில் சொல்லவும்)

முதல் : அன்பான இயேசுவே, நீர் என் உள்ளத்தில் இருப்பதாகப் பாவித்து உம்மைத் தொழுது, என்னை முழுவதும் உம்மோடு ஒன்றிக்கிறேன் ஒருபோதும் உம்மைவிட்டு நான் பிரியாமல் இருக்க அருள்புரிவீராக.

சபை : ஆமென்.

(கீழ்க்கண்ட செபத்தைச் சொல்லவும், அல்லது பாடல் ஒன்றைப் பாடவும்)

முதல் : கிறிஸ்துவின் திரு ஆன்மாவே

சபை : என்னை அர்ச்சித்தருளும்.

முதல் : கிறிஸ்துவின் திரு உடலே

சபை : என்னை மீட்டருளும்.

முதல் : கிறிஸ்துவின் திரு இரத்தமே

சபை : என்னை நிரப்பியருளும்

முதல் : கிறிஸ்துவின் திருவிலாத் தண்ணீரே

சபை : என்னைக் கழுவியருளும்.

முதல் : கிறிஸ்துவின் திருப்பாடுகள்

சபை : என்னைத் திடப்படுத்தும்

முதல் : ஓ, நல்ல இயேசுவே

சபை : எனக்கு செவிசாய்த்தருளும்

முதல் : உமது திருக்காயங்களுக்குள்ளே

சபை : என்னை மறைத்தருளும்

முதல் : உம்மைவிட்டு என்னைப் பிரியவிடாதேயும்.

சபை : தீயோனிடமிருந்து, என்னைக் காத்தருளும்.

முதல் : என் இறுதி நேரத்தில் என்னை அழைத்தருளும். உம் புனிதரோடு எக்காலமும் நான் உம்மைப் புகழ பணித்தருளும்.

சபை : ஆமென்.

### 18. ஆசீர் கோருதல்

முதல் : நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியின் நட்புறவும் நம் அனைவரோடும் எப்போதும் இருப்பதாக. இந்த ஆசீர் நம் கிறிஸ்தவ அழைப்பிற்கு ஏற்ப, நம் வேலையிலும், ஓய்விலும், சிந்தனை, சொல், செயல்களிலும் கடவுளின் திருவுளத்துக்குப் பணிந்து நடக்கச் செய்வதாக.

சபை : எல்லாம் வல்ல இறைவன், பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் ஆசீர் நம்மீது இறங்கி, என்றும் நம்மில் தங்கி இருப்பதாக, ஆமென்.

### 19. இறுதிப் பாடல்

### 20. முடிவு

முதல் : பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே,

சபை : ஆமென்.

# 25. ஜெபமாலை மறையுண்மைகள்

## 1. சந்தோச தேவ இரகசியங்கள்

(திங்கள், சனிக்கிழமைகளில்)

கபிரியேல் தூதர் மங்கள் வார்த்தை அறிவித்தல்
தேவமாதா எலிசபெத்தம்மாளைச் சந்தித்தல்
இயேசுவின் பிறப்பு
இயேசுவை ஆலயத்தில் அர்ப்பணித்தல்
12 வயதில் காணாமல் போன இயேசுவைக் கண்டு களி கூறுதல்

## 2. துக்கத் தேவ இரகசியங்கள்

(செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில்)

இயேசு பூங்காவில் இரத்த வியர்வை வியர்த்தல்
இயேசுவைக் கற்றூணில் கட்டி அடித்தல்
இயேசுவின் தலையில் முள்முடி சூட்டல்
இயேசு சிலுவை சுமந்து செல்லல்
இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறத்தல்

## 3. மகிமை தேவ இரகசியங்கள்

(புதன், ஞாயிற்றுக்கிழமைகளில்)

1. இயேசு மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தல்
2. இயேசு 40ஆம் நாள் விண்ணுக்குச் செல்லல்
3. தூய ஆவி மரியாளையும், திருத்தூதர்களையும் நிறைத்தல்
4. மரியன்னை உடலோடும், ஆன்மாவோம் விண்ணிற்கு எடுத்துக் கொள்ளப்படுதல்
5. மரியன்னை விண்ணக, மண்ணக அரசியாக முடிசூட்டப்படுதல்

## 4. ஒளியின் தேவ இரகசியங்கள்

(வியாழக்கிழமைகளில்)

1. இயேசு யோர்தானில் திருமுழுக்கு பெறுதல்
2. கானாவூர் திருமணத்தில் தண்ணீரைத் திராட்சை இரசமாக்குதல்
3. மலைப்பொழிவும், மனம் மாறா இறையரசு அறிவிக்கப்படுதல்
4. இயேசு தோற்றம் மாறுதல்
5. இயேசு நற்கருணையை ஏற்படுத்துதல்

## முடிவு செபம்

அதிதூதரான புனித மிக்கேலே, தேவ தூதர்களான புனித கபிரியேலே, ரபேலே, அப்போஸ்தலர்களான புனித இராயப்பரே, சின்னப்பரே, அருளப்பரே நாங்கள் எத்தனை நீச பாவிகளாயிருந்தாலும் நாங்கள் வேண்டிக் கொண்ட இந்த ஐம்பத்தி மூன்று மணி செபத்தையும், தேவமாதாவின் திருப்பாதத்திலே பாத காணிக்கையாக வைக்கிறோம். இச்செபத்தின் பலனாக பாவிகள் மனந்திரும்பும்படியாகவும், உத்தரிக்கிற நிலை ஆன்மாக்கள் மோட்சம் சேரும்படியாகவும், எம் ஒவ்வொருவரின் கருத்துக்கள் நிறைவேறும்படியாகவும், புனித செபமாலை இராக்கினியை மன்றாடுவோமாக. (1 பர. 1அரு. 1திரி)

## மிகவும் இரக்கமுள்ள தாயே!

மிகவும் இரக்கமுள்ள தாயே! இதோ! உம்மிடம் அடைக்கலமாக ஓடிவந்தோம். உம்முடைய உபகார சகாயங்களை இரந்து மன்றாடும் ஒருவராகிலும் உம்மால் கைவிடப்பட்டதாக உலகில் ஒருபோதும் சொல்லக் கேள்விப்பட்டதில்லை என்பதை நினைத்தருளும். கன்னியருடைய இராக்கினியான கன்னிகையே, தயையுள்ள தாயே, இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு உமது திருப்பாதத்தை அண்டி வருகிறோம். பெருமூச்சறிந்து அழுது நிற்கிற பாவிகளாகிய நாங்கள் உமது தயாளத்தைக் காத்துக்கொண்டு உமது சமூகத்திலே நிற்கிறோம். அவதரித்த வார்த்தையின் தாயே எங்கள் மன்றாட்டைப் புறக்கணியாமல் தயாபரியாய்க் கேட்டுக் கிருபை புரிந்தருளும், தாயே! ஆமென்.



தூய மிக்கேல் அதிதூதா - ஸ்ரீரெங்காபுரம்

# தூய மிக்கேல் அதிதூதர் ஆலயம்
# ஸ்ரீரெங்காபுரம்



அன்பியங்கள்

- சகாயமாதா அன்பியம்
- பிரான்சிஸ் அசிசி அன்பியம்
- லூக்கா அன்பியம்
- பனிமய மாதா அன்பியம்
- மிக்கேல் தூதர் அன்பியம்

# 26. பக்தி முயற்சிகள்

## 01. திரு இருதய ஆண்டவருக்கு செபம்

எல்லாம் வல்ல இறைவனே, நான் மிகுந்த விசுவாசத்துடன் உம்மிடம் கஞ்சிக் கேட்கிறேன், எனக்கு இத்துன்பகரமான வேளையில் உமது ல்லமையான கரங்களால் ஆறுதல் அளித்தருளும். என்னிடம் பாராமுகமாய் ாதேயும். நல்ல இயேசுவே, உமது கதவுகளை எனக்குத் திறந்துவிடும். மது வல்லமையான கரங்கள்தான் நான் விரும்பும் சாந்தியை எனக்கு என்றும் ளிக்கவல்லன.

(உங்கள் 3 கஸ்டங்களைக் கூறவும்)

என் ஆண்டவரே, இரந்து கேட்கும் பாவியான என் இதயத்தின் வேண்டுதலுக்கு விசாய்த்தருளும். உமது நித்திய வீட்டை நான் வந்து அடைய எனக்கு றும் வழிகாட்டியருளும். - ஆமென்.

யேசுவே எனக்கு உதவியருளும்

என் ஒவ்வொரு தேவைகளின் போதும் தாழ்மையுடனும், நம்பிக்கையுடனும் ம்மிடம் வர இயேசுவே எனக்கு உதவியருளும்.

என் சந்தேகங்கள், கலக்கங்கள், சோதனைகளில் இயேசுவே எனக்கு தவியருளும்.

என் நம்பிக்கைகள், ஏமாற்றங்கள், துன்பங்கள், வேதனைகளில் இயேசுவே னக்கு உதவியருளும்.

மற்றவர்கள் என்னை ஏமாற்றும்போது உம்மை மட்டும் நம்பியிருக்கும் எனக்கு யேசுவே உதவியருளும்.

நீரே என் ஆண்டவர், மீட்பர் என நான் வரும்போது இயேசுவே எனக்கு தவியருளும்.

என் வாழ்வில் எல்லா முயற்சிகளும் தோல்விகளாக மாறும்போது இயேசுவே னக்கு உதவியருளும்.

நான் பொறுமையிழந்து, என் சிலுவைகள் துன்பத்தைத் தரும்போது இயேசுவே னக்கு உதவியருளும்.

நான் தனிமையிலும், வருத்தத்திரும் உழலும்போது இயேசுவே எனக்கு தவியருளும்.

எப்போதும் எனது பலவீனங்கள், தோல்விகளின் போது இயேசுவே எனக்கு தவியருளும்.

## இயேசுநாதருடைய திரு இருதயத்துக்கு தங்கள் குடும்பங்களை ஒப்புக்கொடுக்கிற செபம்

இயேசுவின் திரு இருதயமே! கிறிஸ்தவக் குடும்பங்களுக்கு தேவரீ ந்துவரும் சகல உபகாரங்களையும், சொல்லமுடியாத உமது நன்மைத்

தனத்தையும் நினைத்து நன்றியறிந்த பட்சத்தோடு உமது திருப்பாதத்தில் சாஸ்டாங்கமாய் விழுந்து கிடக்கிறோம். நேசமுள்ள இயேசுவே! எங்கள் குடும்பங்களிலுள்ள சகலரையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். தேவரீர் எங்களை ஆசீர்வதித்து இப்போதும், எப்போதும் உமது திரு இருதய நிழலில் நாங்கள் இளைப்பாற செய்தருளும். தவறி எங்களில் எவராவது உமது திரு இருதயத்தை நோகச் செய்திருந்தால் அவர் குற்றத்துக்கு நாங்களே நிந்தைப் பரிகாரம் செய்கிறோம். உமது திரு இருதயத்தைப் பார்த்து எங்கள் பரிகாரத்தை ஏற்றுக்கொண்டு அவருக்கு கிருபை செய்தருளும். இதுவுமன்றி, உலகத்தில் இருக்கும் சகல குடும்பங்களுக்காகவும் உம்மை மன்றாடுகிறோம்.

பலவீனர்களுக்கு பலமும், ஏழை எளியோர்களுக்கு ஊன்று கோலும், விதவைகளுக்கு ஆதரவும், அனாதைப் பிள்ளைகளுக்கு தஞ்சமுமாயிருக்கத் தயைபுரியும். ஒவ்வொரு வீட்டிலும் நோயாளிகள், அவஸ்தைப் -படுகிறவர்கள் தலைமாட்டில் தேவரீர் தாமே வழித்துக் காத்திருப்பீராக.

இயேசுவின் இரக்கமுள்ள திருஇருதயமே! சிறுபிள்ளை -களை நீர் எவ்வளவு பட்சத்தோடு நேசித்தீரே! இந்த விசாரணையிலுள்ள சகல பிள்ளைகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவர்களை ஆசீர்வதியும். அவர்களுடைய இதயத்தில் விசுவாசத்தையும், தெய்வ பயத்தையும் வளரச்செய்யும். வாழ்நாளில் அவர்களுக்கு அடைக்கலமாகவும், மரண சமயத்தில் ஆறுதலாகவும் இருக்கும்படி உம்மை மன்றாடுகிறோம். திவ்விய இயேசுவே தலைமுறை தலைமுறையாய் உமது திருச் சிநேகத்தில் ஜீவித்து மரித்து, நித்திய காலமும் எங்கள் குடும்பம் முழுவதும் உம்மோடு இளைப்பாற....

## இயேசுவின் திரு இருதய மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா,
**எங்கள் மேல் இரக்கமாயிரும்**
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா, எங்கள் ....
தூய ஆவியாகிய இறைவா, எங்கள் ....
தூய்மை நிறை மூவொரு இறைவா, எங்கள் ....
என்றும் வாழும் தந்தையின் மகனாகிய இயேசுவின் திவ்விய இதயமே,
எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

தூய கன்னித்தாயின் உதிரத்திலே தூய ஆவியாரால் உருவான இயேசுவின் திவ்விய இதயமே,
இறைவாக்கான திருமகனோடு ஒரே பொருளாய் ஒன்றித்திருக்கும் இயேசுவின் திவ்விய இதயமே,
அளவற்ற மகத்துவப் பெருமை நிறைந்த இயேசுவின் திவ்விய இதயமே,
இறைவனுடைய அர்ச்சிக்கப்பட்ட ஆலயமாகிய இயேசுவின் திவ்விய இதயமே,
மிகு உன்னத ஆண்டவரின் இல்லிடமான இயேசுவின் திவ்விய இதயமே,
இறைவனுடைய இல்லமும் விண்ணுலக வாயிலுமான இயேசுவின் திவ்விய இதயமே
அன்புத் தீ சுடர்விட்டெரியும் சூளையான இயேசுவின் திவ்விய இதயமே,
நீதியும், அன்பும் தங்கியிருக்கும் இல்லிடமான இயேசுவின் திவ்விய இதயமே,
தயாளமும், அன்பும் நிறைந்த இயேசுவின் திவ்விய இதயமே,
எல்லாப் புண்ணியங்களும் முழுமையாய் நிறையப்பெற்ற இயேசுவின் திவ்விய இதயமே,
சகலவித துதி புகழ்ச்சிக்கும் முற்றும் உரிய இயேசுவின் திவ்விய இதயமே,
இதயங்களுக்கெல்லாம் அரசும் அவைகளின் மையமுமாகிய இயேசுவின் திவ்விய இதயமே,
ஞானமும், அறிவும் நிறைந்த முழுக் கருவூலமான இயேசுவின் திவ்விய இதயமே,-
இறைமை முழுமையும் தங்கி வாழும் இயேசுவின் திவ்விய இதயமே,
விண்ணும் பரமதந்தைக்கு முற்றிலும் உகந்த இயேசுவின் திவ்விய இதயமே,
உம்மிடம் நிறைந்துள்ள நன்மைகளை நாங்கள் அனைவரும் பெற்று மகிழச்செய்யும் இயேசுவின் திவ்விய இதயமே,
என்றுமுள்ள குன்றுகளின் ஆவலாகிய இயேசுவின் திவ்விய இதயமே,
பொறுமையும், மிகுந்த தயாளமும் உள்ள இயேசுவின் திவ்விய இதயமே,
உம்மை மன்றாடும் அனைவரையும் செல்வராக்கும் இயேசுவின் திவ்விய இதயமே,
வாழ்வுக்கும் புனிதத்துக்கும் ஊற்றாகிய இயேசுவின் திவ்விய இதயமே,
எங்கள் பாவங்களின் மன்னிப்புக்கேற்ற கழுவாயான இயேசுவின் திவ்விய இதயமே,
நிந்தை அவமானங்களால் நிறைந்து மிகுந்த இயேசுவின் திவ்விய இதயமே,
எங்கள் அக்கிரமங்களினிமித்தம் நொந்து வருந்தின இயேசுவின் திவ்விய இதயமே,
ஈட்டியால் குத்தி ஊடுவப்பட்டஇயேசுவின் திவ்விய இதயமே,
எல்லா ஆறுதலின் ஊற்றாகிய இயேசுவின் திவ்விய இதயமே,
எங்கள் வாழ்வும் உயிர்ப்புமாகிய இயேசுவின் திவ்விய இதயமே,
எங்கள் அமைதியும் ஒப்புரவுமான இயேசுவின் திவ்விய இதயமே,
பாவிகளுக்காகப் பலியான இயேசுவின் திவ்விய இதயமே,
உம்மிடத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களுடைய மீட்பான இயேசுவின் திவ்விய இதயமே,
உம்மில் இருக்கிறவர்களின் நம்பிக்கையாகிய இயேசுவின் திவ்விய இதயமே,
புனிதர்கள் அனைவரின் பேரின்பமாகிய இயேசுவின் திவ்விய இதயமே,
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**

2. எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**

3. எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

முதல் : மீட்பரின் ஊற்றுகளிலிருந்து

துணை : மகிழ்வாய் நீர் அள்ள வாருங்கள்!

**செபிப்போமாக**

இறைவா, எங்கள் பாவங்களால் காயமடைந்த உம் திருமகனுடைய இதயத்தின் வழியாக அன்பின் அளவற்ற செல்வங்களை எங்களுக்கு இரக்கத்துடன் வாரி வழங்கத் திருவுளமானீர். நாங்கள் அந்த இதயத்தைப் பக்திப் பற்றுதலுடன் வழிபட்டுப் பாவப் பரிகாரத்தின் கடமையை எங்கள் வாழ்வில் தகுந்த முறையில் நிறைவேற்ற எங்களுக்கு அருள்வீராக! எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம் - ஆமென்.

## 02. குழந்தை இயேசு மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா, **எங்கள் மேல் இரக்கமாயிரும்**
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா, **எங்கள் ....**
தூய ஆவியாகிய இறைவா, எங்கள் ....
மூன்று ஆட்களாயிருக்கும் ஒரே இறைவா, எங்கள் ....
முடிவில்லா தந்தையின் திருமகனாகிய திவ்விய பாலனே, எங்கள் ...
மனிதனாய்ப் பிறந்த இறை மைந்தனாகிய திவ்விய பாலனே, எங்கள் ...
கன்னி மரியாவின் மைந்தனான திவ்விய பாலனே,
உம்முடைய தந்தையின் ஞானமாயிருக்கிற திவ்விய பாலனே,
உம்முடைய அன்னையின் மகிமையான திவ்விய பாலனே,
உம்முடைய பரம தந்தையின் சாயலாயிருக்கிற திவ்விய பாலனே,
உம்முடைய திருத்தாயாரைப் படைத்தவராகிய திவ்விய பாலனே,
உம்முடைய தந்தையின் பேரொளியாயிருக்கிற திவ்விய பாலனே,
உம்முடைய தந்தைக்கு இணையாயிருக்கிற திவ்விய பாலனே,
உம்முடைய அன்னைக்குக் கீழ்ப்படிந்தவரான திவ்விய பாலனே,
உம்முடைய பரம தந்தையின் மகிழ்ச்சியாயிருக்கிற திவ்விய பாலனே,
உம்முடைய அன்னைக்கு கருவூலமாயிருக்கிற திவ்விய பாலனே,

உம்முடைய பெற்றோரின் காணிக்கையான திவ்விய பாலனே,
தூய ஆவியின் கருவாகிய திவ்விய பாலனே,
உண்மையான மனிதனும் உண்மையான இறைவனுமாயிருக்கிற திவ்விய பாலனே,
பாவிகளான மனுமக்களை மீட்கப் பாவியின் கோலங்கொண்ட திவ்விய பாலனே,
எலிசபெத்தம்மாளுடைய உதிரத்திலிருந்த திருமுழுக்க யோவானை அர்ச்சித்த திவ்விய பாலனே,
புனித கன்னிமரியாவின் உதிரத்தில் ஒன்பது மாதம் அடங்கியிருந்த திவ்விய பாலனே,
கன்னிமகிமை கெடாதவரின் கனியாகிய திவ்விய பாலனே,
மாட்டுக் கொட்டிலிற் பிறந்து தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டு, துணிகளால் பொதியப்பட்ட திவ்விய பாலனே,
தாழ்மையில் மகிமையுள்ள திவ்விய பாலனே,
புனித அன்பின் ஊற்றான திவ்விய பாலனே,
உம்முடைய திருத்தாயாரினாலும் கற்பு நிறைந்த சூசையப்பராலும் மிகவும் வணங்கப்பட்ட திவ்விய பாலனே,
பிறந்தவுடனே வானத்தூதர்களால் அறிவிக்கவும் தொழவும் பட்ட திவ்விய பாலனே,
ஏழைகளான இடையர்களுக்கு உம்மை வெளிப்படுத்தின திவ்விய பாலனே,
தூதர்களுக்கும் மனிதர்களுக்கும் தலைவரான திவ்விய பாலனே,
புனித இயல்பினால் எங்களுக்குச் சகோதரரான திவ்விய பாலனே,
தந்தையாகிய இறைவனையும் மனிதரையும் ஒப்புரவாக்கப் பிறந்த திவ்வியபாலனே,
வறுமையில் பிறந்து உலகச் செல்வங்களைப் புறக்கணித்த திவ்விய பாலனே,
தாழ்ச்சியான நிலையில் பிறந்து உலக ஆடம்பரங்களை அகற்றின திவ்விய பாலனே,
துன்ப நிலையில் பிறந்து இன்பங்களை ஒதுக்கிய திவ்விய பாலனே,
விருத்தசேதனத்தில் எங்களுக்காக அன்போடு இரத்தத்தைச் சிந்தின திவ்விய பாலனே,
கிழக்கில் தோன்றிய புதிய விண்மீனைக் கொண்டு உம்மை வெளிப்படுத்தினவராகிய திவ்விய பாலனே,
கீழ்த்திசை ஞானிகள் உம்மைத் தொழ வருவதற்காக அவர்களுக்குப் பக்தியையும் அறிவையும் ஏவினவரான திவ்விய பாலனே,
ஞானிகள் பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப் போளமும் ஒப்புக் கொடுத்துத் தொழுத திவ்விய பாலனே, **எங்கள் மேல் இரக்கமாயிரும்**
பொன்னால் அரசராகவும், சாம்பிராணியால் இறைவனாகவும், வெள்ளைப் போளத்தால் மனிதராகவும் எண்பிக்கப்பட்ட திவ்விய பாலனே,
உம்முடைய தாயாரால் காணிக்கையாக ஒப்புக் கொடுத்து மீட்டுக் கொள்ளப்பட்ட திவ்விய பாலனே,
உம்மைத் தமது கையில் ஏந்தின பேரானரான சிமியோன் உள்ளத்தை மகிழ்ச்சியால் நிரப்பின திவ்விய பாலனே,
இறைவாக்கினராகிய அன்னாவால் புகழவும் மீட்பரென்று யூதர்களுக்கு அறிவிக்கவும் பட்ட திவ்விய பாலனே,

ஏரோதினுடைய கொடிய பகைக்குத் தப்பித்துக் கொள்ள எகிப்து நாட்டுக்குக் கொண்டு போகப்பட்ட திவ்விய பாலனே,
ஏரோதினுடைய கொடுமையால் கொல்லப்பட்ட குழந்தைகளுக்கு மீட்பாயிருந்த திவ்விய பாலனே,
உம்முடைய இறை தந்தையின் திருவுளத்துக்கு அன்போடு கீழ்ப்படிந்து எகிப்தினின்று நாசரேத்தூருக்கு வந்த திவ்விய பாலனே,
பரம தந்தையின் கட்டளைகளை வியப்புக்குரிய விதமாய் அனுசரித்த திவ்விய பாலனே,

உம்முடைய இறை தந்தையின் புகழ்ச்சிப் பணிக்காக உம் அன்பு அன்னைக்கும் புனித சூசையப்பருக்கும் மறைவாய் எருசலேமில் மூன்று நாட்கள் தங்கின திவ்விய பாலனே,
எல்லோரும் வியப்புறும்படி போதகர்களுக்கு மறையுண்மைகளைத் தெரிவித்துக் கொண்டிருக்கிற போது மூன்றாம் நாள் அவர்கள் நடுவில் ஆலயத்திலே தாய் தந்தையர்களால் காணப்பட்ட திவ்விய பாலனே,
உலக மக்கள் மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த திவ்விய பாலனே,
தாய் தந்தையர்களுக்க தாழ்ச்சியோடு கீழ்ப்படிந்திருந்த திவ்விய பாலனே,
பாலகர்களுக்கு மாதிரிகையாய் இருக்கிற திவ்விய பாலனே,
வானத் தூதர்களே வணங்கித் துதிக்கிற திவ்விய பாலனே,
அனைத்துப் புனிதர்களுக்கும் முந்தின பாலனாயிருக்கிற திவ்விய பாலனே, **எங்கள் மேல் இரக்கமாயிரும்**
தயாபரராயிருந்து எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி,
தயாபரராயிருந்து எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி,
ஆதாமின் மக்களின் கேடுற்ற நிலையினின்று **எங்களை மீட்டருளும் சுவாமி,**
பசாசின் அடிமைத்தனத்தினின்று **எங்களை மீட்டருளும் சுவாமி,**
உலகக் கெடுதியினின்று **எங்களை .....**
தற்பெருமை, மமதையினின்று,
மோகத் தீயினின்று,
புத்திக் குருட்டாட்டத்தினின்று,
துர் மனத்திலே நின்று,
அனைத்துப் பாவங்களிலே நின்று,
நீர் கருவிலே திருவானதைப் பார்த்து,
உம்முடைய தாழ்மையான பிறப்பைப் பார்த்து,
நீர் சிந்தின கண்ணீரைப் பார்த்து,
உம்முடைய வருத்தமான விருத்த சேதனத்தைப் பார்த்து,
நீர் ஞானிகளுக்கு உம்மை வெளிப்படுத்தின இரக்கத்தைப் பார்த்து,
நீர் திருக்கோயிலில் காணிக்கையான பத்தி வணக்கத்தைப் பார்த்து,
உமது வியப்புக்குரிய கீழ்ப்படிதலைப் பார்த்து,
நீர் அனுபவித்த வறுமையைப் பார்த்து,
நீர்பட்ட வேதனைகளைப் பார்த்து,

நீ இவ்வுலகத்தில் வாழ்ந்த புனித வாழ்க்கையையும் உரையாடல்களையும் பார்த்து,
உம்முடைய பக்தி நிறைந்த செப தியானங்களைப் பார்த்து,
நீ பெரியோர்கள் மட்டில் காண்பித்த வணக்கத்தைப் பார்த்து,
உம்முடைய வளர்ப்புத் தந்தையான சூசையப்பரோடு நீ செய்த வேலைகளைப் பார்த்து,
உம்முடைய 'திவ்விய குழந்தைப் பருவத்தைப் பார்த்து,

**உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியே,**
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

குரு : திவ்விய பாலகனாகிய இயேசுவே,
எல் : எங்களை மீட்டு ஆசீர்வதித்தருளும்.

## செபிப்போமாக

இறைவா! விண்மீன் வழிநடத்த உம் திருமகனை அனைத்துலக மக்களுக்கும் வெளிப்படுத்தினீர். ஆற்றலும் அன்பும் நிறைந்த உம் திருமகன் நம்மோடு இருக்கிறார் என்பதை விசுவாசத்தால் ஏற்றுக்கொள்ளும் நாங்கள், வாழ்க்கையில் வரும் தடைகளையெல்லாம் கடந்து, உமது மகத்துவத்தின் அழகைக் கண்டு களித்திட எங்களை அழைத்துச் செல்வீராக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம் - ஆமென்.

**இவ்வுலகில் பலவீனனும், பாவியும் பயமின்றி என்னை அண்டி வருவதற்கே ... நாம் இன்று ஈடு இணையற்ற இரக்கத்தை உமக்குத் தருகிறோம். எனவே, கலங்காதே, மருளாதே. நீ எம் கண்களுக்கு விலையேறப் பெற்றவன்**

**- இயேசுவின் வார்த்தைகள்.**

## 03. புனித மரியன்னையின் மாசற்ற இதயத்துக்கு மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்

புனித மரியாவின் மாசற்ற இதயமே **எங்கள் மேல் இரக்கமாயிரும்**
இறைவனின் திரு இதயத்துக்கு உகந்த திரு இதயமே, **எங்கள் ....**
இயேசுவின் திரு இதயத்தோடு ஒன்றான திரு இதயமே,
தூய ஆவியாருக்கு உகந்த இன்னிசையான திரு இதயமே,
மூவொரு இறைவனின் ஆலயமான திரு இதயமே,
மனுவுருவான இறைவாக்குக்கு உகந்த இருப்பிடமான திரு இதயமே,
அருள் நிறைந்த திரு இதயமே,
அனைத்து இதயங்களிலும் ஆசீர்வதிக்கப்பட்ட திரு இதயமே,
இறை மகிமை நிறைந்த அரியணையாகிய திரு இதயமே,
அளவவ்ள தாழ்ச்சியுள்ள திரு இதயமே,
இறையன்பின் பனியான திரு இதயமே,
இயேசு நாதரோடு சிலுவையில் அறையுண்ட திரு இதயமே,
துயருற்றோருக்கு ஆறுதலாகிய திரு இதயமே,
பாவிகளுக்கு அடைக்கலமான திரு இதயமே,
இறக்கிறவர்களுக்கு நம்பிக்கையாகிய திரு இதயமே,
இரக்கத்திற்கு இருப்பிடமான திரு இதயமே,

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

ஒரு : இதயத் தாழ்ச்சியும் சாந்தமும் உடைய மாசற்ற மரியே,
எல் : எங்கள் இதயம் இயேசுவின் திரு இதயம் போல் ஆகும்படி செய்தருளும்

## செபிப்போமாக

பேரன்புமிக்க தந்தையே! புனித கன்னி மரியாவின் இதயத்தில் தூய ஆவிக்கு ஏற்றதோர் இல்லிடத்தை ஏற்பாடு செய்தீர். அவ்வன்னையின் பரிந்துரையால் நாங்களும் உமது மகிமைக்கேற்ற ஆலயமாக வாழ்ந்திடச் செய்தருளும். அவரிடம் விளங்கிய உமது அருளின் நிறைவைப் புகழ்ந்தேத்துகிற நாங்கள், நீர் எங்களுக்குத் தந்துள்ள மீட்பை எங்கள் வாழ்வாலும், பணியாலும் நிறைவுக்குக் கொண்டுவர அருள்வீராக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம், ஆமென்.

## 04. புனித மரியாள் மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா, எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா, எங்கள் ....
தூய ஆவியாகிய இறைவா, எங்கள் ....
தூய்மை நிறை மூவொரு இறைவா, எங்கள் ....

புனித மரியே **எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**
இறைவனுடைய புனித மாதாவே
கன்னியர்களுள் உத்தம கன்னிகையே
கிறிஸ்துவினுடைய மாதாவே
மகா பரிசுத்த மாதாவே
அத்தியந்த விரத்தியாயிருக்கிற மாதாவே
பழுதற்ற கன்னியாயிருக்கிற மாதாவே
கன்னித் தூய்மை கெடாத மாதாவே
மகா அன்புக்குப் பாத்திரமாயிருக்கிற மாதாவே
ஆச்சரியத்திற்குரிய மாதாவே
நல்ல ஆலோசனை மாதாவே
சிருஷ்டிகளுடைய மாதாவே
இரட்சகருடைய மாதாவே
மகா புத்தியுடைத்தான கன்னிகையே
மகா வணக்கத்திற்குரிய கன்னிகையே

பிரகாசமாய் துதிக்கப்பட யோக்கியமாயிருக்கிற கன்னிகையே
சக்தியுடையவளாயிருக்கிற கன்னிகையே
தயையுள்ள கன்னிகையே
விசுவாசியாயிருக்கிற கன்னிகையே
தருமத்தினுடைய கண்ணாடியே
ஞானத்திற்கு இருப்பிடமே
எங்கள் மகிழ்ச்சியின் காரணமே
ஞானப் பாத்திரமே
மகிமைக்குரிய பாத்திரமே
அத்தியந்த பக்தியுடைத்தான பாத்திரமே
மறைபொருளைக் கொண்ட ரோஜா மலரே
தாவீது இராஜாவுடைய உப்பரிகையே
தந்தமயமாயிருக்கிற உப்பரிகையே
சொர்ண மயமாயிருக்கிற ஆலயமே
வாக்குத் தத்தத்தின் பெட்டியே
பரலோகத்தினுடைய வாசலே
விடியற்காலத்தின் நட்சத்திரமே
வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே
பாவிகளுக்கு அடைக்கலமே
கஸ்திப்படுகிறவர்களுக்கு தேற்றரவே
கிறிஸ்தவர்களுடைய சகாயமே
சம்மனசுக்களுடைய இராக்கினியே
பிதாப் பிதாக்களுடைய இராக்கினியே
இறைவாக்கினர்களுடைய இராக்கினியே
அப்போஸ்தலர்களுடைய இராக்கினியே
மறை சாட்சிகளுடைய இராக்கினியே
துதியர்களுடைய இராக்கினியே
கன்னியர்களுடைய இராக்கினியே
அனைத்துப் புனிதர்களுடைய இராக்கினியே
ஜென்மப் பாவமின்றி உற்பவித்த இராக்கினியே
பரலோகத்திற்கு ஆரோபணமான இராக்கினியே
திருச்செபமாலையின் இராக்கினியே
சமாதானத்தின் இராக்கினியே

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**

1. எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**

2. எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி

உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே
3. எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

ஒரு : இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதியுள்ளவர்கள் ஆகும்படி

எல் : இறைவனின் தூய அன்னையே எங்களுக்காக மன்றாடும்

செபிப்போமாக

இறைவா! முழு மனதுடன் உம் திருத்தாள் பணிந்திருக்கும் இக்குடும்பத்தைக் கண்ணோக்கியருளும். எப்பொழுதும் கன்னியான புனித மரியாவின் பரிந்துரையால் பகைவர் அனைவரின் தாக்குதலிலிருந்தும் எங்களை மீட்டருளும். எங்கள் ஆண்டவர் கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம் - ஆமென்.

## 05. ஆரோக்கிய அன்னைக்கு நவநாள் செபம்

புனித கன்னியே, இயேசுவின் அன்னையாக இருக்குமாறு முடிவற்ற காலமாக மூவொரு கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட தூய மணியே! கடவுளின் திரு மைந்தன் உமது திரு உதரத்தில் மனு உருப்பெற்ற போதும், ஒன்பது மாதங்களாக அவரை உமது மாசணுகாத உதரத்தில் தாங்கிய போதும் நீர் அடைந்த பேரின்பத்தை எளியேன் உமக்கு நினைவுறுத்துகிறேன். நீர் அப்போது அனுபவித்த இன்பத்தை என் அன்பினாலும், செபங்களாலும் மீண்டும் புதுப்பிக்கவும், இயலுமானால் அதிகரிக்கவும் விரும்புகிறேன். துன்புற்றோருக்கு இரங்கியருளும். அன்னையே! உமது சிறப்பு உதவியையும், பாதுகாப்பையும் எனக்குத் தந்தருளும். உமது இறை மைந்தனின் அளவற்ற வல்லமையில் நம்பிக்கை கொண்டுள்ளேன். கேட்பவருக்கு கொடுப்பதாக அவர் தந்த வாக்குறுதியை நினைத்து, பெரும் வல்லமை கொண்ட உம் மன்றாட்டுகளை நம்பியுள்ளேன்.

இந்த நவநாளின் போது நான் செய்யும் விண்ணங்களை அவை கடவுளின் திருவுளத்துக்கு ஏற்றவையெனில், அவரிடம் பரிந்து பேசி அடைந்து தந்தருளும்.

*(விண்ணப்பங்களைக் கூறுக)*

இறைவனின் அன்னையே! உம்மில் நான் பெரும் நம்பிக்கை கொண்டிருப்பதால்தான், இந்த நவநாளை வணக்கத்துடன் செய்கிறேன். இயேசு மனிதரானபோது, நீர் அடைந்த திரு மகிழ்ச்சியை நினைத்து, அதற்கு வணக்கமாக இந்த நவநாளை அன்புடன் ஏற்றுக்கொள்ளும்.

மாட்சி பெற்ற இறைவனின் அன்னையே! "அருள் மிகப் பெற்றவரே வாழ்க" என்று முதன் முதல் சொல்லும்போது கபிரியேல் அதிதூதர் கொண்டிருந்த பணிவு வணக்கத்துடனே நானும் வாழ்த்துகிறேன். வருந்துவோருக்கு ஆறுதலே! என் விண்ணப்பங்களைப் பெற்றுத்தர புனிதர் அனைவரின் செபங்களையும் நற்செயல்களையும் ஒப்புக் கொடுக்கிறேன். உம் திருமைந்தனும் எம் ஆண்டவருமான இயேசுவின் திரு இதயத்தில் பொங்கி வழியும் பேரன்பையும், உம் தாயன்பையும் பார்த்து, எளியேனின் செபத்தை ஏற்று, என் மன்றாட்டை நிறைவேற்றித் தந்தருளும், தாயே! - ஆமென்.

## ஆரோக்கிய அன்னைக்கு மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா, எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா, எங்கள் ....
தூய ஆவியாகிய இறைவா, எங்கள் ....
தூய்மை நிறை மூவொரு இறைவா, எங்கள் ....

அமல உற்பவியான புனித மரியாவே, **எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**
அனைத்துலகம் படைக்கும் முன்னே இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட புனித ஆரோக்கிய அன்னையே, எங்களுக்காக .....
இன்ப வனத்திலே முதல் மனிதருக்கு அறிவிக்கப்பட்ட புனித ஆரோக்கிய அன்னையே,
பாவமுள்ள இருளை அகற்றுகிற ஞான ஒளியான புனித ஆரோக்கிய அன்னையே,
உதித்தெழும் விண்மீன் என இறைவாக்கினரால் உரைக்கப்பட்ட புனித ஆரோக்கிய அன்னையே,
மண்ணுலகிற்குப் பலன் விளைவிக்கும் மேகமென்றும் சொல்லப்பட்ட புனித ஆரோக்கிய அன்னையே,
நன்மைத்தனத்துக்குத் தகுதியான புனித ஆரோக்கிய அன்னையே,
முதுபெரும் தந்தையரால் புனிதை என உரைக்கப்பட்ட புனித ஆரோக்கிய அன்னையே,
ஜென்ம பாவமின்றி உற்பவித்த புனித ஆரோக்கிய அன்னையே,

அகங்காரமுள்ள பசாசின் தலையை மிதித்த புனித ஆரோக்கிய அன்னையே,
புனிதர்களான அன்னம்மாள் சுவக்கீன் இடமாய் பிறந்த புனித ஆரோக்கிய அன்னையே,
முதிர் வயதான தாய் தகப்பனிடத்திலிருந்து பிறந்தவரான புனித ஆரோக்கிய அன்னையே,
அவர்களுடைய வேண்டுதலாலும் அறச்செயல்களாலும் பிறந்தவரான புனித ஆரோக்கிய அன்னையே,
அனைத்து வானத்தூதர், புனிதர்களைவிட மிகுந்த ஒளியோடே பிறந்த புனித ஆரோக்கிய அன்னையே,
படைப்பு பொருட்களிலேயே அதிக அறிவோடு பிறந்த புனித ஆரோக்கிய அன்னையே,
திருவருட் கொழுந்தான புனித ஆரோக்கிய அன்னையே,
அறநெறியிலே நிறைவுடனே நடந்த புனித ஆரோக்கிய அன்னையே,
உம்முடைய பிறப்பைக் கொண்டு விண்ணுலகோருக்கு மகிழ்ச்சி வருவித்த புனித ஆரோக்கிய அன்னையே,
நீர் பிறந்தவுடனே தந்தைக்கு காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்ட புனித ஆரோக்கிய அன்னையே,
மிகுந்த மகிமையுள்ள மரியா என்னும் பெயர் அடைந்த புனித ஆரோக்கிய அன்னையே,
மூன்று வயதிலே கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட புனித ஆரோக்கிய அன்னையே,
கன்னிமையைத் தேர்ந்து கொண்ட புனித ஆரோக்கிய அன்னையே,
கன்னியர் மடத்தில் இருக்கின்றபோது அனைவருக்கும் நன்மாதிரிகையாய் நடந்த புனித ஆரோக்கிய அன்னையே,
நோயாளிகளுடைய வேதனையை அகற்றுகிற புனித ஆரோக்கிய அன்னையே,
உம்மை நம்பினவர்களை ஒருபோதும் கைவிடாத கருணைத் தாயாகிய ஆரோக்கிய அன்னையே,
புனிதர்கள் அனைவருக்கும் விண்ணுலக முடியான புனித ஆரோக்கிய அன்னையே,

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

ஒரு : இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதியுள்ளவர்கள் ஆகும்படி
எல் : இறைவனின் தூய அன்னையே எங்களுக்காக மன்றாடும்.

### செபிப்போமாக

அன்பே உருவான இறைவா! உம் திருமகனாகிய இயேசு கிறிஸ்துவின் அன்னையை எங்களுக்கு ஆரோக்கிய அன்னையாக அளித்து, அந்த அன்னையை அண்டிவரும் மக்கள் எல்லாருக்கும் நீர் செய்துவருகின்ற அனைத்து நன்மைகளுக்காகவும் நாங்கள் நன்றியோடு உம்மைப் புகழ்கின்றோம். அன்னையின் அருட்காவலைத் தேடி வருகின்ற நாங்கள், அவர் எங்களுக்குக் கூறியபடி, உம் திருமகன் இயேசு கிறிஸ்து சொல்வதெல்லாம் செய்திட உதவி புரிந்தருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம், ஆமென்.

## 06. புனித சூசையப்பரைக் குறித்து செபம்

மிகவும் பேறு பெற்ற புனித சூசையப்பரே! எங்களுடைய துன்ப வேளையில் உமது புனித துணைவியின் உதவியை இரந்து மன்றாடின பின், உமது பாதுகாவலையும் நம்பிக்கையோடு தேடி வருகின்றோம். இறையன்னையும், அமலோற்பவியுமான புனித கன்னிமரியாவிடம் உமக்குள்ள அன்பைக் குறித்தும், திவ்விய குழந்தை இயேசு நாதருக்கு நீர் காண்பித்த தந்தையின் அன்பைக் குறித்தும், உம்மிடத்தில் நாங்கள் கேட்கும் மன்றாட்டு ஏதென்றால், இயேசு கிறிஸ்து தமது விலைமதியா இரத்தத்தால் ஈட்டிய உரிமையைக் கருணையுடன் பார்க்கவும், எங்கள் துன்பத்திலே உமது பலமுள்ள உதவியால் துணையாயிருக்கவும் மன்றாடுகிறோம்.

ஓ! திவ்விய குடும்பத்தை உத்தம ஞானத்தோடு நடத்தி இயேசுவை வளர்த்த தந்தையே! இயேசு கிறிஸ்து தம்முடையவர்களாகத் தெரிந்து கொண்ட மக்களைப் பராமரித்தருளும். ஓ! மிகவும் அன்பு நிறைந்த எங்கள் தந்தையே! நாங்கள் எவ்வித தவற்றிலும், கேட்டிலும் விழாதபடி எங்களைக் காப்பாற்றும். ஓ! எங்களைப் பாதுகாத்தருளும்படி மேலான வல்லமையுள்ளவரே, எங்கள் அன்றாட வாழ்க்கைப் போராட்டத்திலே கருணையுடன் எங்களுக்குத் துணையாய் நிற்பீராக.

திவ்விய பாலகன் முன்னாள் சாவின் ஆபத்துக்குத் தப்பித்துக் கொள்ளும்படி நீர் எவ்விதம் ஏதுவாயிருந்தீரோ அவ்விதமே திருச்சபையையும் எல்லா ஆபத்திலிருந்தும் பாதுகாத்தருளும். உமது பாதுகாவல் இடைவிடாமல் என்றும் இருக்கக் கடவது. உமது புண்ணிய மாதிரிகையாலும், உம்முடைய உதவியின் துணையாலும், நாங்கள் எல்லோரும் புனிதராய் வாழ்ந்து, பத்தியாய் இறந்து விண்ணுலகில் முடிவில்லாப் பேறு பெற்று வாழும்படி கருணைபுரிய உம்மை மன்றாடுகிறோம், ஆமென்.

## புனித சூசையப்பருக்கு தன்னை ஒப்புக்கொடுக்கும் ஜெபம்

மகிமை நிறைந்த முதுபெரும் தந்தையாகிய புனித சூசையப்பரே! இறையன்னையின் புனித கணவரே, இயேசு கிறிஸ்துவை வளர்த்த தந்தையே, உம்மை நம்பினவர்களுக்குத் தப்பாத அடைக்கலமே, நன்மரணத்துக்கு மாதிரிகையே, உம்முடைய தாசராயிருக்கிற நாங்கள் எங்களை முழுதும் உமக்கு ஒப்புக் கொடுக்கிறோம். மூவொரு இறைவனுடைய சமூகத்திலே, உம் திவ்விய மைந்தனான இயேசு, உம் புனித துணைவி, அனைத்து விண்ணுலக மண்ணுலக வாசிகள் ஆகியோர் முன்னிலையில் மிகுந்த வணக்கத்துடனே உம்மை எங்களுக்குத் தந்தையாகவும், அடைக்கலமாகவும் தெரிந்து கொள்ளுகிறோம். உமக்கு எங்களை முழுவதும் ஒப்புக் கொடுக்கிறோம்.

உமது மகிமையைத் கொண்டாடி உமக்குரிய வணக்கத்தை அறிக்கையிட்டு ஒரு நாளாவது உமக்குத் துதியையும் வேண்டுதலையும் செலுத்தாமல் இருக்கப் போகிறதில்லை. நீரும் இடைவிடாமல் எங்களை நினைத்து எங்களுடைய இடையூறுகளை விலக்கி எங்களை அறநெறியிலே வழுவாமல் நடத்தியருளும். இயேசு, இறையக்கை ஆகியோரின் திருக்கைகளில் மரிக்கப் பேறுபெற்ற நீர், நாங்கள் திருவருளோடு இறந்து, விண்ணுலகப் பேற்றை அடைந்து, உம்முடனே என்றென்றைக்கும் வாழச் செய்தருளும், ஆமென்.

## புனித சூசையப்பர் மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா, எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா, எங்கள் ....
தூய ஆவியாகிய இறைவா, எங்கள் ....
தூய்மை நிறை மூவொரு இறைவா, எங்கள் ....

கன்னித் தூய்மை கெடாத புனித மரியாவே,

**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**

புனித சூசையப்பரே,
தாவீது அரசரின் புகழ்பெற்ற மைந்தரே,
முதுபெரும் தந்தையரின் மகிமையே,
இறையன்னையின் கணவரே,
கன்னிமரியாவின் கற்புற்ற காவலரே,
இறைமகனை வளர்த்த தந்தையே,
கிறிஸ்துவை ஆர்வப் பற்றுதலுடன் காப்பாற்றினவரே,
திருக்குடும்பத்தின் தலைவரே,
உத்தம நீதிமானான புனித சூசையப்பரே,
உத்தம துறவியான புனித சூசையப்பரே,
உத்தம விவேகம் கொண்ட புனித சூசையப்பரே,
உத்தம துணிவு கொண்டவரான புனித சூசையப்பரே,
உத்தம கீழ்ப்படிதலுள்ளவரான புனித சூசையப்பரே,
உத்தம பிரமாணிக்கமுள்ளவரான புனித சூசையப்பரே,
பொறுமையின் கண்ணாடியே,
வறுமையின் அன்பரே,
தொழிலாளிகளுக்கு மாதிரிகையே,
இல்லற வாழ்க்கையின் அணிகலனே,
கன்னியர்களின் காவலரே,
குடும்பங்களுக்கு ஆதரவே,
துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதலே,
நோயாளிகளுக்கு நம்பிக்கையே,
இறப்பவர்களுக்குப் பாதுகாவலரே,
பசாசுகளை நடுங்கச் செய்பவரே,
புனிதத் திருச்சபையின் பரிபாலகரே,

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

ஒரு : ஆண்டவர் அவரைத் தமது வீட்டிற்கு தலைவராக ஏற்படுத்தினார்
எல் : தம்முடைய உடைமைக்கெல்லாம் அதிகாரியாகவும் ஏற்படுத்தினார்.

செபிப்போமாக

எல்லாம் வல்ல இறைவா! அனைவருக்கும் மீட்பராகிய இயேசுவைப் புனித சூசையப்பரின் பொறுப்புமிக்க அருட்காவலில் ஒப்படைத்து, உம் திருமகனின் மீட்புப் பணியில் அவருக்குப் பங்களித்தீரே, புனித சூசையப்பரின் வழிகாட்டுதலாலும், வேண்டுதலாலும் உமது திருச்சபை உலகில் அந்த மீட்புப் பணியைத் தொடர்ந்தாற்றச் செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம், ஆமென்.

:: ஏழு திருவருட்சாதனங்கள் ::

திருமுழுக்கு (ஞானஸ்நானம்), உறுதிப்பூசுதல், நற்கருணை, ஒப்புரவு (பாவசங்கீர்த்தனம்), நோயில் பூசுதல், குருத்துவம், திருமணம் ஆகியவையே. இந்த ஏழு திருவருட்சாதனங்கள் வழியாக உயிர்த்த கிறிஸ்துவின் செயலால் அருள் உயிரை நாம் பெறுகிறோம்.

## 07. அப்போஸ்தலரான புனித இராயப்பரை நோக்கி செபம்

"உன் பெயர் பேதுரு. இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்" என்ற இறைவாக்கால் திருச்சபையின் தலைவராக நியமிக்கப்பட்ட புனித இராயப்பரே, நீர் கடல்நீரில் மூழ்கித் தத்தளித்தபோது, தமது திருக்கையை நீட்டி உம்மைக் காப்பாற்றிய ஆண்டவரின் பாதுகாவலையும், பராமரிப்பையும் எனக்கு / எங்களுக்குப் பெற்றுத்தாரும்.

வலுவின்மையால் தயங்கினாலும், விசுவாசத்தாலும், திருவருளினாலும் உறுதிபெற்று, தலைமைப்பீடம் ஏற்று, திருச்சபைக்குத் திடனும், ஒருமைப்பாடும் அளித்துவந்த அப்போஸ்தலரே! நாங்களும் சோதனை துன்பங்களாகிற புயல்களின் நடுவில் வாழ்ந்தாலும், விசுவாசத்தால் மனத்திடனுள்ளவர்களாய் ஒற்றுமையுடனும், அமைதியுடனும் வாழ்ந்துவர எங்களுக்கு உதவியருளும். கிறிஸ்துவிடம் உமக்கிருந்த பிரமாணிக்கத்தையும், அன்பையும் நாங்களும் கொண்டவர்களாய், எங்கள் வாழ்நாள் எல்லாம் அவருடைய ஊழியத்தில் செலவழித்து, உம்மைப்போல உயிரை முதலாய் அவருக்காகத் தியாகம் செய்யும் வீரப் பற்றுறுதி உள்ளவர்களாய் இருக்கும்படி எங்களுக்காக ஆண்டவரை மன்றாடுவீராக ஆமென்.

# புனித இராயப்பர் மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா, எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா, எங்கள் ....
தூய ஆவியாகிய இறைவா, எங்கள் ....
தூய்மை நிறை மூவொரு இறைவா, எங்கள் ....

அப்போஸ்தலர்களுடைய அரசியான புனித மரியாவே,
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**
புனித இராயப்பரே,
கலிலேயாவில் பெத்சாய்தா நகரில் பிறந்த புனித இராயப்பரே,
அந்திரேயாவின் சகோதரரான புனித இராயப்பரே,
கடல் மீன்களைப் பிடிக்கிறபோது மனிதர்களைப் பிடிக்கத் தெரிந்து கொள்ளப் பட்ட புனித இராயப்பரே,
இயேசு நாதரால் அழைக்கப்பெற்று, **பாறை** என்று பேர் கொடுக்கப் பட்ட புனித இராயப்பரே,
"பாறையான உன்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்" என்று இயேசுவிடமிருந்து வாக்குப் பெற்ற புனித இராயப்பரே,
அதனால் சீமோன் என்ற பெயரை இயேசு மாற்றிட, **பேதுரு** என்று புதுப்பெயர் அடைந்த புனித இராயப்பரே,
தலைமை அப்போஸ்தலரான புனித இராயப்பரே,
இயேசுவோடு கடலின் மீது நடந்த புனித இராயப்பரே,
இயேசு தபோர் மலையின்மேல் உருமாறியபோது கூட நின்ற புனித இராயப்பரே,
இயேசு ஐந்து அப்பங்களைப் பலுகச் செய்து திரளான மக்களுக்குப் பிட்டுப் பகிர்ந்த போது கூட இருந்த புனித இராயப்பரே,
இறந்த லாசருக்கு இயேசு மறுபடி உயிர்கொடுக்கும்போது கூட இருந்த புனித இராயப்பரே,
இயேசு எண்ணற்ற புதுமைகளைச் செய்யும்போது கூட இருந்த புனித இராயப்பரே,
இயேசு இறுதி இராவுணவு கொள்ள இடங்கேட்டுவந்த புனித இராயப்பரே,
இயேசு உம் காலடிகளைக் கழுவ வந்தபோது, "என் கைகளையும், தலையையும் கூட கழுவும்" என்று கூறிய புனித இராயப்பரே,
"உமக்காக என் உயிரையும் கொடுப்பேன்" என்று இயேசுவிடம் கூறிய புனித இராயப்பரே,

இயேசு செபம் செய்யப் போனபோது அவரோடு போன புனித இராயப்பரே,
யூதர்கள் இயேசுவைப் பிடிக்க வந்தபோது மால்குஸ் என்பவனை கத்தியால் காதை வெட்டின புனித இராயப்பரே,
இயேசுவின் பாடுகளுக்குப் பங்காளியாக தலைமைக் குருவின் மாளிகை முற்றம் வரைக்கும் அவரைப் பின்சென்ற புனித இராயப்பரே,
இயேசு முகந் திரும்பி உம்மை நோக்கினவுடன் உமது குற்றத்தை உணர்ந்து அழத்தொடங்கின புனித இராயப்பரே,
சேவலின் கூவல் கேட்டபோதெல்லாம் உமது பாவத்திற்காக கண்ணீர் விட்டு அழுது வந்த புனித இராயப்பரே,
தவத்தால் இயேசுவைப் போல வாழ்ந்தவரான புனித இராயப்பரே,
இயேசுவுக்குப் பதிலாளியாக நியமிக்கப்பட்ட புனித இராயப்பரே,
இயேசுவின் திருமந்தைக்குத் தலைமை மேய்ப்பராக அவரால் நியமிக்கப்பட்ட புனித இராயப்பரே,
இயேசுவின் செங்கோலைக் கொண்டு அவனியை ஆள அதிகாரம் பெற்ற புனித இராயப்பரே,
இயேசு விண்ணுலகு சென்றபோது அவரிடமிருந்து எல்லா அதிகாரங்களையும் பெற்ற புனித இராயப்பரே,
மெய் மறையை எல்லா மக்களுக்கும் போதித்த புனித இராயப்பரே,
முதல் தந்தையாகிய புனித இராயப்பரே,
மத்தியாவைத் திருத்தூதர்களில் ஒருவராகத் தேர்வு செய்த கூட்டத்துக்கு தலைமையேற்ற புனித இராயப்பரே,
தூய ஆவியாரை அடைந்தபின் ஆற்றிய முதல் திருவுரையில் மூவாயிரம் பேரை மனந்திருப்பின புனித இராயப்பரே,
திருச்சிலுவையின் மறைபொருளை வெளிப்படுத்தி இரண்டாம் திருவுரையில் ஐயாயிரம் பேரை மெய்மறைக்கு உட்படுத்தின புனித இராயப்பரே,
தலைமைச் சங்கத்தாருக்கு முன் துணிவுடன் உரையாற்றிய புனித இராயப்பரே,
உம்முடைய நிழல் பட்ட மாத்திரத்தில் தீராத நோய்கள் எல்லாம் தீரச் செய்த புனித இராயப்பரே,
இறந்த சிலரையும் உயிர்ப்பித்த புனித இராயப்பரே,
யூதமக்களையும், பிற இனத்தவரையும் முதன் முதலாகச் திருச்சபைக்குள் ஏற்றுக் கொண்ட புனித இராயப்பரே,
ஏரோது அரசனால் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுக் கிறிஸ்தவர்களுடைய வேண்டுதலினால் ஒரு வானத்தூதரின் வழியாக மீட்கப்பட்ட புனித இராயப்பரே,
திருச்சபையின் முதல் பொதுச்சங்கமாகிய எருசலேம் சங்கத்தின் இறுதி முடிவை அறிவித்தவரான புனித இராயப்பரே,
மெய்மறைக்காகப் பாடுபட்டு சிலுவையில் தலைகீழாய்ப் பாடுபட்ட புனித இராயப்பரே,

வத்திக்கான் மலையின் மேல் உமது உடல் மர்சலென்னும் குருவினாலே அடக்கப்பட வரம் பெற்ற புனித இராயப்பரே,
உமது கல்லறையில் பல புதுமைகளைச் செய்த புனித இராயப்பரே,
உம்முடைய பக்தர்களுக்கு எல்லா நன்மைகளையும் தந்தருளுகிற புனித இராயப்பரே,

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

ஒரு : கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும்படி
எல் : புனித இராயப்பரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## செபிப்போமாக

எல்லாம் வல்ல இறைவா! உம் அப்போஸ்தலரான புனித இராயப்பருக்கு விண்ணரசின் திறவுகோல்களைக் கொடுத்து கட்டவும், அடைக்கவும் தேவையான தலைமைப் பதவியின் அதிகாரத்தை அவரிடம் ஒப்படைத்தீர். நாங்கள் அவருடைய வேண்டுதலால், விசுவாசத்தில் நிலைத்து நின்று, அன்பு நெறியில் நடக்கச் செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம், ஆமென்.

## 08. அப்போஸ்தலரான புனித சின்னப்பர் மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா, எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா, எங்கள் ....
தூய ஆவியாகிய இறைவா, எங்கள் ....
தூய்மை நிறை மூவொரு இறைவா, எங்கள் ....

அமல உற்பவியான புனித மரியாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
திருச்சபையில் மகிமை வாய்ந்த அப்போஸ்தலரான புனித சின்னப்பரே,
புற இனத்தாரை மனந்திருப்ப ஆண்டவரால் தெரிந்தெடுக்கப்பட்ட கருவியாகிய புனித சின்னப்பரே,
யூத குலத்தில், பரிசேய வம்சத்தில் பிறந்த போதிலும், ஆண்டவரின் அன்புப் பிள்ளையாகப் பேறு பெற்ற புனித சின்னப்பரே,
எருசலேம் ஆலயத்தில் கமாலியேல் குருவிடம் வேத சட்டத்தைப் பயின்றவரான புனித சின்னப்பரே,
ஸ்தேபான் மறைசாட்சியாகக் கொல்லப்பட்ட போது, கொலையாளிகளின் ஆடைகளை நீர் வைத்துக் கொண்ட போதிலும், அவருடைய மன்றாட்டினால் மனந்திரும்ப வரம் பெற்றவரான புனித சின்னப்பரே,
இரக்கமின்றி கிறிஸ்தவ மக்களை சங்கிலிகளால் பிணித்து வதைத்த கல்நெஞ்சுள்ள ஓநாயாக இருந்து, இறை அருளினால் சாந்தமுள்ள ஆட்டுக் குட்டியாக மாறின புனித சின்னப்பரே,
கிறிஸ்துவின் சீடர்களின் மேல் சினங்கொண்டு அருவருப்புடனும், ஆங்காரத்துடனும் தமஸ்கு பட்டணத்துக்கு குதிரை மீது செல்லும்போது, ஆண்டவர் உம்மை குருடராக்கியதால் தாழ்ச்சி மனப்பான்மை கொண்டவரான புனித சின்னப்பரே,
மூன்று நாள் செபமும் உபவாசமும் புரிந்து திருமுழுக்கு பெற உம்மையே தயாரித்துக் கொண்டவரான புனித சின்னப்பரே,
அனானியாஸ் கைகளில் திருமுழுக்குப் பெற்றவுடன் திரும்பவும் பார்வையடைந்தவரான புனித சின்னப்பரே,
மூன்று ஆண்டுகள் பாழ்வெளியில் தங்கியிருந்து அப்போஸ்தல அலுவலுக்கு ஆயத்தம் செய்த புனித சின்னப்பரே,
கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும்படி இருபது ஆண்டுகளுக்கு மேலாக அயல் நாடுகளில் பயணம் செய்த புனித சின்னப்பரே,
பகலில் கூடாரம் நெய்யும் தொழிலையும், மாலையில் கிறிஸ்துவைப் பற்றிப் போதிக்கும் ஊழியத்தையும் கைக்கொண்டவரான புனித சின்னப்பரே,
கிறிஸ்துவிற்காக காடுகளும், மலைகளும், அடர்ந்த கரடு முரடான பாதைகளில் பயணம் செய்த புனித சின்னப்பரே,
பன்முறை கள்ளர்கள், கொலையாளிகள், துரோகிகளின் அபாயங்களிலிருந்து தப்பியவரான புனித சின்னப்பரே,
புயல்களினாலும், கொடிய விலங்குகளினாலும், நேர்மையற்ற நண்பர்களினாலும் வரவிருந்த ஆபத்துகளிலிருந்து தப்பியவரான புனித சின்னப்பரே,

இயேசுவின் அன்பிற்காகச் சிறையில் சங்கிலிகளால் கட்டுண்டு கிடந்தவரான புனித சின்னப்பரே
மும்முறை யூதர்களிடம் கசையடிபட்டவரான புனித சின்னப்பரே,
பகைவர் உம்மைக் கல்லால் எறிந்து, நீர் இறந்ததாக எண்ணிச் செல்ல, அற்புதமாய்க் குணமடைந்த புனித சின்னப்பரே,
மும்முறை கப்பல் உடைந்ததால், கடலில் வீசி எறியப்பட்டவரான புனித சின்னப்பரே,
உழைப்பின் மிகுதியினாலும், பசி தாகத்தினாலும் வருந்தியவரான புனித சின்னப்பரே,
பல இடங்களிலும் நிறுவிய திருச்சபைகளின் கவலையால் ஏக்கமும், துயரமும் கொண்டவரான புனித சின்னப்பரே,
கணக்கற்ற துன்பங்களினால் வாடினபோதிலும், விண்ணுலகக் காட்சிகளினால் ஆறுதல் பெற்றவரான புனித சின்னப்பரே,
உன்னத தியானத்திலே பரவசமாகி, விண்ணுலகின் மூன்றாம் வானம் வரை உயர்த்தப்பட்டு வாக்குக்கெட்டாத மறை பொருட்களை உணர்ந்தவரான புனித சின்னப்பரே,
கிறிஸ்துவின் பணியில் தணியாத ஆர்வமும், நிகரில்லாத ஊக்கமும் கொண்ட புனித சின்னப்பரே,
பிறர் வருந்துவதைக் காண மனம் சகியாத புனித சின்னப்பரே,
பொறுமையின் கருவூலமாகிய புனித சின்னப்பரே,
உம்மைப் பகைத்தவர் மட்டில் பொறுமையும், இயல்புக்கு மேலான அன்பும் காண்பித்தவரான புனித சின்னப்பரே,
அடிமைகள், ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள் பேரில் தயாளமும், பெருந்தன்மையும் கொண்டவரான புனித சின்னப்பரே,
தீமை புரிந்தவருக்கு நன்மை புரிய விரைந்தவரான புனித சின்னப்பரே,
இவ்வுலகில் இருந்தபோதே மாபெரும் புதுமைகளை நிகழ்த்தியவரான புனித சின்னப்பரே,
நாங்கள் இடைவிடாமல் இறைவனுக்கு நன்றி புரிந்து செபிக்க வேண்டுமெனக் கற்பித்தவரான புனித சின்னப்பரே,
எங்களுக்குள்ளே பகை ஏதுமின்றி ஒற்றுமையாய் வாழவேண்டுமென வற்புறுத்திய புனித சின்னப்பரே,
எங்களுக்குள்ளே பிரிவினை ஏதுமின்றி ஒன்றித்து வாழ வேண்டுமென வற்புறுத்திய புனித சின்னப்பரே,
விசுவாசிகள், தங்கள் வழக்குகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளாமல் அயலாரின் நீதிமன்றங்களுக்கு எடுத்துச் சென்றபோது அளவிலா துயரமடைந்த புனித சின்னப்பரே,

கிறிஸ்துவின் போதனைகளைத் தெளிவாய் உணர்த்தும்படி பல திருமுகங்கள் எழுதியவரான புனித சின்னப்பரே,
நாங்கள் அனைவரும் கிறிஸ்துவின் ஞான உடலாகிய ஒரே திருச்சபையின் மக்கள் என்பதை அழகுற விளக்கியவரான புனித சின்னப்பரே,
திருச்சபையின் ம்றை வல்லுநர்களால் கொண்டாடப்படும் மாபெரும் மறை வல்லுநரான புனித சின்னப்பரே,
அப்போஸ்தலப் பணியாளரின் ஒப்பற்ற மாதிரியான புனித சின்னப்பரே,
நண்பர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டவரான புனித சின்னப்பரே,
கிறிஸ்துவிற்காகப் பல வருடங்கள் சிறையில் வருந்திய புனித சின்னப்பரே,
முதல் திருத்தந்தையான புனித இராயப்பருக்குப் பின் மறைசாட்சி மரணமடையப் பேறுபெற்றவரான புனித சின்னப்பரே,
கிறிஸ்துவிற்காகத் தலை வெட்டுண்டு இறந்த புனித சின்னப்பரே,

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

ஒரு : அப்போஸ்தலரான புனித சின்னப்பரே,
எல் : அனைத்துலகிற்கும் உண்மையைப் போதிக்க இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவி நீரே.

## செபிப்போமாக

எங்கள் இறைவனாகிய ஆண்டவரே! அப்போஸ்தலரான புனித சின்னப்பரை நற்செய்தியின் போதகராக வியத்தகுவகையில் தேர்ந்தெடுத்தீர். அவர் அரசர் முன்னிலையிலும், புறவினத்தார் நடுவிலும் கொண்டு சென்ற அதே விசுவாசத்தில் உலகமெல்லாம் தோய்ந்து நிறைவு பெறவும், உமது திருச்சபை இடையறாது வளர்ச்சியடையவும் அருள்வீராக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம், ஆமென்.

கடுமையான எச்சரிக்கைகளுடன் மக்கள் நடுவில் அன்று இறை வாக்கினர்களை அனுப்பினோம். இன்றோ நமது இரக்கத்தை உன் நடுவில் அனுப்புகிறோம். நீதியின் நாட்களுக்கு முன்னால் இரக்கத்தின் நாட்களைச் சுவைப்பாய் - இயேசுவின் வார்த்தைகள்.

## 09. புனித இஞ்ஞாசியாரை நோக்கி செபம்

இறைவனின் அதிமிகப் புகழை இப்பூவுலகில் பரவச் செய்வதற்கும், எண்ணிக்கையில்லாத மக்களை விண்ணுலகில் சேர்ப்பதற்கும் இறைவன் தேர்ந்தெடுத்த புனித இஞ்ஞாசியாரே! எளியேனுக்குத் தகுதியில்லை என்றாலும், உம் பேரிலுள்ள நம்பிக்கையாலும், உமது செல்வாக்கு வல்லபத்தாலும் ஏவப்பட்டு உமது சரணமாய் ஓடி வந்தேன். நீர் என் பாதுகாவலராயிருந்து என்னைக் காத்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறேன். ஏனெனில் என் வாழ்நாளையும், என் இறுதி நேரத்தையும் உமக்கே ஒப்படைத்து விடுகிறேன். சோதனை வேளையில் எனக்கு ஆதரவாயிரும். இறைவன் திருமுன் பரிந்துரைத்து என் குறைகளைப் போக்கியருளும். சிறப்பாக என் செயல்களையெல்லாம் அர்ச்சித்து பேறுபலனுள்ளவனாக்கி விண்ணுலகப் பரிசை உறுதிப்படுத்தும் வலிமையாகிய உத்தம இறையன்பை எனக்காகக் கேட்டுத் தந்தருளும், - ஆமென்.

## புனித இஞ்ஞாசியார் மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா, எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா, எங்கள் ....
தூய ஆவியாகிய இறைவா, எங்கள் ....
தூய்மை நிறை மூவொரு இறைவா, எங்கள் ....

வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் புனித இஞ்ஞாசியாரை மிகவும் ஆசீர்வதித்து வழிநடத்திய அமலோற்பல அன்னையே,

**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**

**இயேசு சபையை நிறுவியவரான புனித இஞ்ஞாசியாரே,**
ஸ்பெயின் நாட்டிலே, லொயோலா கோட்டையிலே பிறந்தவரே,
இராணுவத்தில் பணியாற்றியபோது பம்பலோனா முற்றுகையில் குண்டடிப்பட்டவரே,
மருத்துவமனையில் கிறிஸ்துவின் வரலாற்றையும், புனிதர்களின் வரலாற்றையும் வாசித்து, இறைவன்பால் முற்றும் திரும்பினவரே,
ஓராண்டு காலம் மன்ரேசாவில் ஒருவந்தியாக வாழ்ந்தவரே,
இறைவனின் திருவுளத்தை அறிய, புனித நாட்டுக்குப் பயணமானவரே,
33 வயதிலே பார்சலோனா பள்ளியில் சேர்ந்து, இலத்தீன் மொழி பயின்றவரே,
11 ஆண்டுகளாக பல்வேறு பல்கலைக் கழகங்களில் மெய்யியலும், இறையியலும் பயின்றவரே,

1535-ல் பாரிசில் பட்டம் பெற்றபோது புனித பீட்டர் பாவர், புனித பிரான்சிஸ் சவேரியார் உட்பட ஆறு இளைஞர்களைத் தவ வாழ்வுக்குக் கொண்டு வந்தவரே,
ஏழுபேரும் தொடங்கிய புதிய துறவு சபைக்கு, திருத்தந்தை இரண்டாம் சின்னப்பரிடம் உடன்பாடு பெற்றவரே,
பதினாறே ஆண்டுகளில் நூறு இல்லங்களும், ஆயிரம் துறவியருமாகச் சபை பெருகியதைக் கண்டு மகிழ்ந்து இறைவனைப் புகழ்ந்தவரே,
மக்களுடைய ஈடேற்றத்துக்காக எல்லையற்ற ஆவல் கொண்டவரே,
அநேகமுறை திருக்காட்சிகளைக் காணும் பேறு பெற்றவரே,
ஞானப் போர்முறையைக் கண்டுபிடித்தவரே,
ஆன்மீக முயற்சிகளை உண்டாக்கியவரே,
மக்களை மீட்பதிலே உயர்நாட்டம் கொண்டிருக்கிற கருவூலமே,
நற்செய்தியின் ஆலோசனைகளைக் குறையற அனுசரித்தவரே,
குறையற்ற அறநெறியின் சிறந்த மாதிரியே,
இறை ஊழியத்தில் மிகுந்த பற்றுதலுள்ளவரே,
குருத்துவத்தின் பேரழகே,
பல்வேறு செபமுறைகளை ஞான வாழ்வில் அறிமுகப்படுத்தியவரே,
இளைஞர்களை அற வழியில் வளர்க்கக் கல்விப் பணி ஆற்றியவரே,
உலகப் பற்றினை வென்றவரே,
குற்றங்களைப் பொறுக்கின்றவரே,
இயேசு கிறிஸ்துவின் மீது கொண்ட அன்பினால் "உலகுக்குத் தீ மூட்டுங்கள்" என்று தூயண்டியரே,
இறைவனுடைய திருவுளத்திற்குக் கீழ்ப்படிந்தவரே,
திரளான பாவிகளை நன்னெறியில் திருப்பினவரே,
யாவர்க்கும் அறிவுத் தெளிவுள்ள ஆசிரியரே,
பற்றுறுதியாளரை ஆதரிக்கிறவரே,
வானத்தூதர்களுக்கு நிகரானவரே,
பணிகளையெல்லாம் இறைவனின் அதிமிகப் புகழுக்காகவே செய்து முடித்து,
1556-ல் உயிர் நீத்த புனித இஞ்ஞாசியாரே,

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

ஒரு : கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும்படியாக,
எல் : புனித இஞ்ஞாசியாரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### செபிப்போமாக

புனிதரின் பேரின்பமாகிய இறைவா! உம்முடைய திருச்சபை பல்வேறு பிரிவினைக் கொள்கைகளால் அலைக்கழிக்கப்பட்ட காலத்தில் உம்முடைய திருப்பெயரின் மகிமையை எங்கும் பரப்பவும், திருச்சபையின் மறுமலர்ச்சிக்குக் கீழ்ப்படிதலுடன் ஒத்துழைக்கவும் புனித லொயோலா இஞ்ஞாசியாரை அழைத்தீரே. அவருக்காகவும், அவர் நிறுவிய சபைக்காகவும் உம்மைப் போற்றுகின்றோம். அவருடைய எடுத்துக் -காட்டாலும், உதவியாலும் நாங்கள் எல்லாம் தீமைகளையும் எதிர்த்து வீரத்துடன் போராடவும், நிறைவாழ்வாம் வெற்றி வாகையைப் பெற்றுக் கொள்ளவும் எங்களுக்கு அருள்வீராக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம், - ஆமென்.

## 10. புனித சவேரியார் நவநாள் செபம்

மிகவும் வணக்கத்திற்குரியவரும், இறையன்பு நிறைந்தவருமான புனித சவேரியாரே! உம்மோடு கூட நெடுஞ்சாண்கிடையாக திவ்விய சந்நிதானத்தைத் தொழுகிறேன். இறைவன் உம்மை இவ்வுலகில் பல வரங்களாலும், சாவுக்குப் பிறகு முடிவில்லாத மணிமுடியாலும் அணி செய்தார் என்கிற உண்மை எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. அதற்காக அவருக்கு நன்றி கூறி உமது வல்லமையுள்ள மன்றாட்டால் எனக்கு மிகத் தேவையான நல்ல வாழ்க்கையையும், நல்ல சாவையும், அதோடு கூட இறைவனின் திருவுளத்துக்கும் மகிமைக்கும் ஒத்திருக்குமாகில், (வேண்டிய வரத்தைக் கேட்கவும்) எனக்கு அடைந்தருள வேணுமென்று மன்றாடுகிறேன்.

- 2 பர., 3 அருள்., 3 திரி.,

### செபிப்போமாக

இறைவா, புனித சவேரியாரின் போதனையாலும், புதுமைகளாலும் பாரத நாட்டு மக்களை உமது திருச்சபைக்கு அழைக்கத் திருவுளமானீரே, அவருடைய புகழைக் கொண்டாடுகிற நாங்கள் அவரது நன்மாதிரியைப் பின்பற்றி வாழ வரமருளுமாறு எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம், - ஆமென்.

# புனித சவேரியார் மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா, எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா, எங்கள் ....
தூய ஆவியாகிய இறைவா, எங்கள் ....
தூய்மை நிறை மூவொரு இறைவா, எங்கள் ....

விண்ணுக்கும் மண்ணுக்கும் அரசியான புனித மரியாயே,
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**

புனித இஞ்ஞாசியாரே,
புனித இஞ்ஞாசியாருக்கு சமமான தகுதியும் அன்புமுள்ள ஞான மகனாகிய புனித சவேரியாரே,
பாரத நாட்டின் அப்போஸ்தலரே,
ஸ்பெயினில் நவார் பகுதியில் பிறந்தவரான புனித சவேரியாரே,
"ஒருவர் உலக முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும், தம் வாழ்வையே இழப்பாரெனில், அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?" என்ற அறிவுரையைப் புனித இஞ்ஞாசியார் அடிக்கடிக் கூறியதால், இறைப் பணிக்கு உம்மையே அர்ப்பணித்தவரே,
31 வயதில் குருவாகத் திருநிலைப் பெற்றவரே,
40 நாட்கள் கடுமையான ஒருசந்தி, ஆன்மீகத் தயாரிப்புக்குத் பின் முதற் பூசை நிறைவேற்றியவரே,
புனித இஞ்ஞாசியாரின் செயலராக உழைத்து வந்தவரே,
இந்திய நாட்டுக்குச் செல்லும்படிக் கட்டளைபெற்றதும், மறுநாளே பயணத்தைத் தொடங்கியவரே,
ஆல்ப்ஸ் வழியாகவும், ஸ்பெயின் வழியாகவும் மூன்று மாதங்கள் பயணம் செய்து, லிஸ்பன் துறைமுகத்தை அடைந்தவரே,
பதிமூன்று மாதங்களாகப் பயணம் செய்து, பதினோராயிரம் கடல் பயணத்தை மேற்கொண்டவரே,
பலநூறு பயணிகள் நோயுற்றபோது, அவர்களுக்கு உதவி செய்து, திருவுரையாற்றி, மறைக்கல்வி போதித்தவரே,
சுராண்டுகள் கார்மணற்றுறைப் பகுதியில் உழைத்து, பரதகுலப் பெருமக்கள் அனைவரையும் கிறிஸ்துவின் மந்தையில் சேர்த்தவரே,
கையில் சிறுமணி கொண்டு ஒலியெழுப்பி, சிறுவர்களையும் தாய்மார்களையும் கோவிலுக்கு அழைத்து வந்து மறைக்கல்வி ஊட்டியவரே,
இலங்கை, மலாக்கா, இந்தோசீனம், பிலிப்பின்ஸ் வழியாக ஜப்பான் வரை சென்று போதித்தவரே,

சீனாவுக்குள் நுழையும் வாய்ப்புக்காக சான்சியன் தீவில் தங்கியிருந்தபோது, நோய் வாய்ப்பட்டு, 46-வது வயதில் இறந்தவரே,
பத்தாண்டு தூதுப் பணியில் 50 ஆட்சிப் பகுதிகளில், பத்து இலட்சம் பேரை இறையரசில் சேர்த்தவரே,
இந்திய நாடுகளின் அப்போஸ்தலர் என்ற சிறப்புப் பெயருடன், விசுவாசப் பரம்புதல் சபையின் பாதுகாவலராய் நியமிக்கப்பட்டவரே,
மறைபணியாளருக்குரிய ஞானத்துக்கும், புனிதத்துக்கும் உத்தம மாதிரியே,
குருடருக்குப் பார்வை கொடுப்பவரே,
சப்பாணிகளின் ஊனந் தீர்ப்பவரே,
நோயாளிகளுக்கு உடல் நலம் அளிப்பவரே,
பஞ்சம், படை, நோயில் ஆதரவே,
பிசாசுகளை ஓட்டுபவரே,
சிலுவையால் எதிரிகளின் படையைத் துரத்தினவரே,
இறந்தவர்களை உயிர்ப்பித்தவரே,
கடலையும், புயலையும் கீழ்படுத்தி அடக்கும் வல்லமையை கொண்டவரே,
வறியவருக்கு அடைக்கலமே,
துன்பப்படுகிறவர்களுக்கு தேற்றரவே,
பாரத நாட்டிற்கு ஒளிச்சுடரே,
பல மொழிகளில் உண்மையை அறிக்கையிட்ட மறை வல்லுநரே,
சொல், செயல், சிந்தனையில் தூய்மை மிக்கவரே,
அனைத்துப் புனிதர்களுடைய நற்பண்புகளினால் அணி செய்யப்பட்டவரே,

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

ஒரு : கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும்படியாக,
எல் : புனித சவேரியாரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## செபிப்போமாக

அன்பின் இறைவா! வாழ்வளிக்கும் உம் திருமகனின் நற்செய்தியை நாங்கள் எங்கள் மக்களுக்கு அறிவிக்க புனித பிரான்சிஸ்கு சவேரியாரை அனுப்பத் திருவுளமானீர். அவருடைய அயரா உழைப்பினால் பல்வேறு நாட்டு மக்களை உமக்குச் சொந்தமாக்கிக் கொண்டதற்காக நன்றியுடன் உம்மைப் புகழ்கிறோம். அவருடைய மன்றாட்டினால் நாங்கள் உம் அருளாற்றலோடு ஒத்துழைத்து, எங்கள் நற்செய்தி வாழ்வைப் புதுப்பித்துக் கொள்ளவும், உமது அருள்வாக்கை ஏற்று, அதற்குத் துணிவுடன் சான்று பகரவும் செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்,

- ஆமென்.

## 11. புனித அந்தோனியார் செபம்

இத்திருத்தலத்தில் மாட்சிமை தங்கிய மேலான அரியணையில் கருணை கொண்டு எழுந்தருளியிருக்கின்ற புனித அந்தோனியாரே! தூய்மை துலங்கும் லீலியே! விலை மதிக்கப்படாத மாணிக்கமே! விண்ணுலகிலும், மண்ணுலகிலும் எங்கள் காவலே! துன்பப்படுகிறவர்களுக்கு பரம சஞ்சீவியே! பாவிகளின் தஞ்சமே! உமது திருவடியைத் தேடி வந்தோம். உமது திருமுகத்தை அண்ணாந்து பார்த்து உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். மிகவும் வணக்கத்திற்குரிய புனித அந்தோனியாரே! வீரம் பொருந்திய மேய்ப்பரே! பிசாசுகளை மிரட்டி ஓட்டுபவரே! திருச்சபையின் கருணைக் கண்ணாடியே! உலகில் எங்கள் ஆதரவும் நீரல்லவோ! எங்கள் தஞ்சமும் நீரல்லவோ! எங்கள் மகிழ்ச்சியும், நம்பிக்கையும், பாக்கியமும் நீரல்லவோ! நீர் எங்கள் ஞானத்தந்தை என்பதை எங்களுக்குக் காண்பியும். பிள்ளைகள் செய்த குற்றங்களை பெற்றோர் பாராட்டுவார்களோ? உம்மைத் தேடிவந்த எளியோர் மீது தயவாரும். அழுகிறவர்களை அரவணையும். அல்லல்படுகிறவர்களுக்கு ஆதரவாக வாரும். நீர் இரங்காவிட்டால் எங்களுக்கு வேறு யார் இரங்குவார்? நீர் ஆதரியாவிட்டால் எங்களை வேறு யார் ஆதரிப்பார்? நீர் நினையாவிட்டால் எங்களை வேறு யார் நினைப்பார்? நீர் உதவாவிட்டால் எங்களுக்கு வேறு யார் .உதவுவார்? தஞ்சமென்று ஓடிவந்த எளியோர்கள் பேரில் தயவாயிரும். நயைக் கடலே! தவிப்பவர்களுக்கு தடாகமே! தனித்தவருக்குத் தஞ்சமே! உமது திருவடி தேடி வந்தோம். பற்பல கேடுகளினாலே வாடி நொந்தோம். எங்கள் நம்பிக்கை வீண் போகுமோ? எங்கள் மன்றாட்டு மறுக்கப்படுமோ? எங்கள் பயணங்கள் பலன் அற்றுப் போகுமோ? எங்கள் அழுகைக் கண்ணீர் உம்முடைய இதயத்தை உருக்காது போகுமோ? அப்படி ஆகுமோ? ஐயா, எங்களின் அன்பான தந்தையே! எங்களை முழுவதும் ஒப்புக் கொடுக்கிறோம். எங்களைக் கையேற்றுக் கொண்டு ஆசீர்வதித்தருளும் - ஆமென்.

## புனித அந்தோனியார் நவநாள் செபம்

(1231 ஜுன் 13ம் நாள், செவ்வாய்க்கிழமை அன்றுபுனித அந்தோனியாரின் சடலம் புதைக்கப்பட்டது. அன்று முதல் செவ்வாய் புனித அந்தோனியாரின் நாளாக வழக்கில் வந்தது. 9 நாட்கள் தொடர்ந்து அவரிடம் வேண்டுதல் செலுத்தும் வழக்கமும் உண்டு. இந்த செபத்தை இரு வழிபாடுகளிலும் பயன்படுத்தலாம்)

புனித அந்தோனியாரே, புதுமை வள்ளலே, உம் அன்பையும் வல்லமையையும், கோடிக்கணக்கான மக்களுக்கு நீர் அளித்துவரும்

ஆதரவையும் உணர்ந்தவர்களாக உம் திருவடி வந்து நிற்கிறோம். எமக்கு மிகவும் தேவையான இந்த வரங்களை நாங்கள் அடையுமாறு எங்களுக்காக இரக்கங்களின் தந்தையாகிய இறைவனிடம் பரிந்துரைக்க மன்றாடுகிறோம்.

(தேவையான வரங்களை மௌனமாகக் கூறவும்)

புனித பிரான்சிசின் உண்மையான சீடரே, இறைவனுக்காகவும், சகோதர, சகோதரிகளுக்காகவும் நீர் அயராது உழைத்து வாழ்ந்ததை நாங்கள் பின்பற்ற விரும்புகிறோம். எங்களை அன்பு செய்வது போல் பிறரையும் அன்பு செய்யவும், விண்ணுலக தந்தையை உள்ளன்போடு அன்பு செய்யவும் எம் இதயத்தில் அன்புத் தீயை மூட்டியருளும். விண்ணுலக தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி, நற்செய்தியின்படி வாழ எமக்குப் பலத்தை அடைந்து தந்தருளும். தன்னலம் துறந்து, பிறருக்காக வாழ இறைவன் அளிக்கும் வாய்ப்புகளை நாங்கள் கண்டுணர்ந்து பயன்படுத்திக் கொள்ள எமக்குக் கற்றுத்தாரும். திருமுழுக்கிலே நாங்கள் அளித்த வாக்குறுதிகளைக் காத்து, எங்கள் சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும், இயேசுவுக்குச் சாட்சியராய் வாழ்ந்திட எமக்காக மன்றாடும்.

அன்புள்ள ஆண்டவரே, புனித அந்தோனியாரை மகிமைப்படுத்தும் எங்கள் செபங்களை தயைகூர்ந்து ஏற்றருள வேண்டுமென எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகிறோம் - ஆமென்.

## புனித அந்தோனியார் செபம்

புதுமைகள் பல புரிய அருள் பெற்ற புனித அந்தோனியாரே எங்கள் விண்ணப்பங்களை ஏற்று எங்களுக்கு இறைவனின் அருளைப் பெற்றுத்தாரும். குழந்தை இயேசுவைக் கையில் ஏந்தும் பேறு பெற்ற புனித அந்தோனியாரே துன்பப்படுவோர்க்கு துணைபுரியும் வள்ளலே ஏழைகளையும், ஆதரவற்றவர்களையும் அன்புடன் அரவணைக்கும் நேச தந்தையே இதோ உமது மன்றாட்டின் பயனை உணர்ந்து அசைக்க முடியாத முழு நம்பிக்கையுடன் உம்முன் கூடி வந்துள்ளோம். நீர் ஏந்தியுள்ள குழந்தை இயேசுவிடம் பரிந்துபேசி என் ஆன்மாவிற்கும், உடலுக்கும் வேண்டிய வரங்களைப் பெற்றுத்தாரும். இறை அருளை ஏராளமாய் பெற்ற புனித அந்தோனியாரே நாங்கள் உம் வாழ்வைப் பின்பற்றி எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனையே அன்பு செய்யவும், அவருக்காகவே வாழவும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். நாங்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் அன்பு செய்து விண்ணகம் சேர எங்களுக்கு அருள் பெற்றுத் தாரும் - ஆமென்.

# புனித அந்தோனியார் மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா, எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா, எங்கள் ....
தூய ஆவியாகிய இறைவா, எங்கள் ....
தூய்மை நிறை மூவொரு இறைவா, எங்கள் ....

அமல உற்பவியான புனித மரியாவே **எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**
பத்திசுவாலக முதல்வரான புனித பிரான்சீஸ்குவே,
பதுவைப் பதியரான புனித அந்தோனியாரே,
போர்த்துக்கல்லில் லிஸ்பன் நகரில் 1195 ஆகஸ்டு 15-ல் பிறந்து வளர்ந்தவரான புனித அந்தோனியாரே,
பெர்தினாந்து என்ற இயற்பெயருடன் புனித அகுஸ்தினார் சபையில் துறவியான புனித அந்தோனியாரே,
மறைசாட்சியாக ஆவல்கொண்டு பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து அந்தோனியார் என்ற பெயர் கொண்ட புனித அந்தோனியாரே,
மொராக்கோ நாட்டுக்குச் சென்றதும், கடுமையான நோய்வாய்ப்பட்டு, செசிலித் தீவுக்கு வந்து சேர்ந்தவரான புனித அந்தோனியாரே,
மோந்த்தே பவுலோ என்ற ஊரின் துறவில்லத்தில் கடைநிலைப் பணியாளராக உழைத்து வாழ்ந்த புனித அந்தோனியாரே,
அசிசியில் நடந்த பிரான்சிஸ்கன் துறவியரின் பொது அமர்வில் பங்கேற்ற புனித அந்தோனியாரே,
நீர் இச்சபையின் ஒளியாய் துலங்குவீர் என்று புனித ஐந்து காய பிரான்சிசால் பாராட்டப்பெற்ற புனித அந்தோனியாரே,
தவப்பேறுள்ள புனித அந்தோனியாரே,
அறநெறியை ஒரே மனத்துடன் பின் தொடர்ந்தவரான புனித அந்தோனியாரே,
திருச்சிலுவையை மிகவும் அன்பு செய்தவரான புனித அந்தோனியாரே,
உலகப் பற்றுதல்களை வென்றவரான புனித அந்தோனியாரே,
தூய்மையில் லீலி மலரான புனித அந்தோனியாரே,
நற்செய்தியை ஊக்கத்துடனே அறிக்கையிட்டவரான புனித அந்தோனியாரே,
தென் பிரான்சிலும், வட இத்தாலியிலும் இறைவாக்கின் முழக்க ஒலியான புனித அந்தோனியாரே,
தூய ஆவியாராகிய இறைவனின் படிப்பினைகளை விரும்பினவரான புனித அந்தோனியாரே,

விசுவாசமற்றோர் அஞ்சும்படியாகப் போதித்தவரான புனித அந்தோனியாரே,
பசாசுக்களை நடுநடுங்கச் செய்கிறவரான புனித அந்தோனியாரே,
அறநெறியாளர்களுக்குக் குறையற்ற மாதிரியாகிய புனித அந்தோனியாரே,
சின்னத்தம்பிமார் என்ற துறவியருக்குப் படிப்பினையான புனித அந்தோனியாரே,
வழிதப்பிப் போகிறவர்களுக்குத் துணையான புனித அந்தோனியாரே,
அருஞ்செயல்களைச் செய்கிறவரான புனித அந்தோனியாரே,
சலிப்புள்ளவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிறவரான புனித அந்தோனியாரே,
ஊமைகளைப் பேசச் செய்கிறவரான புனித அந்தோனியாரே,
அடிமைப்பட்டவர்களை மீட்கிறவரான புனித அந்தோனியாரே,
மறை எதிரிகளுக்கு சம்மட்டியாக அடிகொடுத்து, சில சமயங்களில் முப்பதாயிரம் பேருக்குத் திருவுரையாற்றிய புனித அந்தோனியாரே,
இறந்தவர்களை இறைவனுடைய உதவியினாலே உயிர்ப்பித்தவரான புனித அந்தோனியாரே,
பிறவியிலேயே பார்வையற்றோருக்குப் பார்வையளித்தவரான புனித அந்தோனியாரே,
காணாமற்போன பொருட்களை கண்டடையச் செய்கிறவரான புனித அந்தோனியாரே,
ஆழ்கடல் மீன்களுக்குப் போதித்தவரான புனித அந்தோனியாரே,
நஞ்சு கலந்த உணவை ஆசீர்வதித்து அருந்தினவரான புனித அந்தோனியாரே,
நற்பண்பு என்கிற ஞானப் பயிரைப் பல நாடுகளில் விளைவித்தவரான புனித அந்தோனியாரே,
கடலில் அலைக்கழிக்கப்படுகிறவர்களைக் காப்பாற்றியவரான புனித அந்தோனியாரே,
உம்மைப் பார்த்து வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு அன்பரான புனித அந்தோனியாரே,
உம்மைப் புகழுகிறவர்களுக்காக மன்றாடுகிறவரான புனித அந்தோனியாரே,
எண்ணிறந்த ஆன்மாக்களை விண்ணுலகில் சேர்த்தவரான புனித அந்தோனியாரே,
இறைவாக்குரைத்த உம் நாக்கு அழியாதிருக்கப் பேறு பெற்றவரான புனித அந்தோனியாரே,
ஐம்புலன் வென்றோர்களுடைய சபைக்கு அணியான புனித அந்தோனியாரே,
சிறு குழந்தை உருவத்தில் வந்த ஆண்டவரைக் கையில் ஏந்தினவரான புனித அந்தோனியாரே,
36வது வயதிலே 1231 ஜுன் 13ம் நாள் இவ்வுலகைவிட்டுச் சென்றவரான புனித அந்தோனியாரே,
இறந்த மறு ஆண்டிலேயே புனிதர் என்று திருச்சபையால் அறிவிக்கப்பட்ட புனித அந்தோனியாரே,
1946-ல் திருத்தந்தை 12ம் பத்திநாதரால் "மறைவல்லுநர்" என்று அறிக்கையிட்ட புனித அந்தோனியாரே,

பயணிகள், குழந்தை பேறு அற்றோர், கருவுற்ற தாய்மார், ஏழைகள் ஆகியோருக்கும், போர்த்துக்கல் நாட்டுக்கும் பாதுகாவலரான புனித அந்தோனியாரே,

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

ஒரு : கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும்படியாக,
எல் : புனித அந்தோனியாரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### செபிப்போமாக

என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா, பதுவை நகர் புனித அந்தோனியாரை தலைசிறந்த போதகராகவும், எங்கள் தேவைகளில் பரிந்து பேசுகிறவராகவும் உம் மக்களுக்கு கொடையாக அளித்தீரே, அவரது உதவியால் நாங்கள் கிறிஸ்தவ வாழ்வின் நெறிகளைக் கடைப் -பிடிக்கவும், எங்களுக்கு நேரிடும் இன்னல்களிலெல்லாம் உமது ஆதரவைக் கண்டுணரவும் செய்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம் - ஆமென்.

## 12. புனித பிரான்சிஸ் சலேசியார் செபம்

இயேசுவின் புகழ்பெற்ற அப்போஸ்தலரும், போதகருமான புனித பிரான்சிஸ் சலேசியாரே! இயேசுவின் தாழ்ச்சியையும், சாந்தத்தையும் தனது வாழ்வில் முழுமையாய் வாழ்ந்து காட்டிய புனிதரே! மரியன்னையின் மீது மிகுந்த பற்றும், உருக்கமும் கொண்டவரே! இதோ, நாங்கள் உம்மை அண்டி வந்துள்ளோம். நீர் எமக்கு நல்ல ஆலோசகராகவும், பரிந்துரையாளராகவும், நண்பராகவும், நல்ல தந்தையாகவும் இருந்து காப்பீராக. நீர் உலகில் வாழ்ந்த போது இறைவனிடம் மிகுந்த இறையருளை மக்களுக்கு பெற்றுத் தந்தது போல, இன்றும் உம்மை நோக்கி ஜெபிக்கும் எங்களுக்கு இந்த அருளைப் பெற்றுத் தருவீராக. (மௌனமாக விண்ணப்பங்களை குறித்து ஜெபிக்கவும்).

திருச்சபையின் மறை வல்லுநரான புனித பிரான்சிஸ் சலேசியாரே, இறைவனுக்காகவும், சகோதர, சகோதரிகளுக்காகவும் நீர் அயராது உழைத்து வந்ததை நாங்கள் பின்பற்ற விரும்புகிறோம். எங்களை அன்பு செய்வது போல பிறரையும் அன்பு செய்யவும், விண்ணுலக தந்தையை உள்ளன்போடு அன்பு செய்யவும், எம் இதயத்தில் அன்புத் தீயை மூட்டியருளும்.

விண்ணுலக தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி நற்செய்தியின்படி வாழ எமக்கு பலத்தை அடைந்து தந்தருளும். தன்னலம் துறந்து பிறருக்காக வாழவும், பகைவரை மன்னித்து அன்பு செய்யவும், இறைவன் அளிக்கும் வாய்ப்புகளை நாங்கள் கண்டுணர்ந்து பயன்படுத்திக் கொள்ளவும், நிறை மகிழ்ச்சியைக் காணவும் எமக்குக் கற்றுத்தாரும்.

ஞானஸ்நானத்திலே நாங்கள் அளித்த வாக்குறுதிகளைக் காத்து எங்கள் சிந்தனையாலும்ட, சொல்லாலும், செயலாலும், இயேசுவுக்கு சாட்சியராய் வாழ்ந்திட எமக்காக மன்றாடும். அன்புள்ள ஆண்டவரே, புனித பிரான்சிஸ் சலேசியாரை மகிமைப்படுத்தும் எங்கள் செபங்களை தயை கூர்ந்து ஏற்றருள வேண்டுமென எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம், - ஆமென்.

## புனித பிரான்சிஸ் சலேசியார் மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா, எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா, எங்கள் ....
தூய ஆவியாகிய இறைவா, எங்கள் ....
தூய்மை நிறை மூவொரு இறைவா, எங்கள் ....

விண்ணிற்கு ஆரோகணமான புனித மரியாவே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
மரியன்னையின் மீது பக்திகொண்ட புனித சலேசியாரே, எங்களுக்காக ......
கடவுள் அன்பில் தணியாத தாகம் கொண்ட புனித சலேசியாரே,
இறைத் திட்டத்திற்கு கீழ்ப்படிந்தவரான புனித சலேசியாரே,
திருச்சபையின் விசுவாசத்தைப் பாதுகாத்த புனித சலேசியாரே,
திருச்சபையின் மறைவல்லுனரும், இறை பக்தியை வேரூன்ற செய்த புனித சலேசியாரே,
தப்பறை கொள்கைகளை எதிர்த்து வாதாடி உண்மை விசுவாசத்தை நிலை பெறச் செய்தவரான புனித சலேசியாரே,
எளிமையும், தாழ்ச்சியும், சாந்தமும் கவசமாக கொண்ட புனித சலேசியாரே,
செயலில் விவேகமும், வார்த்தையில் பெருந்தன்மையையும் உடையவரான புனித சலேசியாரே,

பொறுமையும், செயல்திறனும் உடையவரான புனித சலேசியாரே,
கடுந்தபசின் பிரதிபலிப்பான புனித சலேசியாரே,
உலக செல்வங்களையும், பேர் புகழையும் வெறுத்து ஒதுக்கியவரான புனித சலேசியாரே,
ஏழ்மையின் நண்பரான புனித சலேசியாரே,
ஆன்மாக்களின் மீட்புக்காக அயராது உழைத்த புனித சலேசியாரே,
அன்பினால் விரோதிகளையும் நண்பர்களாக்கிய புனித சலேசியாரே,
பாவிகளின் அடைக்கலமான புனித சலேசியாரே,
மனந்திரும்பி வந்தவர்களுக்கு உதவி புரிபவரான புனித சலேசியாரே,
கைவிடப்பட்டோருக்கும், ஏழைகளுக்கும் பாதுகாவலரான புனித சலேசியாரே,
மனம் உடைந்தவர்களின் ஆறுதலான புனித சலேசியாரே,
எல்லோருக்கும் எல்லாமுமான புனித சலேசியாரே,
படித்தவர்களுக்கும், பாமரர்களுக்கும் நண்பரான புனித சலேசியாரே,
இறையன்பிலும், பிறரன்பிலும் சிறந்து விளங்கிய புனித சலேசியாரே,
ஆயர்களுக்கும், குருக்களுக்கும் முன்மாதிரியாய் விளங்கும் புனித சலேசியாரே,
இயேசுவின் சாயலை உடையவரான புனித சலேசியாரே,
தூய உள்ளம் கொண்ட புனித சலேசியாரே,
திருமறைத் தந்தையர்களின் விசுவாசத்தைப் போற்றி பாதுகாத்த புனித சலேசியாரே,
இறைவாக்கினர்களையும், அப்போஸ்தலர்களின் வாழ்வையும் பின்பற்றியவரான புனித சலேசியாரே,
வேத சாட்சிகளின் மணிமுடியான புனித சலேசியாரே,
ஒப்புரவின் வழியாக ஆன்மாக்களை மீட்ட புனித சலேசியாரே,
கன்னியர்களின் பாதுகாவலரான புனித சலேசியாரே,
எல்லாப் புனிதர்களிலும் மிகுந்த முகமலர்ச்சி உடையவரான புனித சலேசியாரே,
எங்கள் பங்கின் பாதுகாவலரான புனித சலேசியாரே,

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

ஒரு : கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும்படியாக,
எல் : புனித பிரான்சிஸ் சலேசியாரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## செபிப்போமாக

ஆன்மாக்களின் மீட்புக்காக எல்லாவற்றையும் துறந்து, எல்லோருக்கும் எல்லாமுமான தூய பிரான்சிஸ் சலேசியாரின் மறை போதனைகளையும், சாட்சிய வாழ்வையும் நாங்களும் பின்பற்றி, இறை அன்பிலும், பிறர் அன்பிலும் அவரைப் போல நாங்களும் வாழ்ந்து, நித்திய பேரின்ப மோட்சத்தை அடை கிருபை செய்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# 13. புனித வனத்து சின்னப்பர் மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா, எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா, எங்கள் ....
தூய ஆவியாகிய இறைவா, எங்கள் ....
தூய்மை நிறை மூவொரு இறைவா, எங்கள் ....

உலக கிறிஸ்தவர்களின் பாதுகாவலியான புனித மரியாவே,
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**
துறவு வாழ்க்கையின் தொடக்கமுமான புனித வனத்து சின்னப்பரே,
தனிமையின் இறைவனை சுவைத்தவரான புனித வனத்து சின்னப்பரே,
கிறிஸ்தவர்களுக்கு எடுத்துக்காட்டான புனித வனத்து சின்னப்பரே,
ஏழ்மையின் கண்ணாடியான புனித வனத்து சின்னப்பரே,
தாழ்ச்சியோடு விளங்கிய புனித வனத்து சின்னப்பரே,
தூய்மையின் மாதிரிகையான புனித வனத்து சின்னப்பரே,
கிறிஸ்து அரசரின் உண்மையான மாதிரிகையான புனித வனத்து சின்னப்பரே,
ஆசைகளை அறுத்தெரிந்தவரான புனித வனத்து சின்னப்பரே,
கடவுளின் அன்பில் பற்றி எரிந்தவரான புனித வனத்து சின்னப்பரே,
கடவுளுக்கென தன்னை அர்ப்பணித்தவரான புனித வனத்து சின்னப்பரே,
நல்ல பழக்கவழக்கங்களுக்கு எடுத்துக்காட்டான புனித வனத்து சின்னப்பரே,
கடவுளின் பாதுகாப்பைப் பெற்றவரான புனித வனத்து சின்னப்பரே,
பொறுமையில் நிறைவு கண்டவரான புனித வனத்து சின்னப்பரே,
சகிப்புத்தன்மையோடு வாழ்ந்தவரான புனித வனத்து சின்னப்பரே,

புனித வனத்து அந்தோணியாரால் புகழப்பட்டவரான புனித வனத்து சின்னப்பரே,
சிங்கங்களால் அடக்கம் செய்யப்பட்டவரான புனித வனத்து சின்னப்பரே,
சம்மனசுக்களால் விண்ணகத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டவரான புனித வனத்து சின்னப்பரே,
இயேசுவின் சிலுவை மரணத்தை நினைவில் கொண்டவரான புனித வனத்து சின்னப்பரே,
கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருந்த புனித வனத்து சின்னப்பரே,
கடவுளின் நம்பிக்கையில் ஒளி வீசியவரான புனித வனத்து சின்னப்பரே,

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

ஒரு : அப்போஸ்தலரான புனித வனத்து சின்னப்பரே,
எல் : அனைத்துலகிற்கும் உண்மையைப் போதிக்க இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவி நீரே.

## செபிப்போமாக

எங்கள் இறைவனாகிய ஆண்டவரே! புனித வனத்து சின்னப்பரை தூய்மையினாலும், பாலைவனத்தின் தனிமையிலும், மக்களுக்கு உமது செப, தவ வாழ்வின் எடுத்துக்காட்டுக்களைக் கொடுத்து வழிகாட்டினீரே, நாங்களும் அவருடைய எடுத்துக்காட்டைப் பின்பற்றி மேன்மையான புண்ணியங்களை எங்களுடைய வாழ்க்கையிலும் பெற்று வளமடைய வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம், ஆமென்.

## 14. புனித வனத்து அந்தோணியார் செபம்

எங்கள் ஆண்டவராகிய இயேசுவே! தேவரீர் உம் ஆசிரால் இவ்வுலகில் உம் ஊழியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் வாழ்க்கையைப் புனிதப்படுத்தி அவர்களுடைய நல்வாழ்விற்குத் தக்க பரிசாக அவர்களுக்கு முடிவில்லா இன்ப வாழ்வை மறு உலகில் அளிக்கின்றீர். அவர்கள் அடைந்த பேரின்பத்திற்கு நாங்கள் உடன் பங்காளிகள் ஆகும்படி செய்தருளும். இம்மன்றாட்டை நீர் சிலுவையில் சிந்தின உமது இரத்தத்தின் பலனைப் பார்த்து எமக்குத் தந்தருளும்.

புனித வனத்து அந்தோணியாரே! உமது ஆன்மா இறை அன்பினால் பற்றி எரிந்ததே. நாங்கள் அனைத்திற்கும் மேலாக இறைவனை அன்பு செய்யவும், அவரை மேன்மேலும் அறியவும், அவருக்காகவே வாழவும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். நாங்கள் பிறரையும், எங்களைப் போலவே அன்பு செய்து சகோதர பாசத்தோடு வாழ்ந்து, மறுஉலகமாகிய விண்ணுலகில் நாங்கள் எல்லோரும் வந்துசேரும்படி எங்களுக்கு அருள்பெற்றுத் தந்தருளும்.

எங்கள் பாதுகாவலரான புனித வனத்து அந்தோணியாரே! எமது துன்ப வாழ்க்கையில் உமது பாதுகாவலை மன்றாடுகிறோம். எங்கள் மேல் இரக்கம் வைத்து எங்கள் குடும்பங்களையும், நிலங்களையும் வேலைகளையும் ஆசீர்வதியும். உமது வல்லமையுள்ள மன்றாட்டால் ஆபத்துக்குரிய வியாதிகளை எங்களிடமிருந்து நீக்கியருளும். எங்கள் ஆடு, மாடுகளையும் காப்பாற்றியருளும்.

துன்பப்படுகிறவர்களுக்கு மேலான ஆதரவை அளிக்கும் புனித வனத்து அந்தோணியாரே! உம்மைத் தேடிவடிந்த எங்கள்மேல் இரக்கம் வைத்து நாங்கள் பாவத்தில் விழாதபடி எங்களைக் காப்பாற்றும். பகை, வர்மம், சண்டை, திருட்டு, குடிவெறி ஆகிய தீய குணங்களையெல்லாம் எங்களிடமிருந்து அகற்றியருளும். எங்கள் அசட்டைத் தனத்தைத் தள்ளி இனிமேல் திருவருட்சாதனங்களை அடிக்கடி தகுந்தவிதமாக பெறவேண்டிய ஆவலை எங்கள் இதயத்தில் எழுப்பியருளும்.

கடைசியாய் நாங்கள் உலக சமாதானத்திற்காகவும், அனைத்து திருச்சபைக்காகவும், எங்கள் திருத்தந்தை, ஆயர், பங்குக் குருவுக்காகவும் உம்மை நோக்கி வேண்டுகிறோம். நாங்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிதலும், மரியாதையும் உள்ள பிள்ளைகளாய் நடந்து, நாங்கள் யாவரும் உம்மோடு கூட விண்ணுலகில் நீடூடிகாலம் வாழ இறைவன் தயைபுரியும் அவரிடம் மன்றாட உம்மைக் கெஞ்சிக் கேட்கின்றோம். - ஆமென்.

## புனித வனத்து அந்தோணியார் மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா, எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா, எங்கள் ....
தூய ஆவியாகிய இறைவா, எங்கள் ....

தூய்மை நிறை மூவொரு இறைவா, எங்கள் ....

உலக கிறிஸ்தவர்களின் பாதுகாவலியான புனித மரியாவே,

**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**

எகிப்து தேசத்தில் வாழ்ந்து சிறந்தவரான புனித வனத்து அந்தோணியாரே,
தாய், தகப்பனுடைய நற்படிப்பின்மையால் புண்ணிய வழியில் நடந்த புனித வனத்து அந்தோணியாரே,
கோயிலில் கேட்ட வார்த்தைகள் உமக்கே சொல்லப்பட்டன என்று எண்ணினவரான புனித வனத்து அந்தோணியாரே,
உலகப் பற்றுதல்களைவிட்டு நீங்கினவரான புனித வனத்து அந்தோணியாரே,
தவத்தினாலும், செபத்தினாலும் உலகையும், அலகையையும் வென்ற புனித வனத்து அந்தோணியாரே,
வனவாசிகளுடைய தந்தையான புனித வனத்து அந்தோணியாரே,
உத்தம தாழ்ச்சியால் சிறந்து விளங்கினவரான புனித வனத்து அந்தோணியாரே,
பாக்கியமான மரணம் அடைந்த புனித வனத்து அந்தோணியாரே,
அளவில்லா பேரின்பத்தை அனுபவிக்கின்ற புனித வனத்து அந்தோணியாரே,
எங்களுக்காக என்றும் மன்றாடும் புனித வனத்து அந்தோணியாரே,

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

ஒரு : அப்போஸ்தலரான புனித வனத்து அந்தோணியாரே,
எல் : அனைத்துலகிற்கும் உண்மையைப் போதிக்க இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவி நீரே.

## செபிப்போமாக

என் இறைவா! புனித வனத்து அந்தோணியாரின் போதனையினாலும், செபத்தினாலும் எகிப்து நாட்டு மக்களுக்கு உமது அருளைக் கொடுக்கத் திருவுளமானீரே. அவருடைய மேன்மையான புண்ணியங்களைப் பாராட்டுகிற நாங்கள் அவற்றைக் கண்டு பாவிக்க அருள் தந்தருளும். அவர் எங்களுக்காகப் பரிந்து பேசுவதினால் அவர் ஆதரவினால் எங்களுக்கு மிகத்தேவையான அருளைத் தந்தருளும். எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம் - ஆமென்.

# 15. காவல் தூதர் செபங்கள்

## 1. புனித மிக்கேல் அதிதூதரை நோக்கி செபம்

விண்ணுலகப் படைகளின் அதிபதியே! என்றும் வாழும் அரூபிகளில் மகிமை நிறைந்தா வானதூதரே! உன்னத கடவுளின் நம்பிக்கையைப் பெற்ற தலைவரே! இறைவனின் அரியணை அருகே நிற்கப் பேறு பெற்றவரே! கடவுளின் கட்டளைப்படியே விண்ணுலகிலும், மண்ணுலகிலும் வல்லமை பெற்ற வானவரே! கடவுளின் நீதி அரியணை முன் எங்களை அழைத்துச் செல்லும் அதிதூதரே! இறுதி வேதனையில் இருக்கிறவர்களுக்கு உதவி செய்ய விரைந்து வரும் ஆதரவாளரே! எங்கள் போராட்டத்தில் எங்களைக் காத்தருளும். பசாசின் வஞ்சக சூழ்ச்சிகளில் எங்கள் துணையாயிரும். தாழ்மையான எங்கள் மன்றாட்டைக் கேட்டு, இறைவன் பசாசைக் கண்டிப்பாராக!. நீரும், விண்ணகப் படைகளின் தலைவரே! மக்களைக் கெடுக்க உலகில் சுற்றித் திரியும் பேயையும், மற்ற கெட்ட அரூபிகளையும் இறை வலிமையால் நரகத்தில் தள்ளுவீராக.வலுவற்ற எளியேனைக் கருணையுடன் பார்த்து, என் வாழ்நாள் முழுவதிலும், சிறப்பாக, என் இறப்பு நேரத்திலும் எனக்குத் தயை புரிந்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறேன் - ஆமென்.

## 2. காவல் தூதரை நோக்கி செபம்

அதிமிகப் பிரமாணிக்கம் கொண்ட காவலரே! எளியேனுக்குப் பிரியாத துணைவராக இறைவனால் நியமிக்கப்பட்டு எப்போதும் என் அருகிலிருந்து என்னை ஆண்டு நடத்திவரும் வானத்தூதரே! இன்று (பேர்) ஆகிய நான் உம்மை என் பாதுகாவலராகவும், அடைக்கலமாகவும் தெரிந்து கொண்டு என்றென்றைக்கும் என்னை முழுவதும் உமது பராமரிப்பில் வைத்து விடுகிறேன். மேலும் நான் உமது மகிமை பெருமைக்கு விரோதமான எவ்விதச் சொல்லினாலும், செயலினாலும் உம்மை விட்டுப் பிரியமாட்டேன்.

மற்றவர்களும் உமக்கு எதிராக ஏதாவது சொல்லவும் செய்யவும் விடமாட்டேன் என்று உறுதி கூறுகிறேன். ஆதலால் இன்று முதல் என் சாவு மட்டும் உம் ஊழியராக என்னை ஏற்றுக் கொள்ளும். என் ஒவ்வொரு செயலிலும் எனக்கு உதவியாக இருந்து, சிறப்பாக என் இறுதி நேரத்தில் என்னைக் கைவிடாமல் காத்தருளும். - ஆமென்.

## காவல் தூதர் மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க் கேட்டருளும்
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா, எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா, எங்கள் ....
தூய ஆவியாகிய இறைவா, எங்கள் ....
தூய்மை நிறை மூவொரு இறைவா, எங்கள் ....
வானத்தூதர்களின் அரசியான புனித மரியாவே
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**
புனித மிக்கேலே எங்களுக்காக ......
புனித கபிரியேலே,
புனித இரபேலே,
எங்களுக்குக் காவலாயிருக்கிற புனித தூதரே,
எங்களைக் காக்கிறதிலே மிகவும் பிரமாணிக்கம் கொண்ட காவல் தூதரே,
எங்களை ஆதரிக்க எந்நேரமும் எங்களைக் கண்காணிப்பவராகிய காவல் தூதரே,
மிகுந்த மகிமை, பெருமை, வல்லமையுள்ள காவல் தூதரே,
உண்மைக்குத் தவறாத சான்றாகிய காவல் தூதரே,
எங்களுக்குப் பிரியாத துணையாகிய காவல் தூதரே,
மண்ணுலகில் எங்களுக்கு ஆறுதலாகிய காவல் தூதரே,
மிகுந்த ஞானத்தோடும், விவேகத்தோடும் எங்களை நடத்துகிறவராகிய காவல் தூதரே,
தூய நண்பராகிய காவல் தூதரே,
தயை நிறைந்த ஆயராகிய காவல் தூதரே,
தூய்மையைப் பேணுகிறவராகிய காவல் தூதரே,
உத்தம ஆலோசனையைத் தருகிறவராகிய காவல் தூதரே,

சாந்தம் தயவோடே அறிவுரை சொல்லுகிறவராகிய காவல் தூதரே,
இதயத்தைப் பண்படுத்திகிறவராகிய காவல் தூதரே,

கண்ணுக்குப் புலப்படாத வழிகாட்டியாகிய காவல் தூதரே,
எதையும் ஒழுங்கோடு நடத்துகிறவராகிய காவல் தூதரே,
எங்களுக்காக இறைவனிடம் ஏற்றவாறு பரிந்துரைப்பவராகிய காவல் தூதரே,
அருள்நிறைந்த இறை அரியணைக்கு எங்கள் வேண்டுதல்களைக் கொண்டு சேர்ப்பவராகிய காவல் தூதரே,
வலுவான உதவியாகிய காவல் தூதரே,
பசாசுகளுக்கு பயங்கரமான சாட்டையாகிய காவல் தூதரே,
குற்றஞ்செய்கிறவர்களை எச்சரிப்பவராகிய காவல் தூதரே,
திடனற்றோரை உறுதிப்படுத்துகிறவராகிய காவல் தூதரே,
நோயில் உதவியாயிருக்கிற காவல் தூதரே,
துயரத்தில் ஆறுதலாகிய காவல் தூதரே,
இறப்பு வேதனையில் தேற்றரவாகிய காவல் தூதரே,
ஞானப் போரிலே துணிவு வருவிக்கிறவராகிய காவல் தூதரே,
வெற்றி கொள்ளுகிறவர்களுக்கு இறைவனின் கருணையால் முடி சூட்டுகிறவராகிய காவல் தூதரே,
தூயவர்களைக் காப்பவராகிய காவல் தூதரே,
ஒன்பது குழுவினராயிருக்கிற புனித தூதர்களே,


**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி
**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே**
எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி

ஒரு : இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும்படியாக,
எல் : புனித காவல் தூதர்களே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

## செபிப்போமாக

அனைத்தையும் படைத்தாளும் இறைவா, சொல்லற்கரிய உமது பராமரிப்பினால் நீர் உம்முடைய புனித தூதர்களை அனுப்பி எங்களைக் காத்துவர திருவுளமானீரே. நாங்கள் என்றும் அவர்களுடைய அருட்காவலைப் பெற்று, அவர்களோடு என்றென்றும் தோழமை கொண்டு மகிழச் செய்தருள வேண்டுமென, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம், - ஆமென்.

* * * * * * * * * * *


இறைத்தந்தை போல் இரக்கம் உள்ளவர்களாய்